மூலிகைக் கற்பங்கள்

பதிப்பாசிரியர் ம. சத்தியபாமா

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

மூலிகைக் கற்பங்கள்

மா. சத்தியபாமா எம். ஏ., எம்.பில்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
டி.டி.டி.ஐ. வளாகம், தரமணி (அஞ்சல்)
சென்னை - 600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	: **MULIKAIK KAṞPAṄKAL**
Author	: M. Sathya Bama
Published by & Copyright	: International Institute of Tamil Studies, Chennai - 600 113
Publication number	: 240
Language	: Tamil
Edition	: First
Dateof Publication	: September, 1996
Paper used	: 16 Kg. Creamwove
Size of the book	: 1/8 Demy
Printing types used	: 10 pr.
Number of copies printed	: 1,000
Number of pages	: xvi+ 336
Price	: Rs. 80 . 00
Typesetted by	: **VASANTHA PRINTERS,** 25, Arunachalapuram, Adyar, Chennai- 600 020 Ph : 4913971
Printer	: **SHRI VIGNESH PRINTS**, Ms - 33. © 484848(
Binding	: Paperback
Subject	: Siddha medicine

வெள்ளிவிழா வெளியீடு

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 1979-இல் சுவடியியல் பட்டய வகுப்பு தொடங்கப்பட்டது. 1982இல் சுவடியியல் மாணவியாகச் சேர்ந்து பயின்றவர் செல்வி சத்தியபாமா, அந்த ஆண்டில் தேர்வு பெற்ற மாணவர்களுள் முதன்மைத் தகுதி பெற்றதால் இந்நிறுவனத்தில் ஓராண்டு சுவடியியல் ஆய்வாளராகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றார். அப்பொழுது திட்டப் பணியாகச் செய்த நூல்களுள் ஒன்று 'மூலிகைக் கற்பங்கள்'.

பேராசிரியர் க.த. திருநாவுக்கரசு இந்நிறுவனத்தின் இயக்குநராக இருந்தபோது செல்வி சத்தியபாமாவின் எழுத்துரு கண்ணப்பா ஆர்ட் பிரிண்டர்ஸிடம் கொடுக்கப்பட்டது. 16 பக்கங்கள் கொண்ட ஒரு பாரம் அச்சடிக்கப்பட்டது.

பேராசிரியர் க.த. திருநாவுக்கரசு அவர்கள் காலத்தில் அச்சுக்குக் கொடுத்த அந்த எழுத்துருவினைப் பற்றித் தற்போது அறிய வந்தேன். அச்சுகத்தாரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது அவ்வெழுத்துரு அவர்களிடம் இல்லை என்றும், அவ்வெழுத்துரு அச்சுப்படி திருத்திய புலவர் வெற்றியழகன் என்பவரிடம் இருக்கலாம் என்றும் தெரிவித்தனர். எட்டாண்டு கால இடைவெளி ஏற்பட்டு விட்டதால் அவ்வெழுத்துரு அவரிடம் இருக்குமோ என்று ஐயுற்றேன். எனினும் புலவர் வெற்றியழகனிடம் அவ்வெழுத்துரு பற்றிக் கேட்டேன். பொறுப்புமிக்க அவர் அவ்வெழுத்துருவைப் பாதுகாத்து வைத்திருந்தார். பிறகு அவ்வெழுத்துருவை நிறுவனத்தில் ஒப்படைத்தார். பாராட்டத்தக்க நற்பண்பாளர். அவ்வெழுத்துரு இப்போது வெளியீட்டுக் குழுவினரின் பரிந்துரைக்கிணங்க வெள்ளி விழா ஆண்டு வெளியீடாக வெளிவருகிறது.

சத்தியபாமா சித்த மருத்துவத்தில் 'மூலிகைக் கற்பங்கள்' பற்றி மிக நன்றாக ஆய்வு செய்துள்ளார். 'சித்த மருத்துவக் கல்லூரியில் பாடமாக வைக்கத் தகுதியுடையது இந்நூல் எனில் அது மிகையாகாது' என்று மூலிகை மணி வேங்கடேசன் இந்நூலைப் பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சத்தியபாமா மேலும் இது போன்ற சிறந்த நூல்களை வெளியிட்டுத் தமிழுக்குப் பெருமை சேர்க்கவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி-பண்பாட்டுத்துறை அமைச்சர், தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறைச் செயலாளர் ஆகியோர்க்கு எங்கள் இனிய நன்றி.

இந்நூலின் மெய்ப்பினைத் திருத்தம் செய்த தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையத்தின்ஆய்வு அலுவலர் மருத்துவர் ப. நீலகண்டன் அவர்களுக்கும், ஒளிக்கோர்வை செய்த வசந்தா அச்சகத்தார்க்கும், அச்சிட்ட பாவை அச்சகத்தார்க்கும் எங்கள் நன்றி.

இயக்குநர்.

உள்ளுறை

		பக்கம்
1.	அணிந்துரை	iii - iv
2.	முன்னுரை	vi
3.	பதிப்புரை	vii - xvi
4.	நூலைப்பற்றிய செய்திகள்	1-18
5.	நூல்-மூலிகைக் கற்பங்கள்	21-210
6.	துணை நூற் பட்டியல்	211
7.	பாட்டு முதற் குறிப்பு அகராதி	212-220
8.	அருஞ்சொல் அகராதி	221-282
9.	பின்னிணைப்பு-1 அச்சுநூல்களில் கற்பங்கள்	283-331
10.	பின்னிணைப்பு - 2 உபரசங்களின் பெயர்கள்	332-333
11.	பின்னிணைப்பு- 3 கற்பம் பற்றியசுவடிகள் உள்ள இடங்கள்	334-336

சுருக்கக் குறிப்புகள்

1.	அ.க.ஞா. 1200	-	அகத்தியர் கலைஞானம் 1200
2.	அ.வை.கா	-	அகத்தியர் வைத்திய காவியம்
3.	கா.க	-	காயகற்பம்
4.	கொ.க.நூ	-	கொங்கணர் கற்பம் நூறு
5.	கொ.க.மு	-	கொங்கணர் கற்ப முறை
6.	ச.க.நூ	-	சட்டைமுனி கற்பம் நூறு
7.	ச.கா	-	சட்டைமுனி காயசித்தி
8.	சி.வெ	-	சித்தர் வெண்பா
9.	தி.க.மு	-	திருமூலர் கற்ப முறை
10.	தே.வைவெ	-	தேரையர் வெண்பா
11.	போ.க.வி	-	போகர் கற்ப விதி
12.	போ.சூ.எ	-	போகர் சூத்திரம் 700
13.	ம.தி.எ	-	மச்சமுனி திருமந்திரம் எண்ணூறு

முன்னுரை

சித்த மருத்துவ அகமருந்துகளுள் ஒன்றாக விளங்கி, இவ்வுடலை நீண்டகாலம் வாழவைப்பது கற்பம். இக் கற்ப மருந்துகளைப் பற்றித் தெரிந்து கொள்ள விழைவோருக்கும், இம்மருந்தினை ஆய்வு செய்ய விரும்பு வோருக்கும் பயனுள்ள வகையில் ஓலைச் சுவடிகள் மற்றும் அச்சு நூல்களில் கிடைத்த மூலிகைக் கற்பங்கள் தொடர்பான செய்திகள் அனைத்தையும் திரட்டித் தருவது இந்நூலின் நோக்கமாகும்.

இந்நூல், எட்டாண்டுகளுக்கு முன்பு மறைந்த முன்னாள் இயக்குநர் பேராசிரியர் க.த. திருநாவுக்கரசு அவர்களால் கண்ணப்பா ஆர்ட் பிரிண்டர்ஸிடம் கொடுக்கப்பட்டு ஏதோ காரணத்தால் நூல்வடிவு பெறாமல் நின்றுவிட்டது.

''மூலிகைக் கற்பங்கள்'' என்ற நூலைப் பதிப்பித்ததே மறந்துபோன நிலையில், இன்று இயக்குநராகப் பொறுப்பேற்று விளங்கும் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்கள் பெருமுயற்சி மேற்கொண்டு, தொலைந்து போனதாகக் கருதப்பட்ட இந்நூலின் எழுத்துருவைக் கண்டுபிடித்து வெள்ளிவிழா ஆண்டு வெளியீடாக வெளிக்கொணரும் அரும்பணியைச் செய்துள்ளார். அவருக்கு வாழ்நாள் முழுதும் நன்றிக் கடப்பாடுடையேன்.

இந்நூலைப் பற்றிச் சிறப்பான மதிப்புரை நல்கி, இந்நூல் வெளியிடப்பெறுவதற்குப் பேருதவி புரிந்ததோடு, மருத்துவம் தொடர்பான நூல்கள் பலவற்றையும் பதிப்பிக்கவேண்டும் என்ற ஆர்வத்தை வழங்கியுள்ள மூலிகை மணி முனைவர் க. வெங்கடேசன் அவர்களுக்கு என் உளம் நிறைந்த நன்றி.

இவற்றுக்கெல்லாம் மேலாக என்னை ஈன்று இத்துறையில் நான் பயில ஆர்வமூட்டிய என் பெற்றோருக்கு என் நன்றி.

மா. சத்தியபாமா

பதிப்புரை

ஓலைச்சுவடிகள் தொடர்பான செய்திகள்

'மூலிகைக் கற்பங்கள்' எனும் இந்நூல் ஒரு தொகுப்பு நூலாகும். கற்பம் தொடர்பான சுவடிகள் இந்நூலுக்கு அடிப்படையாக அமைகின்றன. இந்நூலில், கற்பங்கள் குறித்த செய்திகள் பலவற்றையும் தெளிவாக உணரமுடிகிறது. கற்பம் தொடர்பான சுவடிகள் சுவடி நூலகங்களில் கிடைக்கின்றன.

பயன்படுத்தப்பட்ட சுவடிகள்

இந்நூலுள் பயன்படுத்தப்பட்டுள்ள சுவடிகள் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் இருந்தும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இருந்தும் எடுத்துப்பயன்படுத்தப்பட்டன. 'கற்பம்', கல்பம்', 'கற்பவிதி', கற்பவகை, கற்பமுறை, கற்பசூத்திரம் எனும் பெயரில் அமைந்த சுவடிகளே பெரும்பான்மை தேர்ந்தெடுக்கப்பட்டன. எனினும் அவ்வப் பொழுது சில கற்பங்கள் தொடர்பான செய்திகள் அமைந்த சுவடிகளும் பயன்படுத்தப்பட்டன. அவை,

சென்னை அரசினர் கீழ்த்திசைச்சுவடிகள் நூலகம்

1.	அழுகணி சித்தர் கற்பம் கண்ணிகள்-21	R.No.7078
2.	ஏலேலஞ் செட்டியார் வாதகல்பம்	R. No.6229
3.	காய கற்பம்	R. No.7983
4.	கொங்கணர் கற்பம்	R. No.2289
5.	கொங்கணர் கற்பம்	R. No.2306
6.	கொங்கணர் கற்பம்	R. No.6310
7.	கொங்கணர் கற்ப சூத்திரம்	R. No. 7064
8.	கொங்கணர் கற்ப சூத்திரம்	R. No.3657

9.	கொங்கணர் கற்பம் நூறு	D. No.1955
10.	கொங்கணர் கற்பம் நூறு	D. No.2414
11.	கொங்கணர் கற்பம் 110	R. No.2401
12.	கொங்கணர் கற்பமுறை 100	R. No.2273
13.	சட்டைமுனி கற்பம்	R. No.2464
14.	சட்டைமுனி கற்பம்	R. No.3718
15.	சட்டைமுனி கற்பம்	R. No.6932
16.	சட்டைமுனி கற்பங்கள்	R. No.145
17.	சட்டைமுனி கற்பங்கள்	R. No.1031
18.	சட்டைமுனி கற்பம் 200-இல் காயசித்தி	R. No.6902
19.	சட்டைமுனி கற்பம் 100	R. No.4899
20.	சட்டைமுனி காயகற்பம் 100	R. No.1079
21.	சட்டை முனியார் கற்பமுறை 100	R. No.4899
22.	சட்டைமுனியார் கற்பம் 100-ல்	R. No.6904
23.	சட்டை முனியார் கற்பமுறை	R. No.6990
24.	சட்டைமுனியார் கற்ப வகை	R. No.6931
25.	சட்டை முனியார் கற்பவிதி	R. No.7099
26.	திருமூலர் கற்பமுறை(கையெழுத்துப்பிரதி)	R. No.7939
27.	தன்வந்திரி நிகண்டு முந்நூறு	R. No.145(a)
28.	நந்தீஸ்வர காடிக்கார கற்பம்(கையெழுத்துப்பிரதி)	R. No.7260
29.	போகர் கற்பவிதி	R. No.8(a)
30.	வியாக்ரபாதர் அதீதகல்பம்	R. No.4234

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

1. அகத்தியர் வைத்திய காவியம் 1500 சு.எண் 301
2. சட்டைமுனி கற்பம் நூறு சு.எண் 275
3. சட்டைமுனி கற்பம் நூறு சு.எண் 337
4. மச்சமுனி திருமந்திரம் 800 சு.எண் 85

'கற்ப மருந்துகள்' அகமருந்து வகைகள் பலவற்றையும் தன்னுள் அடக்கியுள்ள காரணத்தால் முழுமையும் தொகுத்தல் இயலாததாகும். அதிக எண்ணிக்கையுள்ள மருத்துவச் சுவடிகளில் கற்பசெய்திகள் காணப்படுகின்றன. எனவேதான் இந்நூலைத் தொகுக்கக் கற்பம் என்ற தலைப்பினை உடைய சுவடிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

பொதுச் செய்திகள்

பெரும்பாலான சுவடிகளில் எழுத்துக்கள் நல்ல நிலையிலேயே அமைந்து காணப்படுகின்றன. சில சுவடிகளில் மிகவும் தெளிவாக எழுத்துக்கள் அமைந்திருந்த நிலையைக் காண முடிந்தது.

சான்று : சட்டைமுனி கற்பம் 100. R.No.4899 பெரும் பான்மையான சுவடிகளில் ஒரே கையெழுத்தே காணப்படுகிறது. ஆனால் சிலவற்றில் இரண்டுக்கு மேற்பட்ட கையெழுத்துகள் காணப்படுகின்றன.

சான்று : சட்டைமுனி கற்பவிதி. R.No. 7099 சில சுவடிகளின் எழுத்தின் தெளிவு வேகமாக எழுதப்பட்டுள்ளதன் காரணத்தால் மாறுபட்டுள்ளது. சுவடிகளில் சில புதியனவாகக் காணப்படுகின்றன.

சான்று : சட்டைமுனி கற்பம்100. R.No.4899. ஆனால் சில சுவடிகள் மிகவும் சிதைந்த நிலையில் காணப்படுவதால் அவற்றை ஒப்பீட்டிற்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்ள முடிந்தது.

சான்று : கொங்கணர் கற்பம் நூறு D.No. 2414

சட்டை முனி காயகற்பம் 100 R.No.1079

சட்டை முனி கற்பமுறை R.No.6990

ஒரு சுவடிக்கட்டில் ஒரு நூல் முழுமையாக அமைந்திருத்தல் காண முடிகிறது. சில சுவடிக்கட்டுகளில் பல நூல்கள்அமைந்தும் காணப்படுகின்றன. இக்கட்டுகளில் சிலவற்றில் மருத்துவ நூல்கள் மட்டுமே தனித்து அமைந்து உள்ளன. சிலவற்றில் வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த நூல்களோடு சேர்ந்தும் காணப்படுகின்றன. சில பெயர் இருப்பினும் ஒரு பக்கத்தில் மட்டும் நூல் உள்ளது. ஒரே ஏடு மட்டுமே அமைந்த சுவடிகளும் உண்டு.

சான்று : சட்டைமுனி கற்பம் R.No.3718

கொங்கணர் கடைக்காண்டம் 500-ல் கற்ப விபரம் R.No.6903

நீள அகலங்களில் ஒரே மாதிரியான அளவில் உள்ளனவே ஒரு கட்டில் அமைந்துள்ளன. ஒரு சில சுவடிக் கட்டுகளில் வெவ்வேறு அளவுள்ள ஏடுகள் அமைந்துள்ளன. சில சுவடிகளில் மட்டுமே எல்லாப் பாடல்களும் அமைந்து முழுமையாகக் காணப்படுகின்றன.

சான்று : கொங்கணர் கற்பமுறை. R.No.2273

சட்டைமுனி கற்பம் நூறு சு.எண் 275

பெரும்பான்மையான சுவடிகளில் முழுமையற்ற அமைப்பே காணப்படுகிறது. நூலின் முதலில் அமைந்துள்ள பாடல்களோ அல்லது இறுதியில் அமைந்துள்ள பாடல்களோ முழுமையாக அமையாதுள்ள சுவடிகளாக உள்ளன. சில சுவடிகளில் ஆரம்பம், முடிவு இரண்டுமின்றி இடைப்பட்ட பகுதிகள் மட்டுமே காணப்படுகின்றன.

சான்று : கொங்கணர் கற்பம் 100 D.No.2414

(முதலில் ஐந்து பாடல்களும் இறுதியில் ஏழுபாடல்களும் இல்லை)

1. கொங்கணர் கற்ப சூத்திரம் R.No.7064

(இதில் 88 வது பாடலில் இருந்து இறுதிவரை உள்ளது)

சில சுவடிகளில் ஒரு குறிப்பிட்ட சிறு தலைப்பின் கீழ் உள்ள பாடல்கள் மட்டும் அமைந்து நூலின் பெயராலேயே வழங்கப்பட்டுமுள்ளன.

சான்று : கொங்கணர் கற்பம் நூறு D.No.1955

(இதில் துவாதேசி லேகியம் என்ற தலைப்பில் அமைந்த பாடல்கள் மட்டும் காணப்படுகின்றன. 9 ஆம் பாடல் முதல் 25 ஆம் பாடல் வரை அமைந்துள்ளன.)

சிதைந்துள்ள சுவடிகளைத்தவிர மற்ற சுவடிகளில் முதல் பாடல்கள் வாழ்த்துப்பாடல்களாக அமைந்துள்ளன. ஆனால் கொங்கணர் கற்பம் நூறு R.No.6310 என்ற சுவடியில் மட்டும் கடவுள் வாழ்த்து காணப்பட வில்லை.தொடக்கத்திலேயே கற்பம் உண்ண மேற்கொள்ள வேண்டிய பத்தியமுறை அமைந்து காணப்படுகிறது. இதற்குக் காரணம் மூல ஏட்டில் அவ்வேடு சிதைந்து எழுத்துக்கள் புரியாத நிலையில் அமைந்திருக்கலாம். சுவடியில் அமைந்துள்ள பாடல்களில் கடவுள்ரைக் குறித்த செய்திகள் அமைந்திருப்பதால் கடவுள் நம்பிக்கை இல்லையோ என்ற சந்தேகப்பட இடமில்லாமல் போகிறது.

சில சுவடிகளில் முன்குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

சான்றாக.

கொங்கணர் கற்பம் நூறு R.No.6310 - இல்

''குருவாழ்க. குருவே துணை கொங்கணர் ....வாக்கியம் காய கற்பத்துக்கு முந்தின கற்பம் '' எனவும்

கொங்கணர் கற்பம் R.No. 2306 - இல்

''கொங்கணர் முதல் காண்டம் கற்பமுறையிலுள்ளது'' எனவும் எழுதப்பட்டுள்ளது.

சில சுவடிகளின் இறுதியில் கடவுள் வணக்கம் சொல்லப்பட்டுள்ளது.

சான்று : 1. சட்டைமுனி கற்பம் நூறு சு.எண் 275

''சட்டை முனியார் கற்பவிதி முற்றும். சற்குரு பாதமே துணை. ஈஸ்வரி துணை அய்யாவும் எனக்குத் துணையாக வேண்டும். ஆதி. ஆதி. ஆதி.''

2. கொங்கணர் கற்பமுறை 100 R.No.2273 ''மனோன்மணி சகாயமுண்டாகவும். கொங்கண மூர்த்தியாரருளிச் செய்த கற்ப சூத்திரம் முற்றிற்று.

சில சுவடிகளில் எழுதியவர்களின் பெயர்கள் நூலின் இறுதியில் காணப்படுகின்றன.

சான்று கொங்கணர் கற்பமுறை 100 R.No.2273-இல் ''ராமசுவாமி''

என்றும், சட்டைமுனி கற்பம் நூறு " 275 - இல்

''திருவேங்கடம் கையெழுத்து'' என்றும் எழுதப்பட்டுள்ளது

தலைப்புகள்

கற்பம், கல்பம், கற்பவிதி, கற்பவகை, கற்பமுறை கற்ப சூத்திரம் என்ற இறுதிகளை உடைய சுவடிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. 'கற்பம்' என்ற பெயரில் அமைந்துள்ள சுவடிகளில் ஒரு சில சுவடிகள் கற்பம் அல்லாத செய்திகளைக் கொண்டுள்ளன.

சான்று (1) மந்திர கல்பம் R.No.5681

(யந்திரங்களும், உரைநடையில் மந்திரங்களும், வேறு சில பாடல்களும் அமைந்த கையெழுத்துச் சுவடி)

(2) பேஷக கற்பம். R.No. 3503, R.No.945(c)

(இவை அளவைகள் தொடர்பான செய்திகளைக் கூறும் நிகண்டுஅட்டவணையாக அமைந்துள்ளன)

மேலும் 'கற்பம்', 'கர்ப்பம்' என்ற சொற்கள் மாறியமைவதாலும் பல சுவடிகளை ஆராய்ந்து அதில் கூறப்பட்டுள்ள செய்திகளைக் கொண்டு உணர வேண்டியதாக இருந்தது.

சான்று : வான்மீகர் கற்பசூத்திரம் R.No.4728
கொங்கணர் வாக்கிய கற்ப சூடாமணி R.No.6420
புலிப்பாணி கற்ப உற்பத்திR. No.6218

இவையாவும் 'கர்ப்பம்' தொடர்பான செய்திகளைவிளக்குவனவாக அமைந்துள்ளன.

சட்டைமுனி கர்ப்பம் நூறு R.No. 4899 எனும் சுவடி 'கற்பம்' தொடர்பான செய்திகளைத் தன்னகத்தேகொண்டிருந்ததைக் காணமுடிகின்றது.

இவற்றையன்றி 'ஞான கற்பம்'எனும் சுவடிகளும் காணக் கிடைக்கின்றன. இவை ஞானத்தின் வாயிலாக மூப்பு, பிணி இவைகளை நீக்கும் வழிமுறைகளைச் சொல்லிச் செல்கின்றன.

சான்று :

புலத்தியர் ஞான கற்ப சாதனை R.No.6005

R.No.6006, R.No.7650, R.No.7649

சிறுதலைப்புகள்

சுவடிகளின் இடது ஓரப்பகுதிகளில் சிறு தலைப்புகள் தரப்பட்டுள்ளன. அவையாவும் கற்பங்களின் பெயர்கள், மற்றும் சிலதலைப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. அந்தந்தப் பக்கங்களில் அமைந்துள்ள பாடல்களுக்கு அவ்வப் பக்கங்களில் அமைந்துள்ள சிறுதலைப்புகள் பொருந்தும் எனக் கருதியது தவறான முடிவாயிற்று.

எண்களும் குறிகளும்

சுவடிகளில் பயன்படுத்தப்படும் எண்கள் யாவும் தமிழ் எழுத்துக்களாகும். பக்கங்களுக்கு எண்கள் கொடுக்கப்பட்டன. மேலும் பாடல்களுக்கு இறுதியில் பாடல் எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த எண்களின் முன்னும் பின்னும் சில குறியீடுகள் காணப்படுகின்றன. ''='' ''எ'' என்ற குறியீடுகள் காணப்படுகின்றன. மேலும் சில சுவடிகளின் இறுதியில் எழுதிய ஆண்டு முதலான விபரங்கள் காணப்படுகின்றன.

சான்று : 1. சட்டைமுனி கற்பவிதி R. No.7099

''விக்ருதி வருசம் ஐப்பசி மாதம் 16 திங்கட்கிழமை சதய நட்சத்திரத்தில் நாழிகை இருபத்தேழுக்குமேல்'' என்றுள்ளது. இதில் 16 என்று ஆங்கில எண் குறிப்பிடப்பட்டுள்ளது.

சான்று 2. கொங்கணர் கற்பம் R.No.2289 '

௲அளசஅ வருசம் ஆடிமாதம் ௰௬௳ பல்லாரியில் எழுதி நிறைந்தது'' என்று காணப்படுகின்றது.

பாடலின் அமைப்பு.

இந்நூலில் பல்வேறு யாப்பமைப்பில் அமைந்த பாடல்கள் காணப்படுகின்றன. இவற்றில் விருத்தம் வெண்பா, சிந்து முதலிய யாப்பில் பாடல்கள் உள்ளன. விருத்தம், வெண்பா ஆகியவை அந்தாதியாப்பில் அமைந்து உள்ளவை. அதாவது, முதல்பாடலின் இறுதியில் உள்ள சொல் அல்லது அசை, அல்லது சீர் அடுத்த பாடலின் தொடக்கமாக வருகிறது. இந்த யாப்பமைப்பு நினைவில் நிறுத்திக் கொள்ள ஏதுவானதாகும். பொதுவாகச் சித்தமருத்துவச் சுவடிகளில் அந்தாதி யாப்பமைப்பில் பாடல்கள்அமைந்திருப்பதைக் காணலாம்.

இந்நூலில் ஒரே ஒரு இடத்தில்மட்டும் அந்தாதியாப்பில் இருந்து பிறழ்ந்து காணப்படுகின்றது(512-513). இப்பாடல்களில் எதுகைகள் ஒரே மாதிரியாக அமைந்துள்ளன. ஆனால் 529-வதுபாடலில் இவ்வமைப்பு மாறுபட்டுள்ளது.

சில பாடல்களில் மிகையடிகள், சில பாடல்களில் குறையடிகள அமைந்துள்ளன.

மிகையடிகள் - பாடல்கள் 255, 558

குறையடிகள் - பாடல்கள் 49, 295

ஒரே நூல் அமைந்த இரண்டு சுவடிகளில் ஒரு சுவடியில் இரண்டு எண்சீர் பாடல்கள் அடுத்த சுவடியில் 5 அடிகளில் எழுதப்பட்டிருந்ததைக் கவனிக்க முடிந்தது. இதனால் சுவடி எழுதியோர் விரைந்து முடிக்கக்கருதி இவ்வாறு சுருக்கி எழுதி இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. சில பாடல்களில் சில அடிகள் எழுதப்படாமல் குறையடிகளோடு அமைகின்றன. இது படியெடுத்தோர் முன் சுவடியில் இருந்த பகுதியைக் கவனக் குறைவாலோ அல்லது சுவடி சிதிலமாகி எழுத்துக்கள் புரியாத நிலையில் இருந்ததாலோ விட்டிருந்திருக்கலாம்.

எழுத்துகள்

இச்சுவடிகளில் உள்ள எழுத்துகளில் மெய்யெழுத்துகளுக்கு புள்ளிகள் இல்லை. மேலும் ெ, ே இவற்றுக்கிடையேயும் எவ்வித மாறுபாடும் காட்டாது எழுதப்பட்டுள்ளன. சுவடிகளில் சிற்சில இடங்களில் கூட்டெழுத்துக்கள் காணப்படுகின்றன: த்து, - த்தி, டட - ட்ட, யூம் - யும்). மேலும் 'றா' என்பது எனவும், 'லை' என்பது எனவும், 'த்தா' என்பது எனவும், 'ம' என்பது எனவும் எழுதப்பட்டுள்ளன. மேலும் கொங்கணர் கற்பமுறை நூறு R.No. 2273 சுவடியின் இறுதியில்.

- ராமசுவாமி

என்று கிரந்த எழுத்திலும் தமிழிலும் காணப்படுகின்றது. மேலும் வடமொழி எழுத்துக்களான ஸ, ஷ, க்ஷ, ஜெ முதலான எழுத்துக்களும் காணப்படுகின்றன.

பதிப்பில் திருத்தம்

கால நீட்சி, கவனக்குறைவு, பேச்சுநடையில் எழுதுதல், விரைவு , எழுத்துக்களின் வடிவ ஒற்றுமை, பிறர் சொல்லிக்கேட்டு எழுதும் போது ஒலியின் பேதத்தால் ஏற்படும் பிழைகள் எனச் சுவடிகளில் பிழைகள் காணப்படுவது இயல்பு.

சுவடிகளில் இருப்பதைத் திருத்துதல் என்பது அதமர்க்கு உரிய தொழிலாகக் கருதுவர் பெரியோர். எனினும் பிழைபட எழுதப்பட்ட தொடர்களை அப்படியே பதிப்பிப்பதோ அடைப்புக் குறிகளைப் பயன்படுத்திப் பதிப்பிப்பதோ நூலை முழுமை யாக்காது என்ற காரணத்தினால் நூலில் பொருள் மாறுபாடு ஏற்படாத வகையில் ஊகிக்க முடிந்த இடங்களில் எளிய திருத்தங்கள் செய்யப் பட்டுள்ளன. அவ்வாறு ஊகிக்க இயலாத இடங்களில் புள்ளிகள் வைத்து விடப்பட்டுள்ளன.

பேச்சு வழக்குச் சொற்கள்

பேச்சுவழக்கில் கையாளப்படும் பலசொற்கள் அப்படியே பாடல்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. சான்றாக,

செளிப்பான - செழிப்பான

சுளித்து - சுழித்து

அளித்து - அழித்து

அருபத்து - அறுபத்து

இளப்பு - இளைப்பு

ஆணுவம் - ஆணவம்

அஞ்சு - ஐந்து

திரேகம் - தேகம்

இவை போன்றவை செய்யுள் நடைக்கு ஏற்ற முறையில் தமிழ்ச் சொற்களாக எழுதப்பட்டுள்ளன. ஆனால் சில இடங்களில் இவ்வித மாற்றம் செய்ய இயலவில்லை. ஏனென்றால் அந்தம் ஆதித்து அமையும் அந்தாதி யாப்பினால் அந்தத்தில் அமையும் கொச்சை மொழிச் சொற்களை மாற்றம் செய்ய இயலவில்லை. அங்ஙனம் செய்தால் அடுத்த பாடலின் எதுகைகளுக்கு பொருந்தாமல் போய்விடுகிறது. எனவே மாற்றம் செய்யாது அவ்விடங்களில் எல்லாம் உள்ளது உள்ளபடியே எழுதப்பட்டுள்ளது. மேலும் இந்நூலுக்குப் பயன்படுத்திக் கொண்ட சுவடிகளிலிருந்து பதிப்பித்த ஆய்வோடு, அச்சு நூல்கள் ஆகியவற்றிலும் எந்த மாற்றமும் செய்யவில்லை.

* * *

நூலைப்பற்றிய செய்திகள்

1.1 பொது

இந்நூல், மூலிகைகளைப் பயன்படுத்திக் கற்பங்கள் செய்யும் முறைகளையும், அவைகளால் தீரும் நோய்கள் மற்றும் பிற விளைவுகளையும் விளக்குகின்றது. இவை மட்டுமல்லாது உபரச கற்பங்கள், சில தனித்த கற்ப நூல்களையும் தன்னகத்தே கொண்டது.

1.2 பாடப்பட்டுள்ள முறை

1.2.1 பொது

சித்த மருத்துவத்தில் மருத்துவமுறைகளைக் குரு தன் சீடன் அல்லது சீடர்களுக்குச் சொல்ல, அவர்கள் தங்கள் சீடருக்குச் சொல்ல, அவை மரபு வழியாகத் தொடர்ந்து வரும் . இம்முறைமைகள் சித்தர்கள் நூல்களில் சீடன் அல்லது சீடர்களை முன்னிலைப்படுத்திச் சொல்லுவனவாக அமையும். அவற்றுள் சிலவற்றில் பெண்ணை விளித்துப் பாடுவதாகவும் பாடல்கள் அமைந்து காணப்படுதல் உண்டு. இத்தொகுப்பு நூலில் நூல் முழுமையும் சீடரை விளித்துப் பாடுவதாகவே அமைந்து காணப்படுகிறது. பெண்ணை விளித்துப் பாடுவதாக ஓரிடத்திலும் அமையவில்லை. சில பாடல்களில் தானே அமைத்துப் பாடுவதாகவும், வேறு சில பாடல்களில் பிறர் கூறத் தாங்கள் கேட்டதாகக் கூறியும் பாடல்கள் அமைத்துள்ளன.

சான்று :

1.	செப்புகிறேன்	345
2.	சொல்லுகிறேன்	171
3.	சொல்லுவோம்	271
4.	சொல்வேன்	347, 364, 375, 385, 417
5.	கூறுகிறேன்	505
6.	சொன்னேன்	62, 84, 479

7. திறந்திட்டேன் 109
8. இசைந்திட்டேன் 97
9. எழுதிப்போட்டேன் 97
10. உரைக்கிறேன் 572

பிறர் தங்களுக்குக் கூறுவனவாக அமையும் சில இடங்கள்:

''இடம்பிறவே யிக்கருவை மறைத்துச் சொன்னேன்
என்னாசான் சட்டைமுனி யியம்பி னாரே''[1]

- பாடல் 39

''தளம்பியதோர் சட்டைமுனி யெனக்கு மைந்தா
தப்பாமல் தம்பனமாங் குளிகை சொன்னார்''[2]

- பாடல் 51

சீடரை விளிப்பனவாக அமைவன:

1.	மைந்தா	240, 392, 402
2.	மைந்தர்களே	578
3.	மைந்தனே	63, 128, 234, 322
4.	உத்தமனே	67, 68, 69, 70, 92, 190, 234, 322, 349, 413, 479
5.	அப்பனே	60, 66, 75, 191, 233, 333, 335, 347, 366, 375
6.	பாலகனே	77
7.	மக்காள்	505
8.	மகனே	373

தாம் கூறவந்த கருத்தினை வலியுறுத்திக் கூறும் போக்கு சில பாடல்களில் காணப்படுகின்றது. மருந்துகள் செய்முறையின் போதும், மருந்து உண்ணக் கூறுமிடத்தும், பலன்களைக் கூறும்பொழுதும் இப்போக்கு அமைந்துள்ளதைக் காணலாம்.

சான்றாக :

1. முள்ளியிலைக் கஷாயத்தில் தோய்ப்பாய் - 197
2. உண்ணப்பா கஷாயத்தை விட்டுவிடாதே - 67
3. தின்முறையை நீயறிந்து தின் - 27

1.2. கொங்கணார் கற்பம் நூறு.

4. பூச்சாற்றி லரைத்தி டாயே - 31
5. மாசற்ற குறிஞ்சித்தேன் தன்னில் கொள்ளு - 61
6. நமனுக்கு நமனாவாய் நன்றாய்ப் பாரே - 65
7. போக்கோடே வாசியைத்தா னிழுத்து வாங்கே - 62
8. மூதண்ட கஷாயமுண்டு சொல்லக் கேளு - 66

இவையன்றி மறவாதே, பாரப்பா, துஞ்சாதே, விடுகாதே என்பன போன்ற அறிவுறுத்தும் வகையில் அமைந்த பலவிடங்களைக் காண முடிகிறது.

1.3. இலக்கிய நயங்கள்

இலக்கியங்களில் நயங்கள் மிகுந்து காணப்படுவது இயல்பான ஒன்றாகும். சொல், பொருள் இவற்றின் அமைப்பினால் சொல்நயம் எனவும், பொருள்நயம் எனவும் இருவகையாகப் பகுத்துக் கூறலாம். சொல்நயம் எனுமிடத்து அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி, ஒருபொருட்பன்மொழி முதலான வற்றைக் கூறலாம். பொருள்நயம் எனுமிடத்து உவமை, உருவகம், இயற்கை வருணனைபோன்றனவும் நகைச்சுவை, அவலம் முதலான ஒன்பான் சுவைகள் முதலானவற்றையும் கூறலாம். இத்தகைய நயங்கள் மருத்துவ இலக்கியங்களில் குறைவாகவே காணப்படுகின்றன. இதற்குக் காரணம் பிற இலக்கியங்களில் தம் எழுத்தாற்றலை வெளிப்படுத்துவதற்காகவும், சொல்ல விரும்பிய கருத்து களைப் பிறர் மனங்கொள்ளும் வகையில் சொல்லிச் செல்வதற்காகவும் ஆகும். ஆனால், மருத்துவ இலக்கியங்களில் இத்தகைய நிலை இல்லை. மருத்துவம் என்பது எல்லோருடைய வாழ்விலும் பங்குபெறும் இன்றி யமையாத ஒன்றாகும். அதனால், பொருளுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப் பட்டிருந்தது போலும், ஆகையால், நயங்களைப் பொறுத்தமட்டில் பிற இலக்கிய வகைகளைக் காட்டிலும் குறைவான அளவே காணப்படுவதோடு எளிமையாகச் சொல்லிச் செல்லும் பாங்கினையும் காணமுடிகிறது. இத்தொகுப்பு நூலினுள்ளும் இந்நிலையே அமைந்திருத்தலை உணர முடிகிறது.

1.3.1. சொல் நயங்கள்

1.3.1.1. அடுக்குத்தொடர்

இந்நூலுள் அடுக்குத்தொடர்கள் ஆங்காங்கே கையாளப்பட்டுள்ளன. இவை சொல்ல வந்த கருத்தை வலியுறுத்துவதற்காகவும், அசைக்காகவும் பயன் படுத்தப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

சான்றுகள் :

1. அண்டி அண்டி - 513
2. ஆகு மாகும் - 528
3. இல்லை இல்லை - 488
4. ஊது ஊது - 463
5. கண்டு கண்டு - 513
6. கல்லு கல்லு - 497, 521
7. கேளு கேளு - 466
8. சொன்னேன் சொன்னேன் - 479
9. நித்தம் நித்தம் - 568
10. நோக்க நோக்க - 518
11. மணி மணி - 491
12. வெந்து வெந்து - 526

1.3.1.2. இரட்டைக் கிளவி

இரட்டைக்கிளவியானது அடுக்குத்தொடரின் பயன்பாடுகளையே தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

சான்றுகள் : 1. சலசல - 38

1.3.1.3. ஒருபொருட் பன்மொழி

இப்பாடல்களில் ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்கள் விரவிக் காணப்படுகின்றன.

சான்று :

1. கரியசாலை - 354, கரிசாலை - 23, 109, கரிப்பான் - 120, கரியானை - 120, கையான் - 74, 466, கையாந்தகரை - 123.
2. உடல் - 60, 69, உடம்பு - 41, 82, தேகம் - 1, 49, மெய் - 34, 141, மேனி - 34, 74, ஆக்கை 279, 561, காயம் 18, 37, சடம் 46, 47, சடலம் - 63, 377
3. நோய் - 12, 18, ரோகம் - 41, 45, வியாதி - 46, தோசம் - 68, 111
4. சூரியன் - 91, 96, அருணன் 578
5. அரவு - 139, 152, சர்ப்பம் - 304, பாம்பு - 87

இவற்றுள் பலவற்றுக்கு அதிகமான பாடல் எண்கள் இருப்பதால் இரண்டிரண்டு பாடல் எண்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன.

1.3.2. பொருள் நயங்கள்

1.3.2.1. உவமைகள்

இந்நூலுள் பல்வேறு இடங்களில் உவமைகள் எடுத்தாளப்பட்டுள்ளன. பெரும்பான்மையாக, 'போல' எனும் உவம உருபும், அரிதாக 'ஒக்க' என்ற உவம உருபும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சான்று :

"படிகத்தின் ஒளிபோல"	- 95	போல
"ஆலம் பழம் போல"	- 155	
"காசிதனைத் தரிசித்த பலத்துக் கொக்கும்"	- 51	ஒக்க
"தங்கத்தி னெடையொக்க"	- 90	

கற்பங்களைத் தயாரித்தலின்போது மேற்கொள்ள வேண்டிய செய்முறைகளை விளக்குமிடத்தும் கற்ப மூலிகைகளின் அடையாளம், நோய்தீரும் பாங்கு, கற்பமுண்ணும்போது ஏற்படும் துன்பம் முதலான இடங்களிலும் உவமைகள் பெரிதும் கையாளப்பட்டுள்ளன. சிறுபான்மை பிறவிடங்களிலும் கையாளப் பட்டுள்ளன. அனைத்து உவமைகளும் இங்குக் கொடுக்கப்படவில்லை. சான்றுக் காக ஒரு சில மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன.

செய்முறைகளை விளக்குமிடத்துக் கூறப்படும் உவமைகள்

சான்று : 1. ''கல்லுப்பை பாக்குப்போல் பொறுக்கி'' - 447
2. ''மாட்டியரைத் தேபோடு குழம்பு போலே'' - 465
3. ''மயனமதுபோல் மெழுகு பதம்'' - 436
4. ''மைபோல்'' - 114, 296, 430, 453, 465
5. ''செம்பரத்தம் பூப்போ லாமே'' - 300
6. ''மாதுளம்பூ போலே'' - 91
7. ''பவழம்போ லிருக்கிக் கட்டும்'' - 156
8. ''கரிபோலே தூளு மாகும்'' - 195
9. ''நாகம்போல் சத்து மாகும்'' - 32
10. ''உருண்டை போல்'' - 89

மூலிகைகளின் அடையாளம் கூறுமிடத்தமைந்துள்ள உவமைகள்:

சான்று: 1. ''கிளிப்போல காயுங் காய்க்கும்.'' - 128
2. ''இலையதுவு மரசிலை போற் காணும்'' - 128
3. ''காய்தின்றால் கற்கண்டு போலே தோணும்'' - 326
4. '' பட்டை தின்றால் கற்கண்டு போலே காணும்'' - 328
5 ''இலை தின்றால் கரும்பு போலாம்'' - 328
6. ''விதை தின்றால் மிக்கநெல்லிக் காய்போ லாகும்'' - 328

நோய்தீரும் பாங்கினைக் கூறுமிடத்தமைந்த உவமைகள்

சான்று: 1. ''தேளப்பா கொட்டியதோர் வேகம் போல'' - 109
(நோய் நீங்கும் வேகம்)
2. ''வைரம் போ லிறுகுந் தேகம்'' - 322
3. ''மலைபோலக் கைகா லாகும்'' - 33
4. ''மன்மதன் போல'' - 175,342,399
5. ''மேனியுமோ மாந்தளிரி னிறமு மாகும்'' - 336
6. ''கனகம் போல் சடந்தானும் கனிந்து மின்னும்'' - 337
7. ''தங்கம் போல் மேனி'' - 230

8. ''ரோமமது கருவண்டு போலாம்'' - 472
9. ''செழுங் கஞ்சம் போலாம்'' - 1
10. ''வண்டோடுபோல் மயிர் கருக்கும்'' - 316
11. ''அருணநிறம் போலாம் மேனி'' - 254
12. ''சந்திரன்போல் முகமு மாகும்'' - 92
13. ''கதிர்போலே தேகம் பாரு'' - 104
14. ''மாணிக்க ஒளிபோல வடிவு மாமே'' - 115

கற்பமுண்ணும்போது உண்டாகும் துன்பத்தைக் கூறுமிடத்தமைந்த உவமைகள்

சான்று:

1. ''கடிவிஷம்போல் உடம்பு வீழ்ந்தால்'' - 481
2. ''மெள்ளிலை போல் மேனியெல்லாந் தடித்துக் காணும்'' - 440
3. ''கொள்ளியால் சுட்டபுண்போல் நாபி வேகும்'' - 440
4. ''கட்டிவைத்த பழங்கனிபோல் தேகம் நோகும்'' - 441
5. ''தாமரைத் தண்ணீர் போல் தான் வருதல்'' - 376
6. ''மன்னர் மன்னர் கூடியல்லோ-நல்ல
மல்யுத் தங்கள் வளர்ந்ததுபோல்'' - 376

1.3.3 சொல்நயம்

இலக்கிய நயங்களுள் சொல்நயமும் ஒன்று. இந்நூலுள் பல இடங்களில் சொல்நயம் அமைந்து காணப்படுகிறது.

சான்றாக:

1. ''கனகமடா உன்தேகம் கல்லுகல்லு'' - 497
2. ''உன்னுடம்போ யிரும்புத் தூணாம்'' - 450
3. ''காயமது அருண னாகும்'' - 578
4. ''வார்த்தையது கின்னரத்தின் ஒலியாம்'' - 337
5. ''அண்ணவே ரோமமெல்லாம் அண்டங் காக்காய்'' - 179

முதலானவற்றைக் கூறலாம்.

1.3.4 உருவகம்

இந்நூலுள் பல்வேறிடங்களில் உருவகம் அமைந்திருத்தலைக் காண முடிகிறது.

சான்றுகள்:

1. ''காச்சுதே வாதமடம் வங்கக் கம்பங்
கட்டுதற்கு மதயானை சூத மச்சே'' - 167
2. ''கழுதைப் பயல்'' - 531
3. ''நதியென்ற சந்திரன்'' - 189
4. ''நமனென் றதித நோய்கள்'' - 426
5. ''மனக் குரங்கு'' - 262,371
6. ''சூதத்தை வங்கமென்ற மரத்திற் கட்டி
துப்புரவாய்ப் பரிவான விலங்கைப் பூட்டி
தீதத்தை கந்தகத்தைத் தீனி யூட்டி'' - 168
7. ''மூலமெனும் வச்சிரப்பை வீட்டுக் குள்ளே'' - 383
8. ''மூங்கில் முளை போலதுவும் கார சாரம்'' - 383
9. ''வாயுவென்ற தளம்'' - 179
10. ''வாரியெனு மமுரி'' - 430
11. ''விவேகமென்ற வாள்'' - 262
12. ''வாசியென்ற குதிரை' - 100
13. ''மடையரென்றால் கோவிலான மாடு மா௱டு'' - 531

1.3.5 நயமான இடங்கள்

தாம் கூறவந்த கருத்தைப் பிறர் மனங்கவரும் வகையில் எழுதுவது ஒரு தனிக் கலையாகும். இந்நூலுள் பலவிடங்களில் நகைச்சுவை உணர்வோடு தாம் கூற வந்த செய்திகளைச் சித்தர்கள் கூறியுள்ளார்கள். அவை பெரும்பான்மை மருந்துண்ணுவதால் ஏற்படும் விளைவைக் கூறுமிடத்து அமைந்துள்ளன.

சான்றுகள்:

1. ''கம்பான காயந்தான் கற்றூ ணாகும்'' - 189

2. ''குன்றான மலைபோலே கைகா லாகும்
குத்தினால் தவிடுபொடி கூழாங் கற்கள்'' - 33

3. ''சாகாம விருக்கலாஞ் சதுர்முகன்தன் படைப்புஞ்
தளர்ந்துபோம் ....'' - 232 (அ)

4. ''கடிதான நோயெல்லாம் கரைந்து போமே''

5. ''...... சாவு பொய்யாஞ் சதுர்முகன்தன் படைப்புந்
தப்பியே சதகோடி தரித்து நிற்கும்'' - 299

6. ''தூணுமே துரும்பாகும் பெண்ணரவங் கடித்தால்
சொல்லிவிட்டேன் சித்தியெல்லாம் விழலாய்ப் போமே'' - 189

7. ''நீங்குவது பிணிகளெல்லாம் ஓடிப் போகும்
நிமிடத்தில் நமனோடும் நிசந்தான் காணே'' -

8. ''நமனென்ற திதநோய்கள் நாடியே பறக்கும் - 426

9. ''நமன் வந்து நாடாமல் நடுங்கிப் போவான்'' - 64,230

10. '' நமனுக்கு நமனாவாய் நன்றாய்ப் பாரே'' - 64,322

11 ''தழந்தியே சர்ப்பங்கள் கடித்திட் டாக்கால்
தனக்கேதான் கேடென்றே நாடிச் சாமே'' - 304

12. ''நீக்கான வியாதியெல்லாம் நீறாய்ப் போகும்'' - 46

13. ''அண்ணவே ரோமமெல்லாம் அண்டங் காக்காய்
அதனுடைய யிறகுக்கு மதிக மாமே'' - 179

14. ''குமைந்ததொரு கற்பத்தால் முறிந்த தோசம்
கோடிவித மானாலுங் குலாவித் தீரும்'' - 483

15. ''ஒண்டுவது இடமற்று வாதம் ஓடும்'' - 264

இவை மட்டுமின்றிப் பல இடங்களில் இவை போன்ற நயங்கள் அமைந்து காணப்படுகின்றன.

1.4 வடமொழிச் சொற்கள்

இப்பாடல்களில் பல இடங்களில் வடமொழிச் சொற்க ர் பயன்படுத்தப் பட்டுள்ளன. சான்றாக,

1. அஸ்தம்-468	அஷ்டசித்தி-484	சாஸ்திரம்-174,542,555
2. அஸ்தி-377	கஷாயம்-53.64.67 - 236, 389	சூக்ஷ்சம் 383
பக்ஷ்சம்-412	ரிஷிகள்-256,564	ஜென்மம்-381
போக நிஷ்டை-269	ரிஷிகள்-232	ஜென்ம வினை-380
ராஜயோகம்-381	விஷம்-96	
ராஜாங்கம்-380	விஷநீர்-63,472	க்ஷயம்-427

போன்றவற்றைக் கூறலாம்.

1.5 வடசொற்கள்

சமஸ்கிருத மொழிச் சொற்கள் தமிழுக்கு வந்து தமிழின் இயல்புக்கு ஏற்ப வழங்கும் வடசொற்கள் காணப்படுகின்றன. சமஸ்கிருதத்திற்கே உரிய ஸ,ஜ,ஷ,ஹ,க்ஷ போன்ற எழுத்துகள் தமிழின் இயல்புக்கேற்ப அமைந்துள்ளன.

சான்றுகள்:

வடமொழிச் சொற்கள்	வட சொற்கள்
1. அக்ஷ்ட சித்தி	அட்ட சித்தி 484
2. ஈஸ்வரனார்	ஈசுவரனார் 541
3. ஈஸ்வரி	ஈசுவரி 35
4. க்ஷயம்	சயம் 67,81,422,446,480
5. க்ஷயரோகம்	சயரோகம் 534,574
6. ஸ்வரூபம்	சொரூபம் 536
7. ஸ்வரூபமணி	சொரூபமணி 536
8. ஜொலிக்கும்	சொலிக்கும் 398
9. தோஷம்	தோசம் 68, 111, 482, 483, 511
10. பக்ஷ்சி	பட்சி 96,523

11. பக்ஷசம் பட்சம் 283, 326, 413, 470, 471
12. ஜெனித்தோன் செனித்தோன் 382

1.6 நூலுள் கூறப்படும் செய்திகள்:

1.6.1 பொது

இந்நூலுள் மூலிகைக் கற்பங்கள் தயாரிக்கும் முறைகளும், அம் மருந்துகளால் தீரும் நோய்களும் தொகுத்து முறைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன. எந்தெந்த மருந்தை எந்தெந்த அளவு எடுத்துக் கொள்ள வேண்டும், எக்காலங்களில், எவ்வெவ்வனுப்பானங்களுடன் உட்கொள்ள வேண்டும் என்பன போன்ற செய்திகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அதைப் போல எத்தனை நாள்கள் மருந்துண்ண வேண்டும், மேற்கொள்ள வேண்டிய பத்திய முறைகள் போல்வனவும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. மருந்துப் பொருள்களைத் தயாரித்தலின் பொழுது ஊறவைக்க வேண்டிய கால அளவு, புடங்களின் எண்ணிக்கை, பதம் முதலான பல செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

மேலும், மருந்து உண்ணுங் காலத்து உண்டா(கு)ம் துன்பம், பத்தியம் தவறுவதால் ஏற்படும் விளைவு, அவை நீங்க மே(ற்)கொள்ள வேண்டிய மருத்துவ முறை முதலான பல செய்திகள் விளக்கப்பட்(டு)ள்ளன.

1.7 அளவைகள்

அளவைகளைப் பொறுத்தவரை நீட்டல், நிறுத்தல், முகத்தல், கால அள(வு)கள் இவற்றைப் பல்வேறு அளவீடுகளால் அளந்தமையை இந்நூலின் பல இ(ட)ங்களின் வாயிலாக உணரலாம். நீட்டல் அளவைகளில் சாண், அடி, முழம்,காதம், யோசனை ஆகிய அளவீடுகளையும், நிறுத்தல் அளவைகளில் பலம், கழஞ்சு,பணவெடை,குன்றியெடை,காசெடை,வராகன் ஆகிய அளவீடுகளையும், முகத்தல் அளவைகளில் படி, ஆழாக்கு, சேர் ஆகிய அளவீடுகளையும், கால அளவைகளில் கணம் அல்லது சணம் அல்லது நொடி, நிமிடம், கடிகை, சாமம், பொழுது, நாள், வாரம், பட்சம், மண்டலம்,மாதம், ஆண்டு முதலான அளவீடுகளையும், பயன்படுத்தியுள்ளமையைக் காண

முடிகிறது. மேலும் பாக்களவு,சுண்டைக்காயளவு, கனமிளகளவு, குன்றியளவு, சம்பழமளவு போன்ற தோராயமான அளவீட்டு முறைகளும் பயன் படுத்தப்பட்டுள்ளன. வீசம், கால், அரை, முக்கால் போன்ற பின்ன அளவீட்டு முறைகளும் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளமையை உணர முடிகிறது. சில அதிகமான பாடல்களில் வந்துள்ளமையால், ஒரு சில பாடல் எண்கள் மட்டுமே சான்றுக்காகக் கொடுக்கப்பட்டுள்ளன.

நீட்டல் அளவைகள்

1. சாண்	381
2. அடி அல்லது முழம்	294,343,522
3. காதம்	168,266
4. யோசனை	71,298

நிறுத்தல் அளவைகள்

1. பலம்	-	83, 137, 365, 389, 482
2. கழஞ்சு	-	8,34,111,117,139,149
3. குன்றியெடை	-	117
4. பணவெடை	-	9,33,97,115,177
5. வீராக னெடை	-	64,506
6. காசெடை	-	12,16,17,19,434

முகத்தல் அளவைகள்

1. படி	-	212, 252, 303, 361, 362
2. ஆழாக்கு	-	59, 64
3. சேர்	-	576

கால அளவைகள்

1. கணம் அல்லது சணம் அல்லது நொடி	-	109,508

2. நிமிடம் - 491
3. கடிகை - 198, 203, 327, 373
4. சாமம் - 239
5. நாள் - 56, 64, 111, 222, 326, 498
6. வாரம் - 10, 216, 221, 465, 468, 470
7. பட்சம் - 283, 326, 413, 470, 421
8. மண்டலம் - 224, 229, 232, 238, 240, 256
9. மாதம் அல்லது திங்கள் - 74, 270, 276, 376, 549
10. ஆண்டு அல்லது வருடம் - 9, 17, 118, 120, 149, 150

பின்ன அளவைகள்

1. வீசம் - 126, 167, 198, 201, 202
2. கால் - 90, 347, 389, 466
3. அரை - 347, 358
4. முக்கால் - 339, 347

தோராய அளவீடுகள்

1. குன்றியளவு - 117
2. கன மிளகளவு - 484
3. பாக்களவு - 59,66,92,115,127
4. சுண்டைக்காயளவு - 98,99,431
5. சம்பழமளவு - 484

1.8 மூலிகைகள்

இந்நூலுள் மூலிகைகள் முக்கியமான இடம் வகிக்கின்றன. கருமை, செம்மை, வெண்மை, மூலிகைகள் என்று மூலிகைகளில் மூவகைப் பிரிவுகள் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் கறுப்பு மூலிகைகள் சிறப்பானவையாகக் கருதப்படுகின்றன. அவை இயற்கையாக மலைகளில் கிடைக்குமென்றும்,

அங்ஙனம் கிடைக்காவிடில் செயற்கை முறையில் கரு மூலிகைகள் உண்டாக்கும் முறையும் கூறப்பட்டுள்ளன. கறுப்பு மூலிகையை அறிய உதவும் சோதனையும் சொல்லப்பட்டுள்ளது. இவற்றையன்றிச் சில மூலிகைகள் எங்குக் கிடைக்கும் என்பன போன்ற விவரங்கள் கூறப்பட்டுள்ளன.

1.8.1 கிடைக்குமிடங்கள்

1. ''பாரென்ற மலைதோறும் சர்க்கரைவேம் புண்டு'' - 238

2. ''ஏமமா கருநெல்லி மலைதோறு முண்டு'' - 230

3. ''கொல்லான கருவீழி மலைதோறுமுண்டு - 125

4. நன்றான விசையனென்ற கடுக்காய் தானும்
நலமான விந்தியதே சத்திலுற் பத்தி
கன்றான ரோகணியெ னுங்க டுக்காய்
கன்னியா குமரியதி லுற்பத்தி யாகும்
பொன்றான பிருதிவி தான் சௌராஷ்டிர தேசம்
பேரான அமிர்தந்தான் காசி யாகும்
தின்றான சிவந்திதிரி விருதை ரெண்டுஞ்
செயலான மஞ்சியதே சந்தா னென்றே'' - 50

5. ''என்றான அபயமென்ற கடுக்காய் தானும்
எழிலான தேசத்தி லபூர்வமாய்க் கிடைக்கும்'' - 51

1.8.2. இனங்காட்டல்

இந்நூலுள் மூலிகையின் அடையாளங்கள் சொல்லப்பட்டுள்ளன. இவற்றின் பல்வேறு வகைகள், நிறம். குணம் போன்ற செய்திகள், வேறு பெயர்கள் முதலானவை கூறப்பட்டுள்ளன.

1.8.2.1. அடையாளம். (அமைப்பு, சுவை)

1. ''போக்கான கிளிமூக்கு மரம தொன்று
புகழான கிளிபோலக் காயுங் காய்க்கும்
வாக்கான இலையதுவு மரசிலைப்போற காணும்'' - 127

2. ''பாரென்ற மலைதோறுஞ் சர்க்கரைவேம் புண்டு
பட்டைதின்றால் கற்கண்டு போலே காணும்
காரென்ற இலைதின்றால் கரும்பு போலாம்
காய்தின்றால் மாம்பழத்தின் ரசனை யாகும்
வேர் தின்றால் கஸ்தூரி வாசம் வீசும்
விதைதின்றால் மிக்கநெல்லிக் காய்போ லாகும்'' - 328

3. ''போமென்ற யிலைதானும் பொன்னிற மாகும்
புகழ்க்கொம்போ கொறுங்கையின் குழல்போல் காணும்
வேமென்ற வேரதுவும் சிவப்பு மாகும்
மிக்கான காய்பழந்தான் வெளுப்பு மாகும்
காமென்ற காம்பதுவும் பச்சை யாகும்
கண்டித்த குழலார் ஆ தண்டை யாகும்'' - 13

1.8.2.2 வேறுபெயர்

ஒரே மூலிகைக்கு வெவ்வேறு பெயர்கள் உண்டு. ஒரு பாடலில் மட்டும் கொல்லன் கோவை என்ற மூலிகையும் ஆகாச கெருடன் என்ற மூலிகையும் ஒரே மூலிகை என்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

''ஆகாச மாங்கெருட னென்றே பறைந்தான்
சாகாக்கொல் லன்கோவை தான்'' -142

1.8.2.3 வகைப்பாடு:

கடுக்காயில் ஏழுவகையான கடுக்காய் இருப்பதையும் அவை என்னென்ன என்பன போன்ற செய்திகள் கூறப்பட்டுள்ளன. இவ்வகைப் பாட்டில் இருவேறு சித்தர் நூல்கள் வெவ்வேறு பெயர்களைக் கூறுகின்றன. விசையன், ரோகணி பிருதிவி, அமிர்தை, சிவந்தி, அபையன், திருவிரிதை என்பது 'போகர் கற்பவிதி'. ஆனால் கொங்கணர் கற்பம் நூறில் கருங்கடுக்காய், செங்கடுக்காய், அரிகடுக்காய், குறுங்கடுக்காய், வரிகடுக்காய், பெருங் கடுக்காய், வெண்கடுக்காய் ஆகிய ஏழு வகையான கடுக்காய்கள் சொல்லப் பட்டுள்ளன, மேலும் அவ்வேழுவகைக் கடுக்காய்களை வேறுபடுத்தி அறிய நிறம், குணம் முதலான பண்புகள் சொல்லப்பட்டுள்ளன.

''மரமாகி யேழுவகை பேத மாச்சு'' - 42

''மருவவே பிரிதிவியன் குணத்தைக் கேளு
மருகிநின்ற மேல்தோல்தான் சிறுத்துக் காணும்
தருவவே சதைதானும் பருத்தி ருக்கும்'' - 44

''நாடவே யமிர்தையெனுங் கடுக்காய்க் குத்தான்
நலத்தசதை போன்றிருக்கும் நிறமு மஞ்சள்'' - 45

''வாக்கான சிவந்திகடுக் காய்க்குத் தானும்
மகத்தான யேமத்தின் வண்ண மாகும்''- 46

''நீக்குமே திரிவிருதை யெனுங் கடுக்காய்
நிறந்தானும் பஞ்சவர்ண மாயி ருக்கும்'' - 47

''போமென்ற அபயனாங் கடுக்காய் தானும்
பெரிதான கறுப்புவர்ண மாயி ருக்கும்'' - 48

1.9. செய்முறைகள்

ஒவ்வொரு கற்பத்திற்கும் மருந்து தயாரிக்க வேண்டிய முறைகள் கூறப்பட்டுள்ளன. மூலிகைக் கற்பங்களின் மருந்து தயாரிப்பு பெரும்பான்மை எளிமையானவையாகவே காணப்படுகின்றன. மருத்துவச் செய்முறையில் பயன்படுத்த வேண்டிய பாத்திரங்கள். மேலும் செய்முறையின் போது சுத்திசெய்தல், எத்தகைய புடம். என்னென்ன எரிப்புத் திட்டம் போல்வனவும் குறிக்கப்பட்டுள்ளன.

1.9.1 தேர்ந்தெடுத்தல்

மருந்து தயாரித்தலுக்கு எத்தகைய பொருள்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்பன போன்ற செய்திகள் ஒருசில பாடல்களில் சொல்லப்பட்டுள்ளன. ரோகணி கடுக்காயை மருந்திற்குத் தேர்ந்தெடுக்கும் போது காய்துவாரம் கணக்குப்பார்த்து எடுக்கவேண்டும். அன்னத்தின் உப்பு செய்வதற்குக் கல்லுப்பை எங்ஙனம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

''காமென்ற காய்த்துவாரங் கணக்கைப் பார்த்துக்
கலந்திடித்துச் சூரணமாய்ச் செய்து கொண்டு'' - 43

''கல்லுப்பைப் பாக்குப்போல் பொறுக்கி'' - 447

1.9.2. பயன்படுத்தும் பாத்திரங்கள்

1. அகல்	-	106, 111, 126, 157, 227, 253, 296, 462
2. அயக்கரண்டி	-	93, 101, 253
3. வாளைப்பூ எந்திரம்	-	202
4. அயச்சட்டி	-	227
5. குப்பி	-	83, 294, 482
6. சீசா	-	554
7. சிமிழ்	-	561
8. தேத்தாம் வேர் பாத்திரம	-	85, 388
9. வேப்பம் பாத்திரம்	-	387
10. காந்த பாத்திரம்	-	58
11. வெள்ளைச் சிமிழ்	-	309
12. புதுப்பாண்டம்	-	527, 573
13. பீங்கான்	-	177 (அ), 263, 367, 484, 490
14. கல்வம்	-	90, 102, 103, 106, 107, 178, 194, 197
15. கிண்ணி	-	294
16. கல்லுரல்	-	269

1.9.3. மேற்கொள்ளும் செயல்கள்

மருந்து செய்யும்பொழுது அந்தந்த மருந்திற்கேற்ப வறுத்தல், காய்ச்சல், கிண்டுதல், இடித்தல், பொடித்தல், நறுக்குதல், தோய்த்தல், தகடுதட்டுதல், துவைத்தல், சாய்த்தல் போன்ற பல செயல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

1. சாய்த்தல்	-	25, 293, 460, 470
2. காய்ச்சுதல்	-	641, 114, 137
3. கிண்டுதல்	-	91, 117, 143, 166, 294, 568
4. பிரட்டுதல்	-	253, 338
5. பிழிதல்	-	93, 293, 303, 484
6. பிசறுதல்	-	98, 447, 448
7. தகடுதட்டுதல்	-	106, 114, 197, 227
8. தூள் செய்தல்	-	52, 95, 111, 156, 169, 437

9. வடிகட்டுதல் - 55, 88, 171, 232, 252
10.உருக்குதல் - 90, 105, 125, 482

இவை போல்வனவும், இன்னும் பிறவும் செய்முறையில் கையாளப் படுகின்றன. இவையன்றி மருந்தை வில்லை, உருண்டை போன்றவை செய்தல், மெழுகு, குழம்பு, ஆகிய பதங்களிற் செய்தல் முதலானவை கூறப்பட்டுள்ளன.

1. வில்லை	-	106, 114, 126, 197, 335	வடிவம்
2. உருண்டை	-	89, 98	வடிவம்
1. மெழுகு	-	72, 404, 456, 457	பதம்
2. குழம்பு	-	55, 364, 403, 465, 466, 568	பதம்
1. செம்பரத்தம் பூப்போல்	-	300	நிறம்
2. மாதளம்பூ நிறமதாகும்	-	254	நிறம்
3. மாதளம்பூ போலே நிற்கும்	-	91	நிறம்

1.9.4. சுத்தி செய்தல்

எல்லா மருந்துச் சரக்குகளும் நச்சுப்பொருளை உடையன. அந்த நஞ்சை நீக்கி, சுத்தி செய்து மருந்துகளைத் தயார் செய்ய வேண்டும். இவ்வாறு நஞ்சை நீக்கும் முறைமைக்குச் சுத்தி செய்தல் என்று பெயர். மருந்துப் பொருளில் அடங்கியுள்ள நச்சுப் பொருளை நீக்காவிடில் உடல் நோய்களை நீக்காததோடு பிற உடல் துன்பங்களையும் ஏற்படுத்தும். இந்நூலுள் பலவிடத்து சுத்தி செய்யும் முறை கூறப்பட்டுள்ளது. சிலவிடங்களில் விளக்காமல் சுத்தி செய்ய வேண்டும் என்பதோடு விடப்பட்டுள்ளது.

இந்நூலுள் சுத்திசெய்தல் குறித்த செய்திகள் காணப்படுகின்றன. சுத்தி செய்தல் செய்முறை கடுக்காய்க்கு மட்டும் தெளிவாக விளக்கமாக அமைந்துள்ளது. பாலில் கந்தகத்தைச் சுத்தி செய்ய வேண்டும் என்று எளிமையாகக் கூறப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர சுத்தி செய்ய வேண்டும் என்ற செய்தி சிலவிடங்களில் காணப்படுகிறது.

''வாச்சென்று கடுக்காயைத் தகர்த்துக் கொண்டு
வளமாக அமுரியிலே ஊறப் போட்டு
காச்சென்று மறுநாள்தான் காயப் போட்டு
கணக்காகப் பத்துமுறை சுத்தி செய்யே'' - 75

''பாலிலே கந்தகத்தை சுத்தி'' - 340

''சுத்திசெய்த கந்த கந்தான்'' - 157

* * *

மூலிகைக் கற்பங்கள்

மூலிகைக் கற்பங்கள

அபரமார்க்கக் கற்பம்

சிவப்பு அபரமார்க்கக் கற்பம்

1. நீத்திட்ட இரத்தபர மார்[க்]கந் தன்னை
நிச்சயித்து பாக்களவு பாலி லுண்ணு
தேத்திட்ட செழுங்கஞ்சம் போலாந் தேகஞ்
சிதையாது யிடிகொண்ட................. யாகும்
....
....
....
.... (165)

(போ.க.வி)

சிவப்பு அபரமார்க்கத்தைக் கொண்டுவந்து நன்றாக அரைத்து, பாக்களவு எடுத்து, பாலுடன் சேர்த்து உட்கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : பாக்களவு

அனுபானம் : பால்

விளைவு : உடல் செழுமையான தாமரை மலரைப் போல் விளங்கும்

அமுக்குராக் கற்பம்

2. அமுக்குராப் பொற்காப்பை யாதித்த மூலத்
தமக்கெனவே கட்டிநீர் வார்த்துப் - புவிக்குளாய்
சாவற்சி டாய்முதிரந் தன்னைவிட்டுக் கூடைகொண்டு
மேவுதுகில் போட்டார்க்கு மேல் (57)

3. மேவுதுகில் போக்கி விரிதலையாப் பாதியிராக்
காவல் வடுகது துரைகழற்ச் - சாவற்சாங்
கந்தமதி லங்கோலங் கண்டதனைப் பிடுங்கி
சந்துதலை மாறியிசை தான். (58)

4. இசைபாங் குளிசமதை யேறழிற்சி நாதாப்
பசைக் கிழங்கு சுற்றிவரப் பண்ணி - பொசிப்பான்
மினியகனி தூபமிவை காட்டி யிறைஞ்சி
தனி முடியில் வைத்திருக்கத் தான். (59)

5. தானவர்க ளேவுஞ் சரமெனினுந் நையாது
வானவர்கள் போற்று மயிர்முடியை - யேனை
யனைவருக் கெல் லாமாகி லாதியினி லோது
தனையனுக்குங் கைவசமாந் தான். (60)

6. மாந்தக் கிழங்குலர்த்தி வாய்த்தபால் மேற்பொடியாங்
காய்த்தே திரண்டெழுமாங் கற்கத்தை - போந்தபுன்னைக்
காய்மூன் றளவுண்ணக் காணுஞ்சுக் லத்தம்ப
மேய் மூன்று மண்டலத்திலே. (61)

7. மண்டலமா றாகி வறுந்த தனமிறுகு
முண்டிப் பொடியை முலைதூவிக் - கொண்டுருட்டிப்
பக்கமொன்றில் வீழ்ந்ததனம் பற்றிச் சுருங்குமது
மிக்கசெம்பு போல்மினுக்கு மே. (62)

8. மினுக்கும் பசுங்கிழங்கை வெண்ணையுட னுண்ணத்
தினங்கழஞ்சு குங்குமப்பூத் தின்னத் - தனந்நான்
பளபளத்து வீங்கு மிளமங்கை பருவத்
தளதளப்பு வாராது தான். (63)

9. வாராருங் கொங்கை மதத்தடங்கா தோராண்டில்
நேராய்க் கிழங்கறுத்து நேர்மையாற் - சீராகக்
காய்ந்தபா லிட்டெடுத்த கற்கந் தனையுண்ண
சாய்ந்தனையும் விம்முந் தனம். (64)

10. தனமான செந்தூரஞ் சாரித்தே கொண்டால்
தினமான வர்த்தனையாஞ் சார - மனையாளு
மொன்றியே கொண்டாளும் வாரமிகு குய்யந்
தின்றவரை வேருக்குந் தேர். (65)

11. தேரிலை நீராலே செந்தூரத் தாமிரதங்
கூரிலை வீரத்தாற் குளிகையா - மோரிலையாங்
கந்தமதிற் பற்பமாங் கணவடுகன் மந்திரத்தால்
சுந்தரமாங் காயசித்தி சொல்.

-(சி.வெ)

ஆதண்டைக் கற்பம்

12. மகத்தான வெண்டானா தண்டை தன்னை
மண்வெட்டி கலசத்தில் எண்ணை வைத்து
யேத்தான ஏரண்ட எண்ணை யாகும்
யிதமாகத் தோண்டி ஆதண்டை வைக்க
கோத்தான கொதித்தேதான் எண்ணை தானும்
குமிழியிடும் பக்குவத்தில் கொண்டு வந்து
காத்தான காசுயெடை கொள்ள வேதான்
கடிசான நோயெல்லாம் கரைந்து போமே. (176)

13. போமென்ற யிலைதானும் பொன்னிற மாகும்
புகழ்கொம்போ கொறுங்கையின் குழல்போல் காணும்
வேமென்ற வேரதுவும் சிவப்பு மாகும்
மிக்கான காய்பழந்தான் வெளுப்பு மாகும்
காமென்ற காம்பதுவும் பச்சை யாகும்
கண்டித்த குழலார் ஆ தண்டை யாகும்
சாமென்ற திதைக்கண்டா லொருநாளு மில்லை
சமத்தான பேரென்றால் கிட்டுஞ் சொல்லே. (177)

-(போ.க.வி)

ஆதளைக் கற்பம்

14. ஆதளைப் பட்டைதனை யாவின்பால் காசளவில்
ஏதமிலோன் பானுண்ண விருவிடம்போற்-தாதரைத்துப்
பூசப் படையகலும் புண்தீரும் பத்திரத்தி
லூசுமிலை பாலோடு மோர்

15. ஒட்டும்பால் நாளத் துடன்தடவி யேபுணரத்
தேட்டமாய் மங்கையருஞ் சிக்குமே - வாட்டத்
தரைக்குக்கீ ழிப்பாலை யாரத் தடவப்
பரிக்கடமை யோர்தினமென் பார்.

16. பார அயங்காய்ச்சி பல்லா லெடுப்பது (நீ)
சீரா மென விதையுந் தின்னவே - நீராட
வேர்முகத்து யேகி விடியுமுன்னே தான்முழுகு
மோர்முகந் தனையா மினி.

17. இனிந் திரியப் பாலதனை யெள்ளளவா யேற்றிக்
கனிந்ததனைக் காசிடையா யுண்ணத் - தினந்தினமுங்
கொண்டா றொருவருடம் கூச்சமயி ராங்கதனை
கண்டேயோ ராண்டருந்துங் காய்.

18. காயம்பூ வண்ணமதாய்க் காயங் கருக்குமயிர்
சாயாறி மிர்ந்தெழும்பத் தான்கண்டு - நோயா
னினிந்திரியென் றேபேரை யிந்திரனு மோதக்
கனிந்தெவருஞ் சித்திபெற்றார் காண்.

19. பெத்தயத்தைக் கா ய்ச்சி பெருகுமிலை நீர்தேய்க்கச்
சத்துவமாய் நூறு விசை சாய்க்கவே - அந்தரசம்
பத்திதனைக் கூடுமீயம் பத்திலொன்று சூதமிடச்
சுத்திதரும் தாரமதாஞ் சொல்.

20. சொல்லு மிலைநீரால் சுவேதனத்தி லேழுநாள்
செல்லமல நீங்கித் தெளியுமே - நல்விரதப்
பட்டையினால் மத்தித்துப் பாதளையில் வைத்தேழு
சட்டையெல்லா நீங்கிவிடுந் தான்.

21. தாதுவனில் பாலதனால் மத்தித்து வைக்கவதி
லீதுசெய்பூ வுக்கபத்த மெய்துமே -யோது
நவதானி யங்கோடி நாடி யலம்ப
வுவமாகு செங்கதிரொப் பாம்.

22. ஒப்பான பட்டைக் குகையதனி லுள்வைத்து
மெய்ப்பான வீசும் விலங்கிட்டு - வைப்பாம்
புடங்கிரம மாகவே போட்டுமுப் பான்தள்ளி
எழுங் குளிகை தம்பனைக்கா மே. (110)

23. தம்பனைக் காவதெல்லாங் காயசித்தி தானாகும்
விம்மிவிழுஞ் சுக்கிலமு மேனோக்குஞ்-செம்மையி
னிந்திரியக் கற்ப மியம்பினோ மெல்லார்க்குந்
தந்திர முண்டாந் தனு. (111)

-(சி.வெ)

ஆலம்பழக் கற்பம்

24. காணலா மென்ற ஆலம் பழத்தைத் தேடி
கனமாகப் பொறுக்கியே சதையை வாங்கி
வேணலாம் வெயில்வைத்து உலர்த்திக் கொண்டு
மிக்கான புடத்திற் தைலம் வாங்கி
ஆணலாம் சூதத்தை அயத்திற் வைத்து
அதீதமாய்ச் சுருக்கிடவே கட்டிப் போகும்
தோணலாய் முன்போல செந்தூரம் பண்ணி
சுத்தமாந் தைலத்திற் குழைத்து உண்ணே. (135)

25. உண்ணவே மண்டலத்தில் நரையோ மாறும்
முகாந்தமெல்லாஞ் சூடந்தானு முகந்து காணும்
பண்ணவே தைலத்தில் நாகஞ் சாய்க்க
பாங்கான புகையஞ்சுங் கட்டிப் போகும்
மண்ணவே அயமுருகி யீய மாகும்
அறுபத்து நாலான பாஷா ணந்தான்
தண்ணவே சாமத்தில் கட்டிப் போகும்
தனித்ததொரு உபரசங்கள் சத்து மாமே (136)

-(போ.க.வி)

மாலனந்தல் (ஆலம் விழுது) கற்பம்

விந்துறுக்கிக் காயசித்தி வேண்டினோர் மாலனந்தல்
கந்தத்தி லுண்டாநீர் கற்கண்டு - தொந்தித்து
மண்டலமுண் பார்புளிப்பு மாதர்நல முந்துறந்து
உண்டபிற குண்மைதெரி யும்.

-(தே. வெ)

ஆலம்பழக் கற்பம்

கனமான ஆலம்பழங்களைக் கொண்டு வந்து, அவற்றில் உள்ள விதைகளை நீக்கிவிட வேண்டும். சதையை வெயிலில் உலர்த்திப் புடம் போட தைலம் கிடைக்கும். சூதத்தை அயத்தில் வைத்துச் சுருக்குப் போட கட்டிப் போகும். இதைச் செந்தூரமாகச் செய்து கொள்ள வேண்டும். இதைத் தைலத்தில் குழைத்து உண்ண வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்.

விளைவுகள் : நரைமாறும். உடல் முழுதும் சூட வாசனையுடன் காணப்படும். இந்த தைலத்தில் நாகத்தைக் காய்ச்சிச் சாய்க்க கட்டிப் போகும். இரும்பை உருக்கிச் சாய்க்க ஈயமாகும்.

சித்தர் நூல்களில் கூறப்படும் அறுபத்து நான்கு பாஷாணங்களும் கட்டிப் போகும். உபரசங்கள் சத்தாகும்

ஆலம் விழுது கற்பம்

ஆலம் விழுது சாற்றுடன் கற்கண்டு கூட்டி உண்ண வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

விளைவு : விந்து கட்டுப்பட்டு கா பசித்தி அடைதல்

நீக்க வேண்டியவை : புளிப்பு, மாதர் போகம்.

இஞ்சிக் கற்பம்

27. மண்ணிலாக் கொட்டையொன்று மாத்திரமே கற்பமென்ப
தெண்ணிக்கை யாகி யிருக்குமே - கண்ணுக்கு
நன்முறையாஞ் சீதளத்தை நாடாம லேயடிக்குந்
தின் முறைமை நீயறிந்து தின்.

28. கால்கை பிடித்த கடுநோய்போ மண்டலத்தில்
ஏலுமுர முண்டா மிலாக்கொட்டை - மேலுமதன்
வற்ற லரிதகியால் மத்தியான மாலையுண்ணக்
குற்றமல்ல மெய்யாகக் கொள்.

-(தே. வெ)

இஞ்சியை உபயோகித்தால் கண்ணுக்கு நல்ல பார்வையைத் தரும். சீதளத்தை மிதமீறாமற் போக்கும். இஞ்சியையும் அதன் வற்றலாகிய சுக்கையும் கடுக்காயையும் முறையே காலையிலும் நண்பகலிலும் மாலையிலுமாக உட்கொண்டு வரின் கை கால் முடங்கிய பிடிப்பு நோய்கள் ஒரு மண்டலத்தில் தீரும். உடற்கூற்றுக்குப் பொருந்திய வலிமையும் உண் டாகும்.

ஊமத்தைக் கற்பம்

29. மூலத்து மூல முருக்குவித்துச் சித்திரையாங்
கோலமணிப் பூக்குளிரப் பூசத்து - ஞாலமதி
லத்தமே தோலா மனுடமிலை யாகும் பொன்
மத்தையார் செய்யு மயக்கு.

30. விற்றுக்கு வித்தாகும் வேருக்கு வேர்வையா
முற்றதொரு பூவுக்கு மிளநீரா - மற்றதொரு
தோலுக்குத் திரமா மிலைக்குச் சிறுநீரா
மாலுக்கு மாமிம் மருந்து.

(சி.வெ)

ஐவணைக் கற்பம்

31. சத்தாக ஐவணைப்பூ தன்னை வாங்கி
சமரசமாயச் சாறிடித்துப் பிழிந்து கொண்டு
பத்தாக சாதிலிங்கஞ் சுருக்குப் போட
பாங்கான புகைக்கட்டி மணியு மாகும்
மத்தாக யெடையிரண்டு அரப்பொடியே சேர்த்து
அதிகமாம் வெங்காரஞ் சிலையும் கூட
நத்தாக நாலிலொன்று சேர்த்துக் கொண்டு
நமனாகும் பூச்சாற்றி லரைத்தி டாயே. (137)

32. அரைத்திடவே சூதத்தி லுருக்கிப் போடு
அதிகமாம் நாகம்போல் சத்து மாகும்
பரைத்திட்ட நாகத்தை நாலுக் கொன்று
பாங்காகக் கொடுத்திட்டா லுள்ளே கொள்ளுந்
துரைத்திட்ட தங்கமிட்டு சூத மிட்டுத்
தனியான சிலைகாரங் கெந்தி கூட்டி
திரைத்திட்ட செந்தூரம் பண்ணிக கொண்டு
சிறந்த நவ லோகத்தி லாயிரத்திற் கொன்றே (138)

33. ஒன்றான செந்தூரம் பணவிடைதான் தேனில்
ஊற்றுமே மண்டலந்தான் கொண்டா யானால்
குன்றான மலைபோலக் கைகா லாகும்
குத்தினால் தவிடுபொடி கூழாங் கற்கள்
வென்றான சடமாகும் வாசி தானும்
விடுகாமல் கும்பிக்கும் சமர சந்தான்
பன்றான பருதிக்குள் ஓடும் போது
பாங்கன ரவிகாந்தி பனிப்போ லாமே. (139)

- (பே.க.வி)

34. ஐவணைப் பூக்கழஞ்சு ஆனைய்யு பாண்டருந்தக்
கைவண்ணக் கண்சிவக்கக் கண்டுதான் - மெய்சிவக்க
வேர்த்தயிலங் கொண்டதனால் மேனிபசும் பொன்னாகு
மேற்றிலையால் ரோமம் வெளுப் பெண். (88)

35. என்னுமதிற் பட்டை யிடித்துத்தே னிற்கொள்ளத்
தன்னுடலம் பச்சைக் குழைந்தால் - வன்னமெலாந்
தானு மாறென்னுஞ் சத்திய வாகீதான்
கூறினா ரீசுவரிமெய் கோள். (89)

36. கோளாக இந்திரன்தான் கூறிய மாலவனைக்
கேளா யவனருகு கிட்டியே - யாளாகி
யிப்ப ரிசியானு மேறவேணு மென்றுரைக்க
தம்பியுரைத் தான்பஞ்சத் தான். (90)

37. பஞ்சவன் யோகியொரு பச்சிலைபச் சோந்தியதா
யஞ்சியழ தானைதனி யாயுங்கால் - நெஞ்சுகந்த
வாயுவினால் வந்ததென வன்னம் பலவேறு
காயத்திற் பெற்றான் கலி. (91)

38. கலியுகத்தில் தேவாண்டு காலம்போய் நீல
மலியுஞ் சலசலத்தை நீக்கி (யலாக்கின்) - நலியளது
சூதத் துடனிருந்து தோடமென்னா ரீசுவரியாள்
சாதிக்க வாறுரைக்கத் தான். (92)

39. கர்த்தாவின் சூதந் தயிலமதி லேகாய்ச்சிப்
பத்தானும் பட்டை படவரைத்துக் - கொத்தாய்ப்
பூவிற் புடம்பத்துப் போட்டிலையு மப்படியே
காயில் விலங் கிட்டிரதங் கட்டு. (93)

40. கட்டும்பூச் சாற்றிலே கற்பூர நான்முகன்
தொட்டுத்தட விப்படுக்க சுக்கிலந்தான் - மாட்டாகச்
சென்னியி லேற்றலாஞ் சித்தர சமிப்படியே
தின்னவிடில் தம்பனையாச் சென். (94)

(சி.வெ.)

ஐவணைப் பூவை இடித்துப் பிழிந்து எடுத்துக் கொள்ள வேண்டும். அதனுடன் சாதிலிங்கஞ் சேர்த்துச் சுருக்குப் போட மணிபோல ஆகும். அரப்பொடியை இரண்டு எடை சேர்த்து, பின்னர் வெண்காரம் மனோசிலை

இரண்டையும் நாலில் ஒருபங்கு கூட்டி, பூச்சாற்றைச் சேர்த்து அரைக்க வேண்டும். இதைச் சூதத்தில் உருக்கிச் சேர்க்க நாகத்தைப் போல சத்தாகும். நாகத்தை நாலுக்கு ஒரு பங்கு சேர்த்தால் உள்ளே உறிஞ்சிக் கொள்ளும். அதனுடன் தங்கம், சூதம், மனோசிலை, வெண்காரம், கெந்தி இவற்றைச் சேர்த்துச் செந்தூரமாகச் செய்து கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : ஒரு பணவெடை

அனுபானம் : தேன்

விளைவுகள் : கைகால்கள் மலைபோல உறுதியுடன் விளங்கும். மூச்சாடாது.

ஓரிலைத் தாமரைக் கற்பம்

41. ஏமமா மோரிலைத் தாமரை சமூல
மிடித்துமே சூரணித்து நெய்யிற் கொள்ள
சாமமா யுடம்பில் நின்ற வேக மெல்லாஞ்
சிதைந்துபோய் விடுஞ்சிறு நீருந் தானும்
காமமாய்க் கழிந்துவிடும் கண்பு கைச்சல்
காமாலை வரட்சியொடு கடின பித்தம்
வாமமாய்ப் போய்விடுகு மண்டலந்தான் கொள்ளு
மகத்தான ரோகமெல்லாம் மாறிப் போமே (85)

- (போ.க.வி)

ஓரிலைத் தாமரையின் சமூலத்தைக் கொண்டு வந்து இடித்துத் தூளாகச் செய்து கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

அனுபானம் : நெய்

விளைவுகள் : உடலில் இருந்த துன்பங்கள் நீங்கிவிடும் கண்புகைச்சல், காமாலை, வரட்சி, கடின பித்தம் முதலானவை நீங்கிவிடும்.

கடுக்காய் கற்பம்

42. மரமாகி யேழுவகை பேத மாச்சு
மகத்தான விசையனென்ற கடுக்காய்சூ ரணித்து
அரமாகி வெருக்கடித்தூள் அமுரி தன்னில்
அளாவியே கொண்டக்கால் வாதம் போகும்
புரமாகி பேய்ச் சுரைக்காய் முருக்கம் தன்னில்
பெரிதான வாதங்கள் சித்தி யாகும்
நரமாக நாற்பதுநாள் கொண்டிட் டாக்கால்
நாசமாம் வாதமது நலங்கிப் போமே. (16)

43. போமென்ற ரோகணியின் பிரிவு கேளு
பெரிதாகு மேரன்ற கீரவு மாகும்
காமென்ற காய்துவாரங் கணக்கைப் பார்த்து
கலந்திடித்துச் சூரணமாய் செய்து கொண்டு
ஆமென்ற அமுரிதன்னில் குழப்பிக் கொள்ளு
அதிகமாம் சீதமறுங் கிருமி நாசம்
வாமென்ற மண்டலந்தான் கொண்டாற் கேளு
வன்னியே மிகத்துலக்கி மருவும் பாரே. (17)

44. மருவவே பிரிதிவியன் குணத்தைக் கேளு
மருகின்ற மேல்தோல்தான் சிறுத்துக் காணும்
தருவே சிதைதானும் பருத்தி ருக்கும்
தனித்திட்ட கடுக்காயைக் சூர ணித்து
அருவவே அமுரியினில் கலக்கிக் கொள்ள
ஆமமெல்லாங் கழன்றுமே கிருமி வீழும்
நருவவே நாற்பதுநாள் கொண்டா யானால்
நாடிசுத்தி தேகசுத்தி யாகும் நாடே. (18)

45. நாடவே யமிர்தையெனு கடுக்காய்க் குத்தான்
நலத்சதை போன்றிருக்கும் நிறமு மஞ்சள்
வாடவே சகலநோய் தனைய கற்றும்
மருவியதை யிடித்துநன்றாய் சூரணமே செய்து

ஆடவே அமுரியினில் கலக்கிக் கொள்ள
அடவாக மண்டலந்தா னுண்டா யானால்
தூடவே சதையினுள்ளே ரோக மெல்லாஞ்
சாடுமே சுயம்பாட வாக்கு மாமே. (19)

46. வாக்கான சிவந்திகடுக் காய்க்குத் தானும்
மகத்தான யேமத்தின் வண்ண மாகும்
ஏக்கான யிதையிடித்துச் சூரணமே செய்து
ஏத்ததாம் அமுரிதன்னை முன்பின் தள்ளி
கோக்கான மண்டலந்தான் கொண்டு வந்தால்
மகத்தான மூலமது வெளியாய்த் தோணும்
நீக்கான வியாதியெல்லாம் நீராய்ப் போகும்
நிலவரமாய்ச் சடந்தானும் நிற்குங் காணே. (20)

47. நீக்குமே திரிவிருதை யெனுங்க டுக்காய்
நிறத்தானும் பஞ்சவர்ண மாயி ருக்கும்
தக்குமே யிடித்துநன்றாய் சூரணமே செய்து
தக்கான சீலைவடிக் கொண்டு தானும்
நக்குமே மண்டலந்தா னமுரி தன்னில்
நலமாக வெருக்கடிதான் கொண்டு வாநீ
தக்குமே சடந்தானுங் கற்பாந்த காலந்
தனித்துநின்று வாதபித்த சிலேற்றுமம் போமே. (21)

48. போமென்ற அபயனாங் கடுக்காய் தானும்
பெரிதான கருப்புவர்ண மாயி ருக்கும்
மாமென்ற திதையிடித்து அரைத்துக் கொண்டு
அமுரிதனில் மண்டலந்தா னுண்டா யானால்
வேமென்ற மும்மலமுங் களிம்பும் போகும்
விரைந்து நின்ற நாடியெல்லா முறுக்கு யேறும்
மேமென்ற எண்பதுக்குள் கொள்ள லான்றான்
கருங்கடுக்காய் கையிருக்கில் (சகல பூத பிரேதஞ்) சங்கை செய்யும். (22)

49. மானென்ற அநேகநாள் சடமி ருத்தி
ஆயுள்தான் மிகவுண்டாம் அழுந்துந் தேகம்
தேனென்ற சிவந்தானும் நிர்த்தஞ் செய்வார்
சித்தியாய் சாசுவதந்தான் சிறக்குந் தேகம்
....
....
பானென்ற சீவனாய்ப் புத்தி யுண்டாம்
பகர்ந்ததோர் கடுக்காயி லமைய நன்றே (23)

50. ந...றான விசயனென்ற கடுக்காய் தானும்
நலமான விந்தியதே சத்துற் பத்தி
கன்றான ரோகணியெ னுங்க டுக்காய்
கன்னியாகும ரிச்சிந்தி லுற்பத்தி யாகும்
பொன்றான பிருதிவிதான் சௌராஷ்டிர தேசம்
பேரான அமிர்தந்தான் காசி யாகுந்
தின்றான சிவந்திதிரி விருதை யிரண்டுஞ்
செயலான மஞ்சியதே சந்தா னென்றே. (24)

51. என்றான அபையனென்ற கடுக்காய் தானும்
எழிலான தேசத்தி லபூர்வமாய் கிடைக்கும்
கன்றான கருங்கடுக்காய் தரிசித் தாக்கால்
காசிதனை தரிசித்த பலத்துக் கொக்கும்
பன்றான பரிசிக்கு சிவசிந்தை யாகும்
பண்பான அக்கிராணம் பண்ணி னாக்கால்
தண்டான சடத்தினுள்ள நோய்களெல்லாம் போகும்
தாயான மனோன்மணியுந் தயைசெய் வாளே. (25)

52. தயையான கருங்கடுக்காய் கிடையா விட்டால்
சமரசமாம் பொற்கடுக்காய்த் தூளாய் பண்ணி
அயையான ஆனிமுதல் ஆடி யிரண்டும்
அரிதான வெல்லத்தி னோடே கொள்ளு
புயையான ஆவணியுங் கன்னி தானும்

பெரிதான இந்துப்புக் கால்வாசிக் கட்டி
தயையான அமுரிதனில் கலக்கிக் கொள்ளு
கொடியதோர் ஆமமெல்லாங் கழன்று போமே. (26)

53. கழன்றுபோ மற்பசியுங் கார்த்திகைக்கு நீதான்
கலந்துமே சர்க்கரையி னோடே கொள்ளு
மழன்றுபோ மார்கழிக்குந் தைக்குந் தானும்
மாசற்ற சுக்கினுட கஷாயத்திற் கொள்ளு
தழன்றுபோ மாசிபங் குனிக்குத் தானுஞ்
சமரசமா யமுரிதன்னில் கலக்கிக் கொள்ளு
தின்றுபோஞ் சித்திரைவை காசிக் குந்தான்
சிறுகுறிஞ்சித் தேன்தன்னில் திரட்டி உண்ணே (27)

....

....

கெடியான மாசிபங் குனிக்குத் தேனும்
நீளப்பா சித்திரைக்கும் வைகா சிக்கும்
நிலையான அமுரியிலே கொண்டு யேறு

(ச.க.நூ)

54. மாறியே கடுக்காயை உண்ணும் போது
மறவாமல் வழலைதன்னைத் தினமு வாங்கு
காரியே காயசித்தி எண்பதுக்கு நன்று
கைகடந்தா லாகாது கடின மெத்த
ஆறியே கடுக்காய்க்கு மலம்போ காட்டால்
ஆகாத வாதபித்த தேக மாகுந்
தேறியே சிலபேர்க்குப் போகாமல் சிக்குந்
திறமாகக் கழியாட்டால் சித்தியில்லை தானே. (35)

55. தானான சிவன்தன்னை பாலில் போட்டுத்
தனித்துமே அடுப்பேற்றி எரித்துக் கொண்டு
ஊனான துலர்த்தியே யிடித்து நைய்ய
உருசிலை வடிகொண்டு சூரணமே செய்து

கானான கடுக்காய்தூள் யிரண்டு பங்கு
கலரவதை சூரணந்தான் ....ப்பங் காய்ச்சி
கூநான அமுரியிலே குழப்பிக் கொள்ளு
கூட்டோடே ஆமமெல்லாங் கழன்று போமே. (36)

- (போ.க.வி)

56. உண்ணவே வயதங்கே யிருப தாகில்
உத்தமனே யிருபதுநாள் கடுக்காய் கொள்ளு
கண்ணவே வயதங்கே முப்ப தாகிற்
கடிதாக முப்பதுநாள் கொள்ளு கொள்ளு
பண்ணவே வயதங்கே நாற்ப தாகில்
பரிவாக நாற்பதுநாள் கடுக்காய் கொள்ளு
நண்ணவே வயதங்கே யைம்ப தாகில்
நலமான பதினைந்து நாளே கொள்ளே. (262)

57. கொள்ளவே வயதங்கே யறுப தாகில்
குறையதே கடுக்காயுந் தசநாட் கொள்ளு
அள்ளவே யறுபதுமேல் வயதே யாகில்
ஆச்சரியங் காயசித்து யாகா வாகா
விள்ளவே கடுக்காயைப் பொடியாய்ப் பண்ணி
மெல்லியதாய்ச் சீலையிலே யரித்துக் கொண்டு
துள்ளவே அமுரிதனை முறித்துக் கொண்டு
சுகமாக வெருக்கடித்தூள் குழப்பிக் கொள்ளே. (263)

58. கொள்ளுதற்கு அமுரிதனை முறிக்கக் கேளு
குரூரமாங் காந்தமென்ற பாத்தி ரத்தில்
விள்ளுதற்கு முன்னீராம் அமுரி தள்ளி
விளங்கவே கொள்ளமட்டும் பின்னீர் வாங்கி
துள்ளுதற்கு தேற்றினுட வித்து தன்னைத்
துடியாக இதில்விட்டுக் கலக்கி வைத்து
அள்ளுதற்கு தெளிவிறுத்துத் தூளைப் போட்டு
அங்கென்று வாசியோ டிழுத்து வாங்கே. (264)

அமுரி மூதண்ட கிஷாயம்

59. வாங்கியே தினந்தோறும் விடியற் காலம்
மாலையிலே கிஷாயமொன்று வைக்கக் கேளு
பாங்கியே மிளகதுதா னிருபத் தைந்து
பரிவாகு மருகுவேர் பிடிதா னொன்று
தேங்கியே யிடித்துநன்றாய்ச் சட்டியிலே போட்டுத்
திறமாகப் படியொன்று தண்ணீர் விட்டு
ஆங்கியே யாழாக்காய்க் காய்ச்சிக் கொண்டு
ஆவெண்ணை பாக்களவு போட்ட ருந்தே. (265)

60. அருந்தியே காலமே கடுக்காய் கொள்ளு
அப்பனே மாலையிலே கிஷாயங் கொள்ளு
பொருந்தியே வுடலுக்குத் தாக மில்லை
புளியுப்பு எண்ணையெல்லாங் கழன்று போகும்
வருந்தியே முன்னிருந்த நோய்க ளெல்லா
மறுதேசம் விட்டுப்போம் மயக்க மில்லை
திருந்தியே ஆறுதலக் கிரந்தி போகுஞ்
சேர்ந்தோடும் வாசியெல்லா மிறுகும் பாரே. (266)

கற்பங் கொள்ள மாதம்

61. இறுகுமே செங்கடுக்காய் மெத்த நன்று
இதமாகக் கிடையாட்டால் பொற்கடுக்காய் நன்று
அறுகுமே ஆனிஆவ ணிக்கு மப்பா
அழகான வெல்லத்தி னோடே கொள்ளு
தருகுமே சித்திரைவை காசிக்கு மப்பா
சாதகமாய்ச் சுக்கின்கி ஷாயத்திற் கொள்ளு
மறுகுபுரட் டாசிஆ டிக்கு மப்பா
மாசற்ற குறிஞ்சித்தேன் தன்னிற் கொள்ளு
குறுகுமே ஐப்பசிகார்த் திகைக்கு மப்பா
குமரியாஞ் சோறுதனில் வைத்துக் கொள்ளே. (267)

62. வைத்துமே மார்கழிதை மாசிக் குந்தான்
வாய்ப்பாக கற்கண்டி னோடே கொள்ளு
பைத்துமே பங்குனிக்கு நெய்யிற் கொள்ளு
பன்னிரண்டு மாதத்திற்கு பருவஞ் சொன்னேன்
நைத்துமே யிப்படித்தான் பருவ மாக
நானுண்ட படிசொன்னே நீயு முண்ணு
பொய்த்துமே போகாமற் பூசை பண்ணு
போக்கோடே வாசியைத்தா னிழுத்து வாங்கே (268)

மலங்கழட்ட கிஷாயம்

63. வாங்கியே சதிர்கள்ளிக் காயோ பத்து
மைந்தனே குமரிச்சோறு காசு யிரண்டு
தேங்கியே அமுரியுடன் கலந்து கொள்ள
சிலைதந்துநின்ற ஆமமெல்லாந் தள்ளிப் போடும்
பாங்கியே முன்னுண்ட புளியு முப்பும்
பலபலவாய் மலத்தோடே தள்ளிப் போடு
மேங்கியே சடலத்தில் விஷநீர் வற்றி
எலும்பில் நின்ற சுண்ணாம்பு வேகம் போமே. (269)

64. வேகம்போ மிருபதுநாள் காலையிலே கொள்ளு
மெலிவான மாலையிலே கிஷாயங் கொள்ளு
தாகம்போந் தாளிச பத்திரியுஞ் சுக்குத்
தனித்ததொரு சீரகமு மாஞ்சில் ஏலம்
ஆகும்போம் விராகனெடை ஒவ்வொன் றுக்கு
அதட்டியே சட்டியிலே பொடித்துக் காய்ச்சி
நாகம்போம் மாழாக்கு மாலையிலே கொள்ளு
நமனுக்கு நமனாவாய் நன்றாய் பாரே. (270)

65. பண்ணயிலே கடுக்காயை அமுரி யோடு
பாங்காக வெருக்கடிதான் யிருபதுநாள் கொள்ளு
திண்ணயிலே கடுக்காயைக் குமரி யோடுச்
சமனாகக் கூட்டியதை பொடியாய்ப் பண்ணி
கண்ணயிலே அமுரியொடு யிருபதுநா ளுண்ணு
காயத்தில் துன்பங்கள் கழன்று போகும்
....
.... (3)

அமுரி மூதண்ட கிஷாயம்

66. மூணுமாம் கடுக்காயை யுண்ணும் போது
மூதண்ட கிஷயாமுண்டு சொல்லக் கேளு
ஆணுமாம் அருகம் வேர் பிடிதான் கொண்டு
அப்பனே மிளகதுதான் யிருபத் தைந்து
தோணுமாம் படியொன்று சலத்தை வார்த்து
சுகமாக யெட்டிலொன்றாய் காய்ச்சிக் கொண்டு
பூணுமாம் வெண்ணையது பாக்களவு போட்டு
புகழான மாலையிலே பொருந்த வுண்ணே. (15)

67. உண்ணப்பா இப்படித்தான் கடுக்காயைத் தொட்டு
உத்தமனே கற்பமெல்லா மாகு மட்டும்
உண்ணப்பா கஷாயத்தை விட்டுவி டாதே
உண்ணப்பா கற்பத்துக் குறுதி மெத்த
உண்ணப்பா சடமிறுகும் சயந்தான் போகும்
ஓகோகோ மருந்திடு வொழிந்து பொகும்
உண்ணப்பா நித்திரையும் கொள்ளொட் டாது
ஒடிக்குவிக்கு மூலத்தை யுத்துப் பாரே. (16)

68. உத்துப்பா ரிதுவென்றா லெளிசோ வல்லோ
உத்தமனே சிவனெடுத்து சிரசில் வைத்தார்
சேத்துப்பார் கணபதிக்குச் சிரசு மாச்சு

கூறினார் யிதன்பெருமை கொள்ள மாட்டேன்
முத்துப்பார் மிளகுசத்தி அறுகோணம் ஈசன்
மூதண்டப் பூரணந்தான் வெண்ணை யாச்சு
ஒத்துப்பார் யிதுமூன்றும் விடாதே யுண்டால்
ஒருதோசம் சடத்துக்கு உறுகா துண்ணே. (17)

69. உருகாது மயக்கங்கள் தியக்கங்க ளொன்றும்
உத்தமனே தாகமில்லை சலக்கட் டில்லை
மருகாது உடலுக்குள் வலியு மில்லை
மற்றுமுள்ள கற்பத்தின் தோஷ மில்லை
தருகாது வாசியெங்கும் மூலத்தே பாயும்
சண்டாள னானாலும் ஞான மெய்தும்
மருகாது சீவகளை சாகா னென்றும்
மகாகிஷா யத்தினுட ஆண்மை தானே. (18)

- (கொ.க.நூ)

70. ஆமப்பா வயதங்கே இருப தாகில்
ஆச்சரியங் கடுக்காயை பத்துநாட் கொள்ளு
ஓமப்பா வயதங்கே ஐம் ப தானால்
உத்தமனே கடுக்காயை யிருபதுநாட் கொள்ளு
சோமப்பா வயதங்கே யெண்ப தானால்
சுகமாக மண்டலந்தான் கடுக்காயைக் கொள்ளு
நாமப்பா கொண்டபடி கடுக்காயைக் கேளு
நலமான செங்கடுக்காய் மெத்த நன்று. (3)

(கா. க)

71. சித்தராய்ப் போகுமென்று பேசிக் கொண்டு
சிவனவனும் யோசனையே செய்தார்கள் பின்பு
புத்தரமாய் கடுக்காய்தான் தவறுண் டேதான்
தாரணியில் எழுமரமாய் முளைத்த தப்பா
பத்தரெல்லாஞ் சித்தராகப் போனா ரப்பா
பரிவான கடுக்காயை யொளித்து வைத்தார்
அத்ததொரு கருங்கடுக்காய்ச் செங்க டுக்காய்
அரிகடுக்காய் குறுங்கடுக்காய் ஆன வாறே (76)

72. வாறான வரிகடுக்காய் பெருங்க டுக்காய்
மாட்டுநிற வெண்கடுக்காய் மரமே மழப்பா
தேறான சித்திக்குங் கடுக்காய் தன்னில்
சிவந்தநிற செங்கடுக்காய் மெத்த நன்று
வாறாக யிதையிடித்துப் பொடியே செய்து
வருஞ்சிற் நாமணக்கு தன்னில் போட்டு
கூறாகக் கிண்டியே மெழுக தானால்
கொண்டெடுப்பாய் பதமாகக் கூறுங் காலே. (77)

73. காலப்பா யிதுதானே வழலைக் காதி
காரமென்றா லிதுகார சலக்கடுக்கா யப்பா
சேலான கடுக்காய்தான் வருஷ மொன்று
நிடமாகக் கொண்டுவிடு மகத்தாம் சித்தி
சேர்ந்தநிலை யினிவழலை மார்க்கமது .....
துடியான கரிசாலை சுழற்றி யாட்டு
தோலாக கலைநான்கு மதித்தே போகும்
கொள்ளப்பா மண்டலந்தான் குறிப்ப றிந்தே. (78)

74. அறிந்நுதான் கற்பத்தைகொள் ளாறு மாதம்
அதுகடந்த பின்புமொரு சேதி கேளு
செறிந்திருக்கும் பாதமொடு கையான் மேனி
சேர்மானம் நேராக தேனில் கொள்ளு
அறிந்துதான் மண்டலமே கொண்ட பின்பு
ஆச்சரிய மடங்காத வித்தை பாரு
பிறிந்ததொரு வேதமொடு சாத்தி ரங்கள்
பிலமாக வெட்டவெளி யாச்சுப் பாரே. (79)

- (கொ.க.நூ)

75. ....
....
ஆச்சென்று கடுக்காயை வருஷ மொன்று
அப்பனே அதின் முறையைச் சொல்லக் கேளு

வாச்சென்று கடுக்காயைத் தகர்த்துக் கொண்டு
வளமாக அமுரியிலே வூறப் போட்டு
காச்சென்று மறுநாள்தான் காயப் போட்டு
கணக்காக பத்துமுறை சுத்தி செய்யே. (706)

76. சுத்திசெய்த கடுக்காய்தான் செங்கடுக்கா யாச்சு
சுகமான கடுக்காய்தான் முறையைக் கேளு
பத்தியுட னிடித்துவடி கட்டி மைந்தா
பாங்கான கரகமதில் பதனஞ் செய்து
புத்தியுடன் பூரணத்தை பணிந்து போற்றி
புனிதமுடன் ரேசக பூரகமும் பண்ணி
வெற்றிபெற கும்பகத்தி னின்று கொண்டு
வேதாந்த கற்பமதை விரும்பிக் கொள்ளே. (707)

பத்தியம்

77. கொள்ளடா காலையிலே வல்லாரை கொள்ளு
கொண்டபின்பு மதியமதி லமுது கொள்ளு
துள்ளடா கடுக்காயை மாலை தன்னில்
தூளிலொடு கடியளவாய்த் துணிந்து கொள்ளு
நள்ளடா மதியமதி லமுது கொள்ளு
நானொன்று சொல்லுகிறேன் நயந்து கேளு
பல்லுடனே கால்முகங்கள் சுத்தி பண்ணி
பாலகனே விபூதியுந் தளமாய்ப் பூசே (708)

78. பூசியே ரெண்டெழுத்தை ஒன்றாய்க் கூட்டி
பூரணமாய்ச் செய்தபின்பு அசனங் கொள்ளு
நேசமுட னமுதுகொள்ளு சிறுபயறு கொள்ளு
நேர்மையுள சர்க்கரையும் பழமுங் கொள்ளு
வாசமுள பதார்த்தமெலாம் மகிழ்ந்து கொள்ளு
மகத்தான கடுக்காய்தான் வலுவா யப்பா
பாசடனா முரைத்த படியே நின்றால்
பலிக்குமடா காயசித்தி யோகந் தானே (709)

- (அ.க.ஞா.1200)

79. கடுசதங் கழுவு பிற்புனற் குளிடு
களமதப் பகல்கழித் தறற்
கக்கவைத் திவண முத்தரஞ் செயிரு
ளளனநகண்ட மாக்குவிட நீக்கு பின்
விடுதகும் படிகடைந்த மோரை யதில்
வேலை யுப்பிடுமு னோது காய்
விறுநாலி லொரு கூறடுப் பினில்வை
மெல்ல வேயெரி வறண்டபின்
படையெடுஞ் சசய மோத முமரைப்
பலமுதற் செவியம் வனிகணை
பாலெலாம் பொடிசெய் துவிதூவுசெம்
பழரசம் பெய்பெய் குலுக்கறல்
எடுபின் வந்தநா ளிஞ்சிநீர் பெய்யதை
வெயிலிலுலர்த் தசன முன்பினுண்
இருமல் மந்தமு தரத்து நோய்வமன
மில்லை பத்தியமு மில்லையே[1]

80. கூறுபா கக்க டுக்காய் கொள்ளில் மண் டலத்திற் சூலை
ஏறுகால் குன்மம் மூலம் இரைப்பு அரோ சகம்பீ லீகம்
நாறுபீ நசம்வி டூசி நாத்திவே டம்பற் பாண்டு
சீறுமா மலகப் பித்தம் செம்புனற் பித்தம் போமே. (1)

கற்ப முறிவுக்கு

81. காணப்பா கடுக்காயும் மிளகு தொட்டுக்
கைமுறையாய் உண்ணையிலே முறிஞ்சு தானால்
பூணப்பா சயமெடுத்தால் தங்கபற்பங் கொள்ளு
புகழாக உண்டபின்பு தீருந் தீரும்
தோணப்பா உதிரத்தில் நோய் வந் தாக்கால்
சுகமாக அப்பிரகக் கற்பங் கொள்ளு
ஆணப்பா மலசலங்கள் கட்டிச் சானால்
அறுத்து விடுங் காந்தமென்ற கற்பங் கொள்ளே

1. சித்த வைத்தியத்திரட்டு பக் 273, 274

82. கொள்ளடா வுடம்பசந்து வீங்கித் தானால்
கொடிதான வேம்பினுட கற்பங் கொள்ளு
தள்ளடா கண்மயங்கி மறைந்த தானால்
தயங்காதே கற்பூரஞ் செய்தே கொள்ளு
உள்ளடா கடிவிஷம் போல் (உடம்பு) வீழ்ந்து தானால்
உத்தமனே வீழியுட வேரி னோடு
அள்ளடா சூதபற்பம் வைத்துக் கொண்டால்
அணுகியதோர் பதினெட்டுக் குட்டம் போமே (2)

83. போமடா கற்பத்தில் வந்த தோசம்
போக்கெல்லாம் போகவொரு கற்பஞ் சொல்வேன்
ஓமடா அப்பிரகச் சத்துத் தானும்
பலத்துக்கு அரைபலந்தான் தங்கங் கூட்டி
ஆமடா செய்சூதம் தங்களடை போட்டு
அடவாக உருக்கியதை யெடுத்துக் கொண்டு
தாமடா கந்தகந்தான் இரட்டிப்பு இட்டு
சாதகமாய் குப்பியிலே சமைத்தி டாயே. (3)

84. சமைத்ததொரு செந்தூரம் நூற்றுக் கொன்று
தாக்கினா லொன்பதிலும் பத்து மாற்றம்
அமைத்ததொரு செந்தூரம் குன்றி யுண்ண
அழிந்ததொரு கற்பமெல்லாம் வாய்ந்தே போம்
குமைந்ததொரு கற்பத்தால் முறிந்த தோசம்
கோடிவித மானாலும் குலாவித் தீரும்
அமைந்ததொரு உலகத்தோர்க் காக சொன்னேன்
நம்முடைய நூல்பார்த்தோர் நல்லோ ராமே. (4)

- (ச.கா)

அமுரி முறிக்க

85. ஆமென்ற அமுரிதன்னை முறிக்கக் கேளு
அடிகனத்த தேத்தாம்வேர் வெட்டி வந்து
பாமென்ற பாத்திரத்தில் கடைந்து வாங்கி
பக்குவமாய் அமுரிதன்னை முன்பின் தள்ளி

தாமென்ற பாத்திரத்தில் நடுஅமுரி விட்டு
நலத்ததேத்தாம் வித்தொன்று பொடித்துப் போட்டுக்
காமென்ற கால்நாழி வைத்து வைக்கக்
கசடகன்று சுத்தாமய் முறிந்துப் போமே. (108)
- (போ.க.வி)

கடுக்காய் கற்பம்

எல்லா வகையான கடுக்காய்களுக்கும் நன்றாகப் பொடிசெய்து கொண்டு அமுரியுடன் உட்கொள்ள வேண்டும் என்பது பொதுவானதாகக் கூறப் பட்டுள்ளது.

உண்ணவேண்டிய கால அளவு : ஏழுவகையான கடுக்காய் கற்பங்களுக்கும் ஒரு மண்டலம். விசையன், திரிவிருதை ஆகிய இரு கடுக்காய் கற்பங்களுக்கு வெருக்கடி அளவு கூறப்பட்டுள்ளது. மற்றவற்றுக்கு உண்ண வேண்டிய மருந்தின் அளவு குறிப்பிடப்படவில்லை.

அனுபானம் : ஏழுவகையான கடுக்காய் கற்பங்களுக்கும் அனுபானமாக 'அமுரி' கூறப்பட்டுள்ளது. விசையன் என்ற கடுக்காயால் செய்யப்படும் கற்பத்திற்கு பேய்ச்சுரைக்காய், முருக்கம் ஆகியனவும் அனுபானமாகக் கூறப்பட்டுள்ளது.

விளைவுகள் :

கடுக்காயின் பெயர்	*விளைவுகள்*
1. விசையன்	வாதம் போகும்
2. ரோகணி	சீதம் நீங்கும், கிருமிகள் அழியும், வன்னி துலக்கத்துடன் விளங்கும்
3. பிரிதிவியன்	சட்டை கழன்று போகும் கிருமி நீங்கும், நாடியும், தேகமும் சுத்தியாகும்
4. அமுதை	எல்லா விதமான நோய்களையும் அகற்றும், சதையில் உள்ள நோய்கள் அனைத்தும் நீங்கும்

5. சிவந்தி	வியாதிகள் அனைத்தும் நீங்கும், சாவு அணுகாது
6. திரிவிருதை	சாவு அணுகாது, வாதம், பித்தம், சிலேற்றுமம் ஆகியவை நீங்கும்
7. அபயன்	மும்மலமும் களிம்பும் நீங்கும். நாடியானது முறுக்கேறும். ஆயுள் அதிகமாகும். உடல் வலிமையாகும். தேகம் சிறப்பாக விளங்கும் அறிவு உண்டாகும்.

சிறப்புச் செய்திகள்

கருங்கடுக்காய் சிறப்பானது என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. அங்ஙனம் கருங்கடுக்காய் கிடைக்காவிட்டால் பொற்கடுக்காயைப் பயன்படுத்தலாம். அனுபானம் தொடர்பாகக் கூறுமிடத்து எந்தெந்த மாதங்களில் எந்தெந்த அனுபானத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று விளக்கப்பட்டுள்ளது.

மாதம்	*அனுபானம்*
1. சித்திரை, வைகாசி	குறிஞ்சித்தேன்
2. ஆனி, ஆடி	வெல்லம்
3. ஆவணி, புரட்டாசி	இந்துப்பு + அமுரி
4. ஐப்பசி, கார்த்திகை	சர்க்கரை
5. மார்கழி, தை	சுக்குக் கஷாயம்
6. மாசி, பங்குனி	அமுரி

கடுக்காய் கற்பம் உண்ணும் போது கவனிக்க வேண்டியவை

செங்கடுக்காயில் கற்பம் செய்வது சிறப்பாகும். இல்லாவிடில் பொற்கடுக்காயைப் பயன்படுத்தலாம். கடுக்காயைப் பொடி செய்து கொண்டு மெல்லிய துணியால் அரித்துக் கொள்ள வேண்டும். அமுரிதனை முறித்துக் கொண்டு வெருக்கடித்தூள் அளவு குழப்பி உட்கொள்ள வேண்டும்.

அமுரிதன்னை முறிப்பதற்கு, காந்தப் பாத்திரத்தில் அமுரியை வைக்க வேண்டும். தேற்றாம் விதையை இதில் வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் நன்றாகக் கலக்கி தெளிவை இறுத்துக் கொண்டு, கடுக்காய்ப் பொடியைப் போட வேண்டும்.

பிறகு, தினந்தோறும் விடியற்காலையிலும் மாலையிலும் அமுரி மூதண்ட கிஷாயத்தை உட்கொள்ள வேண்டும்.

அமுரி மூதண்ட கிஷாயம்

மிளகு இருபத்தைந்து, அருகுவேர் பிடியளவு இவற்றை இடித்து ஒருபடியளவு தண்ணீர் சேர்த்து ஆழாக்கு அளவு வரும்வரை நன்றாகக் காய்ச்ச வேண்டும். பின்பு அதில் பாக்களவு வெண்ணையைச் சேர்த்து அருந்த வேண்டும்.

காலையில் கடுக்காய்த் தூளை உட்கொள்ள வேண்டும். மாலையில் கிஷாயம் அருந்த வேண்டும்.

மலங்கழட்ட கிஷாயம்

ஆமம் கழலாவிட்டால் காயசித்தி கிடைக்காது. ஆதலால், மலங்கழட்ட கிஷாயத்தை உட்கொள்ள வேண்டும். சதிர்கள்ளி காய்கள் பத்து, குமரிச் சோறு இரண்டு காசு எடை எடுத்துக் கொண்டு அமுரியுடன் கலந்து கொள்ள வேண்டும். இங்ஙனம் கஷாயத்தை உட்கொள்ளும் போது ஆமமெல்லாம் தள்ளப்படுவதோடு கற்பம் உண்ணுவதற்கு முன்பு உட்கொண்ட புளி, உப்பு முதலானவை மலத்தோடு தள்ளிப்போடும். மேலும் சடத்தில் இருந்து விஷநீர் வற்றி எலும்பில் நின்ற சுண்ணாம்பின் வேகமும் நீங்கும்.

உட்கொள்ள வேண்டிய கால அளவு : இருபது நாட்கள்

மலங்கழட்டும் கிஷாயம் உட்கொள்ளும் போது உண்டாகும் தாகத்திற்கு, தாளிசபத்திரி, சுக்கு, சீரகம், சடாமாஞ்சில், ஏலம் ஆகியவைகளை வகைக்கு விராகனெடை எடுத்துக் கொண்டு நன்றாகப் பொடித்தபின் நீர்விட்டு சட்டியில் காய்ச்ச வேண்டும். அதை ஆழாக்கு அளவு மாலையில் உட்கொண்டு வர வேண்டும்.

கற்பம் உண்ணுவதால் உண்டாகும். விளைவுகள் : தாகம் உண்டாகாது. முன்னர் உட்கொண்ட புளி, உப்பு, எண்ணெய் முதலானவை கழன்று போகும். முன்னர் இருந்த நோய்கள் எல்லாம் நீங்கும். மயக்கம் ஏற்படாது. கிரந்தி நோய் நீங்கும். சுவாசம் இறுகும்.

கற்பங்கொள்ள அனுபானங்கள்

மாதங்களுக்கு ஏற்றவாறு அனுபானங்கள் சொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மாதம்	அனுபானம்
1. சித்திரை, வைகாசி	சுக்கின் கிஷாயம்
2. ஆனி, ஆவணி	வெல்லம்
3. புரட்டாசி, ஆடி	குறிஞ்சித்தேன்
4. ஐப்பசி, கார்த்திகை	குமரிச் சோறு
5. மார்கழி, தை, மாசி	கற்கண்டு
6. பங்குனி	நெய்

கற்பம் உண்ண வயதும் காலமும்

வயது	காலம்
1. இருபது	இருபது நாட்கள்
2. முப்பது	முப்பது நாட்கள்
3. நாற்பது	நாற்பது நாட்கள்
4. ஐம்பது	பதினைந்து நாட்கள்
5. அறுபது	பத்து நாட்கள்

அறுபது வயதுக்கு மேல் காயசித்தி ஆகாது.

கடுக்காயை அமுரியோடு சேர்த்து உட்கொள்ள வேண்டும். வெருக்கடி அளவு இருபது நாட்களும், கடுக்காயைக் குமரியோடு சமன் அளவு சேர்த்துப் பொடியாகச் செய்து அமுரியோடு இருபது நாட்களும் உட்கொள்ள வேண்டும். இதனால் உடலில் ஏற்படும் துன்பங்கள் அனைத்தும் நீங்கி விடும்.

கடுக்காய் கற்பம் உண்ணும்போது மூதண்ட கிஷாயத்தை உட்கொள்ள வேண்டும். அருகம்வேர் ஒரு பிடியளவு, மிளகு இருபத்தைந்து இவற்றை

எடுத்துக் கொண்டு ஒரு படி அளவு நீர் சேர்த்து கொதிக்க வைக்க வேண்டும். எட்டிலொன்றாய் சுண்டிய பின்னர் அதையெடுத்துப் பாக்களவு வெண்ணையைச் சேர்த்து மாலையில் உட்கொள்ள வேண்டும். கடுக்காய் கற்பத்தை உண்ணும் வரையில் இந்த கிஷாயத்தையும் மறக்காமல் சேர்த்துக் கொள்ள வேண்டும். கற்பத்துக்கு உறுதி தரும்.

விளைவுகள் : உடல் வலிமையுடன் விளங்கும். சயரோகம் ஒழிந்து போகும். தூக்கம் வராது. மயக்கங்கள், தியக்கங்கள் தோன்றாது. தாகம், சலக்கட்டு, கற்பத்தினால் ஏற்படும் தோஷம், உடலில் தோன்றும் வலிகள் முதலானவைகள் நீங்கும்.

தீயவனாக இருப்பினும் ஞானம் உண்டாகும். சாவு அணுகாது.

வயது	***காலம்***
1. இருபது	பத்து நாட்கள்
2. ஐம்பது	இருபது நாட்கள்
3. எண்பது	நாற்பது நாட்கள

'கொங்கணர்' கற்பம் நூறில் கருங்கடுக்காய், செங்கடுக்காய், அரிகடுக்காய், குறுங்கடுக்காய், வரிகடுக்காய்,பெருங்கடுக்காய், வெண்கடுக்காய் ஆகிய ஏழுவகையான கடுக்காய் மரங்களின் வகைகள் சொல்லப்பட்டுள்ளன. போக நாயனார் அருளிச் செய்த கற்ப விதியில் விசையன், ரோகணி, பிரிதிவியன், அமுதை, சிவந்தி, திரிவிருதை, அபையன் ஆகிய கடுக்காயின் பேதங்கள் கூறப்பட்டுள்ளன.

ஏழுவகையான கடுக்காய்களுள் சிறப்பாகக் கருதப்படுவது செங்கடுக்காயாகும். இதையிடித்து நன்றாகப் பொடியாகச் செய்து கொண்டு சிற்றாமணக்கு எண்ணெய்யுடன் சேர்த்து மெழுகுபதமாகும் வரை கிண்டி எடுக்க வேண்டும். இதுவே வழலைக்கு ஆதியாகும். கடுக்காயை ஒருவருடம் உட்கொண்டுவரின் கிடைக்கும் சித்தி மகத்தானதாகும்.

கடுக்காய் கற்பத்தை ஆறுமாதம் உட்கொண்டு, சிறுசெருப்படி, கையாந்தகரை, குப்பைமேனி மூன்றையும் தேன் சேர்த்து ஒரு மண்டலம் உட்கொண்டு வரவேண்டும்.

விளைவுகள் : வேதம் சாத்திரங்கள் முதலானவைகள் வெட்டவெளியாகத் தோன்றும்.

கடுக்காயைச் சுத்தி செய்தல்

கடுக்காயைக் கற்பம் செய்வதற்குப் பயன்படுத்துவதற்கு முன்பு சுத்திசெய்தல் வேண்டும். கடுக்காயை அமுரியில் ஊறவைத்து அதை மறுநாள் வெயிலில் காயவைக்க வேண்டும். இவ்வாறு மாறிமாறி பத்துமுறை செய்தால் கடுக்காய் சுத்தியாகும்.

செங்கடுக்காயைச் சுத்திசெய்து நன்றாக இடித்துக் கொண்டு, மெல்லிய சீலையில் சலித்துக் கொள்ள வேண்டும். இதை கலசத்தில் பதனப்படுத்தி, பிறகு பயன்படுத்த வேண்டும்.

பத்தியம்

காலையில் வல்லாரையை உண்ண வேண்டும். மதிய நேரத்தில் சோறு உண்ண வேண்டும். மாலையில் கடுக்காய்த் தூளில் வெருக்கடியளவு உட்கொள்ள வேண்டும். சோற்றுடன், சிறுபயறு, சர்க்கரை, பழம், வாசனையுள்ள உணவுவகைகள் முதலானவற்றை உண்ணலாம்.

விளைவு

காயசித்தி கிடைக்கும்.

பச்சைக் கடுக்காய் நூறுகொண்டு, அரிசி கழுவிய நீரில் (முதல் கழுவியதை நீக்கி இரண்டாவது மூன்றாவது கழுவிய நீர்) போட்டு, மூன்று நாள் ஊறவைத்து, நீரை நீக்கவும், இவ்விதம் மும்முறை செய்ய வேண்டும். பிறகு ஒவ்வொரு காயையும் இரண்டிரண்டாக வெட்டிக் கொட்டையை நீக்கவும். பிறகு இதை ஒரு பானையில் சேர்த்துக் கடைந்த மோரை வேண்டிய அளவு ஊற்றி அதில் கடலுப்பு, காய்க்கு நான்கில் ஒருபங்கு சேர்த்து அடுப்பினில் வைத்து மெல்ல எரித்து வறண்டபின் சுக்கு, அட்டுப்பு, இந்துப்பு, ஓமம் வகைக்கு $^1/_2$ பலம்; செவ்வியம், சித்திரமூல வேர்ப்பட்டை, திப்பிலி வகைக்கு

$^{1}/_{2}$ பலம்; எல்லாவற்றையும் பொடித்து அதில் தூவி பழச்சாறு ஊற்றிக் குலுக்கி வெயிலில் வைத்து உலர்த்தி பின் இஞ்சிநீர் ஊற்றி வெயிலில் வைத்து உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு துண்டு உணவுக்கு முன்னும் பின்னும் உண்ண வேண்டும். பத்தியமில்லை.

விளைவுகள் : இருமல், மந்தம், வயிற்று நோய், வாந்தி, இவைகள் தீரும். இதை ஒரு மண்டலம் உட்கொண்டால் சூலை, வாய்வு, குன்மம், மூலம், இரைப்பு, அரோசகம், பீலிகம், துர்நாற்றம், வீசுகின்ற பீநசம், வாந்திபேதி, நாவில் சுவையின்மை, பாண்டு, பித்தநோய், இரத்தபித்தம் இவைகள் தீரும்.

கற்ப முறிவுக்கு : கற்பங்கள் கொள்ளும் போது சொல்லப்படும் நிபந்தனைகளைக் கைக்கொள்ளாவிடில் கற்ப முறிவு ஏற்படும். இதனால் துன்பம் தரும் விளைவுகள் உண்டாகும். இங்குக் கற்ப முறிவுக்கு மருந்து சொல்லப் பட்டுள்ளது. கடுக்காய் கற்பம், மிளகுகற்பம் ஆகிய இரண்டு கற்பங்களுக்கும் ஒரே முறிவு மருந்து சொல்லப்பட்டுள்ளது.

கற்ப முறிவு ஏற்பட்டு, சயநோய் உண்டானால் தங்கபற்பம் கொள்ள வேண்டும். வயிற்று நோய் உண்டானால் அப்பிரகக் கற்பம் கொள்ள வேண்டும். மல சலங்கள் கட்டினால் காந்தக் கற்பமும், உடல் அசந்து வீக்கம் ஏற்பட்டால் வேம்புக் கற்பமும் கொள்ள வேண்டும். கண் மயங்கி, மறைப்பு தோன்றினால் கற்பூரம் செய்து உட்கொள்ள வேண்டும். உடல் விஷம் கொண்டதுபோல் வீழ்ந்ததானால் கருவீழியின் வேரையும் பதினெட்டு வகையான குட்ட நோய்கள் உண்டானால் சூதபற்பத்தையும் உண்ண வேண்டும்.

கற்பத்தினால் வந்த தோசம் போவதற்கு ஒரு கற்பம் சொல்லப்பட்டுள்ளது. அப்பிரகச்சத்து ஒரு பலம்; தங்கம், சூதம் வகைக்கு அரைப் பலம்; கந்தகம் இரண்டு பலம்; இவற்றைக் குப்பியில் சேர்க்க வேண்டும். பின்னர் செந்தூரமாகச் செய்து கொண்டு, குன்றிமணியளவு உட்கொண்டு வரவேண்டும். இதனால், கற்பத்தின் முறிவால் ஏற்படும் தோசம் தீரும்.

கரந்தைக் கற்பங்கள்

86. காணவே நாறுகின்ற கரந்தை தன்னைக்
கலங்காமல் சமூலந்தான் பிடுங்கி வந்து [1]
ஊணவே நிழலுலர்த்தா யுலர்த்திக் கொண்டு
உகந்துமே யிடித்து நன்றாய்ச் சூரணமே செய்து
பாணவே பால்நெய்யில் தேனிற் கொள்ள
பாங்கான திங்களொன்றில் சடனாற் றம்போம்
வாணவே திங்களிரண்டில் வாதம் போகும்
மருவுகின்ற மூன்று திங்கள் பித்தம்[2] போகும். (50)

87. போகுமே நான்குதிங்கள் குட்ட மெல்லாம்
புகழான ஐந்துதிங்கள் வன்னி மீதும்
நாகுமே யாறுதிங்கள் ஞான மீறும்
நலமான ஏழுதிங்கள் தேகம் பொன்னாம்
யேருமே எட்டுதனிற் சட்டைப் போகும்
யேற்றமா யொன்பதிலே கவனங் கொள்ளும்
பாகுமே பரமசிவன் சடையில் வைத்தார்
பாங்கையெல்லாங் கண்டுரைத்த படிதா னென்றே. (51)

88. என்றான கரந்தையைத்தான் கொண்டு வந்து
யடித்துமே படிசாறு வடிகட்டிக் கொண்டு
கண்டான கரண்டிதனைத் துப்புரவாய் விளக்கிக்
களிம்பகற்றிச் சூதத்தை யதிலே போட்டு
தன்றான கரியோட்டில் வைத்து ஊதி
சாறுதான் சுருக்கிட்டு நாலு சாமம்
பன்றாகக் கட்டியது வெண்ணை யாகும்
பாங்கான வெண்ணையெல்லாம் வாங்கிக் கொள்ளே. (52)

89. வாங்கியே உருண்டைபோல் வைத்துக் கொண்டு
மறுபடியும் யிலையரைத்துக் கவசங் கட்டித்
தாங்கியே பத்தெருவிற் புடத்தைப் போட்டு

1. கருப்பாகப் பண்ணிக் கொண்டு 2. வாய்வு

தப்பாமல் மறுபடியு மிலைய ரைத்துத்
தேங்கியே பத்துவிசை புடத்தைப் போடத்
திரண்டுமே மணிபோலக் கரியி லாடும்
ஓங்கியே உருண்டைதனைக் குகையி லிட்டு
உருகையிலே நாலிலொன்று தங்கம் போடே (53)

90. தங்கத்தி னெடையொக்க நாகமே போடு
தாக்கியே கலந்தொன்றா யுருக்கி வாங்கி
பங்கத்தின் கல்வத்தி லிதனை யிட்டு
பாங்காக பொடித்திட்டு பொடிக்குப் பாதி
லிங்கத்தைக் கூட்டியே தாளகமுங் கெந்தி
நேரான சிலையொரு கால்வாசி கூட்டி
அங்கத்தில் கரந்தையென்ற சாறு தன்னால்
அரைத்துமே பொடியாக்கி மேருக் கேத்தே (54)

91. ஏத்தியே பனிரெண்டு சாமந் தீயை
எழிலான கதிராலே கிண்டிப் பாரு
மாத்தியே மாதளம்பூ போலே நிற்கும்
மாசற்ற நவலோகம் நூற்றுக் கொன்று
கோத்தியே கொடுத்தாக்கால் கனக மாகுங்
கூர்ந்துபண விடைதன்னை கரந்தையிலே யுண்ணு
தேத்தியே மண்டலந்தா னுண்டா யானால்
சிவந்தெழுந்த சூரியன்போல் முகமாந் தேறே (55)

92. தேறியே சங்குநிற மாங்க ரந்தை
தேடியே பாக்களவு பாலி லுண்ணு
மாரியே மண்டலந்தா னுண்டா யானால்
மாசற்ற சந்திரன்போல் முகமு மாமே
வீரியே வெள்ளைமயிர் காகயிற காகும்
மேனியுமே ரசிக்கென்று சிவந்து மின்னும்
மூரியே யமிர்தந்தான் யோகத்திற் பரந்து
உத்தமனே அமிர்தத்தை உண்ணு உண்ணே (56)

93. உண்டுமே உமிழ்ந்தாக்கால் கல்லோடும் பார்க்க
முகந்தகண்கள் செண்பகத்தின் கண்போ லாகும்
மண்டுமே வெண்கரந்தை கொண்டு வந்து
அதிகமாம் படிச்சாறு பிழிந்து வைத்து
தோண்டுமே அயக்கரண்டி சுத்தி பண்ணி
சுத்தித்த சூதத்தை யதிலே விட்டு
நன்றுமே நால்சாமஞ் சுருக்குப் போடு
நலமாக வெண்ணையதாம் வழித்து வாங்கே (57)

94. வாங்கியே கிழிப்போல கட்டிக் கொண்டு
மாசற்ற சூடனுட தீயில் ஆட்டு
ஆங்கியே ஆரயிலைக் குள்ளே வாட்டு
அதிகமா யத்தங்காய்க் குள்ளே வாட்டு
மூங்கியே முன்கரந்தை கவசங் கட்டி
மூன்றுபுடம் போட்டெடுத்துச் சுருக்கிப் பாரு
தாங்கியே தங்கம்போ லுருகி யாடுஞ்
தகர்ந்துடைத்தால் வைரம்போல் தளுக்காம் பாரே (58)

95. பாரமென்று சூதமணி யெடுத்துப் பார்த்தால்
படிகத்தி னொளி போலப் பற்றிப் பாயுங்
காரென்று உருக்கினால் கண்விட் டாடும்
கதித்தெடுத்து உடைத்தாக்கால் நொருங்குந் தூளாய்
கூரென்று குகையில் வைத்து உருக்கும் போது
கொடிதான நவலோகம் தீட்டி னாக்காற்
தாரென்று தப்பிளைபோல் முழங்கிப் போடுந்
தனித்த பச்சை சரக்கூட்டில் தங்கிப் போமே (59)

96. தங்கிப்போம் பால்மதுதேன் தன்னை யுண்ணு
சாராயந் தனையருந்தும் விஷம்பட் சிக்கு
மங்கிப்போம் மாதருட ருதுபோ சிக்கு
மாசற்ற சூரியன்போல் வண்ண மாகுந்

தெங்கிப்போம் பூரணதரி சனமு மாகுஞ்
சிவம்பண்ணி லெழுகோடி மந்திரமுஞ் சித்தி
உங்கிப்போம் சிவவித்தை கட்டி னோர்க்கு
ஒருகாலுஞ் சாவில்லை உண்மை தானே (60)

97. உண்மையாங் குளிகையைச் செந்தூரம் பண்ணு
உற்பனமாய் குருபண்ணு களங்கு பண்ணு
வண்மையாய் செந்தூரம் பணவெடைதான் நிறுத்து
மண்டலந்தான் வெண்கரந்தை தன்னி லுண்ணு
திண்மையாஞ் சிவன்தின்று சடையில் வைத்தார்
சிறப்பாக யான்தின்ற யனுபோ கத்தை
எண்மையாய் ஏழாயிரத்தில் எழதிப் போட்டேன்
எனைப்போலே யாகவென்று யிசைந்திட் டேனே (61)

98. இசைந்திட்ட கரந்தையைத்தான் கருப்பாய்ப் பண்ணி
இதமாக நிழலுலர்த்தி சூரணமே செய்து
நசைத்திட்ட நாலிலொன்றூ கெந்தி சூதம்
நாட்டியரைக் கருப்பான கரந்தை தன்னால்
புசைத்திட்டு கருப்பாக பொடியாய்ப் போகும்
போட்டுமே சூரணத்திற் பிசைந்து கொண்டு
திசைத்திட்ட தேனாலே யரைத்து மைபோல்
சிறுகவே உருண்டையது சுண்டைக் காயே (62)

99. சுண்டைக்காய் பிரமாணம் மண்டலந்தான் கொள்ள
கோபமில்லை தாபமில்லை மயக்கம் போச்சு
பண்டக்காய் காயத்திற் வதையும் போச்சு
பருத்திட்டு கண்ணிரண்டு பார்வை யாச்சு
உண்டைக்காய் தரத்தில் கிருமி போச்சு
சேர்ந்திட்ட வாசனைதான் சடத்தி லாச்சு
மண்டைக்காய் சிரசுதன்னில் வருத்தம் போச்சு
மாசற்று வண்டதுபோல் சடமு மாச்சே (63)

கொட்டைக் கரந்தை

100. ஆச்சுதே கொட்டையாங் கரந்தை தன்னை
அதிகமாம் சமூலந்தான் பிடிங்கி வந்து
வாச்சுதே நிழலுலர்த்தி யிடித்துக் கொண்டு
வடிகட்டி நாலிலொன்று கண்டு சேர்த்து
வாச்சுதே வெருக்கடித்தூள் வென்னீர்க் கொள்ள
மடுக்காகும் கால்கைக்கு பலமுண் டாகும்
யேச்சுதே வாசியென்ற குதிரை தன்னை
ஏற்றியே முளைகட்டி யிருக்குந் தானே. (64)

101. தானான கொட்டைக் கரந்தை தன்னை
சமூலந்தான் பிடிங்கிவநது சாறு வாங்கி
ஆனான அயக்கரண்டி தன்னிற் சூதம்
அழுந்தவிட்டு மேலாகச் சுருக்குப் போடு
நானான நால்சாமஞ் சுருக்கிட் டாக்கால்
நல்லவெள்ளி கம்பிபோல ரசமு மாகுங்
கானான யிலையரைத்துக் கவசங் கட்டி
காரியமாய் லகுபுடமாய்ப் போட்டி டாயே. (65)

102. போட்டிடுவாய்ப் புடம்பத்து யிலைக்கவசங் கட்டி
பேரான குகையிலிட்டு உருக்கிக் கொண்டு
நாட்டி டுவாய் தங்கமது நாலுக் கொன்று
நாகந்தா ன் தங்கத்தி னிடையே கூட்டி
காட்டிடுவாய் கல்வத்தில் நொறுக்கிக் கொண்டு
கரந்தையென்ற சாற்றாலே யரைத்து மைபோல்
பூட்டிடுவாய் யுலரவைத்து பொடியாய்ப் பண்ணி
பேரிதுக்கு சரிகெந்தி கூட்டிக் கொள்ளே. (66)

103. கொள்ளவே ஓட்டிலிட்டு கந்தகத்தை உருக்கி
குறித்தமுன் பொடிபோட்டு வறுத்துப் போடு
கள்ளவே கல்வத்திற் போட்டுக் கொண்டு

காணிதுக்கு எட்டிலொன்று தாளகமுஞ் சிலையும்
வெள்ளவே கரந்தையென்ற சாற்றா லரைத்து
மிக்காக உலரவைத்து பொடியாய்ப் பண்ணி
தெள்ளவே காசியென்ற மேருக் கேற்றி
சிலாக்கிட்டு சிவந்துபதமே பார்த்தி றக்கே (67)

104. ....
....
யேத்தியே கதிர்போல தேகம் பாரு
சிறப்பாக லோகத்தி லாயிரத் தொன்றீய்
பாத்தியே பத்தரை மாற்று காணும்
பதினாறு வயதாக பாலிப்பான் பாரே
ஏத்தியே வாதமென்ற யோகம் பார்த்தால்
இருந்திடுமே கற்பாந்த காலந் தானே. (68)

(செங்கரந்தைக் கற்பம்)

105. தானென்ற செங்கரந்தைக் கொட்டை தன்னைத்
தனிசாறு படியிரண்டு அளந்து கொண்டு
நானென்ற நாகமது பலந்தா னெட்டு
நவச்சாரம் வெண்காரம் பலந்தா னொன்று
யேனென்ற பொடிபண்ணி வைத்துக் கொண்டு
யேற்றமாய் இலுப்பைநெய் விட்டு ருக்கி
வேனென்ற வெண்காரம் பொடிமேல் தூவி
விரைந்துநின்று சாறுதன்னில் சாய்த்தி டாயே. (69)

106. சாய்த்திட்டு பதினொருகால் விட்டு நீதான்
தகடுதட்டி லேசாகச் சதுர மாக்கிக்
காய்த்திட்டு கல்லுப்பு நாகயெடை தூக்கி
கல்லுப்பைச் செங்கரந்தை சாறு தன்னால்
வாய்த்திட்டு யரைத்துமே தகட்டி லப்பி
அசகாம லகலிலிட்டுப் புடத்தைப் போட
மாய்த்திட்டு ஆறவிட்டு கல்வத் திட்டு
மருவியரைத் தொன்றாக வில்லைக் கட்டே. (70)

107. கட்டியே ஒன்பதெரு வடுக்கிப் போட்டு
கனல் குளிர்ந்த பின்புதான் எடுத்துக் கொண்டு
கொட்டியே கல்வத்தில் சாறதனா லரைத்துக்
கூர்ந்துமே பத்துவிசை போட்டெ டுத்து
திட்டியால் பார்த்தாக்கால் சிவப்பே யாகும்
சிறந்திதுக்கு நாலிலொன்று சூதங் கட்டி
வெட்டியே வெண்காரப் பொடியோடு சிலையு
மீறாமல் சூதமிடைக் கூடப் போடே. (71)

108. போட்டுமே லகுபுடமா யைந்து போடு
பேறான வெள்ளியிலே நூற்றுக் கொன்றீய்
நீட்டியே பத்தரை மாற்றுங் காணும்
நிலைத்துண்ணு செங்கரந்தை தன்னில் வைத்து
மாட்டுமே மண்டலந்தான் கொண்டா யானால்
வாசியெல்லா முள்ளடங்குஞ் சாவோ யில்லை
தூட்டுமே காலங்கி நாயனார் சொன்ன
சூட்சமாங் கற்பத்திற் திறந்திட் டேனே. (72)

- (போ.க.வி)

நாறுகரந்தைக் கற்பம்

நாறுகரந்தையின் சமூலத்தைக் கொண்டுவந்து நிழலில் நன்றாக உலர்த்திக் கொள்ள வேண்டும். பின்னர், நன்றாக இடித்துச் சூரணமாகச் செய்து கொள்ள வேண்டும்.

அனுபானம் : பால், நெய், தேன்

உண்ணவேண்டிய கால அளவு : இந்த கற்பம் உண்ண வேண்டிய கால அளவுக்கு ஏற்ப ஏற்படும் விளைவுகள் கூறப்பட்டுள்ளன. இந்நிலையில் இது மற்ற கற்பங்களிலிருந்து மாறுபட்டுக் காணப்படுகிறது.

உண்ணவேண்டிய கால அளவு		விளைவு
1. ஒரு மாதம்	-	உடல் நாற்றம் டே கும்
2. இரண்டு மாதம்	-	வாதம் போகும்
3. மூன்று மாதம்	-	பித்தம் போகும்
4. நான்கு மாதம்	-	குட்டம் போகும்
5. ஐந்து மாதம்	-	வன்னி மீறும்
6. ஆறு மாதம்	-	ஞானம் மீறும்
7. ஏழு மாதம்	-	தேகம் பொன் போலாகும்
8. எட்டு மாதம்	-	சட்டை போகும்
9. ஒன்பது மாதம்	-	கவனங் கொள்ளும்

கரந்தைக் கற்பம்

கரந்தையைக் கொண்டுவந்து இடித்து ஒருபடி அளவு சாற்றை வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். களிம்பு இல்லாத கரண்டியை எடுத்து நன்றாகக் கழுவிய பின்னர், அதில் பாதரஸத்தைவிட்டு, கரியோட்டில் வைத்து ஊத வேண்டும். இவ்வாறு நான்கு சாமம் செய்தால் மருந்தானது வெண்ணையைப் போலாகும். அதை உருண்டையாகச் செய்து கொண்டு பத்து வரட்டிகளை வைத்துப் புடம்போட வேண்டும். பின்னர் மீண்டும் இலையை அரைத்துப் பூசி மீண்டும் புடத்தைப்போட மணிபோல உருகிநிற்கும். இதை குகையிலிட்டு, உருக்கி, உருகியிருக்கும்போது நாலில் ஒரு பங்கு தங்கம் சேர்க்க வேண்டும். தங்கத்தின் எடைக்கு நாகம் சேர்த்து நன்றாக உருக்கி வாங்கிக் கொள்ள வேண்டும். பின்னர், இதனைக் கல்வத்திலிட்டு நன்றாகப் பொடி செய்து, பொடிக்குப் பாதி அளவு லிங்கத்தைச் சேர்த்து, அத்துடன் தாளகம், கெந்தி, மனோசிலை இவற்றைக் கால்வாசி சேர்க்க வேண்டும். மீண்டும் கரந்தைச் சாற்றைச் சேர்த்து மேருவுக்கு ஏற்ற வேண்டும். பனிரெண்டு சாமம் தீயினால் எரித்துக் கதிரினால் கிண்டிப் பார்க்கும்போது மாதளம்பூவின் நிறத்தைப் போல சிவந்து காணப்படும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : ஒரு பணவெடை

விளைவுகள் : சூரியன் போல் முகம் ஒளியுடன் விளங்கும். நவலோகத்தில் நூற்றுக்கு ஒருபங்கு சேர்த்தால் பொன்னாக மாறும்

வெண் கரந்தைக் கற்பம்

வெண்கரந்தையைக் கொண்டுவந்து ஒருபடி அளவு சாறு எடுத்துக் கொள்ள வேண்டும். இரும்புக் கரண்டியொன்றைத் தூய்மை செய்து கொண்டு அதில் சுத்தி செய்த பாதரஸத்தை விட்டு நான்கு சாமங்கள் சுருக்குப் போட வேண்டும். வெண்ணையைப் போல் கிடைக்கும் மருந்தை வழித்து எடுத்துக் கொண்டு, அதை கிழிபோல கட்டி, சூடனுடைய தீயில் காட்ட வேண்டும். ஆரயிலைக்குள் வைத்து வாட்டி, கரந்தைக் கவசம் கட்டி மூன்றுபுடம் போட வேண்டும். இவ்வாறு உருகும் மருந்து தங்கம் போல உருகி இருக்கும். சூதமணியை எடுத்துப்பார்த்தால் படிகத்தின் ஒளிபோல ஒளிரும். இதை உருக்கினால் கண்விட்டாடும். அதை உடைக்கும்போது தூளாக நொறுங்கும். குகையில் வைத்து உருக்கி நவலோகத்தைத் தீட்ட அதை முழுங்கிப்போடும். தனிப்பச்சை நிறம் சரக்கூட்டில் தங்கிவிடும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : ஒரு பணவெடை

அனுபானம் : பால், தேன்

விளைவுகள் : உடல் மாசற்ற சூரியனைப் போல் விளங்கும். பூரண தரிசனம் கிடைக்கும். ஏழுகோடி மந்திரமும் சித்தியாகும். சிவவித்தையைக் கைக்கொண்டோர்க்கு ஒருபொழுதும் சாவில்லை.

மற்றொரு முறை

வெண்கரந்தையைக் கொண்டு வந்து நன்றாக அரைத்துப் பாலுடன் சேர்த்து உட்கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : பாக்களவு

அனுபானம் : பால்

விளைவுகள் : முகம் சந்திரனைப் போல ஒளியுடன் விளங்கும். நரை மாறும் உடல் சிவந்து மின்னும். அமிர்தம் கிடைக்கும்.

கருப்புக் கரந்தைக் கற்பம்

கரந்தையைக் கருப்பு மூலிகையாகச் செய்து கொண்டு நிழலில் உலர்த்தி சூரணமாகச் செய்து கொள்ள வேண்டும். நாலில் ஒரு பங்கு அளவு கெந்தி பாதரஸம் இவற்றைக் கரந்தையுடன் சேர்த்து அரைக்க கறுப்பான பொடியாகக் கிடைக்கும். இந்தப் பொடியைச் சூரணத்திற் சேர்த்துப் பிசைந்து கொண்டு, தேன் சேர்த்து நன்றாக அரைத்துக் கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : சுண்டைக் காய் அளவு

விளைவுகள் : கோபம், தாபம் இவைகள் அணுகாது மயக்கம் நீங்கும். உடலில் துன்பங்கள் அணுகாது. கண் பார்வை கிடைக்கும். கிருமி போகும். சடத்தில் நறுமணம் உண்டாகும். தலை நோய்கள் நீங்கும். உடலில் உள்ள குற்றங்கள் நீங்கும்.

கொட்டைக்கரந்தைக் கற்பம்

கொட்டைக் கரந்தைச் சமூலத்தைக் கொண்டு வந்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். இதனை நன்றாக இடித்து நாலில் ஒரு பங்கு கற்கண்டைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய அளவு : வெருக்கடி

அனுபானம் : வென்னீர்

விளைவு : கைகால்களுக்கு வலிமை யுண்டாகும். சுவாசத்தில் ஏற்றங் காணும்.

மற்றொரு முறை

கொட்டைக் கரந்தையின் சமூலத்தைக் கொண்டுவந்து சாற்றைப் பிழிந்து எடுத்துக் கொள்ள வேண்டும். அயக்கரண்டியொன்றில் பாதரஸத்தை நான்கு சாமங்கள் சுருக்குப்போட, ரசமானது வெள்ளிக் கம்பியைப்போல மாறும். கொட்டைக் கரந்தையின் இலையை அரைத்துக் கவசமாகக் கட்டி லகுபுடம் போட வேண்டும். இவ்வாறு பத்துப்புடங்கள் போட வேண்டும். பின்னர் குகையில் வைத்து உருக்கி, நான்குக்கு ஒரு பங்கு தங்கம் சேர்க்க வேண்டும். தங்கத்தின் எடையளவு துத்தநாகம் சேர்த்துக் கல்வத்தில் போட்டு நொறுக்கிக் கொள்ள வேண்டும். அதைக் கரந்தைச் சாறு சேர்த்து மைபோல அரைத்துக் கொள்ள வேண்டும். மைபோல் அரைத்த விழுதை உலர்த்திப் பொடியாகச் செய்து அதனெடைக்குச் சமஅளவு கெந்தியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கெந்தகத்தை ஓட்டில் வைத்து நன்றாக உருக்கிக் கொண்டு, முன்னர் செய்து வைத்த பொடியை வறுத்து இதனுடன் சேர்க்க வேண்டும். பின்னர் இவற்றைக் கல்வத்தில் கொட்டி எட்டில் ஒருபங்கு அளவு தாளகமும், மனோசிலையும் சேர்த்துக் கரந்தையைச் சாற்றாலரைக்க வேண்டும். இதை உலரவைத்துப் பொடியாகச் செய்துகொள்ள வேண்டும். இதை மேறில் ஏற்றி, சிலாக்கிட்டு, சிவந்து பதமாக வந்தபின் பார்த்து இறக்க வேண்டும்.

விளைவுகள் : சூரியனின் கதிர்போல தேகம் ஒளியோடு விளங்கும். உலோகத்தில் ஆயிரத்துக் கொரு பங்கு சேர்த்தால் பத்தரை மாற்றாக இருக்கும். பதினாறு வயது போன்ற தோற்றம் உண்டாகும். இதை இரசவாதம் செய்து பார்த்தால் நீண்ட காலம் வரை நிலைத்திருக்கும்.

செங்கரந்தைக் கற்பம்

செங்கரந்தையின் கொட்டையின் சாறு இரண்டுபடி எடுத்துக் கொள்ள வேண்டும். நாகம் எட்டுபலம், வெண்காரம், நவச்சாரம் பலம் ஒன்று; இவற்றைப் பொடி செய்து இலுப்பை நெய்விட்டு உருக்கிக் கொண்டு, வெண்காரப் பொடியை மேலேத் தூவிக் கொள்ள வேண்டும். இதை எடுத்து வைத்துள்ள சாற்றில் சாய்த்த பின்னர், தகடாகத் தட்டிக் கொண்டு, கல்லுப்பு எட்டுப்பலம் எடுத்து செங்கரந்தைச் சாற்றில் கலக்கி, தகட்டினில் தடவ

வேண்டும். அதைக் கல்லில் வைத்துப் புடத்தைப் போட்டு ஆறவைத்துக் கல்வத்ததில் இட்டு நன்றாக அரைத்து வில்லையாகத் தட்டி வைத்துக் கொள்ள வேண்டும். ஒன்பது எருவில் வைத்துப் புடம் போட்டு, கனல் குளிர்ந்த பின்பு அதை எடுத்து, கல்வத்தில் சாறு கொண்டு நன்றாக அரைத்துப் பார்த்தால் சிவப்பு நிறமாகும். இதற்கு நாலில் ஒரு பங்கு சூதம் சேர்த்து வெண்காரப் பொடி, மனோசிலை இவைகளைச் சூதத்தின் எடையளவு சேர்க்க வேண்டும். பின்னர் ஐந்து லகுபுடம் போட்டெடுக்க வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

விளைவுகள் : சுவாசம் உள்ளடங்கும், சாவு வராது, வெள்ளியில் நூற்றுக்கொருபங்கு சேர்க்க பத்தரை மாற்றுத்தங்கம் கிடைக்கும்.

கரிசாலைக் கற்பம்

109. கேளப்பா கரிசாலை குப்பை மேனி
 கெடியான கரந்தையொடு வல்லாரை நீலி
வாளப்பா பொற்றலையுஞ் செருப்ப டியினோடு
 வகையாக நிழலுலர்த்தா யுலர்த்திக் கொண்டு
தாளப்பா இடித்துநன்றாய் சூரணமே செய்து
 சாதகமா வெருக்கடிதான் தேனி லுண்ணு
தேளப்பா கொட்டியதோர் வேகம் போலச்
 கணத்திலே காயசித்தா மந்திசந்தி யுண்ணே (276)

110. உண்ணப்பா மண்டலந்தா நோய்கள் மூன்று
 உத்தமனே யுதிரத்திற் கிருமி போகும்
கண்ணப்பா பவழம்போல் சிவந்தி ருக்குங்
 காயமெல்லாஞ் சம்பழத்தின் வாசனை வீசும்
விண்ணப்பா யந்தரத்தில் மீன்க ளெல்லாம்
 வெருளாமற் பகற்காணத் தோற்று விக்கு
மண்ணப்பா தன்னிதிகள் தோற்றுந் தோற்றும்
 வாய்த்திருந்த தலமாறும் வெளியாய்ப் போமே (277)

-(போ . சூ.மெ)

111. பாரப்பா யிதுகடந்த பின்பு நீதான்
பரிவான கரிசாலை குப்பை மேனி
சேரப்பா சிறியசெருப் படியி னோடு
தெளிவாக கருப்பாக்கி சமனாய்த் தூளை
வாரப்பா தேனதிலே கிண்டி வைத்து
மைந்தனே தினங்கழஞ்சு கொண்டு வாநீ
தாரப்பா யிருபதுநாள் கொண்டா யானால்
தசையிலுள்ள தோசமெல்லாஞ் சாடிப் போமே (24)

112. சாடுமே சுயம்பட வாக்கில் வாலை
சகலநூற் கருவெல்லாம் தானே தோன்றும்
வாடுமே தேகமெல்லாம் பொன்னிறம் போல
மன்மதன் போல கண்களிரண் டும்சிவப்பு தானே
தேடுமே பெண்மேலே மோக மப்பா
தெரிந்துகொண்டு மாயத்தில் சிக்க வேண்டாம்
ஓடுமே[1] சிலேட்டுமந்தான் கீழே நோக்கும்
உதிரத்தில் வாயுவெல்லாம் ஒழிந்து போமே (25)

(கா.க)

கருங்கரிசாலைக் கற்பம்

113. தின்ற கரிசாலை தேகந் திரைபோக்கும்
தின்ற கரிசாலை சிறந்த நரைபோக்கும்
தின்ற கரிசாலை தேகஞ் சிறுபிள்ளை
தின்ற கரிசாலை சிதையாதிவ் வாக்கையே (22)

(தி.க.மு)

கரிசாலை, குப்பை மேனி, கரந்தை, வல்லாரை, நீலி, பொற்றலை, சிறுசெருப்படி ஆகியவற்றைக் கொண்டு வந்து நிழலில், உலர்த்தித் தூளாகச் செய்து கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

1. துணுமே துரும்பாகும் பெண்ணரவங் கடித்தால்
சொல்லிவிட்டேன் சித்தியெல்லாம் விழலாய்ப் போமே.

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : வெருக்கடி

அனுபானம் : தேன்

விளைவுகள் : திரிதோஷம் என்று சொல்லப்படும் வாதம், பித்தம், கபம் இவற்றால் வரும் நோய்கள் தீரும். வயிற்றில் உள்ள கிருமிகள் அழியும். கண்கள் பவழம்போல் சிவந்து தோற்றமளிக்கும். உடலில் எலுமிச்சம் பழத்தின் மணம் வீசும்.

கரிசாலை, குப்பைமேனி, சிறு செருப்படி இவற்றைச் சமமாகச் சேர்த்துக் கொண்டு தூளாகச் செய்து கொள்ள வேண்டும். இதைத் தேன்விட்டு நன்றாகக் கிண்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : இருபது நாட்கள்

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : ஒரு கழஞ்சு

விளைவுகள் : தசையில் உண்டாகும் நோய்கள் நீங்கும். சிலேட்டுமத்தால் ஏற்படும் நோய்கள் தோன்றாது. வயிற்றில் தோன்றும் வாயுக்கள் ஒழிந்து போகும். உடல் முழுமையும் பொன்னிறம் போலாகும். கண்கள் இரண்டும் சிவப்பாகக் காட்சியளிக்கும். பெண்கள் மேல் மோகம் உண்டாகும் .

நீக்க வேண்டியவை : பெண் போகம்

கரிசாலையால் உடலில் தோன்றும் மூப்பு நீங்கும். நரையைப் போக்க வல்லதுடன், சிறு வயதினரின் உடல்போல இளமையான தோற்றத்தை யளிக்கும். குரல் இனிமையுடன் விளங்கும்.

பொற்றலை கையான்தகரைக் கற்பம்

114. சொன்னதோர் பொற்றலையின் சாறு வாங்கி
 செம்புதனைத் தகடுதட்டி தோய்ப்பாய் நின்றாய்
பண்ணவே காய்ச்சியே பதினோ ருக்கால்
 பருவமுடன் தோய்க்கவெல்லாம் அதறாய் வீழம்
அன்னதோ ததறெல்லாம் அரைத்து மைபோல்
 அடவாக வேசான வில்லை தட்டி
பொன்னதோ ரண்டோடு பொடித்து மூடி
 பொருந்தகலி லாயிரமா மெருவில் போடே. (95)

115. எருவிலே புடமிட்டு ஆற விட்டு
எடுத்தாக்கால் குருபற்ப மென்று பேரு
அருவிலே அணுகின்ற சூதங் கட்டும்
அணுகினால் மனதினிலே ஏம மாகும்
பொருவிலே பொற்றலையின் யிலைய ரைத்து
பேரான பாக்களவு பணவெடைதான் பற்பம்
மருவிலே மண்டலந்தா னுண்டா யானால்
மாணிக்க ஒளிபோலே வடிவு மாமே. (96)

-(போ. க.வி)

116. திருவுண்டாம் ஞானத் தெளிவுண்டா மேலை
யுருவுண்டா முள்ளதெல்லா முண்டாங் - குருவுண்டாம்
பொன்னாகத் தன்னாகம் பொற்றலைக்கை யாந்தகரைத்
தன்னாகத் தின்னாகந் தான்.

- (தே. வெ)

117. பொற்றலைக்கை யாந்தகரை பொற்காப்புக் கட்டுபொன்னின்
பொற்பாகும் பூக்கழஞ்சு பொற்பொடியின் - நித்தியமுங்
குன்றியிடை கொள்ளக் குமரவ னாகு
மன்றுதனுப் பொன்னிறம்போ லாம். (72)

118. போலாக் கருத்தனவும் பொன்னிறமாம் ரோமமது
சேலாய் வெளிறிச் சிவக்குமே - பாலான
தஞ்சங்கம் பென்னோ டருந்தத் தனுவிறுகுந்
தஞ்ச மொருவருடந் தான் (73)

119. தானாங்க தும்புகொளச் சந்தமு மிப்படியே
வேனோ ருடல்கருப்பா மென்னலே - கோனான
செங்கொட்டை தன்னிற் செளித்தகருப் பாமிதுவே
தாங்கிட்டில் வெள்ளைக்கருப் பாம். (74)

120. கருப்பாற் திலதமிடுங் கரிக்கட்டி கொள்ள
வெறுப்ப நரைகளுக்கு வேரி - லுறுப்பா
மொருவருட மூன்றுண்ண ரோமங் கருக்குந்
தெளிவாய் கரிப்பான்தன் நீர். (75)

121. சீரமன்ன முண்ணத் திரைபோய் நரைநீக்குங்
கூரியதா மிரதங் கூட்டியே - யாரியன்போ
லாக்குமிந்த மூலியொன்றி லன்பாம் புடம் போட்டுச்
சேக்குமவர்க் குண்டாந் திரு. (76)

122. திருந்திய செந்தூரத் தின்மூன்று குன்றி
யருந்தில் நரைதிரைபோ மாறில் - மருந்தெல்லா
மொன்றிலே சாதிக்க வோராண்டில் நீங்காமல்
தின்றாற்(குச்) சித்திக்குந் தேன். (77)

123. தேனிலே செந்தூரஞ் தின்னச் சடமிறுகு
மானெய்யிற் காய மழகுதரு - மூனிலே
பற்றும் படிகையாந் தகரை பகர்ந்தபடி
நற்றியுண்ணுந் தானவனே நாம். (78)

124. நாமகளும் கைவசமோ நாகவிட மெருவது
சாவதில்லை.. நித்தியமுந் தப்பாது - தாமு
முருங்கைப்பிசி னோடுண்ண முத்திவெகு வாகுஞ்
சுருங்கவிடை நீங்கிச் சொல். (79)

- (சி.வெ)

பொற்றலையின் சாற்றை எடுத்துக் கொள்ள வேண்டும். செம்பைத் தகடாகத் தட்டிக் கொண்டு காய்ச்சிய பொற்றலையின் சாற்றில் பதினோரு முறை தோய்த்தெடுக்க வேண்டும். அப்பொழுது கிடைக்கும் 'அதற்றைச்' சேகரித்து மைப்போல் நன்றாக அரைத்துக் கொண்டு, வில்லையாகத் தட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். அண்ட வோட்டினைப் பொடித்து வில்லையை மூடி அகலில் வைத்து ஆயிரம் எருகொண்டு புடம் போட வேண்டும். இந்த மருந்திற்குக் குருபற்பம் என்று பெயர்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்
உண்ண வேண்டிய மருந்தின் அளவு : பணவெடை
அனுபானம் : பொற்றலையின் இலையை அரைத்த விழுது
அனுபானத்தின் அளவு : பாக்களவு
விளைவுகள் : மாணிக்கத்தின் ஒளியைப் போன்று உடல் சிவந்து விளங்கும். இதன் அருகில் சூதத்தைக் கொண்டு சென்றால் சூதங்கட்டும்.

பொற்றலைக் கையான் தகரையின் சமூலத்தைப் பக்குவமான கற்ப மருந்தாகச் செய்து உண்ண வேண்டும்.

விளைவுகள் : உடல் பொன்போலாகும். செல்வம் பெருகும். ஞானத்தெளிவு உண்டாகும். தோற்றம் அழகுடன் விளங்கும்.

கருவீழிக் கற்பம்

125. சொல்லான கருவீழி மலைதோறு முண்டு
சூட்சமாய் சாறுபடி துவைத்து வாங்கி
மல்லான நாகத்தை வுருக்கிச் சாய்க்க
மாசற்று கண்விட்டே ஆடும் பாரு
வெல்லான தங்கமிட்டுச் சூத மிட்டு
மிடுக்கான சிலைகெந்தி வீரங் காரம்
நல்லான நாகத்தில் நான்கி லொன்று
நறுக்கியே நல்வேளை சாற்றி லாட்டே. (178)

126. ஆட்டியே வில்லைதட்டி அகலி லிட்டு
அசகாமல் மூடியே சீலை செய்து
கூட்டியே கெசபுடமாய்ப் போட்டெ டுக்க
கெடியான மாதளம்பூ நிறமு மாகும்
வீட்டியே வீசமெடை வீழியினி லுண்ணு
மெருகவே மேனியதும் திடம தாகும்
பூட்டியே அடுக்காறும் புகுந்து வந்து
பொன் மலையில் பூரணத்தில் புக்க லாமே. (179)

127. புக்கவே கருவீழி தனைய ரைத்து
பொருந்தவே பாக்களவு பாலிற் கொள்ளு
தக்கவே உகந்தவரை சடந்தா னிற்குஞ்
சமாதியில் இருக்கையிலும் மூச்சா டாது
பக்கவே பதினாறு வயது மாகும்
பாழையா முன்தேகம் சாவு போச்சு
நிக்கவே நிலையாறு தலங்க ளெல்லாம்
நிச்சயமாய் நினைவுரைக்கும் அறிவு மாமே (180)
- (போ.க.வி)

கருவிழிக் கற்பம்

கருவீழியின் சாறு ஒருபடியளவு எடுத்துக் கொள்ள வேண்டும். அந்தச் சாற்றில் நாகத்தை உருக்கிச் சாய்க்க சுத்தியாகும். நாகத்தில் நான்கில் ஒரு பங்கு அளவுக்கு தங்கம், சூதம், மனோசிலை, கெந்தி , சவ்வீரம், வெண்காரம் ஆகியவற்றைச் சேர்த்து நல்வேளையின் சாறுவிட்டு நன்றாக அரைக்க வேண்டும். அரைத்த விழுதை வில்லைகளாகத் தட்டி அகவில்வைத்து மூடி சீலைசெய்து கெசபுடம் போட்டு எடுக்க வேண்டும். மருந்து மாதளம்பூவைப் போன்று சிவந்த நிறத்தில் கிடைக்கும்.

உண்ண வேண்டிய கால அளவு : வீசமெடை

அனுபானம் : வீழிச்சாறு

விளைவுகள் : உடல் வலிமையானதாக மாறும். கருவீழியை அரைத்துப் பாலில் கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : பாக்களவு

அனுபானம் : பால்

விளைவுகள் : நீண்ட நாட்கள் உடல் அழியாது இருக்கும். சமாதியில் இருக்கும்போது மூச்சாடாது. பதினாறு வயதுபோல் தேகம் தோற்றமளிக்கும். சாவு அணுகாது. ஆறுதலங்களும் நினைவுரைக்கும். அறிவு உண்டாகும்.

கிளிமூக்கு மரக் கற்பம்

128. போக்கான கிளிமூக்கு மரம தொன்று
புகழான கிளிப்போல காயுங் காய்க்கும்
வாக்கான இலையதுவு மரசிலைப் போற் காணும்
மைந்தனே யிதனுடைய பழத்தை யுண்ணு
நோக்கான கெவுனவழி சுறுக்கா யோடும்
நொடியிலே காயசித்தாஞ் சட்டை கக்கும்
போக்கான பூப்பூத்த மற்றாநாள் பழமாம்
புண்ணியமாஞ் சித்தருக்கு வைத்த வாறே.[1] (287)

129. வைத்தவொரு மருந்தெடுத்து அந்தி சந்தி
வகையாக மண்டலந்தா னுண்டா யானால்
நைத்ததொரு சடமிறுகி தங்கம் போலாம்
நாடியெல்லாம் பிகுவாகி அழுந்துந் தேகம்
கைத்ததொரு பித்தமறுங் கபத்தைச் சாடும்
கடலான ஆறுதலாத் திறந்து போகும்
மெய்த்ததொரு சரசோதி நிர்த்தஞ் செய்வாள்
வினைபோல ஒளியாகும் வாக்குத் தானே. (288)

- (போ.சூ.மெ)

---

1. வடிவான கிளிமூக்கு மரம தொன்று
மாஉசத்தி யாயிருக்கும் மகத்தான தூலம்
இடிவான இலையதுவும் அரசிலைபோ லிருக்கும்
மேற்றமாம் பூபூத்த மத்தநாள் பழமாம்
படிவான பழத்தையுண்டால் சாத்திர சித்தி
பண்பான கேசரத்தி லாட லாகும்
நெடிவான பழமரிது கிடைக்கா விட்டால்
நொந்தங்கே சமாதியுற்றால் நேருந் தானே (97)

- (போ.க.வி)

தானென்ற கிளிமூக்கு மரம தொன்று
சாதகமாய் கிளிபோலே காயுங் காய்க்கும்
வானென்ற யிலையிதுவு மரசிலைபோற் கானும்
மைந்தனே யிதனுடைய பழத்தின் நாக்கால்
கோனென்ற கவனமெழுங் காயசித்தி யாகுங்
கொடியதொரு பழத்தநல் பழ(மு மாகும்)
தேனென்ற பழத்தையுண்ணு சாமத்திற் சித்தி
சிவயோக வீதியெல்லாந் தெரியும் பாரே (23)

- (கா.க)

கிளிமூக்கு மரத்தின் பழத்தையுண்டால் கௌனவழி சுறுக்காக ஓடும். காயசித்தி கிடைக்கும். சட்டை கக்கும்.

கிளிமூக்கு மரத்தின் மருந்தை எடுத்து அந்தி சந்தி இருபொழுதும் உண்டுவர வேண்டும். (மருந்து என்று சொல்லப்பட்டுள்ளதேயன்றி செய்முறை சொல்லப்படவில்லை)

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

விளைவுகள் : உடல் இறுகி. பொன் போலாகும். நாடியெல்லாம் உறுதியாகும். பித்தம், கபம் ஆகியவை நீங்கும். ஆறுதலங்களும் தோற்றும்.

குமரிக் கற்பம்

130. வற்றாக் குமரிதன்னை வற்றலென வுண்ணினுஞ் (சீர்
முற்றாக் குமரியென மூளுமே - நாற்றாக் குஞ்
திண்மையு மில்லாத் தெரிவையரே யானாலு
முண்மைமிகு நாளுமா யுள் ()

- (தே.வெ.)

131. குமரியுடன் கடுக்காய் கூறாகக் கூட்டியே
அமுரியுடன் தின்றா லன்றே மலமறும்
உமுரியாம் பிஞ்சு உள்ளே விசிறிடும்
அமுரியாங் காய மழியாது தானாமே. (18)

132. தானாமிக் கற்பம் தனியொரு மண்டலம்
மானா மலமும் மளவற்ற வாமமும்
ஊனாய் வளர்ந்தே வுறுதிப்படுந் தேகம்
நானா மிதைத் தாண்டித் தானூறு கொண்டிடே. (19)

- (தி.க.மு)

132. தானாமிக் கற்பம் தனியொரு மண்டலம்
மானா மலமும் மளவற்ற வாமமும்
ஊனாய் வளர்ந்தே வுறுதிப்படுந் தேகம்
தானா மிதைத் தாண்டித் தானூறு கொண்டிடே. (19)

- (தி.க.மு)

சிவப்புக் கற்றாழை

133. கொள்ளவே சிவப்பான கற்றாழை தானுங்
கொண்டுவர மண்டலந்தா னந்தி சந்தி
விள்ளவே தேகமது கஸ்தூரி வீசும்
வேர்வைதான் தேகத்திற் கசியா தப்பா
துள்ளவே நரைதிரைக ளெல்லா மாறுஞ்
சோம்பலென்ற நித்திரையுங் கொட்டாவி யில்லை
கள்ளவே காமமது வுடம்பி லூறுங்
கண்களோ செவ்வலரிப் பூப்போ லாமே. (281)

- (போ.சூ.எ)

134. சாதிக்க சிவந்துநின்ற கற்றாழை தன்னைச்
சாதகமாய் மண்டலந்தா னுண்டா யானால்
பேதிக்க காயமது சிவந்து போகும்
பேரான சட்டையொன்று கக்கி போகும்
வாதிக்க யிதின்சோறு ரசத்துக் கப்பா
வாகாகக் சுருக்கிடவே கட்டிப் போகும்
போதிக்க பாஷாண மெல்லாங் கட்டும்
புகழான கெவுனமெழுஞ் சாதித் தோர்க்கே (33)

- (கா.க)

135. உண்டுமே கடுக்காயைத் தள்ளிப் பின்பு
முகப்பான சிவப்பாகும் கற்றாழை தன்னை
மண்டுமே மண்டலம்தான் கொண்டா யானால்
மகத்தான திரிதோஷஞ் சாடிப் போகும்

முண்டுமே முன்கொண்ட வுப்பு யெல்லாம்
முறிந்துமே சடத்தில்நில்லா வெளியாய்ப் போகும்
கண்டுமே சிவப்புகற் றாழை தன்னைக்
கருதியே தின்றாக்கால் சாவுப் பொய்யே. (28)

136. எட்டாத செங்குமரி கிடையா விட்டால்
ஏற்றமாம் வரிக்குமரி சோறு தானுந்
தட்டாத சதிர்க்கள்ளி காய்தா னஞ்சு
தனித்திரண்டு மமுரியிலே குழைத்துக் கொள்ளு
வெட்டாத மண்டலந்தான் விரையக் கொள்ளு
வியந்துடம்பில் நின்றபிணி விழுந்து போகும்
கட்டாத முன்சொன்ன கற்பந் தானுங்
காலமெல்லாங் கொண்டபின்பு கருதிக் கேளே. (33)

137. கருதியே கருவேம்பு முருங்கை யீர்க்கு
கற்கண்டு சுக்கோடு நாலுந் தானும்
மருதியே யரைப்பலந்தான் நிறுத்துக் கொண்டு
அரிந்துமே யிரண்டுயீர்க்கு வறுத்துப் போடு
நருதியே யிரண்டையுந்தான் நறுக்கிக் கொண்டு
நல்லதண்ணீர் தனிற்காய்ச்சி நாலி லொன்நாய்
மருதியே மாலையிலே கொள்ள வேதான்
மயக்காமொடு தியக்கங்கள் மாறிப் போமே (34)

- (போ.க.வி)

குமரிக் கற்பம்

உலர்ந்து நீர்வற்றாத கற்றாழையை அல்லது காயவைத்து வற்றலைப்போல உலர்ந்த கற்றாழையை உட்கொள்ள வேண்டும்.

விளைவுகள் : வயதில் மூத்த பெண்களுக்குப் பருவக் குமரியரைப் போல இளமையான தோற்றம் உண்டாகும். நல்ல உடற்கூறும் உடல் உறுதியும் இல்லாத பெண்களாக இருந்தாலும் ஆயுள் அதிகமாகும்.

கற்றாழையுடன் கடுக்காயையும் சேர்த்து உட்கொண்டு வரவேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

விளைவுகள் : மலமறும், உடல் அழியாது, உறுதியுடன் விளங்கும்

சிவப்புக் கற்றாழை

'போகர் சூஸ்திர மெழுநூறில்' செய்முறை எதுவும் சொல்லப்பட வில்லை.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம் (அந்தி, சந்தி)

விளைவுகள் : உடலில் கஸ்தூரியின் வாசனை வீசும். வேர்வை தோன்றாது. நரை, மூப்பு முதலானவைகள் மாறி இளமையான தோற்றமுண்டாகும். தூக்கம், கொட்டாவி இவை அணுகாது. உடல் பெண் போகத்தை நாடும், கண்கள் சிவப்பாகத் தோற்றமளிக்கும்.

'காய கற்பத்திலும்' செய்முறை எதுவும் கூறப்பட வில்லை.

உண்ணவேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

விளைவுகள் : உடல் சிவப்பான நிறத்தில் தோற்றமளிக்கும். சட்டை ஒன்று கழன்று போகும். மேலும், இதன் சோற்றைக் கொண்டு பாதரசத்தைச் சுருக்கிட கட்டிப் போகும். பாஷாணங்கள் அனைத்தும் கட்டும்.

செங்குமா அல்லது வரிக்குமரியின் சோற்றையும், சதிர்கள்ளியின் காய்கள் ஐந்தையும், தனித்தனியாக அமுரியில் குழைத்துக் கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

விளைவு : உடலில் உள்ள அனைத்து நோய்களும் நீங்கும்.

பின்னர், கருவேம்பு, முருங்கை யீர்க்கு, கற்கண்டு, சுக்கு இவை நான்கையும் அரைப்பலம் நிறுத்துக் கொண்டு, இரண்டு முருங்கை யீர்க்கை வறுத்த பின்னர் சேர்த்துக் கொள்ள வேண்டும். கஷாயத்தை நாலில் ஒன்றாகக் காய்ச்சி மாலையில் உட்கொள்ள வேண்டும்.

விளைவு : மயக்கத்தோடு வரும் தியக்கங்கள் மாறிப் போகும்.

கொல்லன் கோவைக் கற்பம்

138. கொல்லன்கோ வையெனவே கூறிடு நாமந்தான்
சொல்லுங்கோ தென்பாகத் தூரெடுத்து - மெல்ல
நறுக்கி நிழலுலர்த்து நற்கிழங்கின் நூழைச்
சிறுக்கிசிறுநீருடனே தின். (95)

139. தின்னுந்தினங் கழஞ்சு செண்பகப்பூ நாற்றமதா
முன்னியொரு மண்டலந்தா னுண்ணவே - நன்னுதலா
யாறுதிங்க டன்னி லரவுகடித் தால்சாம்
நூறுசன்னி வாதநொறுக் கும். (96)

140. குமரனா மாண்டிரண்டில் கோமனா மூன்றில்
திமிரமது நாலில் செகமனைத்துந் - தமக்கென்று
தூரவிழி யஞ்சதனில் தூரந் தெரியுமது
மேருவுடன் வேண்டாகு மே. (97)

141. வேண்டாகு மாறதனில் விண்ணெழுப்பு மெய்யெழி
லுண்டாம் பவசித்த யோகிகளைக் - கண்டேதான்
பங்கு தனைக் குழைத்து பகர்ந்த - வனுகந்து
யங்குந்து வாவென்ப தாம். (98)

142. நோன்பாய் மண்டலங் காப்பிலி பதனால்
வான்பாயுங் குணங்கண்டே வாழ்த்தினான் - போந்தேனே
ஆகாச மாங்கெருட னென்றே பறைந்தான்
சாகாக் கொல் லன் கோவை தான். (99)

143. தாயாகுந் தந்தையுமாய்த் தாாகுஞ் சுவாமியதாய்
யேயா திருப்பேருங் செப்பினான் - காயால்
கிழங்குளி ரதத்தைக் கிண்டி யடைத்தே
யழங்குட்புட முப்பதுவைப் பாம். (100)

144. வைத்திருக்கும் சூத மன்றுக்கு மாயாது
சித்த ரசக்குளிகை செய்யவே -பெத்தமாங்
காயக் கிலேசங் கடப்பார் குளிகையினால்
மாயச்சின் னங்கடத்து வார். (101)

- (சி.வெ.)

கொன்றைக் கற்பம்

145. கொன்றைக் கொழுந்ததனைக் கொண்டுவரச் சுக்கிலமு
நன்றதாய் மேனோக்கு நற்பூவை - தின்றவர்க்குக்
காய மிகவிலுகுங் காக மெனவிளங்கி(யி) க்
காயில் மயிர்கருக்குங் காண். (112)

146. கருக்கும் படிச்சதையால் காலனையு மீட்குஞ்
சிறக்கவினர கொள்ளத் தினவாம் - பிரிக்கு
மிலைச்சா றதனை விரதம் வலியுங்
குலைபோகும் பட்டை குணம். (113)

147. குணமாந் தயிலம் குமரகண்டன் போக்கும்
பணமாம் புணர்போகம் பண்ணும் - துணையாகு
போரிற் புரிவார்க்குப் புத்தே னமுதமாம்
வேரிற் பலனா மிவை. (114)

148. இவையெடுப் பத்திங்க ளேழிலா திரையி
லவைகாப்புக் கட்டி வேர - நவநாள்
குளிசமாய்க் கட்டிமுடி கொண்டிருக்க மாந்தன்
சழிவனொரு வன்றனக்குத் தான். (115)

149. தானாயும் பொற்பூவைத் தான்கழஞ்சு மண்டலங்கொள்
நீரா வியாதியெலாந் தீருமே - நேரா
தொருவருடம் கொண்டார்க்கு ரோமங் கருக்குந்
திருவ திருவருடந் தான் (116)

150. தாரான கொன்றைச் சதையருந்தி லோர்குன்றி
சேரா தவற்கே திலமிளவா - யாராய்ந்
தொருவருடங் கொண்டா லுடல்தங்க மாகும்
இருவருடங் காயசித்தி யென். (117)

151. சித்திக்கு மத்தனையுஞ் சென்ப வனல்நீங்கும்
சத்திசுரோ ணிதத்தான் தார்கொன்றை - நித்தியலும்
பூசிமுடித் துண்டு புணரத் துணையாகு
நேசித்தான் வைத்த நெறி. (118)

152. நெறியோ மரவு மவனிழலைத் தீண்டில்
முறிவா குவரிவிட மீள்கச் - செறிவா
யருந்தியே கொண்டிடத் தானப்பூச் சென்னி
யிருந்தா லொருபே ரிடு. (119)

153. இடும்போர் கடுக்கையென விணுரைத் தானா
மடும்போ திலைநீரி லாகுமே - படும்போது
பட்டையினால் மத்திப் பழம்பிசினிற் சிங்கிலிசே
யெட்டுமுட்டை யாதியதா மென். (120)

154. என்னுங் குளிகைதனி லிந்திராநீ லங்கொடுக்கத்
தன்னுடலச் சம்புக் கினிபோலாம் - மன்னியதோர்
கெந்தக மேவியிடிற் கேடிலாப் பொன்னிறமாஞ்
சந்திரனாம் வெண்கனகத் தால். (121)

155. தாலம் புகழ்காந்தம் தானருந்து நற்குளிகை
யாலம் பழம்போல வாகுமே - ஞாலமதி
லித்தயிலத் தாலே யிதன்ம கிமைதன்னைப்
பெற்றவரே யீசனென்னும் பேர். (122)

(சி.வெ)

பொற்கொன்றைக் கற்பம்

156. பாரென்ற பொற்கொன்றை பூச்சாறு வாங்கி
பாங்கான மனோசிலைக்குச் சுருக்குப் போடு
நாரென்ற நால்சாமஞ் சுருக்குப் போட
நலமான பவழம்போ லிருக்கிக் கட்டும்
நேரென்ற காரிய முருகும் போது
நினைவாக காற்றைத்தேடி யலைந்தா யானால்
நேரென்று நெருங்கியே தூளாய்ப் போகும்
நேர்த்திதற்கு நாலொன்று தங்கம் போடே (147)

157. தங்கத்தி னெடைபோடு லிங்கந் தன்னைத்
தங்களடை சுத்திசெய்த கந்த கந்தான்
அங்கத்தின் கற்றாழஞ் சாற்றா லாட்டி
அகலிலிட்டுப் புடம்போட களங்க மாகும்
பங்கத்தின் ரவிமதியி லிருபதுக் கொன்றுப்
பாங்காக மாற்றேழு பரிந்து காணும்
வங்கத்தின் வேதையென்றால் புடஞ்செ யந்தான்
மறவாதே மண்டலந்தான் பானத் துண்ணே (148)

158. உண்ணவே லகிரியது உள்ளே மீறி
உற்றாறு தலங்களெல்லாம் உருவாய்த் தோற்றும்
வண்ணவே வாசிசத்தும் நழுவி டாது
மறவாதே பகலிரவு வாசி மாட்டு
துண்ண வ காமமெ றபேயைத் தள்ளு
சாதி த தனுபோகந் துண்ணும் நேசம்
கண்ண வ சேர்முறையுள் கருவைப் பாரு
கலந்தோம ந்தாக்கால் கசட னாச்சே 149

- (போ.க.வி)

கோடங்கிழங்கு கற்பம்

159. கோடன் கிழங்குநீர் கொண்டிரத மத்தித்துக்
காடிகொண்டு தானலம்பிக் கப்பரையில் - மூடிவெயில்
வைத்தெடுத்து முப்பா னிப்படியே மத்திக்க
பெத்தனல் சபிக்கும் பின். (80)

160. பின்னிரத கிங்கியின்றி பெட்டியதா யுள்ளடைத்தே
யுன்னுங் கிழங்கதனி லுள்வைத்து - மன்னியதாய்
சீலைமண்ணைச் செய்து தெறுகுகையில் வைத்தூத
யேலும் ரதகுளிகை யென். (81)

161. கையெனும் வங்கமதிற் காய்ச்சியிந்த நீர்சாய்த்தே
வுய்யவுருக் கிக்குளிகை யுள்ளிட்டுச் செய்ய
விரும்பவிலை கூட்டாரத் தேகிவிழும் முன்னே
தரிப்பாஞ் சுரபி குளிகை தான். (82)

162. தாரமாம் வங்கந் தனைப்பாதி தன்மத்திற்
சேரவே நாலிலொன்று சித்தர்க்கா - மூரின்மேற்
றேதாந்த மாகத் திரிந்தருந்தக் கைவசமாங்
காசா னா(ச) விட்டாற் கதி. (83)

163. கதியாங் குளிகை கதுப்பிருக்கக் காயம்
புதிதாய்ப் புதிதாய்ப் புதிதாய்ப் - பதிதாவு
மிந்திரன் சாப மிதற்குண்டா முண்டானால்
தந்திரமென் றேயுரைத்தார் சார். (84)

164. சாப மகன்றிடங் கோரந்தான் லட்சமுருக்
கோயில்லா துச்சரித்துக் கொடாக்கால் - சாபம்போ
மென்றான் இருந்தன் னியல்பை யறிந்துணர்ந்து
நின்றார்க் கிவைபலிக்கு நேர். (85)

சித்திர மூலக் கற்பம்

சிவப்பு சித்திரமூலக் கற்பம்

165. உசத்தியாம் சிவப்புசித்திர மூலந் தன்னை
உருகிடித்துப் பஞ்சாக வைத்துக் கொண்டு
கசத்தியாம் காரீயஞ் சட்டியிலே போட்டு
கலரிதுக்குள் பதினாறுக் கொன்றி ணங்க
தசத்தியாஞ் சட்டியிலே உருக்கிக் கொண்டு
தாக்கிடுவாய் வடியுப்பு முன்னே தானுங்
குசத்திய மாதண்டைக் கழியி னாக்கால்.

166. தானென்ற சிவப்புசித்திர மூலந் தன்னை
தயங்காதே போட்டுமே கழியால் கிண்டி
நானென்ற யிப்படித்தான் நான்கு சாமம்
நலமாக தண்டைக் கழியால் மத்தி
தேனென்ற செந்தூரம் ரவிதான் தோற்குஞ்
சிறப்பாகக் கைமுறையாய்ச் செய்து பாரு
ஆனென்ற செந்தூர மாயிரத்துக் கொன்று
மாயிட தேத்திதனில் போடு மாச்சே (162)

167. ஆச்சுதே மண்டலந்தான் வீசமெடைத் தூக்கி
ஆவின்நெய் தனிலுண்ண ஆண்மை மெத்த
ஏத்துதே யிடிவிழுந்தால் சடத்தின் மேலே
எழும்பியே பந்து போலப் பாலே வீழும்
போச்சுதே ஆகாச கெவுன மோடில்
பளிச்சென்று மின்னலுடன் ஒளிபோல் காணுங்
காச்சுதே வாதமடம் வங்கக் கம்பங்
கட்டுதற்கு மதயானை சூத மாச்சே (163)

168. சூதத்தை வங்கமென்ற மரத்திற் கட்டி
துப்புரவாய்ப் பரிவான விலங்கை மாட்டி
தீதத்தை கந்தகத்தை தீனி யூட்டிச்
சிறப்பாகப் பலகாயஞ் சிலையுங் காரம்
வேதத்தை வெள்ளியென்று குடிலச் சென்று
விடுபட்டு பத்துமாய் வெளிகே சென்று
காதத்தைக் கடையறீர் சென்றேரி வித்துக்
கனமான சிவ சொத்தை நீத்திட் டாரே (164)
- (போ.க.வி)

சிவப்பு சித்திர மூலத்தைப் பஞ்சு போன்று நன்றாக யிடித்துக் கொண்டு காரீயச் சட்டிக்குள்போட்டு நன்றாகக் கலர வேண்டும். இதனுடன் வடியுப்பைச் சேர்த்துக் கொண்டு நன்றாக நான்கு சாமங்கள் கடைந்தால் செந்தூரம் கிடைக்கும். இவ்வாறு கடைவதற்கு ஆதண்டைக் கழியைப் பயன்படுத்த வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : வீசமெடை

அனுபானம் : ஆவின் நெய்

விளைவுகள் : விந்து விருத்தியாகும்.

சீந்தி கற்பம்

169. போமென்ற பொற்சீந்தி யானால் நன்று
புகழான சிவப்புநன்று கருப்பு நன்று
நாமென்று கிடையாவிட்டால் நல்ல சீந்தில்
நறுக்கியே துண்டுதுண்டாய் கிழித்துப் போட்டு
ஏமென்ற நிழலுலர்த்தி யிடித்துத் தூளாய்
யேற்றமாய் வடிகட்டிச் சூரணமே செய்து
தாமென்ற நாலிலொன்று சர்க்கரையே கூட்ட
சமத்தாக மண்டலந்தான் வெருக்கடிதூள் கொள்ளே (87)

170. கொள்ளவே குன்மமெட்டு சத்தி விக்கல்
கொடிதான அத்திசுரம் மெய்ம்ம றத்தல்
வெள்ளவே மேகமூத் திரகி ரிச்சி
மிக்கதோர் நீர்ப்பாடு மேனிக் கன்னல்
தெள்ளவே சிரசிலுள்ள வாய்வு வெல்லாஞ்
சிந்துமே அமுர்தந்தான் நாடி சுத்தி
கள்ளவே காமப்பா லுடம்பி லூறுங்
கணக்கான அமிர்தஞ் சீவி தானே. (88)

-(போ. க.வி)

171. சொல்லுகிறேன் பொற்சீந்தி யானால் நன்று
துலங்குவது கிடையாட்டால் நல்ல சீந்தி
அல்லுறதோர் மேல்தோலை யுரித்துப் போட்டு
அலரவே யுலர்ந்தபின்பு யிடித்துத் தூளாய்
நல்லுறவே வடிகட்டிக் கொண்டு நீதான்
நாலிலொன்று சர்க்கரையுங் கூட கூட்டி
வெல்லுறதோர் தினந்தோறுங் கழஞ்சு கொள்ள
விடுகாதே மண்டலமுங் கொண்டு தேறே (21)

172. தேறப்பா சுரதோஷம் எல்லாம் போகும்
செகமறிய மேகமென்ற தெல்லாம் போகும்
வாரப்பா அஸ்திசுரம் வெட்டை போகும்
வற்றிநின்ற தாதுவெல்லாம் மருவி யூறும்
வேரப்பா கபாலத்தில் வெட்டை போகும்
மெய்நிறைந்த நாடியெல்லாம் அமிர்த மாகும்
பேரப்பா சீந்திக்குச் சாவோ யில்லை
பேரேது அமிர்தசஞ் சீவி யாமே. (22)

- (ச.மு.க)

173. தானென்ற பொற்சீந்தி யானால் நன்று
சாதகமாய்ச் சிகப்புநன்று கிடையா விட்டால்
பானென்ற நற்சீந்தி மேல்தோல் போக்கிப்
பருந்துண்டாய் கொண்டுவந்து கிழித்துப் போட்டு
கோனென்ற நிழலுலர்த்திச் சூரணமே செய்து
கூறான கற்கண்டுச் சமபாகஞ் சேர்த்து
வேனென்ற வெருக்கடிதூ ளந்தி சந்தி
வெருளாதே மண்டலமு முண்டு பாரே. (289)

174. பாரப்பா மேகமென்ற தெல்லாம் போகும்
பரிவான வாதபித்தம் பக்குவ மாகுஞ்
சேரப்பா கபாலத்தில் வெட்டை போகுஞ்
செகமறிய அஸ்திசுர வேகம் போகுந்
தாரப்பா தாதுமுற்றுந் தழைக்குந் தேகஞ்
சதிராக ஆறுதலம் வன்னி மீறும்
பேரப்பா சீந்திலுக்குச் சாவோ இல்லை
பேரின்ப சாஸ்திரத்தை பேணிப் பாரே (290)

- (போ. சூ.எ)

சீந்திக் கற்பம்

பொற்சீந்திக் கற்பம் சிறப்புடையது. பொற்சீந்தி கிடைக்காவிடில் சிவப்பு சீந்தி, கருப்பு சீந்தி இவற்றைப் பயன்படுத்தலாம். இவையும் கிடைக்காவிடில் நல்ல சீந்தியை உபயோகப் படுத்தலாம். சீந்தியைத் துண்டு துண்டாக நறுக்கிக் கொண்டு நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். இதனை நன்றாக இடித்துத் தூளாக்கி, வடிகட்டிக் கொண்டு சூரணமாகச் செய்து கொள்ள வேண்டும். இத்துடன் நாலில் ஒருபங்கு அளவு சர்க்கரையைக் கூட்டிக் கொள்ள வேண்டும்.

உண்ணவேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

உண்ணவேண்டிய மருந்தின் அளவு : வெருக்கடி

அனுபானம் : சர்க்கரை

விளைவுகள் : எட்டுவகையான குன்மங்கள், சத்திவிக்கல், அத்திசுரம் மெய்ம்மறத்தல், மேகம், மூத்திரகிரிச்சி, நீர்பாடு, மேனிக்கன்னல், தலையிலுள்ள வாய்வு முதலானவை நீங்கும். அமிர்தம் சுரக்கும், நாடி சுத்தியாகும். காமப்பால் உடலில் ஊறும்.

சீந்திக் கற்பம் பொற்சீந்திப்யால் செய்தால் சிறப்பானதாகும். அவ்வாறு கிடைக்கா விட்டால் நற்சீந்தியால் செய்யலாம். இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றைக் கொண்டுவந்து மேல்தோலையுரித்து நீக்கிவிட்டு நன்றாக இடித்துக் கொண்டு, நாலில் ஒருபங்கு சர்க்கரையைக் கூட்டி முறைப்படி உண்ண வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : ஒரு கழஞ்சு

அனுபானம் : சர்க்கரை

விளைவுகள் : சுரதோஷம், மேகம், அஸ்திசுரம், வெட்டை, கபாலவெட்டை முதலான நோய்கள் தீரும். தாது ஊறும்; சாவு இல்லாமல் போகும்.

''போகர் சூஸ்திர மெழுநூறில்'' மேற்கூறியபடியே செய்முறைகள் சொல்லப்பட்டிருப்பினும் மாறுதல்கள் பல இருப்பதன் காரணமாக அப்பாடல்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் சர்க்கரைக்கு பதிலாகக் கற்கண்டு கூறப்பட்டுள்ளது. மேலும் அந்திசந்தி இருவேளையும் கொள்ள வேண்டும் என்ற செய்தியும் சொல்லப்பட்டுள்ளது. இவற்றோடு பயன்கள் கூறுமிடத்து வாதம் பித்தம் முதலானவை தீரும். உடல் வளம் பெறும். ஆறு தலம் வன்னி மீறும். சாவு அணுகாது என்ற செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

சீரகக் கற்பம்

175. சீரகத்தை யொன்றொன்றாய்த் தின்னத் தினமும்வா
சீரகத்தைப் போகமாய்ச் செய்யுமே - காரகத்தைப்
போக்கும் பசியெழுப்பும் புண்கிரந்தி யைச்சொறியை
நீக்கு மதையறிவாய் நீ.

- (தே.வெ)

சீரகத்தை நாள்தோறும் ஒவ்வொன்றாகக் கூட்டித் தின்றும், பின் அவ்வாறே ஒவ்வொன்றாகக் குறைத்துத் தின்றும் வர வேண்டும்.

விளைவுகள் : மூவகைச் சுவாச வோட்டத்தை முறைபிறழா வகையாகச் செய்து அதனால் உடலை வலுப்படுத்திப் போக பாக்கியங்களை யடையச் செய்யும். உஷ்ணத்தைப் போக்கும். பசியை யுண்டாக்கும்; புண், கிரந்தி, சொறி முதலிய சரும நோய்களை நீக்கும்.

சூரிய காந்திக் கற்பம்

176. பார்பருதி காந்தியென்ற பூவை வாங்கிப்
பண்பாக நிழலுலர்த்திச் சூரணமே செய்து
நேராவின் பால்தன்னில் வெருக்கடிதூள் கொள்ளு
நிசமாக மண்டலந்தான் கொண்டா யானால்
கார்கருகி லிடியிடிக்கில் பயமோ யில்லை
கலந்துநின்ற கேசரத்தி லாட லாகும்
வார் கருகி சட்டைகக்கி மன் மதன்போ லாகும்
மகத்தான அமிர்தமுண்ட மார்க்கந் தானே (78)

(போ.க.வி)

சூரிய காந்திப் பூவைக் கொண்டு வந்து நிழலில் நன்றாக உலர்த்திச் சூரணமாகச் செய்து கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : வெருக்கடி

அனுபானம் : ஆவின் பால்

விளைவுகள் : இடிக்குப் பயப்பட வேண்டியதில்லை. கேசரத்தில் ஆடலாகும் சட்டையானது கழன்று உடல் மன்மதன்போல அழகுடன் விளங்கும்.

செங்கள்ளிக் கற்பம்

176. மகிழ்கின்ற ரெத்தமாங் கள்ளி தன்னை
மண்தோண்டி அதன்வேரை வளைய வெட்டி
நெகிழ்கின்ற ..... வெட்டு வாயில்
நிசமான துரிசிகுரு பணவெடைதான் பூசி
துகிழ்கின்ற கலசத்தில் மண்வீ ழாமல்
துப்புரவாய் மேல்மூடித் தூரத் தானும்
எகிழ்கின்ற விறகையக(ல) கொளுத்திப் போட
ஏற்றமாம் ரசமெல்லாம் இறங்கிப் போமே. (171)

177. இறங்கியதோர் பால்தானுந் தண்ணீர் போலே
இருந்திடுமே பீங்கானில் எடுத்து வைத்து
மறுங்கியதோர் மண்டலந்தா னுண்ட பின்பு
மகத்தான அமுரிதன்னில் லோகம் போட்டால்
பறங்கியதோர் மாற்றுபனி ரெண்டு மாகும்
பாங்கான அமுரிதனில் எல்லாங் கட்டும்
தாங்கியதோர் பாய்தன்னில் தங்க னாகந்
தாதுவகை உபரசங்கள் செம்பு மாமே. (172)

-(போ.க.வி.)

செங்கள்ளியின் வேரை வெட்டிவந்து, வெட்டுவாயில் துரிசிகுரு பணவெடையளவு எடுத்துப் பூச வேண்டும். இதைக் கலசத்திலிட்டு மண்விழாமல் மேலே மூடி விறகை யகலமாகக் கொளுத்தவே, ரசம் யாவும் கலயத்தில் இறங்கிவிடும். கள்ளிப்பால் நீர் போன்று இருக்கும். இதைப் பீங்கானில் வைத்துக்கொண்டு உண்டுவர வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்.

விளைவுகள் : சிறு நீரில் உலோகத்தைப் போட்டால் பனிரெண்டு மாற்றுப் பொன்னாகக் கிடைக்கும். மேலும் இதில் பாஷாணங்கள், உபரசங்கள் எல்லாம் கட்டும். இக்கற்பமுண்டோன் பயன்படுத்திய பாயில் தங்கம், நாகம். தாதுவகை உபரசங்கள் இவற்றை வைக்கச் செம்பாக மாறும்.

தீபசோதிக் கற்பம்

178 உண்ணவே தீபமாஞ் சோதி தானும்
உயர்கின்ற கந்தகமும் சரியாய்க் கூட்டி
துண்ணவே சூதமது கந்தகத்தின் நிறை தான்
துடியான திப்பிலியும் ஏலங் கூட்டி
அண்ணவே ஐந்தையுந்தான் சமபாக மாக்கி
அதட்டியரை கல்வத்தில் அவுரிச் சாற்றால்
கண்ணவே நால்சாம மரைக்க மையாங்
காயவைத்துக் கால்கழஞ்சு மேனிலுண்ணே. (114)

179. உண்ணவே வாயுவென்ற தளத்தை நோக்கி
ஓடுகின்ற வாசியெல்லாம் உள்ளே தாக்கு
தண்ணவே சமாதிக்கு எசைந்தி டாது
சாங்கமாம் பொறிகளெல்லாம் தன்மை யாகும்
விண்ணவே கேசரத்தில் ஓடும் போது
மிக்கான மயக்கமொடு தாப மில்லை
அண்ணவே ரோமமெல்லாம் அண்டங் காக்காய்
அதனுடைய யிறகுக்கு மதிக மாமே (115)

-(போ.க.வி)

தீபசோதி, கந்தகம், சூதம் இவற்றைச் சமன் எடையளவு எடுத்துக்கொண்டு, அவற்றுடன் திப்பிலி, ஏலம் இவற்றையும் சேர்த்து கல்வத்திலிட்டு அவுரிச்சாறு கூட்டி. பனிரெண்டு மணி நேரம் நன்றாக அரைக்க மைபோலாகும். இதைக் காயவைத்துக் கால்கழஞ்சு அளவு எடுத்துத் தேனுடன் சேர்த்து உண்டுவர வேண்டும்.

அனுபானம் : தேன்

விளைவுகள் : வாசி உள்ளடங்கும், சமாதிக்குள் அசைந்திடாது ஐம்பொறிகளும் சிறப்புடன் விளங்கும். கேசரத்தில் ஓடும் போது மயக்கம், தாபம் இவை உண்டாகாது. மயிர் கருக்கும்.

தும்பைக் கற்பம்

180. காயசித்தி யுண்டாகுங் காசினியெல்லாம்பணியு
பாயசித்தி யுண்டாகும் பாதமுடம் - பாதிசிவன்
வெற்றியிதைச் சூரணித்து வெண்ணையுட னுண்ணுமுன்னே
குற்றமல்ல மெய்யென்று கொள்.

-(தே.வெ.)

பேய்த்தும்பைக் கற்பம்

181. பேய்த்தும்பைச் சாரமதைப் பேசாதா ரெண்ணைவிளக்
கேத்திமையை வாங்கி யிடத்திலதஞ் - சாற்றிநுதல்
கண்டவரைக் கண்டே கலங்குங் குமரகண்டன்
பண்டைநீதி காட்டும்பெண் பால். (44)

182. பாலாவின் கோரோ சனம்பதித்து பொட்டிட்டால்
சேராத வர்களுமெய்ச் சேருமே - போராகிற்
சிந்திநீர் கூட்டித் திலதமிட்டுச் சென்றாக் கால்
சாய்ந்திடுமே மாற்றான் தளம். (45)

183. தளதமா மிலைவாட்டித் தாந்திரி தாக்கி
யிளமா தகத்தில் விளக்கேத்தி - யுளமாதர்
கனவகத்தில் பேய்த்தோற்றங் கண்டவரைக் காணார்
நனவகத்தில் நமைவரு நாள். (46)

184. நாள் மூன்றில் கட்டுமே நல்வீர சிங்கிலியா
மேல்மூன் றுதிர மிலைகாய்த்துக் - கோள் மூன்றி
பச்சை யிரதமதிற் பாதிவெள்ளி சேர்த்தரைத்து
மெச்சிவிரை யாற்புடஞ்செய் வேம். (47)

185. வேடிக்கை யான முருங்கை விரைத்தயில
நாடிச்சாய் செம்புவெள்ளி நற்குளிகை - கூடித்
தெசவேதை சாரமாஞ் சேர்த்தாரம் பாதி
யிசைத்தாரம் பால்வெள்ளி யாம். (48)

186. ஆனவெள்ளி தன்னி லதிற்பாதி சீவனாம்
ஞானமுள்ள காயசித்தி நற்பாதி - யீனமில்லாப்
பிள்ளைக்குஞ் சொல்லாதே சொல்லிற் பெரும் பிழையாம்
உள்ளத் துளதா யுணர். (49)

187. உணரிற்பால் வெள்ளிதனைப் பறபஞ்செய் துணடாற்
பணருசந்தி ராதித்த பற்பம் - கொணரு
மோர் குன் றிரண்டு குன்றி முன்று குன்றி கொண்டாற்
சாருங்கன் மூன்றிதனிற் நான். (50)

188. தானா வளையாது தந்தமுளைக் குங்கருக்குங்
கோனா வுடலுங் குளிருமே - யானா
லனுபான மிச்சாற்றி லாகுமே யென்றார்
தனைச் சார்ந் திரத முறைத் தான். (51)

-(சி.வெ)

தும்பைக் கற்பம்

தும்பையின் சமூலத்தைச் சூரணம் செய்து உண்ண வேண்டும்.

அனுபானம் : வெண்ணெய்

விளைவு : காயசித்தியுண்டாகும்.

பேய்த்தும்பைக் கற்பம்

துளசிக் கற்பம்

கருந்துளசிக் கற்பம்

189 செம்பான கருந்துளசி யிலைய ரைத்து
சிறப்பான பாக்களவு தேனி லுண்ணு
கம்பான காயந்தான் கற்றூ ணாகும்
கனமான மூச்சாடு முள்ளுக் குள்ளே
வம்பான சுக்கிலந்தான் கீழோ டாது
நதியென்ற சந்திரனில் வாசி யூது
அம்பான அருவிபோ லமிர்தந் தானும்
அண்ணாக்கில் விழுந்ததைநீ அருந்து வாயே. (173)

-(போ.க.வி)

கருந்துளசியின் இலையை அரைத்து அனுபானத்துடன் உட்கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டி மருந்தின் அளவு : பாக்களவு

அனுபானம் : தேன்.

விளைவுகள் : உடல் கற்றூண் போல் உறுதியாகும். உள்ளுக்குள்ளே மூச்சாடும். விந்து கட்டுப்படும். அமிர்தம் சுரந்து அண்ணாக்கில் விழும்.

தூதுவளைக் கற்பம்

190. போமப்பா யிதைவிட்டு கற்பஞ் சொல்வேன்
புகழான தூதுவளை[1] யிலையி னோடு
ஓமப்பா தக்கோலம் சாதிக் காயும்
உத்தமனே வாலுளுவை விதையுங் கூட்டி
சேமப்பா கொடிவேலி வேரி னோடுச்[2]
சேர்ந்துநின்ற நிலப்பனையின் கிழங்குங் கூட்டி
தேமப்பா பொற்கொன்றைப் பூவி னோடு
சாதகமா ஐங்கோல விதையுங் கூட்டே. (29)

191. கூட்டியல்லோ யிவையெல்லாஞ் சமபாக மாகக்
குமுறிடவே யிடித்துநன்றாய் சூரணமே செய்து
ஆட்டியல்லோ முள்பன்றி நெய்யி னோடு
அப்பனே காசெடைதான்[3] தினமுங் கொள்ளு
மூட்டியல்லோ மண்டலமுங் கடந்து தானால்
பொற்சடையோன் தேகமுமாம் பொய்யோ யில்லை
காட்டியல்லோ மூலகுரு யீய்ந்த கற்பம்
கரடுமுர டாகவுந்திரன் பாடினாரே (30)

-(ச.க.நூ)

1. வெள்ளைத் தூதுவளை 2. வேரின் பட்டை 3. வெருக்கடி

(சங்கத் தூதுவளைக் கற்பம்)

192. ....

....

பாட்டியே பாக்களவு யிலைய ரைத்து
பண்பாகப் பணவெடைதான் பாலில் கொள்ள
நாட்டியே நாற்பதுநாள் கொண்டா யானால்
நலமான சூரியன்போல் முகமு மாமே. (107)

-(போ. க.வி)

தூதுவளைக் கற்பம்

தூதுவளை இலையோடு தக்கோலம், ஜாதிக்காய், வாலுளுவை ஆகியவற்றின் விதைகளைச் சேர்க்க வேண்டும். மேலும் கொடிவேலியின் வேர் நிலப்பனையின் கிழங்கு, பொற்கொன்றைப்பூ, ஐங்கோல விதை இவற்றையும் சமபாகம் சேர்த்துக் கொண்டு நன்றாக இடித்துப் பொடியாகச் செய்து கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : காசிடை

அனுபானம் : முள் பன்றி நெய்

விளைவு : சிவனுடைய உடலைப் போல உடல் நிலைத்து நிற்கும்.

சங்கத் தூதுவளைக் கற்பம்

சங்கத் தூதுவளையின் இலையை அரைத்துப் பாலுடன் சேர்த்து உட்கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : நாற்பது நாள்

உண்ண வேண்டிய மருந்தின் அளவ : பணவெடை

அனுபானம் : பால்

விளைவு : முகம் சூரியனைப் போல பொலிவுடன் விளங்கும்.

நீர்முள்ளிக் கற்பம்

வெள்ளை நீர்முள்ளிக் கற்பம்

193. ஓடியே வெள்ளைநீர் முள்ளி தன்னை
உற்றயிலை தானரைத்து பாக்களவு பாலில்
மாடியே மண்டலந்தான் கொண்டா யானால்
மாசற்ற மதிப்போலே முகமு மாகும்
தேடியே காமத்தில் சிதைய வேண்டாம்
சிவயோக மார்கத்தில் சிந்தை யுண்ணு
காடியே பெண்மாயை தன்னில் கண்ட
காரணத்தை நினைவுண்ணிக் கருத்தாய்ப் பாரே (152)

194. கருவான நீர்முள்ளிச் சாற்றை வாங்கி
கரண்டிதன்னில் ரசம்விட்டு சுருக்குப் போட
நெருவான நீர்வற்றி கட்டி யாகும்
நிலையாமல் (ரசஞ்) சூடனுட தீயில் வாட்டி
உருவான குகைதன்னில் உருக்கிக் கொண்டு
உகந்துமே நாலிலொன்று தங்கங் கூட்டு
தருவான தங்கயெடை நாகம் போட்டுத்
தகந்துமே கல்வத்தில் பொடியாய்ப் பண்ணே. (153)

195 பொடியான மருந்துக்குப் பாதி கெந்தி
பொடித்துமே ஓடுதன்னில் உருக்கிக் கொண்டு
தடியான தைலத்திற் பொடியைப் போட்டு
சமத்தாக வறுத்திடுவாய் சூரி யனால்
கடியான கரிபோலே தூளு மாகுங்
கலரிதுக்குள் மனோசிலையுங் காரந் தானும்
பிடியான பொடிபண்ணி மேருக் கேற்றி
பெரிதான வாலுகையி லெரித்தி டாயே. (154)

196. எரித்திட்டால் செந்தூரம் படிவம் போலே
மிதமான வெள்ளைநீர் முள்ளி தன்னை
பரிந்திட்ட யிலையரைத்து பாக்களவு தானும்
பாலிலே மிகக்கரைத்து பருகிட் டாக்கால்
நரித்திட்டால் நரையெல்லாம் மாறிப் போகும்
நாதாந்தப் பெருவெளியில் நாட்டங் கூடும்
முரித்திட்டால் ஒன்பதிலும் நூற்றுக் கொன்று
முயந்திட்ட மாற்றாகு முண்மை தானே (155)

197. உண்மையாய் செம்படித்துத் தகடு தட்டி
உறுதிநீ முள்ளியிலைக் கிஷாயத்தில் தோய்ப்பாய்
பண்மையாய்ப் பதினொரு நாள் தோய்த்தா யானால்
பட்டைவிட்டு செம்பெல்லாம் நொறுங்கிப் போகுங்
கண்மையால் கல்வத்தி லரைத்துக் கட்டி
காசைப் போல் வில்லை பண்ணிக் காயப் போட்டு
முண்மையாய் மூன்றுதரம் உலர்த்திச் சாறு
விட்டரைத்து ரவிதன்னில் காயப் போடே. (156)

198. காய்ந்தபின்பு யிலையரைத்துக் கவசங் கட்டி
கனக்கவே புடம்போட கட்டி நீறும்
தாய்ந்தபின்பு எடைக்கெடைக்கு சூதம் சேர்த்து
தாக்கான வாய்நீரில் மத்தித் தேதான்
வேய்ந்தபின்பு வெயிலில்லை கடிகை தானும்
வெண்ணீறாய்ப் பொருமியே விரிந்து போகும்
நாய்ந்தபின்பு வீசமெடை பாலி லுண்ணு
நாற்பதுநாள் மறவாம லுண்டி டாயே. (157)

199. மறவாமல் மதிதனிலே யீய்ந்தா யானால்
மாசற்றுத் தங்கமுமாம் ஆயிரத்துக் கோடும்
பறவாமல் சூதத்தைக் கவ்விக் கொல்லும்
பாஷாண மென்றதெல்லாம் பருதீப் பத்தும்
துறவாமல் வாழையென்ற பழத்தை வாங்கி
துரும்பாலே தொடட்டு அந்தப் பழங்கீரி வைக்க
அறவாமல் சாமந்தான் கழித்துப் பார்க்க
அழுந்தாது பச்சைக்கா யாகும் பாரே. (158)

200. பாரென்ற காய்தன்னைத் தோலைச் சீவி
பக்குவமாய்ச் சமைத்துண்ணு அன்னத் தோடே
காரென்ற காயந்தான் தளர்ந்த தெல்லாங்
கதித்திருகி பதினாறு வயது மாகும்
தாரென்ற குருவாலே சூதங் கட்டிக்
கொடிதான சாரணைதான் தீர்த்துக் கொண்டு
ஆரென்ற அண்டரண்டங் கடாரங்கள் பார்த்து
ஆராய்ந்து அடுக்குச்சோ திக்குங் காணே. (159)

- (போ.க.வி)

201. நீர்முள்ளி நீரதனில் நேர்ந்து சுவேதனை செய்
யோர்முள்ளி வீசமதி லோர்நெகிழஞ் -சேரிரத
மெண்ணான்க தாம்புடத்தி லீது வலிந்திறுகு
மண்ணன் தனம்செபிக்க வாம். (67)

202. வாளைப்பூ வெந்(தி)ரதத்தில் வீசமெடை தேவலிய
வேளையிலை வாட்டிச்சா றீங்கடைத்துச் - சூளு
நடுவிரதம் விட்டுந(று) பூவா யேந்தி
யிடுபுடமேற் சட்டியினி லே. (68)

203. இனிய கவுசட்டிப் பூனுடைய வேந்தி
முனியுங்க டுங்கனல் முப் பான்கடிகை - தனிலே
யடிக் குகையில் வீழ்ந்திரத மய்யருறும் பாகு
மெடுப்பளவி லேயிறுகு மென். (69)

204. இறுகுமொரு மண்டலத்தி லிட்டதெல்லாற் தின்னு
முறுதிபெருங் காயத்தை யுண்ணுந் - செறிவைத்து
ளப்பிரகஞ் சத்துண்ணு மட்டவித போக முண்ணு
செப்புக்குட் டாங் குளிகைச் சீர். (70)

205. சீரம் விடமருந் துந்தேன ருந்துங்கற்
பூரம் போல(வ) ருந்தும் புகழாகு - நாரியர் பாற்
நூர மிரையருந்துஞ் சுக்கிலமும் பட்சிக்குங்
காரியத்தைப் பொன்னாக்குங் காண். (71)

- (சி.வெ)

வெள்ளை நீர்முள்ளிக் கற்பம்

வெள்ளை நீர்முள்ளி இலையைக் கொண்டுவந்து அரைத்துப் பாலுடன் சேர்த்து உட்கொள்ள வேண்டும்.

உண்ணவேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : பாக்களவு

அனுபானம் : பால்

விளைவுகள் : முகம் பிரகாச மடையும், நரைகளெல்லாம் மாறிப் போகும்.

நீர்முள்ளிக் கற்பம்

நீர்முள்ளிச் சாற்றைக் கரண்டியில் ஊற்றி, அத்துடன் பாதரசத்தைப் போட்டு சுருக்குப் போட, நீர்வற்றி விடும். கட்டியாகக் கிடைக்கும். இதை சூடனுடைய தீயில் வெப்பப்படுத்தி, குகையில் வைத்து உருக்கிக் கொள்ள வேண்டும். பின்னர் அதனில் நாலில் ஒருபங்கு தங்கத்தையும் நாகத்தையும் சேர்த்துக் கல்வத்தில் போட்டுப் பொடி செய்ய வேண்டும்.

மருந்துக்குப் பாதியளவு கெந்தியை ஓட்டில் வைத்து உருக்கிக் கொண்டு தைலத்தில் பொடிசெய்து போடவேண்டும். (எந்தத் தைலம் என்பதைக் குறிப்பிடவில்லை) இதைச் சூரிய ஒளியின் வெப்பத்தில் கரிபோல ஆகும்வரை நன்றாகக் கிளரிடவேண்டும். மேலும் இதனுள் மனோசிலையையும், வெண்காரத்தையும் சேர்த்துப் பொடிசெய்து மேருக்கு ஏற்றி வாலுகையில் எரித்திடும் பொழுது பவழநிறத்தில் செந்தூரம் கிடைக்கும்.

(இந்தக் கற்பம் உண்ண வேண்டிய அளவு, உண்ணுவதால். உண்டாகும் விளைவுகள் முதலான செய்திகள் கூறப்படவில்லை. இங்கு உற்று நோக்கும்போது பாடல் விடுபட்டு இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. எரித்திட்டால் எனத் தொடங்கியுள்ள விருத்தத்தின் ஐந்தாவது சீரின் மோனை முதல் சீரின் மோனையுடன் பொருந்தவில்லை. எரித்திட்டால் செந்தூரம் பவழம் போலே' என்று குறையாக நிறுத்தப்பட்டுள்ளதை உணர முடிவதால், நீர்முள்ளிக் கற்பத்தின் முழுச் செய்திகளையும எழுத இயலவில்லை.)

வெள்ளை நீர் முள்ளிக் கற்பம் 158.வது பாடலிலும் சொல்லப்பட்டுள்ளது எனினும், அதிலும் 152-வது பாடலில் கூறப்பட்ட செயல்முறையே சொல்லப் பட்டுள்ளது. நரை மாறிப் போகும் என்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

நீர்முள்ளிக் கற்பம் (மற்றொரு முறை)

செம்பைத் தகடாகத் தட்டி முள்ளியிலைக் கிஷாயத்தில் பதினொரு நாட்கள் தோய்த்தால் செம்பின் உறுதிமாறி நொறுங்கிவிடும். இதைக் கல்வத்தில் இட்டு நன்றாக அரைத்த பின்னர், காசைப் போன்று வில்லையாகச் செய்து காயவைக்க வேண்டும். மூன்றுதரம் உலர்த்தியபின் நீர்முள்ளிச் சாறு விட்டு அரைத்துச் சூரிய ஒளியில் காயவைக்க வேண்டும்.

காய்ந்தபின்பு இலையை அரைத்துக் கவசமாகச் செய்து புடம்போட வேண்டும். அவ்வாறு புடம் போட நீறிப் போகும். அதற்குச் சமன் எடையளவு சூதம் சேர்த்து வாய்நீரால் மத்தித்து வெயிலில் கடிகை நேரம் வைக்க வேண்டும். கற்பம் திருநீற்றைப் போன்று இருக்கும்.

உண்ண வேண்டிய கால அளவு : நாற்பது நாட்கள்

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : வீசம் எடை

அனுபானம் : பசும்பால்

சிறப்புச் செய்தி : வாழைப்பழத்தை வாங்கி, கற்பத்தைத் துரும்பாலே தொட்டு அந்தப் பழத்தைக் கீறிச் சாமம் வைத்திருக்க வேண்டும். பழமானது காய் போன்று இருக்கும். இந்தக் காயின் தோலைச் சீவிப் போட்டுச் சோற்றுடன் சேர்த்துச் சமைத்துண்ண வேண்டும்.

விளைவு : தளர்ந்திருந்த உடலானது பதினாறு வயதைப் போல இளமையுடன் விளங்கும்.

நிலப்பனைக் கற்பம்

206. நிலப்பனையம் மூலமந்நாள் நீலநாண் தன்னில்
புலம்கரு நூல்காப்புக் கட்டிக் - கொலக்கனியைக்
காந்தமெடுத் தொட்டிலே கண்ணுளதி லேபூசி
யேந்ததைக்கா ராம்பசுநெய் யில் (52)

207. நெய்விளக்கை மையேந்தி நிலமடந் தையிடக்
கை தடவிப் பார்க்கக் களவுதொழில் - செய்வதெல்லாம்
வைத்தவிடம் வாய்த்த விடமாய்ந்து நொறுங்கினிது
மூய்த்தவிடஞ் சொல்வா ளுணர். (53)

208. உணரும் கரும்பாம் புடுவைப் பரிசிக்கி
லிணருங் கிழங்கொன் றெடுத்துப் - புணரில்
விடும்போ தொருதாரு கிழங்குவே ரருதேத்தி
யெடுங்கோ நிழலுலர்த்து மே (54)

209. உலத்தியதை செம்புதனி லுள்ளடைத்துப் போகஞ்
செலுத்தக் கழஞ்சுபொடி தின்ன - வழுத்துவிழா
போகிக்க விட்டபொடி பொண்ணுக் கருந்துங்கால்
மோகிப்பா ளாணழியு முன். (56)

210. முன்னின் கிழங்கரைத்து மூர்ச்சை ரதமடைத்தே
மன்னும் புடமுப்பான் வற்றாக்கிக் - சொன்னபடி
செய்குளிகை தம்பனையாற் திரிபடுக்கப் பேரிக்கு
மையடங்கி டத்தம்ப மாம் (56)

- (சி.வெ)

நெல்லிக் கற்பம்

211. நெல்லிமரப் பட்டை துவைத்து நீ ராகுபடி
நெல்லுக் குழிபுகைக்கு நீதிகேள் - நல்ல
வயக்கடமே நெய்தடவி யாட்டுத்தோல் மோசச
வியக்குமொரு மண்டலத்தில் மேல். (1)

212. மேலாந் தொழுப்புதைக்க வேர்த்தைல நாலிலொன்றாய்
பாலாவி னெய்யோர் படியாகுங் - கோலான
தான்றிகடுக் காய்வேர்த் தயிலமு மப்படியே
மூன்று பலத்திரைய மோர். (2)

213. மோரலக மோர்பலமு முந்திரிகை பேரிஞ்சு
தார் கொன்றை முப்பூ பலந்தானஞ் - சேர்ப்பதனோர்
பக்க மிருத்தி யெடுத்ததொரு பாக்களவு
நக்கநரை போம்நாள்நூ றில். (3)

214. நூறுபண(வி)டை காந்த(ல்) நோய் வானிரட்டி
நூறுநாள் கொள்திரை போம் நோன்பிதென - நூறுநாள்
நெல்லிக் குழம்புகொண்டு நீங்கியபின் நூறுபண
மல்லுஞ் செந் தூரத் தடு. (4)

215. அடுக்கடுக்காய்க் கொள்பவர்கட் காண்டொன்று தன்னில்
மிடுக்கோ டிறுகுங் காயமெங்கு - முடிக்கும்
படிபாலுண்ண வல்லார்க்கு பாலுரு மாவரீச
ரடியரில்மே லாகு மவர். (5)

216. வாரமுட நெல்லிப்பூ மாதமுண்ண வல்லார்க்குத்
தீரு மிலிங்கத் தூத் தீயெரிப்புக் - கூர்மை
யொருகழஞ்சு மோர்கலந் துண்ணபக்க மூன்றில்
புரியுஞ் சலக்கழிச்சல் போம். (6)

217. போக மிகவாகும் பூவுண்ண வல்லார்க்கு
ஓகந் தளராதப் பூவருந்த - மேகமறுங்
காய்த்திகையப் பூப்பொசிக்கக் கற்பூர வாசனையா
நோய்த்திதையம் போக்குங்காய் நீங்கு. (7)

218. காய்ச்சா றதனை வய(க்) கடத் திலமைத்து
வாய்ப்பாவின் கொட்டத்தில் வைத்துக் - கோப்பா
மிரும்புப் பொடிபிசறி யேழுவிசை ஊதி
யுருக்கச் செம் பாமென் னுணர். (8)

219. உணர்செம்பு தங்கமதி லொன்றுவது செம்பாங்
குணர்தங்கச் செம்பதுவே கொள்ளத் - திணரு
நரைதிரை நீங்கியே நற்குமர னாவான்
சுரரினிய நெல்லிக்காய்ச் சொல். (9)

220. சொல்லும் பருப்புவிரை தொக்குடனே தானுலர்த்தி
மல்லல் நிலத்தயிலம் வாங்கியே - இல்ல
மயிரிற் நடவமற் றைநாள்மூழ் கப்பின்
தயிரி லிவைவளருந் தார். (10)

221. தார்மது பொன்றமயிர் தானுங் கருப்பாகும்
வாரமறிந் தேமூழ்க மற்றாண்டில் - தீரக்
கருக்குங் கரிதோட் கரிப்பான் கரியி
லுருக்கியரை காசள வுண். (11)

222. உண்ணுந் தனித்தயில மோர்நாளில் தோளையிலை
நண்ணி யெரியிரத நாவுளதா - மென்னும்
விரையுட் பருப்பை விலக்கிட்டுக் கொண்டால்
நரையுந் தினக்காச னாம். (12)

(சி.வெ.)

நெல்லிக் கற்பம்

223. வயிரமாம் நெல்லிமூலி தன்னை வாங்கி
மருவநன்றாய் யிடித்துமேச் சூரணமு மாக்கி
அயிரந்தான் அப்பிரகச் செந்து ரந்தான்
அதற்கெட்டு பங்குக்கு ஒன்று சேர்த்து
துயரமாந் தேன்தன்னில் குழைத்து உண்ணு
சுகமாக மண்டலந்தான் உண்டா யானால்
கயிரமாங் காமதுக்குங் காலி[1] பட்டை
கனல்போலச் சாதிப்பாய் காணுங் காணே. (122)

நெல்லிப்பூ கற்பம்

224. காணவே நெல்லிப்பூ தன்னைச் சேர்த்து
கண்காண நிழலுலர்த்திச் சூரணமுஞ் செய்து
பாணவே பால்தன்னில் குழைத்துக் கொள்ளு
பாங்கான மண்டலந்தா னுண்டா யானால்
தோணவே தீயெரிப்பு சலக்க ழிச்சல்
தூயதான விரணங்கள் சோகை பாண்டு
ஊணவே லோகபற்பம் வைத்து உண்ணு
ஓடலாம் வெகுதூரம் மூச்சா டாதே (123)

1. காமதுக்குங் காலி என்பதற்குப் பொருள் புரியவில்லை

நெல்லிவேர் கற்பம்

225. ஆடாத நெல்லிவேர் பட்டை வாங்கி
அதிகரவி தனிலுலர்த்திப் பானைக் கிட்டு
மோடாத மேல்மூடிச் சீலை செய்து
மிக்க அடித் தூர்தன்னில் துருசு போட்டு
பூடாத புடத்தினில் தைலம் வாங்கி
பேரான அயப்பொடிதான் சுத்தித்துக் கொண்டு
மாடாத தைலத்தில் பிரட்டி வைத்து
மனோசிலையும் வெண்காரம் எட்டுக் கொன்றே (124)

226. எட்டுக்கு ஒன்றுதான் கல்வத் திட்டு
இழுத்தரைத்து மூன்றுக்கென்று பண்ணிக் கொண்டு
உட்டுக்கு ஒருபங்கு அரப்பொடியில் சேர்த்து
உருக்குநீ குகையிலிட்டு சார் உலையி தானும்
நட்டுக்கு உருக்கிநன்றாய் மணியு மாகும்
நறுக்கியுடைத் திட்டுமுன் மருந்து கூட்டி
முட்டுக்கு மூன்றுருக்கி உருக்கிப் பாரு
முதிர்ந்துஅய மாவியாக இருக்கும் பாரே. (125)

227. இருக்கின்ற அயச்செம்பில் எட்டுக் கொன்று
யேற்றமாய் தங்கத்தை உருக்கையிலே யீவாய்
நருக்கின்ற நாகத்தைத் தங்கயெடை போடு
நலமாக வுருக்கியே தகடு வார்த்து
மருக்கின்ற மனோசிலையு லிங்கங் கா
மாளவே எட்டிலொன்று தைலத் தாட்டி
தறுக்கின்ற தகட்டின் மேல் பூசிப் பூசி
சார்வாக அகலிலிட்டுப் புடத்தைப் போடே. (126)

228. போடவே நொறுங்கியது தூளு மாகும்
பேரான மதிதன்னில் நூறுக் கொன்று
மாடவே மாற்றுஏ ழரையே காணும்
மகத்தான புடஞ்செய்தே மாட்டிப் பாரு

பாடவே பணவெடைதான் தைலத் துண்ணு
பண்பாகச் சடந்தானும் செம்புநிற மாகும்
காடவே மதிக்காப்பு கையி லிட்டால்
காயந்தான் வேகத்தா லேம மாமே (127)

- (போ.க.வி)

நெல்லிக்காய் கற்பம்

229. பேணிப்பார் நெல்லிக் காய் முற்றல் வாங்கிப்
பேராவின் பால்விட்டு அவித்துக் கொண்டு
ஊணிப்பார் நிழலுலர்த்தாய் சூரணமே செய்து
உத்தமனே சுத்தித்த கெந்திசரி கூட்டி
பேணிப்பார் தேனதனிற் குழைத்து வுண்ணு
பேராக மண்டலந்தா னுண்டா யானால்
ஆணிப்பார் முன்னெடுத்த தேகம் போக்கி
ஆக்சரியஞ் சிவசத்தி தேக மாச்சே. (291)

- (போ.சூ.மெ)

கருநெல்லிக் கற்பம்

230. ஏமமா கருநெல்லி மலைதோறு முண்டு
எளிதாகக் கிடையாட்டால் கருப்பு பண்ணி
நாமமாம் நாற்பதுநாள் பாலில் கொள்ளு
நமன்வந்து நாடாமல் நடுங்கிப் போவான்
தாமமாஞ் சட்டையெல்லாங் கக்கிப் போடும்
தங்கம்போல் மேனியுமாம் தளுக்குக் காணும்
மாடவே கருநெல்லி போக்குச் சொல்ல
அரண்காணார் யான்தானுங் கண்டி லேனே (128)

- (போ.க.வி)

231. கனியான கருநெல்லி யஞ்சா ருண்டு
கருவான அவ்வனத்தில் பிரம தேவன்
தனியாகத் தவசிருப்பா ரவரைப் போற்றி
தருவான ஐந்தருவே கற்பகமே யென்று
பனியான பொருளறிந்து பணிந்தால் மைந்தா
பாலகனே யென்றவருங் கனிதா னீவார்
இனிதான கசப்பென்று இருந்தால் மைந்தா
ஈடேற்ற மில்லையடா ருசிபா ராதே. (131)

232. ருசியான கருநெல்லிக் கற்பங் கொண்டால்
நுடங்காது காயமெல்லாம் வலுத்துப் போச்சு
ரிஷியான ரிஷிமூல மிதுதா னப்பா
நேர்மையுள்ள வெண்சாரை நதிமூல மாகும்
உசிதமுள்ள ரிஷிமூலம் நதிமூலம் யிரண்டும்
உனையுடன் தினந்தோறும் பூசித் தாக்கால்
பசியான தீபனங்க ளில்லை மைந்தா
பராபரத்தின் கிருபையினால் பூரணத்தைப் பாரே. (182)

-(அ.க.ஞா)

நெல்லி மூலியைக் கொண்டுவந்து இடித்துச் சூரணமாகச் செய்து கொண்டு, அப்பிரக செந்தூரத்தை எட்டுக்கொரு பங்கு சேர்த்துத் தேனில் உட்கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

அனுபானம் : தேன்.

விளைவு : ( )

நெல்லிப்பூ கற்பம்

நெல்லிப் பூக்களைச் சேகரித்துக் கொண்டு வந்து நிழலில் உலர்த்தி சூரணமாகச் செய்து கொள்ள வேண்டும். அதைப் பாலில் குழைத்து உண்ண வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

அனுபானம் : பால், லோக பற்பம்

விளைவுகள் : தீயெரிப்பு, சலக்கழிச்சல், ரணங்கள், சோகை, பாண்டு முதலான நோய்கள் தீரும்.

நெல்லிப்பட்டை கற்பம்

நெல்லிவேரின் பட்டையை வாங்கி நன்றாக உலர்த்திக் கொண்டு, அதைப் பானையில் போட்டு மேலே மூடி, சீலை செய்து கொள்ள வேண்டும். இதைப் புடத்தில் வைத்துத் தைலம் வாங்கிக் கொண்டு, அதில் சுத்தி செய்த அயப்பொடியைச் சேர்க்க வேண்டும். மேலும் மனோசிலையும், வெண்காரமும் எட்டுக்கொருபங்கு அதில் சேர்க்க வேண்டும். இதை நன்றாகக் கல்வத்தில் அரைத்து, ஒரு பங்கு அரப்பொடி சேர்த்துக் குகையில் வைத்து உருக்க மணியாகக் கிடைக்கும். இந்த மணியை உடைத்து உருக்க அயம் ஆவியாகக் கிடைக்கும். இவ்வாறு கிடைக்கும் அயச்செம்பில் எட்டுக்கொருபங்கு தங்கத்தை உருக்கிச் சேர்க்க வேண்டும். தங்கத்தின் எடையளவு துத்தநாகத்தைச் சேர்த்து உருக்கிக் கொண்டு தகடாக வார்த்துக் கொள்ள வேண்டும். மனோசிலையையும் லிங்கத்தையும் எட்டில் ஒருபங்கு தைலத்துடன் அரைத்து, அதை தகட்டின் மேல் பூசி அகலில் வைத்துப் புடம்போட வேண்டும். தகடு நொறுங்கித் தூளாகும். இதில் நூற்றுக்கு ஒரு பங்கு அளவு மதி சேர்க்க ஏழரை மாற்றுத் தங்கம் போல் இருக்கும். இதை அனுபானத்துடன் சேர்த்து உட்கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டியமருந்தின் அளவு : பணவெடை

அனுபானம் : தைலம்

விளைவுகள் : உடல் செம்பு நிறமாகும். காப்பாக செய்து கையில் அணிந்து கொண்டால் உடலுக்கு நன்மையாகும்.

நெல்லிக்காய் கற்பம்

முற்றலான நெல்லிக் காய்களை வாங்கி வந்து பசும்பாலில் அவித்து எடுத்துக் கொண்டு நிழலில் காயவைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். இதை

நன்றாக இடித்துத் தூளாகச் செய்து கொண்டு அத்துடன் சுத்தி செய்த கெந்தியைச் சமன் அளவு சேர்த்துத் தேனுடன் உட்கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : சொல்லப்படவில்லை

அனுபானம் : தேன்.

விளைவு : உடல் புத்துணர்வு பெறும். இளமையான தோற்றம் உண்டாகும்.

கரு நெல்லிக் கற்பம்

மலைதோறும் கிடைக்கும் கருநெல்லியைப் பயன்படுத்த வேண்டும். அவ்வாறாகக் கருநெல்லி கிடைக்காவிடில் கருப்பாகச் செய்து கொள்ள வேண்டும். (மூலிகையைக் கருப்பாகச் செய்வது எவ்வாறு என்ற செய்தி தனியாகக் கூறப்பட்டுள்ளது.) இதை கற்பம் செய்ய பயன்படுத்த வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : நாற்பது நாள்

அனுபானம் : பால்

விளைவுகள் : நீண்ட வாழ்நாள் கிடைக்கும். உடலிலுள்ள சட்டைகள் கழன்று போகும். உடல் தங்கத்தைப் போல ஒளிரும். உடல் வலிமையாகும்.

பாலரசுக் கற்பம்

232. போகாமல் பாலரசின் கற்பங் கேளு
புகழ்ந்தவேர் காய்பட்டை யிலைப்பூ வோடு
நோகாமல் நிழலுலர்த்தி யாட்டி யிடித்து
நேரிசாய் வடிகட்டி சூரணமே செய்து
வேகாமல் வெள்ளாட்டுப் பாலில் கொள்ளு
விரைந்துமே மண்டலந்தான் கொண்டா யானால்
சாகாமல் விருக்கலாஞ் சதுர்முகன்தன் படைப்புஞ்
தகர்ந்துபோஞ் சமாதியி லிருந்தி டாயே. (143)

-(போ.க.வி)

பாலரசுவின் வேர் காய் பட்டை, இலை, பூ இவற்றைக் கொண்டுவந்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். இதை நன்றாக இடித்துக் கொண்டு சூரணமாய் செய்து கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

அனுபானம் : வெள்ளாட்டுப் பால்

விளைவு : சாவு அணுகாது.

பிரண்டைக் கற்பம்

233. அண்மையில் யின்னமொன்று சொல்லக் கேளு
அப்பனே வாசியிலே மூச்சைக் கட்டி
தாண்மையிலே மூலத்தைச் சித்தி பண்ணச்
சாதகமா யானபின்பு சொல்லக் கேளு
வாண்மையிலே பிரண்டையோட கொழுந்து வாங்கி
வாயாலே தியானமுற்று ஊது ஊது
கேண்மையிலே தின்றாக்கால் கரும்பு போலாம்
கெடியாக மூலமது சுத்தி யாச்சே. (19)

234. சுத்திக்கும் இலட்சணந்தான் பிரண்டை முந்தி
செய்தபின்பு யென்மக்காள் கேளு கேளு
மத்திக்கும் பாஷாண மெல்லாந்தான் தின்னு
மலசலமும் பொன்னாகும் வைரத் தேகம்
சித்திக்கும் உன்னுடம்பில் (பிலத்தே) தேய்க்கத் தங்கம்
உத்தமனே செம்பாகும் ஓடுந் தூரம்
மத்திக்கும் சூதமொடு கந்தகத்தை உண்ணு
மைந்தனே தேகமெல்லாங் களங்க மாச்சே. (20)

-(கொ. க. நூ)

பிரமிக் கற்பம்

235. அதிகமாம் பிரமியுட படிசா ரொன்று
ஆவின்நெய் படியொன்று சமனாய்ச் சேர்த்து
நிதிகமாம் அடுப்பில்வைத்து காய்ச்சிக் கொண்டு
நேர்நாட்டு சர்க்கரைதான் நான்குக் கொன்று
மிதிகமாம் மிளகொடுதிப் பிலியிந் துப்பு
மிக்கான சுக்கோடு கருநெல்லித் தான்றி
பதிகமாம் மஞ்சளொடு சமனாய்ச் சேர்த்து
பாங்காக வகைக்கு ஒரு பலந்தான் கூட்டே. (116)

236. பலமாக யிடித்துநன்றாய் சூரணஞ் செய்து
பாங்கான முன்னெய்யில் கிளரிக் கொண்டு
குலமாக வடித்தெடுத்து கற்பந் தின்று
கூர்ந்துமே மிளகுதின்று காலை தன்னில்
கலமாகக் கஷாயமெல்லாம் மாலை கொள்ளு
கடியான செந்தூரங் காலமே தின்றால்
மலமாக நெல்லிக்காய் பிரமா ணந்தான்
மாலையிலே யிம்மருந்தைக் கொண்டி டாயே. (117)

237. கொண்டிடவே பதினாறு வயது மாகுங்
குறிப்பாய்ப் பெண் கொண்டாக்கால் கர்ப்பம் நாடும்
அன்றிடவோ அடுக்காரு முருவி காணும்
அந்தரத்து மீனெல்லாம் பகலில் தோன்றும்
விண்டிடவே வெள்ளெழுத்து மாறிப் போகும்
மேல்கொண்ட வாசியெல்லாம் மீண்டும் புக்கும்
கன்றிடவே காமப்பா லுடம்பில் ஊறுங்
கடிதான செந்தூரம் வேகம் போமே. (118)

238 வேகம் போம் கல்லுக்குட் பிரமி தன்னை
இடித்துநன்றாய் சூரணமே செய்து கொண்டு
தாகம் போம் தண்ணீரில் குழைத்துண் டாக்கால்
கடந்தானுங் ... ... திருக்கும்

தேகம் போம் கத்தியினால் வீசி னாக்கால்
கலீரென்று வெண்கலத்தி னோசை காணும்
மாகம் போம் அந்திசந்தி மண்டலந்தான் கொள்ளு
மாலையிலுள்ளோர் எல்லோருங் கண்டிட் டாரே. ('19)

கல்பிரமிக் கற்பம்

239. கொண்டிட்ட கல்பிரமிச் சாறு வாங்கி
குகையரைத்து யிலைதன்னைச் சூதம் விட்டு
ஒன்றிட்ட ஓட்டில்வைத்து சுருக்குப் போட
ஒருசாமந் தன்னால்தானு முண்மை யாகும்
பன்றிட்ட தங்கமிட்டு நாகம் போட்டு
பரிவான குகையிலிட்டு உருக்கிக் கொண்டு
கன்றிட்ட கல்வத்திற் பொடியாய்ப் பண்ணி
கனமான சீலைகெந்தி காரங் கட்டே. (120)

240. கூட்டியே கல்பிரமி சாற்றா லாட்டி
குறிப்பாக காசியென்ற மேருக் கேற்றி
ஆட்டியே பனிரெண்டு சாமந் தீயே
ஆறவிட்டு எடுத்தாக்கால் சுண்ண மாகும்
நாட்டியே நவலோகம் ஆயிரத்துக் கோடும்
நயந்துமே பணவெடைதான் பாலில் கொள்ளு
மாட்டியே மண்டலந்தா னுண்டா யானால்
மாசற்ற வைரம்போல் தேக மாமே. (121)

-(போ.க.வி)

பிரமிக் கற்பம்

பிரமியுடைய சாற்றை ஒருப ு எடுத்துக்கொண்டு அதனுடன் பசுவின் நெய் ஒருபடி சேர்த்து அடுப்பி‌ல வைத்துக் காய்ச்ச வேண்டும். அதில் நான்குக்கு ஒருபங்கு நாட்டுச் சர்க்கரையைச் சேர்க்க வேண்டும். பின்னர் மிளகு, திப்பிலி, இந்துப்பு, சுக்கு, கருநெல்லி, தான்றி மஞ்சள் ஆகியவை ஒவ்வொன்றும் வகைக்கு ஒரு பலம் அளவு சேர்த்துக் கொண்டு நன்றாக

இடித்துத் தூளாகச் செய்து கொள்ள வேண்டும். இதை முன்னர் காய்ச்சி வைத்த நெய்யில் கிளரி எடுத்துக் கொண்டு பயன்படுத்த வேண்டும். கற்பத்தோடு காலையில் மிளகு தின்றுவர வேண்டும். மாலையில் கஷாயம் உட்கொள்ள வேண்டும். காலையில் செந்தூரத்தை உண்டால் மாலையில் கற்பம் உண்ண வேண்டும். (என்ன செந்தூரம் என்பது குறிப்பிடப் படவில்லை)

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : நெல்லிக்காய் அளவு.

விளைவுகள் : உடல் பதினாறு வயதைப் போல இளமையுடன் விளங்கும். மலட்டுப் பெண் உட்கொண்டால் கர்ப்பம் உண்டாகும். வெள்ளெழுத்து மாறி பார்வை நன்றாகத் தெரியும். சுவாசம் மீண்டும் புக்கும். காமப்பால் உடலில் ஊறும். செந்தூரம் உண்பதால் உண்டாகும் வேகம் போகும்.

கல்பிரமிக் கற்பம்

கல்பிரமியை கொண்டுவந்து இடித்துத் தூளாகச் செய்து கொள்ள வேண்டும். தண்ணீரில் குழைத்துக் கொண்டு காலையிலும் மாலையிலும் உட்கொண்டு வர வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

அனுபானம் : தண்ணீர்

விளைவுகள் : தேகம் உறுதியாகும். தாகம் போகும்.

மற்றொரு முறை

கல்பிரமிச் சாற்றை எடுத்துக் கொண்டு, அதன் இலையை அரைத்துச் செய்த குகையில் விட்டு, சூதமும் சேர்த்து ஓட்டில் வைத்து ஒரு சாமம் சுருக்குப் போட வேண்டும். தங்கம், நாகம் இவற்றைச் சேர்த்து குகையிலிட்டு உருக்கிக் கொள்ள வேண்டும். இவற்றைக் கல்வத்தில் கொட்டிப் பொடியாகச் செய்து கொண்டு மனோசிலை, கெந்தி, வெண்காரம் இவைகளைச் சேர்க்க வேண்டும். பின்னர் கல்பிரமிச் சாற்றை சேர்த்து அரைத்து மேருவில் பனிரெண்டு சாமம் தீயெரித்து, ஆறவிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : ஒரு பணவெடை

அனுபானம் : பால்

விளைவு : குற்றமற்ற வைரம்போல் தேகம் உறுதியாகும்.

பேய் திமிட்டிக் கற்பம்

241. பேய்திமிட்டி செய்வீரால் பேணிப் பிடுங்குங்கால்
கார்த்திகை வீரனெழுத் தாற்கட்டி - போற்றியதை
யேழுநாள் நீர்விட் டெழுகாத் திகை செய்யி
லாழியாம் போயகலு மாம். (34)

242. ஆன விரையதனை யாவு னிரவுதனில்
வான நிலத்தயிலம் வாங்கிவை - ஞானத்
திலத நுதலணியத் தேவரெல்லாந் தோன்று
மலகைபல தோன்றுமத னால். (35)

243. ஆயிரங் கையுடையோ னாகும் பகந்திலதம்
பாயிரமா மீசனிலைப் பற்பத்தால் - பேயு
மழையைக் குடைகட்டும் வாயில் பெருத்த
தழையை மென்னு மீய்ப்பொழியுந் தான். (36)

244. உத்தாதை பேர்சொல்லி யோதுமிந்த வேர்கிழிக்கச்
சிந்தா வருடலுஞ் சிந்துமே - பின்தான்
தயிலமது நாசித் தடவப் பிழைக்குங்
கயிலைவாழ் சித்தன் கரு. (37)

245. கருவழிய வேண்டி விரைகருக்கித் தின்ன
வுருவழிந்து நீராகி யோடுந் - திருவருளால்
புத்திரர் தீபம் பொருந்துபொடி யுண்டானால்
பத்தியுடன் கொண்டதனைப் பார். (38)

246. பாரிரத மத்திக்கப் பஞ்சாங்க முஞ்சொல்லு
நீரதனையுந் தோளையிலை நீதியதாம் - பேரியலாம்
பூதரத்தில் வேர்க்குளிகையாற் போடுபுடம் காடையென
வாதரிமேற் குக்கிடம தாய். (39)

247. தாயாங் கிசபுடமேற் சங்கையிலா முட்டைதனிற்
நீயாற் புடம்போட்டுச் செய்வதெல்லா - மாயத்
தன லைச் செபிக்குந்தர மாகும் வீசங்
கனலைச் செயிப்பிக்குங் காண். (40)

248. செயிக்கு மிரதபற்பஞ் செய்துயம னானை
கெயித்துயிரை மீட்டுடலிற் சேர்ப்பார் - வெயிற்கதிரோ
னுள்ளளவு நிற்கு மொருவருடஞ் சூதபற்பங்
கொள்ளுமவர் வானோர் குரு. (41)

249. குருவான வச்சிரமேற் கொள்தயிலம் பூசப்
பரிவாய்ப் புடம்போடப் பற்பஞ் - தெரிவாகும்
அட்டவித லோக மடிக்கும் விரைத்தயிலஞ்
தொட்டுநக்கக் காயசித்தி சொல். (42)

250. சித்தி யடைந்தவர்க்கே தின்னச் செடமிறுகுஞ்
சுத்தியயத் தூதுமுளை தொட்டுண்ணப் - புத்தேளா
மோராண் டருந்துவை ரோமங் கருப்பதுவாஞ்
சீராண் டறிந்தே தெறி. (43)

-(சி. வெ.)

மந்தாரைக் கற்பம்

251 ....
....
....
....

வலமாக மந்தாரை வெள்ளைப் பூவை
வாங்கியே நிழலுலர்த்தி யிடித்துத் தூளாய்
குலமாக வெருக்கடித்தூள் தேனில் கொள்ளு
குட்டமது பதினெட்டு மோடிப் போமே. (151)

-(போ.க.வி)

வெள்ளை மந்தாரைப் பூவைக் கொண்டு வந்து நிழலில் உலர்த்தி இடித்துத் தூளாகச் செய்து கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : வெருக்கடித் தூள்

அனுபானம் : தேன்

விளைவு : பதினெட்டு வகையான குட்ட நோய்களும் நீங்கும்.

மருதோன்றிக் கற்பம்

252. பனிபோலாம் மருதோன்றி யிலையி டித்து
பாங்காக கிட்டிகட்டி சாறு வாங்கி
தனிபோலாம் எருமையுட் சாணி தன்னை
சாங்கமாய் கிட்டிகட்டி சாறு வாங்கி
இனிபோலாம் மிரண்டுபடி ஒன்றாகக் கலக்கி
ஏற்றமாம் வெடியுப்பு பலமும் நான்கு
தினிபோலாம் சீனமது பலமும் நான்கு
சிந்தாத கல்லுப்பு பலமும் நாலே. (140)

253. நாலாகப் பொடிபண்ணி சாறுதன்னில் கலக்கி
நலத்ததோர் காரீயம் பலந்தா னெட்டு
ஆலாக அயக்கரண்டி தனிலு ருக்கி
அதுக்குள்ளே சாய்த்திடுவாய் சாறுவற்று மட்டும்
போலாகப் பிரட்டியே அகலி லிட்டு
பெரும்புடந்தான் போட்டெடுத்து கல்வத்திற் கொட்டி
மாலாக மருதோன்றி யிலைச் சாற்றா லரைத்து
மாளமட்டும் மூன்றுபுடம் போட்டி டாயே. (141)

254. போட்டெடுக்க மாதளம்பூ நிறம தாகும்
பேரான கற்கண்டில் பணவெடைதான் கொள்ளு
ஆட்டெடுக்க அருணநிறம் போலாம் மேனி
ஆயிரத் தொன்றிடவே அதிக மாற்றாம்
நீட்டெடுத்த மேனியுமோ லேசாய் காணும்

நிலையான வாசியெல்லாம் உள்ளே யாடும்
காட்டெடுத்த கைசிவந்து .... போச்சு
கன்கத்தைக் கண்டாலும் கரியாய்ப் போமே (142)
- (போ.க.வி)

மருதோன்றிக் கற்பம்

மருதோன்றி இலையைக் கொண்டு வந்து இடித்துக் கிட்டிகட்டி சாறு வாங்கிக் கொள்ள வேண்டும். அதைப் போலவே எருமையுடைய சாணியை நீரில் கரைத்து கிட்டிகட்டி சாறு வாங்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஒவ்வொருபடி சாற்றை எடுத்து ஒன்றாகக் கலக்கிக் கொண்டு வெடியுப்பு, சீனம், கல்லுப்பு ஆகியவற்றை வகைக்கு நான்கு பலம் சேர்த்து கா[illegible]பம் எட்டுப் பலம் சேர்த்துக் கொண்டு அயக்கரண்டியில் உருக்கிக் கொண்டு கலக்கிய சாற்றுக்குள் சாறுவற்றுமட்டும் சேர்க்க வேண்டும். இதை அகலில் வைத்துப் புடம் போட்டெடுத்துக் கல்வத்தில் கொட்டி மருதோன்றி இலைச்சாற்றைச் சேர்த்தரைத்து மூன்று புடம் போட வேண்டும். மாதளம்பூ நிறத்தில் மருந்து கிடைக்கும்.

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : ஒரு பணவெடை

அனுபானம் : கற்கண்டு

விளைவுகள் : உடல் அருணநிறம் போல் ஒளியுடன் விளங்கும். மேனி லேசாகத் தோன்றும். சுவாசம் உள்ளே யாடும். ஆயிரத்துக்கொரு பங்கு சேர்த்தாலும் அதிக மாற்றாகும்.

மிளகுக் கற்பம்

255. போமென்ற யிதைவிட்டுக் கற்பங் கேளு
புகழாக ஐவைந்தாய் மிளகை யேற்றி
ஏமென்ற யிருபதுநாள் கொண்டு வாநீ
இறக்கியே யிருபதுநா ளமுரியிலே கொள்ளு
வாமென்ற மாலையிலே அருகம் வேரு
வன்மையாக ஒருபலந்தான் யிடித்து நைய்ய

வேமென்றே மிளகதுதான் இருபத் தைந்து
மிக்கான தண்ணீரில் எட்டிலொன்றாய்க் காய்ச்சி
பாமென்றே யிறக்கையிலே பாக்களவு வெண்ணை
பாலித்துப் பாங்காகக் கொண்டி டாயே. (37)

256. கொண்டிடுவாய் மண்டலந்தான் குவிந்த பின்பு
குஞ்சனத்தில் மலத்தையெல்லாங் கழட்டு ஈற்கு
முன்றிடுவாய் முன்சொன்ன படியே நீறு
முகிந்தபின்பு மிளகுண்டே பின்பு கேளு
கண்டிடுவாய்க் கடுக்காய்தான் பலமும் நான்கு
கருதியதோர் திப்பிலியுஞ் சுக்கோ டொக்க
ஒன்றிடுவாய்ச் சீரகமும் மோம மிந்து
உறுதியாம் நறுக்கென்றே மூலந் தானே. (38)

257. மூலந்தான் வகைக்கொன்று பலந்தான் கூட்டி
முனைந்திடித்து கடுக்காயின் விதையைத் தள்ளி
தூலந்தான் சீலைவடி கட்டிக் கொண்டு
துப்புரவாய் வெருக்கடி தூள் வெந்நீர் கொள்ளு
ஆலந்தா னபானமது கீழே நோக்கும்
ஆடயிலும் ஓடயிலும் மூலத்தி ....
(சாலந்தான்) சஞ்சாரம் சமாதி யாகும்
தனிப்பின்பு அன்னத்தின் பொடியைக் கேளே. (39)

- (போ.க.வி)

மிளகுக் கற்பச் சூரணம்

258. பாரப்பா யிதுகடந்த பின்பு நீதான்
பரிவாக ஐந்தைந்தாய் மிளகை யேற்றி
சேரப்பா அமுரியிலே காலமே கொள்ளு
சிறப்பான நாற்பதுநாள் கொள்ளு கொள்ளு
காரப்பா இருபதுநாளேற்றி யுண்ணு
கைமுறையாய் நூறுமட்டு மான பின்பு
தூரப்பா ஐந்தைந்தாங் குறைத்தே யுண்ணு
சொல்முறையாய் மாலையிலே பொடிநீ யுண்ணே. (271)

259. பொடியாவ தேதென்றாற் சொல்லக் கேளு
பேரான பொற்கொன்றைப் பூவி னோடு
கொடியான மல்லிகையின் பூவி னோடு
கொக்கிறகு மந்தாரை வெள்ளைப் பூவும்
மணியாக நிழலுலர்த்தா யுலர்த்திக் கொண்டு
அப்பனே பொடித்துநன்றாய்ச் சூரணமே செய்து
நெடியாகத் தேனதிலே குழைத்தே யுண்ணு
நேர்பாக மாலையிலே மண்டலந்தா னுண்ணே. (272)

260. மண்டலந்தா னுண்டபின்பு சொல்லக் கேளு
வாகான தூதுவளை யிலையி னோடு
விண்டலந்தான் தக்கோலஞ் சாதிக் காயு
மேலான வாலுளுவை வித்தி னோடு
குண்டலந்தான் கொடிவேலி பொற்கொன்றைப் பூவுங்
கூறான நிலப்பனையின் கிழங்குங் கூட்டி
முண்டலந்தான் பொடிசெய்து வைத்துக் கொண்டு
முக்கழஞ்சு முட்பன்றி நெய்யிற் கொள்ளே. (273)

261. கொள்ளவே வாதத்தை யகற்றிப் போடுங்
கொடிதான பித்தமெல்லா முறிந்து போகுந்
தள்ளவே சிரசில்நிற்கும் கபத்தைச் சாடுஞ்
சங்கிலிபோல் கோழையறுந் தமரம் நிற்கும்
விள்ளவே மதுதனிலே அமிர்தஞ் சேர்க்கும்
மெய்நிறைந்த நாடியெல்லா மிறுகிக் கொள்ளுந்
துள்ளவே யிந்திரியச் சோர்வு போகும்
துடியாதே காமநோய்க் கொல்லுந் தானே. (274)

262. கொல்லுகிற காமத்தை மதியி லேற்றுக்
குறிப்பாறு தலங்களெல்லாங் கூர்ந்து பாரு
வெல்லுகிற மனக்குரங்கை மைந்துந் தாண்ட
விடுகாதே விவேகமென்ற வாளால் வீசு
மல்லுகிற யோகத்தைச் சதாநித்தம் பாரு

மதியில்நிற்கு மமிர்தத்தைக் கசிந்தே யுண்ணு
அல்லுகிற ஆத்தாளை நித்தம் பூசி
அறிவில்நின்று குருபதத்தை யடுத்துக் கேளே (275)
- (போ.சூ.மெ)

263. ஏறியபின் மிளகுதனை கனமாய்ப் பார்த்து
எடுத்தல்லோ பீங்கானில் வைததுக் கொண்டு
மாறியபின் அமுரிதனி லூறப் போட்டு
வாகாக ஐவைந்தாய் தினமும் ஏற்று
கூறியபின் னூறுமட்டாய் கொண்டு தள்ளு
கொள்ளையிலே வெட்டைசத்தே மீறிற்றானால்
தேறியபின் சுக்குடனே மிளகு காய்ச்சி
சிறுக அதில் வெண்ணையிட்டுத் திறமாய்க் கொள்ளே. (19)

264. கொண்டபின்பு கரந்தையைத்தான் சூர ணித்து
கூட்டியல்லோ சர்க்கரையை நான்குக் கொன்று
தண்டலது தேனோடு கழஞ்சு கொள்ளு
சாதகமாய் மண்டலத்தில் வாச மேறி
ஒண்டுவது இடமற்று வாதம் ஓடும்
உத்தமனே பித்தமெல்லாம் கீழே நோக்கும்
கண்டிதமாய்க் கொண்டுமெள்ள தீர்ந்த பின்பு
கற்பத்தின் வகையெல்லாஞ் சொல்லு றேனே. (20)
- (ச.க.நூ)

265. நூறு மிளகு நுகரு மமுரியில்
வேறு மருந்தில்லை மிக்காய சித்திக்கு
தேறி யிதனைக் செலுத்த வல்லார்க்கு
மாறி மயிரு மறுமயி ராகுமே. (20)

266. ஆகுமிகக் கற்ப மடைவாக மண்டலம்
வாகுடன் தின்று வளமாகத் தீர்ந்தபின்
பாகும் பொறுக்கும் பலகற்பம் தானோக்கும்
காதங் கருத்த கரிசாலை தின்றிடே. (21)
- (தி.க.மு)

267. முப்புளகா யந்தணிந்து மோகம் பிறக்குமிள
மாப்பிளைபோ லேயழகு வாய்க்குமே - சேப்புருவாங்
கோமயமு நுங்கறியைக் கொள்ள விரண்டுபங்காய்
ஆமலக முண்ணமுறை யால்.

- (தே.வெ)

268. கற்ப முறைமை கறியொன் றிரண்டுமுறை
விற்பன மாகநிதம் வேண்டினோர் - நற்படிவம்
வேதண்ட மாமழகும் விற்பத்தி யுஞ்சேரு
மூதண்ட மும்படியு முன்.

- (தே.வெ)

மிளகை ஐந்தைந்தாக ஏற்றி இருபதுநாள் வரை கொள்ள வேண்டும். நூறுமிளகானவுடன் ஐந்தைந்தாகக் குறைத்து இருபது நாட்கள் கொள்ள வேண்டும். இவ்வாறு உண்ண வேண்டிய மிளகை அமுரியிலே கொள்ள வேண்டும். மாலையில் அருகம் வேர் ஒருபலம்; மிளகு இருபத்தைந்து இவற்றை நீரில் போட்டு கொதிக்க வைத்து, எட்டிலொன்றாய்க் காய்ச்சி எடுத்து பாக்களவு வெண்ணையை அதில் போட்டு அருந்த வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

மிளகுக் கற்பம் உண்ணும்முறை அனைத்து நூல்களிலும் ஒரே விதமாகவே கூறப்பட்டுள்ளது. ஆனால் மிளகுக் கற்பம் உண்ணும்போது உட்கொள்ள வேண்டிய மருந்துகளைப் பற்றிச் சொல்லுமிடத்து மாறுபட்டுள்ளன. எனவே மாறுபட்டுள்ள செய்திகள் மட்டும் சொல்லப்பட்டுள்ளன.

மிளகுக் கற்பம் உண்டுவரும் போது மாலையில் பொடியொன்றை உண்ண வேண்டும்.

பொடியின் செய்முறை

பொற்கொன்றைப்பூ, மல்லிகைப்பூ, வெள்ளை மந்தாரைப்பூ, கொக்கிறகு இவற்றை நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். பின்னர் நன்றாகப் பொடியாகச் செய்துகொண்டு தேனில் குழைத்து மாலை நேரத்தில் உண்டு வரவேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

ஒருமண்டலம் உண்டபின்பு தூதுவளை இலை, தக்கோலம், ஜாதிக்காய், வாலுளுவை விதை, கொடிவேலி, பொற்கொன்றைப்பூ, நிலப்பனைக் கிழங்கு இவற்றைப் பொடி செய்து கொண்டு, மூன்று கழஞ்சு வீதம் முட்பன்றியின் நெய்யில் குழப்பிக் கொள்ள வேண்டும்.

விளைவுகள் : வாதம், பித்தம், கபம், கோழை இவை நீங்கும். அமிர்தத்தைச் சேர்க்கும். நாடி இறுகும். இந்திரியச் சோர்வு நீங்கும். காமம் ஏற்படும்.

கடைபிடிக்க வேண்டியவை : காமத்தை அடக்க வேண்டும். மனதை விவேகத்தால் அடக்க வேண்டும். யோகம் செய்ய வேண்டும். தினமும் இறைவியைப் பூசிக்க வேண்டும்.

3. கற்பம் உண்டுவரும் போது வெட்டை ஏற்பட்டால் சுக்கு, மிளகு இவற்றைக் காய்ச்சி சிறிதளவு வெண்ணையிட்டுக் கொள்ள வேண்டும். இவ்வாறு கொண்ட பின்பு கரந்தையைச் சூரணித்து நாலில் ஒருபங்கு சர்க்கரையைச் சேர்த்துக் கொண்டு தேனோடு சேர்த்துக் கழஞ்சு வீதம் உட்கொள்ள வேண்டும்.

4. மிளகை ஐவைந்தாக ஏற்றி, பின் இறக்கி அமுரியில் உண்ண வேண்டிய முறையே 'திருமூலர் கற்பமுறையிலும்' சொல்லப்பட்டுள்ளது.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

5. மேற்கூறிய முறை ''தேரையர் வெண்பா''வில் கூறப்பட்டுள்ளது. மேலும் கோமயத்தில் ஒருபங்கு மிளகை ஊறவைத்து உலர்த்தியெடுத்து நெல்லிப்பழம் இருபங்கு சேர்த்து உட்கொண்டு வரவேண்டும் என்ற வேறு முறையும் சொல்லப்பட்டுள்ளது.

விளைவுகள் : உடல் வலிமையானதாகும். அழகு மேன்மையுறும், காம விருப்ப முண்டாகும். உடலில் செந்நிறம் தோன்றும்.

வல்லாரைக் கற்பம்

269. பாரப்பா கற்பத்தின் மகிமை கேளு
பண்பான வல்லாரை கொடிமூலம் வாங்கி
சேரப்பா சுத்திசெய்து உலர்த்திக் கொண்டு
செவையான கல்லுரலில் தூளாய்ப் பண்ணி
வாரப்பா கரண்டிநிறை சூர ணத்தை
வளமாக ஊசிநீர் தன்னிற் கொள்ளு
பேரப்பா போகநிஷ்டை கற்பஞ் சொன்னேன்
புகழான ஞானத்தின் கற்பங் கேளே. (145)
-(த.சூ.வை)

270. காயமென்ற காயாதி கற்பந் தன்னை
கருணைபெறச் சொல்லுகிறேன் மைந்தா கேளு
நேயமுடன் வல்லாரை யாறு மாதம்
நிலைத்ததொரு ஆரையடா ஆறாந் திங்கள்
தாரகமாய்க் கொண்டுவந் துலர்த்தி மைந்தா
சமரசமாய்த் தூளாக்கி கல்வத் திட்டு
மாயமென்ற தூள்தனிலே கழஞ்சு கொள்ள
மாயாது காயமது வலுவாய் போச்சே. (705)
-(அ.க.ஞா)

271. வல்லாரை தன்னை வணங்கும் முறையதை
நல்லாயுனக்கு நயம்படச் சொல்லுவோம்
பொல்லாருங் கண்டு யெளிதா யருந்திட்டார்
வல்லா றுகந்து வரைகடந் தார்களே. (478)

272. கடந்தார் களமோகக் கன்வினை யதனைத்
தொடர்ந்தே அடித்துத் துருவத்தி லேறினார்
படர்ந்தவல் லாரையைப் பற்றி யெடுத்து நீ
அடர்ந்திடுங் காடியில் அழித்திப் பிழிந்திடே. (479)

273. பிழிந்திட் டுலர்த்திப் பேணிப் பொடிசெய்து
கலந்திடுஞ் சர்க்கரை கணக்குச் சயைதாய்

நெழிந்திடு மனத்தைநீ நாரினிற் செலுத்தியே
அழிந்திடு வெருக்கடி யன்பாய்ப் பொசித்திடே (480)

274. பொசித்திடு மண்டலம் பொருந்தியுட் கொண்டதால்
கசிந்திடு நீதநீர் கண்டு யிறங்கிடு
நசிந்திடு பித்தமு நடுநிலை தன்னிலே
வசித்திடுந் தேகம் வரண்டு திறக்குமே (481)

275. திறக்குமே தேகம் சிறுகதி ரோடியே
உரைக்குமே வாசி வுள்நின் றுளாவிடு
நிறக்குமே மூல நிலைதனில் தீபஞ்
சிறக்குஞ் சிவமயஞ் சிவமான அண்டமே. (482)

- (ம.தி.எ)

276. காந்தியிந்த தேகமது சித்தி யானால்
கற்பமுறை கொள்ளுதற்கு வகையைக் கேளு
வார்ந்திடுமோ வல்லாரை சூரண மேசெய்
ஆறுமாதங் கொண்டாலே சித்தி யாச்சு
வாய்ந்ததொரு வாதமெல்லா மொடுங்கிப் போச்சு
வற்றிநின்ற தாதுவெல்லாம் மருவ லாச்சு
சாய்ந்ததொரு பித்தமெல்லாம் தலைக்கொள் ளாமல்
தறுகியது கிடக்குமப்பா பத்தியம் போச்சே. (74)

277. போச்சப்பா சிலேட்டுமந்தான் கீழே நோக்கி
புகழான நாடிமூன்றும் நேராய் போச்சு
காச்சப்பா கற்பமெல்லாம் வல்லாரைக் கொண்டு
கலங்காமல் மறுகற்பம் கொள்ள வேண்டும்
போச்சப்பா வொன்றுமில்லை கேளு கேளு
..த்தனா ...தியிலே பிறந்த மூலம்
மூச்சப்பா கடுக்காய்தான் பூலோ கத்தில்
முளைத்துதென்றால் யெல்லோருஞ் சித்தி யாமே. (75)

- (கொ.க.நூ)

278. வல்லாரைக் கற்பமுண்ண வல்லாரை யார்நிகர்வார்
கல்லாரைப் போலக் கலங்காமல் - வல்லாரைச்
சாறு மிலவணமுஞ் சாபத் திரியுமுண்ணப்
பேருமடி வல்லைப் பிணி.

- (தே. வெ.)

279. ஆக்கை யிரண்டுக்கு மமுதமாம் பொற்றலை
வாக்குக் குரிய வல்லாரை யோரைந்தும்
பாக்கள வாகிலும் பாலிற் குழைத்துண்ண
ஆக்கை யழியாது ஆயிரத் தாண்டாமே. (23)

-(தி.க.மு.)

வல்லாரைக் கொடியின் வேரைக் கொண்டு வந்து சுத்தி செய்து கொள்ள வேண்டும். பின்னர் அதை உலர்த்தி, கல்லுரலில் இட்டு நன்றாகத் தூளாய் செய்து கொண்டு அனுபானத்துடன் உட்கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய அளவு : கரண்டி நிறை

அனுபானம் : ஊசி நீர்

ஆறு மாதம் வளர்ந்த வல்லாரையைக் கொண்டு வந்து உலர்த்தி, கலுவத்தில் இட்டுக் கொண்டு நன்றாகப் பொடி செய்து கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு கழஞ்சு

வல்லாரையைக் கொண்டு வந்து, அடர்ந்த காடியில் பிழிந்து எடுத்திட சுத்தியாகும். இதைப் பிழிந்து உலர்த்திப் பொடி செய்தபின், சம அளவு சர்க்கரை சேர்த்து உண்ண வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : வெருக்கடி

விளைவுகள் : சீதநீர் இறங்கி விடும். பித்தம் நடுநிலையாகும்.

வல்லாரையைக் கொண்டுவந்து சூரணமாகச் செய்து கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஆறு மாதம்

விளைவுகள் : வாதம் போகும். விந்து விருத்தியாகும். பித்தம், சிலேட்டுமம் ஆகியவை நீங்கும். மூன்று வகையான நாடிகளும் சரியாகும்.

வல்லாரையின் சாற்றுடன் சோறுப்பும் சாபத்திரியுங் கூட்டி உட்கொண்டு வரவேண்டும்.

விளைவுகள் : வல்லைப் பிணியும் சோம்பலும் நீங்கும்.

வல்லாரையைக் கொண்டு வந்து அரைத்து, பாலுடன் சேர்த்து உட் கொண்டு வர வேண்டும்.

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : பாக்களவு

அனுபானம் : பால்.

விளைவு : உடல் அழியாது நீண்ட காலம் நிலைத்திருக்கும்.

விடத்தேர் கற்பம்

280. மாறவே விடத்தேர்வேர் பட்டை வாங்கி
மருவநன்றாய் யிடித்தரைத்து சூரண மாக்கி
தாறவே பலம்நான்கு நிறுத்துக் கொண்டு
தளுக்கான சூதமது பலந்தான் நான்கு
கூறவே குலமல்லி சாற்றி னாலே
குலாவியரைத் தரைசாமம் பொடியாய்ப் பண்ணி
தேறவே நாற்பதுநாள் தேனில் கொள்ளு
சில்விஷமாம் பதினெட்டு குஷ்டம் போமே. (86)

- (போ.க.வி)

விடத்தேர் வேரின் பட்டையை வாங்கி நன்றாக இடித்து அரைத்து, தூளாகச் செய்து கொள்ள வேண்டும். அந்தத் தூளில் நான்கு பலம் எடுத்துக் கொண்டு. அத்துடன் நான்கு பலம் பாதரசத்தைச் சேர்க்க வேண்டும். இந்தை குலமல்லிச் சாறு சேர்த்து அரைச்சாமம் நன்றாக அரைத்துப் பொடியாகச் செய்து கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : நாற்பது நாள்

அனுபானம் : தேன்

விளைவு : பதினெட்டு வகையான குஷ்டங்களும் நீங்கும்.

வில்வக் கற்பம்

281. கொண்டைக பித்தமுதற் கூவிளமிம் மூன்றின்முன்
னிரண்டை விடவுமகா நேர்த்தியே - மண்டலத்தில்
பித்த வியாதிப் பிணிக்கதனா லீசர்முனே
பத்திரமா கக்கொண்டார் பார்.

-(தே.வெ.)

282. வில்வத்தை யாதிரைநாள் வெண்பட்டு நூல்கட்டி
வெல்லத்து டன்கனிநெய் வேத்தியமாய்ச் - சொல்லும்
வசீகரபஞ் சாக்கரமா மந்திநூற் றெட்டுப்
பசுபதிவேர் நற்குளிசம் பண். (13)

283. பண்ணுங் குளிச முடிதரிக்கப் பட்சமதாய்
நண்ணு நவசித்ர நட்பாக்கி - யெண்ணு
மிரதத் தொழிற்குளிகை யின்பரச சித்தி
வுரதத் துடனுதவு வார். (14)

284. வாரா முலையுமையு மானுமனு கூலமதாய்ச்
சேராக் கணவர்பெண் பாற்சிக்கும் - போராகிற்
சத்துருவுங் கைவசமாந் தாரணியில் மேலுமிவை
சித்தமலை யாதிருக்குந் தேர். (15)

285. தேரிலையில் பற்பந் திலதமிட வேதாளங்
கூரிலைவேல் கொண்டுமுன் கூத்தாடுஞ்-சீரியதோர்
பாதாதி கேசமதிற் பற்பஞ் செயில்பூத
வேதாள மேதாகு மென். (16)

286. ஏனம் வசீகரமா மிப்பூத் திலதமிட
யானை முறிச்சுண்டா மம்பலவ - மேனைப்பூ
வொன்றித் திலதமிட வோராண்டு பூவருந்த
கன்றுமுரோ மங்களுக்குங் காண். (17)

287. காணுமவர் நெய்யருந்தக் காயமது பூரிக்கும்
மாணும் பழச்சதையை வாட்டுமே - யாளியாம்
பட்டைத்தூள் கொள்ளவும் வாந்திபி ராந்தியறு
மட்டதாஞ் சேறுமத்தன் வாய். (18)

288. வாய்ப்பா மரப்பட்டை மத்திக்கச் சட்டைபோங்
கோப்பான தோளையிலை கொண்டுரசங் - காபபாகும்
தங்கஞ்செம் பாகும் ரசபற்பந் தன்னிலை
வீங்குவிரை சிங்கிக்கா மென். (19)

289. எண்ணு மிரசவெள்ளி லிங்கத் திலைச் சாற்றில்
தின்றுவர சூதமுடல் சிக்குமே - மண்ணுலகில்
வெட்டரு மூலியதாம் வில்வமைந்துங் கொள்பவர்க்கு
மட்டரு வாயுவெகு வாம். (20)

290. வெகுவா மிலைச்சாற்றில் வெந்தசட்டித் தூரில்
தருமானைக் கண்மறைய வேதடவி - ப்குவா
யரவுதீண் டுங்கால மஞ்சனத்தைப் பீற்றி
யிரவுதரித் திடவீச னாம். (21)

291. ஈசனுடைக் கோயி லிருந்துபற்று மஞ்சனத்தைத்
தேகத்தனங் காட்டுஞ் சிறுபெண்கை - பூசிக்கொள்
ளாயிர சித்தியுட னட்டமா சித்திதன
மேயுமொழி மெய்யாகுமே. (22)

-(சி.வெ)

கற்பூர வில்வக் கற்பம்

292. கண்டிலேன் கற்பூர வில்வந் தானுங்
கடிந்தரைத்து பாக்களவு பாலி லுண்ணு
அண்டில்லா அக்கினியைத் தணிய வைக்கும்
அழுத்துகின்ற மேகமெல்லாஞ் சாடிப் போகும்
மண்டிலேன் வாதபித் தத்தை நீக்கும்
வாய்நீர்தான் மிகஊரல் வற்றிப் போகும்
வேண்டில்லா மேனிசுர சுரப்புப் போகும்
மிக்கான வெள்ளெழுத்து மீறி டாதே. (129)

293. மீறிடா பூப்பறித்து யிடித்துச் சாறு
    மிகப்பிழிந்து கலசத்தில் வைத்துக் கொண்டு
நாறிடா கந்தகத்தை கரண்டிதனி/லுருக்கி
    நறுநெய்யாம் பன்றியுட நெய்யைத்தா னூற்றி
தாரிடா சார்தன்னில் முப்பத் தொன்று
    சாய்க்கவே கந்தகந்தான் கட்டிப் போகும்
பாரிடா பன்றிநெய்யை விட்ட ரைத்துப்
    பாங்காக நால்சாமம் பண்பாய் வாங்கே. (130)

294. வாங்கியே காசியென்ற மேருவிலேப் போட்டு
    வளமாக குப்பிக்குக் கதம்பை வைத்து
தாங்கியே அடியினில் பொத்த லிட்டு
    சங்கமாய் குப்பிநுனி தலைகீழாய் நிற்க
ஆங்கியே அடுப்பேற்றி அடுப்புக்குள் கிண்ணி
    அகலமாக வைத்துமே சட்டியில்தீ போட்டு
தேங்கியே கிண்ணிக்குள் தைலம் வீழுஞ்
    சிறப்பான மதித்தகட்டில் தேய்த்தி டாயே. (131)

295. தேய்த்துமே புடம்போட்டு ஆறிப் பார்த்தால்
    சிவந்தெழுந்து பத்தரையாம் ஏமந் தானும்
....
    ....
சாய்த்துமே மனந்தன்னில் மாயந் தன்னில்
    மருவாமல் மதியென்ற மண்டலத்திற் புக்குந்
தோய்த்துமே அமிர்தந்தான் தாரை யாகுஞ்
    சோமப்பால் தனையுண்ண சோதி யாமே. (132)

296. சோதியாம் நூறாண்டின் மரத்தைப் பார்த்து
    சோதித்து வைரமென்று வெட்டி வந்து
வீதியாய் மெல்லியதாய்த் தூளாய்ப் பண்ணி
    மிகக்கொழுந் திலைச்சாற்றில் அரைத்து மைபோல்
பாதியதால் குகைபோலே பண்ணிக கொண்டு
    பருவமுடன் சுத்தித்த சூதம் வார்த்து
ஆகியதாய் அகலில் வைத்து மேலே மூடி
    அசையாதே பத்தெருவிற் புடத்தைப் போடே. (133)

297. போடவே சூதமது ஏம மாகும்
(புடம்போட்டு) வித்தாக்கால் பிரமை கொள்வான்
ஆடவே கம்பிபண்ணி குளிகை கோர்த்து
அடையாள மாய்மார்பு தன்னில் போடு
மாடவே மாற்றென்ன ஐம்பத் தொன்று
மாற்றரை கொள் தனக்குத்தான் வளையம் போடு
காடவே குண்டலங்கள் கைவளையல் பண்ணு
கண்டுகொள்ளாச் சோதியது காண லாமே. (134)

-(போ. க.வி)

இலந்தை, விளா, வில்வம் என்னும் மூன்றில் வில்வமே பித்த நோய்களைத் தீர்க்குந் தன்மையுடைய தாகையால் மிக நேர்த்தியுடையதாம்.

கற்பூர வில்வக் கற்பம்

கற்பூர வில்வத்தை நன்றாக அரைத்துப் பாலோடு சேர்த்து உட்கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : பாக்களவு

அனுபானம் : பால்.

விளைவுகள் : உஷ்ணத்தைத் தணிவிக்கும். மேகநோய்களை நீக்கும். வாத, பித்த நோய்களைப் போக்கும். வாய் ஊரல் எனப்படும் அதிக உமிழ் நீரைச் சுரக்க வைக்கும் நோயை நீக்கும். மேனி சுரசுரப்பை நீக்கும். வெள்ளெழுத்து வராமல் தடுக்கும்.

கற்பூர வில்வப்பூ கற்பம்

கற்பூர வில்வப் பூவைக் கொண்டுவந்து இடித்துக் கொள்ள வேண்டும். பின்னர் அதை நன்றாகப் பிழிந்து சாற்றை கலசத்தில் வாங்கிக் கொள்ள வேண்டும். கந்தகத்தைக் கரண்டியில் போட்டுப் பன்றியின் நெய்யை ஊற்றிக் கலசத்தில் உள்ள சாற்றில் முப்பத்தொருமுறை உருக்கிய கந்தகத்தை ஊற்றி எடுக்க, கந்தகம் கட்டியாக மாறும. அந்தக் கந்தகத்தில் பன்றி நெய்யை விட்டு நன்றாக நான்கு சாமம் அரைக்க வேண்டும். இதைக் காசி எனப்படும்

மேருவிலே போட்டுக் குப்பிக்கு கதம்பை வைக்க வேண்டும். பின்னர் குப்பிக்கு அடியினில் துளை செய்து குப்பியின் நுனிப்பகுதியைத் தலை கீழாக வைக்க வேண்டும். அடுப்பில் அகலமான கிண்ணம் வைத்துக் கிண்ணத்தை நன்றாக வெப்பப்படுத்திக் குப்பியில் இருக்கும் தைலமானது சூடான கிண்ணத்தில் விழச் செய்ய வேண்டும். இந்த தைலத்தை மதித்தகட்டில் தேய்த்து, தகட்டைப் புடம் போட்டு ஆறவிட்டு எடுத்துப் பார்த்தால் பத்தரை மாற்றுத் தங்கமாகும்.

விளைவு : அமிர்தம் தாரையாகும்.

கற்பூர வில்வ மரக் கற்பம்

நூறாண்டுப் பழமையான மரத்தை வெட்டி வந்து சிறுசிறு துண்டுகளாக்கிக் கொள்ள வேண்டும். இதைக் கொழுந்து இலையின் சாற்றில் மைபோல அரைத்துக் கொண்டு, அதைக் குகைபோல செய்து கொள்ள வேண்டும். அதில் சுத்தி செய்த பாதரசத்தை ஊற்ற வேண்டும். இதை அகலில் வைத்து மேலே மூடி பத்தெரு வில் புடம் போட வேண்டும். கம்பியில் இக்குளிகையைக் கோர்த்து மார்பில் அணிந்து கொள்ள வேண்டும். இது ஐம்பத்தொரு மாற்றாக இருக்கும். வளையம், குண்டலம், கை வளையல் முதலியனவாகச் செய்து அணியலாம்.

விளைவு : சோதியைக் காணலாம்.

விஷ்ணு கிரந்திக் கற்பம்

298. திறந்திட்ட விஷ்ணுகிரந்தி தனைக்கொ ணர்ந்து
கெப்பமாய் மண்டலந்தான் பாலிலரைத் துண்ணு
மறந்திட்ட தினவெல்லாம் மருவி யோடும்
மாசற்ற யெலும்புக்குள் சுரந்தான் போக்கும்
கறந்திட்ட தேகமது கருத்து மின்னுங்
கண்ணொளிதான் யோசனை தூரந்தான் காணும்
இறந்திட்ட சுவாசமெல்லா மிறுகி யேறும்
ஏற்றமாஞ் சுழி முனையுந் திறந்து போமே. (73)

வெள்ளை விஷ்ணு கிரந்திக் கற்பம்

299. போமென்ற வெள்ளைவிஷ்ணு கிரந்தி தன்னை
பிடிங்கிவந்து நிழலுலர்த்தாய் உலர்த்திக் கொண்டு
ஏமென்ற யிடித்துசூ ரணமே செய்து
எளிதாக மண்டலந்தான் தேனில் கொள்ளு
சாமென்ற சாவுபொய்யாஞ் சதுர்மு கன்தன் [படைப்புந்]
தப்பியே சதகோடி தரித்து நிற்கும்
காமென்ற கரு வூரார் கொண்ட கற்பங்
காரணமா யடியார்க்குக் கருதி னாரே. (74)

300. கருதியே வெள்ளைவிஷ்ணு கிரந்தி தன்னை
கனக்கவே பிடிங்கிவந்து வைத்துக் கொண்டு
அருதியே அயச்சட்டி அடுப்பி லேற்றி
அதிகமாய்க் காரீயந் தன்னை வைத்து
மருதியே யுருகவிட்டு வாங்கிக் கொண்டு
வறுத்திடுவாய் யிலைபோட்டு இரும்பி னாலே
நருதியே நால்சாமம் வறுத்தா யானால்
நாடகமாஞ் செம்பரத்தம் பூப்போ லாமே. (75)

301. பூப்போலச் செந்தூரம் பொருமிப் போகும்
பேராக ஆறவிட்டு வாங்கிக் கொண்டு
தீப்போலாம் மனோசிலையும் நாலத் தொன்று
செயமான வெண்காரம் பொடிதான் கூட்டு
தூப்போல சூதமது நாலத் தொன்று
சுத்தமாங் கற்றாழை சாற்றா லாட்டி
மூப்போல மூன்றுபுடம் போட்டெ டுக்க
முதுமையா மாவிதன்னில் நூற்றுக் கொன்றே. (76)

302. நூத்துக்குஒன்றான செந் தூரத்தை
நுகர்ந்துமே மண்டலந்தான் தேனி லுண்ண
பார்த்துக் கொண் டேயென்னைத் திரிந்தி டாதே
பாழான மனதுதன்னைப் பாவொட் டாதே

காத்துக் கொண் டேயிருநீ வாசி யோடே
கலந்துமே கேசரியில் கருத்தை யுண்ணு
மாத்துக் கொண் டேறியிடுஞ் சடமுந் தானும்
மகத்தான சித்தியிது மருவிப் பாரே. (77)

-(போ. க.வி)

விஷ்ணுகிரந்தியைக் கொண்டுவந்து பாலில் அரைத்து உண்ண வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

விளைவுகள் : உடலில் உண்டாகும் வலிகள் அனைத்தும் தீரும். எலும்புக்குள் தோன்றும் சுரம் நீங்கும். தேகம் கருத்து மின்னும். கண்ணொளி அதிகமாகும். சுவாசம் இறுகிப் போகும். சுழிமுனை திறக்கும்.

வெள்ளை விஷ்ணு கிரந்திக் கற்பம்

வெள்ளை விஷ்ணுகிரந்தியைக் கொண்டு வந்து நிழலில் காயவைத்து நன்றாக இடித்துச் சூரணமாகச் செய்து கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு :- ஒரு மண்டலம்

அனுபானம் : தேன்.

விளைவுகள் : நீண்ட நாட்கள் வாழ உதவும். சாவு நெருங்காது.

வேறு முறை

வெள்ளை விஷ்ணுகிரந்தியின் இலைகளைக் கொண்டுவந்து வைத்துக் கொள்ள வேண்டும். அயச்சட்டி ஒன்றை அடுப்பில் வைத்து, அதில் காரீயத்தைப் போட்டு உருக்கி எடுத்துக் கொள்ள வேண்டும். இலைகளை அயச்சட்டியில் போட்டு இரும்புக் கரண்டியைப் பயன்படுத்தி நான்கு சாமம் வறுத்தெடுக்க, செம்பரத்தம்பூப்போல செந்தூரம் கிடைக்கும். இதை ஆறவிட்டு எடுத்துக் கொண்டு, அத்துடன் நாலில் ஒரு பங்கு மனோசிலையைச் சேர்க்க வேண்டும். இவற்றைக் கற்றாழைச் சாறுவிட்டு அரைத்து, மூன்றுபுடம் போட்டெடுக்க செந்தூரம் கிடைக்கும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

அனுபானம் : தேன்

விளைவு : தேகம் வலிமையானதாகும்

வெண்புரசுக் கற்பம்

303. இருந்திட்ட வெண்புரசுப் பூவை வாங்கி
இதமாகப் படிசாறு பிழிந்து கொண்டு
தகுந்திட்ட தாளகந்தான் பலமு நான்கு
தாக்கான கற்சுண்ண நீரில் போட்டு
சுருந்திட்ட மூன்றுநாள் ஊற வைத்து
சுப்பிரமாய்க் கழுவியே சுருக்குப் போடு
பொருந்தியே பூவரைத்து கவசங் கட்டி
பூவரசு(பட்டை) சாம்பல்வைத்து அழுத்தி டாயே. (144)

304. அழுத்தியே தீயெரிப்பாய் நாலு சாமம்
ஆறவிட்டுப் பார்த்தாக்கால் சங்கம் போலாம்
பழுத்தியே பணவெடைதான் பாலில் கொள்ளு
பருதிதன்னின் வொளியாகுங் காயந் தானும்
நழத்தியே நாற்பதுநாள் கொண்டா யானால்
நாகங்கள் பல்விஷங்கள் நாடி டாது
தழுத்தியே சர்பங்கள் கடித்திட் டாக்கால்
தனக்கேதான் கேடென்றே நாடிச் சாமே. (145)

305. நாடியே நவலோகத் தீய்ந்தா யானால்
நாட்டப்பா பதினைந்து மாற்று மாகும்
தூடியே துரிசியின் மேல் போட்டுப் போட்டால்
சுக்கான் போல் பொருமியே நீறு மாகும்
நீடியே யின்னீறு லிங்க மேலே
நீடித்தால் முழுக்கட்டாம் வீரத் துக்கும்
மாடியே வேதிச்சுப் புடத்தைப் போட
மணிபோலே நின்றுமே வுருகும் பாரே. (146)

-(போ.க.வி)

வெண்புரசுக் கற்பம்

வெண்புரசு பூவைக் கொண்டுவந்து பிழிந்து ஒருபடி சாறு எடுத்துக்

கொள்ள வேண்டும். அதில் தாளகத்தை நான்கு பலம் அளவு சேர்த்துக் கற்சுண்ண நீரில் போட்டு மூன்று நாட்கள் ஊற வைத்த பின், நன்றாகக் கழுவிச் சுருக்குப் போட வேண்டும். பின்னர் பூவை அரைத்த விழுதினால் கவசம் கட்டி பூவரசின் பட்டையின் சாம்பலை அதில் அழுத்த வேண்டும். இதை நான்கு சாமம் தீயில் வைத்து எரித்து ஆறவைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : நாற்பது நாள்

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : பணவெடை

அனுபானம் : பால்

விளைவுகள் : சூரியனைப் போன்று உடல் ஒளியுடன் விளங்கும். நாகங்கள், பல விஷப் பூச்சிகள் நெருங்காது. பாம்புகள் கடித்தாலும் அவை இறக்குமேயன்றி, கடிபட்டவனுக்கு எந்தக் கேடும் நேராது. நவலோகத்தில் தோய்த்தால் பதினைந்து மாற்றாகும். துரிசியின் மேலே போட்டால் சுக்கான் போல் பொங்கி, பின்னர் சாம்பல் போலாகும். இந்தச் சாம்பலை லிங்கத்தின் மேல் தோய்க்கும் போது கட்டும். மேலும் வீரத்தில் வேதித்துப் புடம் போட மணிபோல நின்று உருகும்.

வெள்ளைக் குராய்க் கற்பம்

306. வெள்ளைக்கு ராய்விதையை வெள்ளிப் பொடி யோடுங்
கொள்ளவுடல் பூரிக்குங் கோநெய்யி - லுள்ள
தினவடங்கும் பூசவிலை தின்னப் புழுச்சாம்
மனமடங்குஞ் சுக்கிலத்தின் மால். (32)

307. சுக்கிலமு மேனோக்குந் தொக்கிறு கும்பூவில்
மிக்கரசந் தானிறுகும் வேர்ப்பட்டை - முக்கியமாஞ்
சூதபுடம் போடச் சுரபிகுளி கைக்காகு
நீதிவிரை மிங்கிலிக்கா நேர். (33)

-(சி.வெ)

வெள்ளெருக்குக் கற்பம்

308 வெள்ளெருக்கை யாதித்த மூலத்தில் வெண்பட்டால்
உள்ளிருத்திச் சாவற்கு டொன்றீய்ந்து-விள்ளு
மிரவிமந்தி ரத்தால் நூற் றெட்டினால் மூலம்
விரவி யருதெடுக்க வேர். (23)

309. வேரிற் கணபதி செய்[1] வெள்ளிச் சிமிழ்பொதித்து
தூறிற் கணபதியாற் சோடசமுந் - சீருற்ற
மந்திரத்தை யுச்சரிக்க வாய்க்கும் ரசக்குளிகை
யந்திரத்தில் யோகசித்தி யாம். (24)

310. ஆங்கொங் கணபதியென் றட்சரம் லட் சஞ்செபிக்கத்
தாங்கங்க மானந் தனையெழுப்பு - நீங்காமல்
பூவுண்ண வல்லார்க்குப் பூசரியாங் கேசரியாங்
காவலனாம் யோகரொடுங் காண். (25)

311. ஒடுங்காத சுக்கிலமு முன்னொடுங்கும் பூவுண்ண
நெடுங்காலங் கொண்டுவர நித்த - மடுஞ்சூத
முண்டுலகெ லாமறியு யோகியாங் காரணத்தைக்
கண்டுதெளி வாரிலையே காண். (26)

312. காலை செய்ய தாரிருக்க கார்கடுப் பூவதனில்
வேலையிர தஞ்செயித்தல் வீசத்தால் - மாலென்று
மப்பிர கம்பாய் செயிக் குறிவச் சாரமதில்
வெப்பமயிர் பூசவெள்ளை யாம். (27)

வேரில் கணபதி செய் - வெள்ளெருக்கு வேரில் பிள்ளையார் செய்யும் வழக்கம் இன்றும் இருந்து வருகிறது. தஞ்சைமாவட்டம் பாபநாசம் திருப்பாலத் துறையைச் சேர்ந்த ஸ்ரீ நெல்லையப்பர் இச்சிலைகளைச் செய்து வருகிறார். வெள்ளெருக்கின் வேரைக் கொண்டு வந்து, பூசை முறையுடன் விநாயகர் சிலையைச் செதுக்கி உருவாக்குகிறார். பால் சக்தியுடன், மந்திர சக்தியும் மருந்துக் குணமும் கொண்டது. வெள்ளெருக்கு வேர் விநாயகர் சிலை நவரத்தினங்களை விட உயர்வானது என்று போற்றப்படுகிறது. - தினமணிகதிர். ப.39.

313. வெள்ளையாங் குட்டத்தில் மேல்பூசி யுட்கொள்ளக்
கள்ளம் போய் மேலுங் கருக்குமே - விள்ள
இரதத்தில் மத்திக்க யீனமுண் டாம்பாபஞ்
சரதத்தில் வெள்ளை செயுந் தான். (28)

314. செய்யுமிலைச் சாறுவிட்டு சேர்தோ லையிலெரிக்க
அய்யு மிரதமுஞ்சை யோகத்தா - நொய்யபூப்
பட்டையுடன் மத்திக்கப் பாவகமாங் கிஞ்சுகமு
மிட்ட தனையதினி லே. (29)

315. அதனின் விதையரைத்தே யங்குலமேல் பூசிச்
சதன குகை பூத்தாதின் சார்வாய்ப் - பதனப்
புடம்பதினா றாகியே போட்டெடுக்கப் பற்ப
முடம்புறு நோய் கண்டோடு மே. (30)

316. கண்டோடும் பற்பத்தைக் காற்குன்றி கொண்டுவர
வண்டோடு போல மயிர்கறுக்கும் - பண்டே
தொகுத்த விதத்தில் பாலுணவு சொன்னபடி கொண்டால்
மிகுத்துவமாம் யோகிக்கு மேல். (31)

-(சி.வெ)

வெற்பேந்திக் கற்பம்

317. வெற்பேந்தி சூரணமும் வெல்லமுமுண் டாலுடம்பு
கற்பாந் திரமாகும் காயசித்தி - உற்பாதம்
காட்டும் புணர்ந்திடினுங் காணாது விந்துணர்வு
பூட்டுங் குறு முனிப் போல்.

318. மாக்கல்வ மாத்திரநீ வாயார வுண்மேகம்
போக்கிவெட்டை வெள்ளைமுதற் போக்குமே-பாக்கியமாம்
வெற்பேந்தி யுண்ணித்த விந்தையிறுக் கிக்காயம்
பொற்பேந்தப் பண்ணுநிதிப் போல்

-(தே. வெ)

வெற்பேந்தியை இடித்துத் தூளாகச் செய்து கொண்டு வெல்லத்துடன் உட்கொண்டுவர வேண்டும்.

விளைவுகள் : உடல் கற்பாந்த காலம் வரை நீடித்திருக்கும். அங்ஙனம் நீடித்தற்குரிய காயசித்திக்கான நிமித்தங்கள் முன்னறிவிப்பாக உடம்பிடையே தோன்றும். மேலும் மங்கையருடன் கலவி செய்யினும் விந்திறக்கம் காணாது தம்பிக்கும். உடலினை அழகுடைய தாகச் செய்யும்.

வேம்புக் கற்பம்

319. சஞ்சீவி யாகும்நூ றாண்டின் வேம்பை
சதைப்பட்டை வெட்டிவந்து நிழலு லர்த்தி
துஞ்சீவி யிடித்துச்சூ ரணமே செய்து
சுத்தமாங் கருங்குன்றி சாறு வாங்கி
பஞ்சீவி ஐந்துவிசை பாவகமேப் பண்ணி
பருதிமுன்னே பரப்பியே வடிகட்டிக் கொண்டு
நஞ்சீவி கற்கண்டு நாலிலொன்று சேர்த்து
நலமாக மண்டலந்தான் கொண்டி டாயே. (89)

320. கொண்டிட்டால் வைரம்போ விறுகுந் தேகம்
குறிப்பாகக் கண்ணிரெண்டுஞ் சிவப்பு மாகும்.
முன்றிட்டால் ஊழ்வினைப் பயனும் போகும்
முகாந்தமாங் கற்பவரை உருகுந் தேகம்
நன்றிட்டால் நரம்பதுவு முறுக்கு மாகும்
நரைதிரையு மாறியே ஞான முண்டாம்
உன்றிட்டால் யோகத்தி லுறுதி யாகும்
ஒருகாலுஞ் சாவுயில்லை உண்மை தானே. (90)

-(போ.க.வி)

321. ஆமப்பா யிதுகடந்த நூற்றாண்டின் வேம்பை
அப்பனே பட்டையைத்தான் வெட்டிவ ந்து
ஓமப்பா மேல்தோலை சீவிப் போட்டு
உத்தமனே நிழலுலர்த்தா யுலர்ந்த பின்பு
தாமப்பா யிடித்துநன்றாய் சூரணமே செய்து

சாதகமாய்க் கருங்குன்றிச் சாறு வார்த்து
தேமப்பா வேழுதரம் பாவனையே செய்து
திறமாக நிழலுலர்த்தா யுலர்த்தி டாயே. (20)

322. உலர்ந்தபின்பு யெட்டிலொன்று கற்கண்டு கூட்டி
உத்தமனே யிருநேரங் கழஞ்சு கொண்டால்
மலர்ந்து நின்று அலையாமல் மண்ட லந்தான்
மைந்தனே வைரம்போ லிறுகுந் தேகம்
கலந்துநின்ற நாடியெல்லா முறுக்கு மேறிக்
கண்துலக்க முண்டாகி யழுந்துந் தேகம்
நலந்திகழும் நரைதிரைகள் பலமுங் கெட்டு
நமனுக்கு நமனாவாய் நன்றாய்ப் பாரே. (21)

-(கா.க)

323. போமப்பா யிதுகடந்த பின்பு நீதான்
புகழ்பெறவே நூறாண்டின் வேம்பைப் பார்த்து
ஆமப்பா பட்டையைத்தான் வெட்டி வந்து
அப்பனே நிழலுலர்த்தா யுலர்த்திப் பின்பு
தாமப்பா யிடித்துநன்றாய்ச் சூரணமே செய்து
கரிசாலை மல்லிகையின் சாறு வார்த்து
தேமப்பா ஏழுதரம் பாவனையே செய்து
சிறப்பாக வெருக்கடித்தூள் கொண்டிட்டாயே. (278)

324. கொண்டிடவே அனுபான வகையைக் கேளு
குறிஞ்சித்தே னதிற்குழைத்து நாற்பது நாட் கொள்ளு
விண்டிடவே அந்திசந்தி கொள்ளு கொள்ளு
மெய்யெல்லாங் கருங்காலி வைர மாகும்.
துண்டிடவே நரைதிரைக ளெல்லாம் போகுஞ்
சுக்கிலந்தான் மேலிறுகிக் கீழோ டாது
கண்டிடவே யாறுதலம் வெளியாய்க் காணுங்
காலனுமே அஞ்சிடுவான் காணு காணே (279)

-(போ. சூ. எ)

கருவேம்புக் கற்பம்

325. உண்மையாய்க் கருப்பாக வேம்புண் டாக்கி
உகந்துமே மண்டலந்தான் கொண்டா யானால்
வெண்மையாஞ் சடமதுவுங் கருவண்டு போலாம்
மேனியினில் ரோமமெல்லாம் நிமிர்ந்தெழும்பும்
தண்மையாய் தான்தானுங் கற்பாந்த காலம்
சமாதியிலே யிருக்கலாந் தளுக்காய்க் காணும்
எண்மையா யிருந்தாயானால் ....
ஏறுகின்ற கதிர்போல யிருக்கும் பாரே. (91)

-(போ.க.வி)

சர்க்கரை வேம்புக் கற்பம்

326. காணவே மலைதோறுஞ் சர்க்கரைவேம் புண்டு
காய்தின்றால் கற்கண்டு போலே தோனும்
பூணவே யிலைதின்றால் மண்டலத்திற் சித்தி
புகழான காய்தின்றால் பட்சத்திற் சித்தி
தோணவே பட்டைதின்றால் வாரத்திற் சித்தி
துடியான பழந்தின்றால் மாதத்திற் சித்தி
ஆணவே வேருண்டா லொருநாளிற் சித்தி
ஆச்சரிய மிதுதேடி யறிந்து கொள்ளே. (280)

-(போ. கு. எ)

327. நன்றான வேம்பிலே சர்க்கரைவேம் புண்டு
நலமான யிலைதின்றால் சர்க்கரைபோற் றோன்றும்
பன்றான யிலைதின்றா லொருநாளில் சித்தி
பாங்கான காய்தின்றால் சாமத்திற் சித்தி
யொன்றான பூவுண்டாற் கடிகையிலே சித்தி
உத்தமனே வேரென்றால் மூர்ச்சை யாகுங்
குன்றான பட்டையுண்டாற் சட்டை கக்குங்
கொள்ளுகின்ற பேர்களுக்கு லகுவு தாவே. (22)

-(கா. க)

328. பாரென்ற மலைதோறுஞ் சர்க்கரை வேம் புண்டு
பட்டைதின்றால் கற்கண்டு போலே காணும்
காரென்ற யிலைதின்றால் கரும்பு போலாங்
காய்தின்றால் மாம்பழத்தின் ரசனை யாகும்
வேர்தின்றால் கஸ்தூரி வாசம் வீசும்
விதை தின்றால் மிக்கநெல்லிக் காய்போ லாகும்
தூரென்ற சமூலந்தான் சூரணமே செய்து
தனியாவின் பால்தனிலே சமத்தாய் உண்ணே. (92)

329. உண்ணவே மண்டலத்தில் கவன சித்தி
யோகசித்தி லோகசித்தி உயர்ந்த சித்தி
விண்ணவே வேர்தன்னில் சூதங் கட்டு
மிக்கான யிலைதன்னில் நாகங் கட்டுங்
கண்ணவே காய்தன்னில் செம்பு நீறுங்
கடிய தோர் விதையிலே தாது கட்டும்
பண்ணவே பட்டைதன்னில் உப்பு கட்டும்
பாங்கையெல் லாம்யான்சொன் னபடிப் பாரே. (93)

330. படியான சர்க்கரையாம் வேம்பின் காயைப்
பக்குவமாய் யிளம்பிஞ்சு பருவம் பார்த்து
கடியாகத் திடிஞ்சுமே சாறும் வாங்கிக்
காய்ச்சியே கொழுந்தன்னை தேய்திட் டாக்கால்
எடியான அயந்தானு மேம மாகும்
ஏத்தமாம் நிச்சயமாய்ப் பார்த்த ....
படியான ....
....சொன் னேனே (94)

-(போ.க.வி)

சிவனார் வேம்பு கற்பம்

331. இறுகுமே சிவனார்தன் வேம்பி னோடு
ஏத்தமாம் வாலுளுவைச் சமனாய்க் கூட்டி
நறுகுமே யிடித்துறையப்புடத்தில் தைலம்
நலமாக வாங்கியே வைத்துக் கொண்டு

திருகுமே சீரகமுஞ் சர்க்கரையும்போட்டு
திரமாகக் கலக்கியதில் வைத்துக் கொண்டு
கருகுமே கால்கழஞ்சு அந்தி சந்தி
கனமான மண்டலத்தால் கொண்டி டாயே. (101)

332. கொண்டிட்டால் வாதபித்தங் கபத்தை சாடும்
கெடியான தாதுவெல்லாம் பருத்து ஏக்கும்
கண்டிட்டார் கோடிரவி காந்தி யில்லை
காலுரக்கும் மெத்ததூரம் நடந்திட் டாலும்
தண்டிட்டார் சமாதிக்குள் ளிருந்தால் கேளு
சாங்கமாங் க்ரைப்புண்டாந் தளர்ச்சி யில்லை
விண்டிட்டார் சரசோதி நிர்த்தஞ் செய்வாள்
வேதாந்தம் பார்த்துநித்தம் வரவி டாயே. (102)

- (போ.க.வி)

333. போனபின்பு பின்புமொரு கற்பங் கேளு
புகழ்ந்து நின்ற சிவனார்தன் வேம்பி னோடு
ஆனபின்பு வாலுளுவை வித்துங் கூட்டி
அப்பனே சமனாகக் கூட்டிக் கொண்டு
தானபின்பு யிதையிடித்துப் புடத்தில் தைலஞ்
சாதகமாய் வாங்கியல்லோ யெடுத்துக் கொண்டு
ஆனபின்பு சர்க்கரையுஞ் சீரகமும் போட்டு
யிதமாக கலக்கியதை வைத்துக் கொள்ளே. (27)

334. வைத்ததொரு தைலத்தை தினந்தோறும் மைந்தா
வாகாக கால்கழஞ்சு வுண்டு வாநீ
நைத்ததொரு மண்டலமே உண்டா யானால்
நலமான தாதுவெல்லாஞ் சுத்தி யாகும்
கைத்ததொரு பித்தமறுங் கபத்தைச் சாடும்
கனகம்போல் தேகமுமாம் கண்டு கொள்ளு
மெய்த்ததொரு சரசோதி நிர்த்தனஞ் செய்வாள்
வேதாந்த சாரமெல்லாம் வெளியாய்ப் போமே. (28)

- (ச.க.நூ)

335. ஆமப்பா இதுகடந்து சிவனார் வேம்பு
அப்பனே யிடித்துநன்றாய்ச் சூரணமே செய்து
தேமப்பா வாலுளுவை சரியாய்க் கூட்டிச்
சிறப்பாக கரந்தைச்சார் வார்த்த ரைத்து
தாமப்பா வில்லைபண்ணி நிழலு லர்த்திச்
சாதகமாம் பூப்புடத்தில் தைலம் வாங்கி
வாமப்பா முக்கழஞ்சு அந்தி சந்தி
மறவாதே மண்டலமுங் கொண்டிடாயே. (293)

336. கொண்டிடவே குஷ்டமெல்லாம் போகும் பாரு
கூறான சரீரத்தில் வாசம் போகும்
விண்டிடவே விஷகடிக ளெல்லாம் போகும்
மேனியுமே மாந்துளிரி னிறமு மாகுங்
கண்டிடவே கன்னியர்கள் வசம தாவார்
காரியமா மைம்புலனை யறுத்துச் சாடுந்
தூண்டிடவே யாசையுற்றால் காயசித்தி போகுந்
தூஷித்துக் கன்னியைத் தான் தொடலா காதே. (294)

-(போ. சூ. எ)

வேம்புக் கற்பம்

நூறாண்டின் வேப்பம்பட்டையை வெட்டி வ ந்து நிழலில் உலர்த்திக் கொள்ளவேண்டும். பின்னர், இதை இடித்துச் சூரணமா கச் செய்து கொண்டு, அத்துடன் கருங்குன்றிச் சாற்றைச் சேர்க்க வேண்டும். இவ்வாறு ஐந்து விசையளவு எடுத்துப் பாவகமாக செய்து கொண்டு, சூரிய ஒளியில் வைத்து வடிகட்டிக் கொள்ள வேண்டும். இதனை நாலில் ஒரு பங்கு கற்கண்டுடன் உட்கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

அனுபானம் : கற்கண்டு

விளைவுகள் : உடல் வயிரம்போல் உறுதியடையும். கண்கள் இரண்டும் சிவப்பு நிறமாகத் தோற்றமளிக்கும். ஊழ்வினை துன்பங்கள் நீங்கும். நீண்ட

கால அளவு உடல் நிலைத்திருக்கும். நரம்புகள் முறுக்கேறி உறுதியுடன் விளங்கும். நரைதிரை நீங்கி ஞானம் கிடைக்கும். யோகத்திற்கும் உறுதியாகும். சாவு என்பது இல்லை.

நூறாண்டு கடந்த வேப்பமரத்தின் பட்டையை வெட்டிவந்து, மேல் தோலைச் சீவி, நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். உலர்ந்தபின்பு, இடித்து நன்றாகப் பொடியாக்கிக் கொள்ள வேண்டும். பின்னர், அப்பொடியுடன் கருங்குன்றிச் சாறு சேர்த்து ஏழுமுறை ''பாவனை'' செய்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். அதனை எட்டில் ஒரு பங்கு கற்கண்டுசேர்த்து உட்கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம் (அந்தி, சந்தி)

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : ஒரு கழஞ்சு

அனுபானம் : கற்கண்டு

விளைவுகள் : உடலானது வைரத்தைப் போல உறுதியாகும். நாடி முறுக்கு ஏறும். கண்பார்வை நன்றாகத் தெரியும். நரைதிரைகள் அணுகாது.

நூறாண்டு கடந்த வேம்பின் பட்டையை வெட்டி வந்து இடித்துத் தூளாக்கிக் கொள்ள வேண்டும். கரிசாலை, மல்லிகை இவற்றின் சாறு வளர்த்து ஏழு முறை ''பாவனை'' செய்து உட்கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : 40 நாட்கள் (அந்தி, சந்தி)

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : வெருக்கடி

அனுபானம் : குறிஞ்சித் தேன்.

விளைவுகள் : உடல் கருங்காலியைப் போன்று வலிமையானதாக மாறும். நரை திரைகள் நீங்கும். வந்து கீழோடாது தம்பிக்கும், 6 தலங்களும் தெளிவாகத் தெரியும். சாவு அணுகாது.

கருவேம்புக் கற்பம்

கருப்பு வேம்பை உண்டாக்கி, வேம்புக் கற்பம் செய்யும் முறையிலேயே கருவேம்புக் கற்பத்தையும் செய்ய வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

விளைவுகள் : உடலானது கருவண்டு போலாகும். உடலில் உள்ள மயிர்கள் நிமிர்ந்து காணப்படும். சமாதியில் இருக்கும் காலத்தும் உடல் பொலிவுடன் விளங்கும்.

சர்க்கரை வேம்புக் கற்பம்

சர்க்கரை வேம்பின் இலை, காய், பழம், வேர் இவற்றை உட்கொண்டால் முறையே ஒரு மண்டலம், ஒரு பட்சம், ஒரு மாதம், ஒரு நாள் இவற்றில் சித்தியுண்டாகும். பட்டையைத் தின்றால் வாரத்தில் சித்தி கிடைக்கும்.

சர்க்கரை வேம்பின் இலை, காய், பூ இவற்றைத் தின்றால் முறையே ஒருநாள், ஓர் இரவு, ஓர் கடிகை இவற்றில் சித்தியுண்டாகும். வேரைத் தின்றால் மூர்ச்சையாகும். பட்டையைத் தின்றால் சட்டை கழன்று போகும்.

மலைதோறும் சர்க்கரை வேம்பு கிடைக்கும். இதன் பட்டையைத் தின்றால் கற்கண்டு போல இனிப்புச் சுவையுடன் இருக்கும். இவையைத்தின்றால் கரும்பைப் போல இனிய சுவை உடையதாக இருக்கும். காயைத் தின்றால் மாம்பழச் சுவையுடன் இருக்கும். வேரைத் தின்றால் கஸ்தூரி வாசனை வீசும். விதையைத் தின்றால் நெல்லிக்காய் போல இருக்கும்.

சர்க்கரை வேம்பின் சமூலத்தைக் கொண்டு வந்து உலர்த்தி, இடித்தபின் சூரணமாகச் செய்து கொள்ள வேண்டும். இதனைப் பசும்பாலுடன் உட்கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

அனுபானம் : பசும்பால்

விளைவுகள் : கவன சித்தி, யோக சித்தி, லோக சித்தி இவை கிடைக்கும். வேரினால் சூதங்கட்டும். இலையால் நாகம் கட்டும். காயினால் செம்பு நீறும். விதைத் தயிலத்தால் விந்து கட்டுப்பட்டு, கீழோடாதிருக்கும். பட்டையினால் உப்புகட்டும்.

சர்க்கரை வேம்பின் காயை இளம்பிஞ்சு பருவத்தில் பறித்துவந்து, இடித்துச் சாறு எடுத்துக் கொள்ள வேண்டும்.

சிவனார் வேம்புக் கற்பம்

சிவனார் வேம்போடு வாலுளுவையை (வித்து) சம ாகச் சேர்த்து, நன்கு இடித்து, புடமிட்டு, தைலமாக்கிக் கொள்ள வேண்டும். இத்தைலத்தில் சீரகம், சர்க்கரை இரண்டையும் சேர்த்துக் கலக்கிக் கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம் (அந்தி, சந்தி)

உண்ணவேண்டிய மருந்தின் அளவு : கால் கழஞ்சு

விளைவுகள் : வாத, பித்த, கபம் இவற்றால் வரும் தொல்லைகள் நீங்கும். விந்து விருத்தியாகும். கனல் உண்டாகாது, நீண்ட தூரம் நடந்தாலும் துன்பம் உண்டாகாது. தளர்ச்சி ஏற்படாது.

''சட்டை முனி கற்பம் நூறில்'' இதே செய்முறையே கூறப்பட்டுள்ளது. எனினும் பலன்கள் கூறுமிடத்துச் செய்திகள் விடுபட்டுள்ளன. தேகம் பொன்போலாகும் என்ற செய்தி சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

சிவனார் வேம்பைக் கொண்டு வந்து, இடித்துச் சூரணமாகச் செய்து கொள்ள வேண்டும். அதனுடன் சமபங்கு வாலுளுவையைச் சேர்த்துக் கொண்டு, கரந்தைச் சாறு சேர்த்து நன்றாக அரைத்துக் கொள்ள வேண்டும். அரைத்துக் கிடைக்கும் விழுதில் வில்லைகள் செய்து கொண்டு நிழலில் உலர்த்தியெடுக்க வேண்டும். பின்னர் பூப்புடத்தில் வைத்துத் தைலமாக்கிக் கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம் (அந்தி, சந்தி)

உண்ண வேண்டிய மருந்தின் அளவு : முக்கழஞ்சு

விளைவுகள் : குஷ்டமெல்லாம் போகும். ஃஉடலில் உண்டாகும் நாற்றங்கள் நீங்கும், விஷக்கடிகளால் உண்டாகும் துன்பங்கள் போகும். உடல் மாந்துளிரின் நிறம் போன்று சிவந்து தோன்றும். கன்னியர்கள் வசமாவார்கள்.

நீக்க வேண்டியவை : பெண் போகம் கூடாது. அவ்வாறின்றி ஆசை கொண்டால் காயம் சித்தியடையாது.

பஞ்சமூலிக் கற்பம்

337. விழலாகப் போகாமல் கரிசாலை கரந்தை
மிக்கான பொற்றலையும் நீலிவல் லாரை
பழலாகப் பாக்களவு பாலில் கொள்ளு
பாங்கான மண்டலந்தா னுண்டா யானால்
கழலாக காயந்தான் ஆயிரத்து எட்டு
கனகம் போல் சடந்தானும் கனிந்து மின்னும்
மழலாக வார்த்தையது கின்னரத்தின் ஒலியாம்
மகத்தான வாசியுமே யிறுகும் பாரே. (100)

-(போ.க.வி)

-(போ.க.வி)

கரிசாலை, கரந்தை, பொற்றலை, நீலி, வல்லாரை ஆகிய ஐந்து மூலிகை களையும் பாக்களவு பாலுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

உண்ண வேண்டிய கால அளவு : ஒரு மண்டலம்

அனுபானம் : பால்

விளைவுகள் : உடல் பொன்போல் மின்னும். குரல் கின்னரத்தின் ஒலியைப்போல இனிமையுடன் விளங்கும். மூச்சு இறுகும்.

கருப்பு மூலிகைக் கற்பம்

338. ....
....
....
....
மண்ணப்பா வேட்டயத்தில் செங்கொட்டை போட்டு
வளமாக நீர்கட்டி அழுகப் பண்ணி
பண்ணப்பா பிரட்டியதை யாற விட்டுப்
பருவமுடன் பாத்திகட்டிப் பதிக்கக் கேளே. (4)

339. பத்திக்கிறது ஒருபக்கம் குமரி யப்பா
பாங்காக நடுவேதான் நீலி வயக்கம்
மத்திக்கிறது வல்லாரை கரிசாலைப் பாவும்
மருவியதோர் பொற்றலையுங் கஞ்சாப் போடு
வித்திக்கிறதோர் ஓமமிடு செருப்படையைப் போடு
விளங்கிமுற்ற காய்த்தபின்பு விதையை வாங்கு
முத்திக்கிறதோர் இப்படித்தான் முக்காலு மிட்டு
உத்தமனே மூன்றுதரம் பயிரு பண்ணே. (5)

340. பயிரான மூன்றுதின மான பின்பு
பக்குவங்கேள் சொல்லுகிறேன் பண்பாய் மக்காள்
வயிரான பாலிலே கந்தகத்தை சுத்தி
வாங்கியதை கல்வமிட்டு குமரி வார்க்க
கயிரான மூன்றுநாள் ஆட்டு ஆட்டு
கைமுறையாய் செருப்படையை மூன்றுநா ளாட்டு
தயிரான பதத்திலே உலர்த்திப் போடு
சாதகமாய் சாய்ந்தபின்பு யெடுத்து வையே. (6)

341. வைத்தபின்பு சூதத்தைக் கல்வத் திட்டு
வாகாக கஞ்சாவும் ஓமம் சேரு
ஒத்தபின்பு ஆறுநாள் ஆட்டு ஆட்டு
உத்தமனே பொடியாகும் சூதந்தானும்
நைத்தபின்பு உலரவைத்து யெடுத்துக் கொண்டு
நாட்டுரெண்டுஞ் சமனாக சேர்த்துக் கொண்டு
கைத்தபின்பு மிளகுவிட்டு குமரி யுண்ணு
கைமுறையாய் யிருபதுநாள் உண்ணுங் காணே. (7)

342. காணப்பா யிதுகடந்தால் கரிசாலை யுண்ணு
கைமுறையாய் மண்டலந்தான் கருக்குங் காயம்
பூணப்பா யிதுகடந்து..............................
பொற்றலையும் வல்லாரை ....
தோணப்பா சமனாக பாக்களவு பாலில்

சுகமாக மண்டலந்தான் உ ண்ணு [உண்ணு]
ஆணப்பா காயத்தில் நரைதா ன் போகும்
அழகான மன்மதன் போ ல் ஆவாய் தானே. (8)

-(கொ.க.நூ)

343. பாரென்று கைகொடுத்து சி த்தர் மெச்சும்
யாங்கான கெவுனத்தே அழைத்துப் போவார்
தாரென்று கருப்புரக்கி மூ மிகையைத் தானும்
சாதகமாய் இதன்பிற 5 உண்டோ கற்பம்
நேரென்று பூமியிலே குழ யை வெட்டி
நினைவாகச் செங்கெ ாட்டை வெட்டிப் போட்டு
தூரென்று[1] முழஉயரம் பரப்பிக் கீழே
சுகமாக கரும்பை ம ண்ணைக்[2] கீழே போடே. (70)

344. போட்டதின் மேல் நீர் விட்டுக் காயாமல் கட்டு
புகழான .... உருகிப் போகும்
நீட்டவே சிறுகவதைக் கொத்திப் பார்த்து
நேராக மண்கருந்த பதத்தைப் பார்த்து
மூட்டதிலே முழுக்கொட்டை போட்டா யானால்
மூதண்ட மாறுதிங்கள் பொருமி நிற்கும்
காட்டதிலே சலம்விட்டு மேலேக் கிண்டி
காயாட்டால் ஏழுதிங்கள் சோறு மாமே. (71)

345. ஆமப்பா வெட்டினதோர் கொட்டை யானால்
ஆசையில்லை மூன்றுதிங்கள் வித்தையெல்லாம் விடலாம்
ஓமப்பா வெட்டாத கொட்டை யானால்
ஓரெட்டுத் திங்களிலே வித்தையெல்லாம் போமே
சோமப்பா வித்தென்ன தெளிப்ப தென்றால்
செப்புகிறேன் நீலியொடு கரிசாலை கரந்தை
தாமப்பா பொற்றலை வல்லாரை யோடு
சாதகமாய் சிறியசெருப் படியும் போட்டே. (72)

1. யிரண்டு முழ உயர மப்பா 2. மேலே.

346. போடப்பா குமரிதன்னோ டோமம் தானும்
புகழான நிலப்பனையும் கொல்லன் கோவை
நீடப்பா திருமேனி வீழி தானும்
நிலையான முறைமசக்கி சிவனார் வேம்பு
ஊடப்பா கொடிவேலி யிதுக ளெல்லாம்
ஒவொன்றாய் வரிசையுடன் பயிரே செய்து
சூடப்பா தேவிபதம் பூசை பண்ணு
சுணங்கலாய் மறந்துவிட்டால் பயிரா காதே. (73)

347. பயிரான மூலிகைதான் முதல்தரத்தில் கேளு
பாங்காக கால்வாசி கருப்பே யோடும்
அயிரான மறுதரத்தில் அரைவாசி கருக்கும்
அப்பனே மறுதரத்தில் முக்கால் வாசி
முயிரான மறுதரத்தில் முழுவாசி கருக்கும்
மோசமில்லை கருப்பாகும் பெரியோர் செய்தார்
மயிரான கருப்பாகும் சோதனையைச் சொல்வேன்
மைந்தனே மனமகிழக் கண்டி டாயே. (74)

348. கண்டு கொண்ட சோதனைதான் கொக்கிறகு தானும்
கைமுறையாய் முழுகறுப்பின் பன்னீருக் குள்ளே
கண்டுகொள்ள பிரட்டியதைத் தேய்த்துப் பார்த்தால்
சாதகமாய்க் காகத்தி னிறகே யாகும்
உண்டுகொள்ள கழுவியதைத் தேய்த்தாலும் போகா
உண்டவர்க்கு மயிர்கருக்கும் சம்சயமோ யில்லை
பண்டு கொள்ள கால்கருப்பை முன்னேக் கொள்ளு
பாங்கான அரைக்கருப்பை பின்னே கொள்ளே. (75)

349. கொள்ளப்பா அதன்பின்னே முக்கால் வண்ணங்
கூசாமல் முழுக்கருப்பை சன்னித் தின்னு
உள்ளப்பா சட்டையொன்று கழன்று போகும்
உத்தமனே ரோமமெல்லாம் தும்பிப் போலாம்
மெள்ளப்பா முந்திமுந்தி வல்லாரைக் கொள்ளு

விளங்கியதோர் கரந்தைகொள்ளு கரிசாலை கொள்ளு
நள்ளப்பா குமரிகொள்ளு ஓமங் கொள்ளு
நலமான செருப்படியும் வீழி கொள்ளே. (76)

350. இருந்திட்ட மலைதோறும் சுந்தரா னந்தர்
எல்லோரும் கருப்பாகச் செய்யு மார்க்கம்
பருந்திட்ட குழிவெட்டி ரெண்டாள் மட்டும்
பாங்காக அதுநிறைய செங்கொட்டை போட்டு
வருந்திட்ட மண்போட்டு அதின்மே லய்யா
வைத்தாரே கருநெல்லி கருத்த நொச்சி
கருந்திட்ட கஞ்சாவும் கொடிவேலி யுந்தான்
கைமுறையாய் வைத்தார்கள் கருப்பாய்ப் போச்சே. (79)

351. கறுத்திருந்த மூலிகைதான் குகைதோறும் நிற்கும்
கைமுறையாய் அதுகண்டு நடந்த பின்பு
ஒறுத்திருந்த குளிகையிட்டு ஓடிச் சென்று
உத்தமனே யவரவரைக் கேட்டு உண்ணு
மறுத்திருந்து திருடாதே பொய்சொல் லாதே
வாயாடித் திரியாதே நமக்குக் கொஞ்சம்
பொறுத்திருந்த சட்டைமுனிப் பிள்ளை யென்றால்
போகுமுன்னே கைகொடுத்துப் புகழ்செய் வாரே. (80)

352. புகழாக யிதன்பிறகு முண்டியை உண்ணு
போக்கோடே சோதியோடு சுணங்க முண்ணு
திகழாக சாம விருட்சஞ் சாயா விருட்சஞ்
சாதகமாய்ச் சேர்ந்தோடும் பாவை யுண்ணு
துகழாகச் சுரபியுண்ணு ரோம முண்ணு
சொற்பெரிய எருமையுண்ணு பாலை யுண்ணு
இகழாதே உன்மனையைக் கண்டு தேறி
இவளுடைய நாதத்தின் கற்பங் கேளே. (81)

-(ச.க.நூ)

353. தன்னியே மூலிகையைக் கருப்பு பண்ணச்
சாதகமா யரைமட்டுங் குழிதான் வெட்டித்
தெள்ளியே செங்கொட்டை ஒன்றிரண்டாய் வெட்டிச்
சிறப்பாக முழவு சாம்பற் பரப்பி மேலே
அள்ளியே கரம்பைமண் மேலே போட்டு
அழகாக பாத்திகட்டி நீரை விட்டு
நள்ளியே அழுகவிட்டு மூன்று திங்கள்
நலமாகக் கொத்தியே யாறப் போடே. (306)

354. ஆறவிட்டு பதிப்பதற்கு விபரங் கேளு
அழகான குமரியொடு ஓமங் கஞ்சா
தேறவிட்டு வல்லாரைக் கரிய சாலை
சிறப்பான செருப்படியும் நீலி வீழி
ஏறவிட்டு பொடுதலையும் நொச்சி நெல்லி
இதமான கரந்தையோ டூமத்தைத் தும்பை
சீறவிட்டு கொல்லனுட கோவை வாழைச்
சிறப்பாகப் பதித்துவைத்து தண்ணீர் வாரே. (307)

355. வார்த்தல்லோ பயிராக்கித் தண்ணீர் வார்த்து
வாகாகக் காய்ந்தபின்யு விதையை வாங்கிப்
போட்டல்லோ முன்போலே செங்கொட்டை யிட்டுப்
புகழாக மறுபடிதான் விதையைப் போட்டுக்
கோர்த்தல்லோ கோடிடத்தில் கொட்டை யிட்டுக்
கொடுஞ்சுறுக்காய் விதையிட்டுப் பயிரைப் போடு
ஏற்றல்லோ இப்படித்தான் நாலுதரம் போடு
என்மகனே முழுக்கருப்பாம் மூலி தானே. (308)

356. தானென்ற மூலிகைதான் மலைகள் தோறுஞ்
சாதகமாய் வைத்தாரே ரிஷிகள் சித்தர்
வானென்ற கருப்புக்குப் பரிட்சை கேளு
வாகாகக் கொக்கிறகு கொண்டு வந்து
பானென்ற யிலைக் கசக்கி மேலே பூசப்

பரிவான காகத்தி ஸிறகே யாகுங்
கோனென்ற இலைதின்றால் காய சித்தி
கொடுஞ்சுறுக்காய் கோடிவரை யிருக்குந் தானே. (309)

-(போ.சூ.மெ)

357. கேட்டிடு மஞ்சள் கெடியான மூலிகை
நாட்டிற் கரிசாலை நலமாய்க் கருப்பேற
மாட்டிக் குழிவெட்டி யதிலேநல் மண்ணிட்டுப்
பூட்டிடு செங்கொட்டை புகழாக வெட்டியே. (40)

358. வெட்டி பரப்பி மேலே முன் மண்போட்டு
ஒட்டி விதையிட் டுறவாரு நல்லநீர்
வட்டி முதலுந்தான் வளமா மரைவாசி
கட்டி விதையைக் களர்மண்ணிற் கொட்டையே. (41)

359. கொட்டை தனைப்போட்டுக் கொட்டிப் பரப்பிட்டு
சட்டையா முன்விதை தானே தனியிட்டு
அட்டிய நீர்விட் டடைவா யருத்துநீ
இட்டமாய் மூன்றாந்தர மிப்படிப் பண்ணே. (42)

360. மூணாந் தரத்தில் முழுகருப்பா மேலாம்
ஆணான சித்தர்க ளங்கங்கு செய்வது
வேண செடிகள் வெளுப்புக் கருப்பாகும்
ஊணவே செய்தார் உத்தமர்தான் கேளே. (43)

-(தி.மூ.க.)

துவாதேசி லேகியம்

361. வரிசையாய்ச் சொல்லுகிறேன் ஆதி தொட்டு
மகத்தான கற்பங்கள் கொள்ள வேண்டிப்
பிரிசமாய் வாதபித்த சிலேற்ப னந்தான்
பேய்க்கூத்தாய் பண்ணாமல் கூடே றாமல்

பரிசத்தே உஷ்ணங்கள் பாய்ந்தே றாமல்
பண்பான லேகியமொன்று சொல்லு றேன்கேள்
உரிசைபெற செவ்விளநீர் படிதா னெட்டு
உத்தமனே கற்றாழஞ் சோறு தானே. (11)

362. தானென்ற கற்றாழஞ் சோறு நாழி
தாழைவிழ துச்சாறுப் படிதா னொன்று
வேனென்ற திதினுள்ளே கற்பங் கேளு
வெட்பூலா வேர்ப்பட்டை யாவாரை பஞ்சாங்கந்
தேனென்ற யித்தியோடு அத்திப் பட்டை
தேறுவிதை சூரிவிதை நிலத்தாலங் கிழங்குங்
கோனென்ற குருவிஞ்சி குறுந்தொட்டி மூலம்
குழிண்டா [1] னிலந்தையுடன் வில்லை வேரே. (12)

363. வில்லையிலே பழத்தோடு விளாம்பழத்தி னோடு
மீறாமல் வகையொன்று பலந்தான் வீதம்
யெல்லையிலே யிதுவெல்லா மிடித்துப் போட்டு
யெட்டிலொன்றாய்க் காய்ச்சியதை யப்பால் நாழி
தொல்லையில்லா துளசிச்சாறு படிதா னொன்று
தூயகதலி பழச்சாறு படிதா னொன்று
வல்லாரை புளியாரை யிஞ்சிச் சாறு
வகையொன்று படியொன்று மாட்டு வாயே. (13)

364. மாட்டுவாய் துவாதேச லேகியஞ் சொல்வேன்
மக்களே சீனிபலம் மூன்று பத்து
தீட்டுவாய் பனைவெல்லம் பலந்தான் பத்து
செங்கரும்பின் வெல்லமது பலந்தான் பத்து
மூட்டுவாய் கரைத்தேதான் [2] அயசட் டிக்குள்
மோகமாய் வடிகட்டி யடுப்பி லேற்றி
நாட்டுவாய் குழம்பான பாகு சேரில்
நலமான அமிர்தசஞ் சீவி தானே. (14)

---

1. இலந்தை வேர். 2. அயத்தாழி

365. சஞ்சீவி பலம்பத்து அசுவ மூலம்
தன் தூளாம் பலமொன்று நிலப்பனையின் கிழங்கு
மிஞ்சாதே சூரணந்தான் பலந்தா னொன்று
வெண்கருடப் பச்சைத்தூள் பலந்தா னொன்று
அஞ்சாதி திரிக்கடுகு ஓமங் கல்நார்
அரைப்பலந்தான் வகைவீதஞ் சீ... தான்
துஞ்சாதே வாலுளுவை கோஷ்ட்டங் காரஞ்
சுகபேதி திரிபலையும் வசம்புங் கூட்டே. (15)

366. கூட்டுவாய் லவங்கமொடு யேலங் காயங்
குக்கில்தா னிசபத்திரி பறங்கிப் பட்டை
நாட்டுவாய்[1] சாமிபூரம் விளங்கஞ்சிறு நாகப்பூ
நாகபற்பம் லோகபற்பம் காந்த பற்பம்
மூட்டுவாய் சுண்ணாம்பி னுப்பின் பற்பம்
முலைப்பாலில் காய்ச்சியெடு உவர்ப்பூ பற்பம்
ஆட்டுவா யமுரியுப்பும் சாதிக் காயும்
அப்பனே சாதிப்பத்திரிகிராம்புத் தானே. (16)

367. தானேகே ளதிமதுரம் வெள்ளரியின் வித்து
தருகோரோ சனையிதினோ டெல்லாங் கேளு
மானேகேள் வகையொன்று கழஞ்சு ஒன்று
மருள்கிழங்குத் தூள்பலமொன் றாகச் சேர்த்து
ஆனெயிலே படியொன்று கூட விட்டு
அப்பனே தேன்பதினெட் டிலொன்றே யிட்டு
ஊனுறவே லேகியந்தான் பதத்தில் வாங்கி
உத்தமனே பீங்கானில் வழித்து வையே. (17)

368. வையப்பா லேகியத்தை கன்னி மாதம்
மகத்தான தசமிதுலா லக்கி னத்தில்
தையப்பா நிறத்தமிட்ட சிவனை நோக்கி
சற்குருவின் பதம்போற்றி லேகி யத்தை

1. சாமிபூரம், கெசாபுரம், தேசாம்பூரம், தேசபூரம்

மெய்யப்பா விசுவாச மாக யெண்ணி
விளங்கவே கழஞ்சுரெண்டு நேர மப்பா
உய்யப்பா தினங்கொள்வாய் மண்ட லந்தான்
உத்தமனே மூன்றுவகை நோயும் போச்சே. (18)

369. போச்சப்பா துவாதேச லேகி யந்தான்
பூட்டியே தின்னாமற் கெட்டார் கோடி
ஆச்சப்பா அபமிருந்து தட்டவே தான்
அயகாந்த செந்தூரந் தன்னை செய்து
வாச்சப்பா தின்னாமற் கெட்டோர் கோடி
வாறாக பின்புஅறு சுவையை தள்ளி
நீச்சப்பா கடினமென்று கெட்டோர் கோடி
நிலைதப்பி முன்பின்னாய் நின்றோர் தானே. (19)

370. நின்றார்கள் கைதப்பி யிறந்தோர் கோடி
நிலைகெட்ட குருவினிட மாய்வார் வண்ணம்
சன்றான சற்குருவைக் காத்தா னாகில்
நரசின்ன மல்லவடா [1] சூரன் சித்தன்
ஒன்றான மனந்தானே ஒருமை யாகி
உள்ளபடி யிருக்குமென்று சித்தந் தானே
சென்றாடும் புத்தியினால் ஆன தாலே
சிவயோக முரண்டுவந்து தெளியொட் டாதே. (20)

371. ஒட்டாத மனக்குரங்கை சுழினைக் குள்ளே
உத்துப்பா றாதவண்ணம் மூதிப்பா ரப்பா
கெட்டாத வாசியிலே குளிகைப் போட்டு
கனலெழுப்பாய் தோஷமது தடிபோல் புத்தி
நிஷ்டையிலே லகிரிகொள்ள அபின் கஞ் சாவை
நேராக வேர்வைசா ராயந் தன்னை
கட்டாகக் கள்குடித்து முரடு பாய்ந்து
கருவான மனதறிவைக் காணா வாறே. (21)

---

1. ஞானி.

372. காணாமல் திரியாமல் ஆசாரந் தன்னை
காரணமாங் குருவாலே கண்டு தேறு
வீணாகிப் போகாதே காய சித்தி
வெதும்பவே [1]மனமுடைந்தால் கற்பங் கொள்ளு
தோணார்கள் முதற்கற்பம் லேகி யந்தான்
சொல்லாமல் மறைத்துவைத்தார் சித்த ரெல்லாம்
வாணாலே கொண்டுபோகா வண்ணஞ் சொன்னேன்
[illegible]ட்ட மாணாக்காள் சொல்லக் கேளே. (22)

373. சொல்லக்கே ளென்மகனே காய சித்தி
சுகமாக பெறுதற்குப் புத்திக் கேளு
அல்லக் கேள் துவாதேச லேகிய மென்று
அதுங்குப்பே ரிட்டதென்ன வென்று கேளு
வெல்லக்கேள் புரியஷ்டஞ் சொன்னபடி கேட்கும்
மீறுகின்ற மாத்திரையில் கடிகை யேறும்
செல்லவே தசவாய்வின் ஆங்காரம் போகும்
சித்தாந்த கிரிகையெல்லாஞ் சேரப் போமே. (23)

374. போமடா தசவாய்வு அஷ்த்திர வாய்வு
புகழான மிகுந்தநாடி நாஷ வாய்வு
சோமடா சலதோஷம் கபால வெட்டை
துயரமிட்ட மேகவெட்டை சலக்க ழிச்சல்
ஓமடா சயரோகங் கண்ணில் சூடு
உஷ்ணமென்ற தாகமொடு சூலை யெல்லாம்
ஆமடா சுரதோஷம் மூல ரோகம்
அப்பனே தூக்கங்க ளணுகொட் டாதே. (24)

375. அணுகொட்டா அனுபோக பிசாசு தன்னை
அப்பனே மனமெங்கும் பாய மாட்டாது
அணுகொட்டா தென்ன சொல்வேன் ஆசைக்குள்
ஆச்சர்யம் லேகியத்தின் அருமை மெத்த
அணுகொட்டா தெமனாரை வெட்டிச் சாடும்

---

1. மனமுரைத்தால்.

அயகாந்த செந்தூரம் லேகியத்தைக் கொள்ள
அனுகொட்டா னரையுந்தான் மனமொன் றாகும்
அப்பனே அயகாந்தஞ் சொல்லக் கேளே. (25)

-(கொ.க.மு)

கற்பமுண்ணும்போது நேரிடுந் துன்பம்-சிந்து

376. தனனாந் தனதனனா-தான
தத்த னாந்தான தனதனனா.
அண்ணன் மாரே கேளீரோ - அந்த
அஞ்சு திங்கள்படும் பாடதனில்
என்னவென்று யானுரைப்பேன்-நல்ல
இடிபோ லிடிகள் முழங்கிடவே
மன்னர்மன்னர் கூடியல்லோ - நல்ல
மல்யுத்தங்கள் வளர்ந்தது போல்
தன்னுடலுந் தன்னதல்ல - விந்து
தாமரைத் தண்ணீர்போல் தான்வருதல்
சொன்னேன் படும்பாடு - இந்நூல்
சூதென்றுந் தள்ளிட லாகாது
உண்டால் தெரியுமதாம் - அமுரி
உடலுக்குள் தொண்ணூற் றாறுவருமே
சென்றா லுயித்தியங்காண் - மீளா
சித்திர வதையிதை நீயறிந்து
பண்டு பழகினதால் - பின்பு
பாவை யாருடன் சேராதே. (தனனாந்) (1)

377 கண்டாலும் பேசாதே - மெத்த
கடினமதாம் பேதி தாளாது
நரம்பு எலும்புகளும் - மச்சை
நாடி யுள்ள பசைகளும் போம்
கரும்பு முறிந்ததுபோல் - அஸ்தி
கட்டு தளர்ந்து விட்டு விடுங்காண்.

துரும்பா இடுஞ்சடலம் - சொல்லுந்
தூணை யெரித்தது போல்காணும்
வருமே யனேகம்வினை - மட
மாது மையல்கொண் டணுகாதே
அந்தியினிற் கொள்வதற்கு - புளி
சந்திக் கிடக்குது தானறிந்துந்
தன்னைப்போ லிருக்குமதாங்-கற்பந்
தானே யறிந்திடும் பேர்களுக்கு
முன்னமேயான் சொல்லிவிட்டேன் - அந்த
முக்கோண மாகிய கேசரியை (தனனாந்) (2)

378. அன்னம் போ லிளமயிலாள் - அந்த
அம்பிகை பாதத்தை நம்பினேன்யான்
என்னைப்போ லெளியவர்கள் - இனி
எங்கெங்கு முண்டுபார் வையகத்தில்
சாதியில்விந் தீஸ்பரன் காண் - எந்தன்
தாயோ பராபரை தானளித்த
வேதியர் குலங்காணும் - பிரம
நாதாந் தத்தி லவதரித்தோர்
பேதா பேதங்கள்- எந்தன்
சாதி பிரபல்ய மெவரறிவார்
ஆறாந்தான திங்களிலும் - தேகம்
அசதிகள் மெத்த வுறக்கமதால்
மாறா ததுமயக்க - மங்க
மாதித முமனல் தேகமதே. (தனனாந்) (3)

379. தேறா துடல்கூசுந் - தொண்ணூற்
றாறு கருவியுறுஞ் சோபதமாம்
வேறாய்வெவ் வேறுபடுத்தி - மாது
வேதனை போலுடல் வேசாறும்
வீறுடன் பசி கோபங் - கனல்

வேகம்மெத்த காணும் பூரணத்தில்
கூறுட னறிந்துகற்ப - மதி
கொண்டா லல்லோதேகக் கூறுகாணும்
தேறுவது மேழுதிங்கள் - மாது
செல்வ மயக்கங்கள் பொல்லாது
பேறுபெற் றறிந்தோர்கள் - பிர்ம
கற்பமதின் கூறு பிரபல்யமே
யெட்டாந்தான திங்களிலு - மெத்த
கொட்டாவி விட்டா லுயிர் போகும்
பட்டால் தெரியவரும் - பாடு
பட்டத னால்பாலை யாவதுகாண். (தனனாந்) (4)

விட்டால் விந்து வெந்திடுங்காண் - வினை
மீளாது காமக் குரோதத்தினால்
கொட்டா ருலகருமே - மாது
கேணி யோனிதனில் கேவலமாய்
ஒன்பது காண் திங்களிலே - பின்
னுபாய மதாகவுந் தேறவேணும்
ஜென்மவினைப் பயன்போகுஞ் - சிவ
யோகரா ஜாங்கச் செயல் காணும்
பொன்போ லுடல் விளங்கும் - மாயப்
போதனை கண்டவர் போய் மீளார்
ஐம்பூத மாரறிவர் - மதி
அப்பு அறிந்தோ ரவர்மாளார்
பத்தாந்தான் திங்களிலும் - துயர்
பாலன் படும்பாடு மெத்தவுண்டு
கற்றார்கவி யார்காணியங் - கற்பங்
காய சித்திபெற்றால் காலனில்லை. (தனனாந்) (5)

381. வித்தால் விளைவுமுண்டு-மிக
வேதனை மெத்த வெகுபாடு
சாற்றா கிலும்பொறுக்காச் - சடஞ்
சாக்காடு சாகா திருப்பதுபார்
உற்றா ருறவின்முறை - சுற்றத்
தார்க ளொருதுணை யானறியேன்
இதுக்கு மருந்ததுவும் - புவியில்
எங்கு மில்லைகரு கண்டறியார்
உதவா தினியறியேன் - கற்ப
முண்டிடு வோர்மாற் றதுகாணும்
இறவார் கதிர்மதியால் - சட
மெண்சா ணுடலும் வலுத்திடுங்காண்
பரவச மாயளித்தோன்-ஜென்ம
பாதகஞ் செய்தால் பறந்துவிடும்
துரைராஜ யோகத்தினால் - துன்பஞ்
சேராது கற்பச் சுகாதீதமே. (தனனாந்) (6)

382. திங்கள்தச பத்தாச்சு பால னார்க்கு
சிறுவனுமே பிறந்திட்டான் திங்கள் பத்தில்
கங்கையணி சடையாரைப் போற்றி நித்தங்
கருத்தாலு மெடுத்துலகில் செனித்தோன் காணான்
மங்கையுடன் வாதாடி யமிர்தங் கொண்டு
மனோன்மணிதன் பாதமற வாமல் போற்றி
அங்கிருந்தே வண்மையெல்லா முரைப்பேன் காணும்
ஆதிகுரு பாதமற வாமல் தானே. (7)

383. மூலமெனும் வச்சிரப்பை வீட்டுக் குள்ளே
மூங்கில்முளை போலதுவுங் கார சாரம்
வாலையரு ளாலமைந்த வாறு தன்னால்
மதிரவியுங் கூடியது மிரண்டு ஆண்டில்
பாலனது போல்ஜெனித்துப் பிறவி யாகி

பத்துதிங்கட் குள்ளுஞ்சிறு பால னாகி
தூலமிந்த மூலமதி லுதிர்த்த வன்மை
சொல்வேனினி காயம்வந்த சூக்ஷ மாண்டே (8)

-(ஞா.வெ)

384. பிறந்திடுங் கற்பந்தான் பேறாகத் தின்கையில்
கறந்திடும் வாமமும் கடுமலமே போக்கும்
முறந்து வழலையு முன்பித்தமும் நீக்கித்
திறந்து புளியுப்பைத தின்றிடாத் தியானியே. (14)

-(தி.மூ.க)

385. காணப்பா காயகற்பம் கொள்ளும் போது
கைமுறையாய் காட்டுகிற வரிசை சொல்வேன்
தோணப்பா கொள்ளையிலே மயக்கம் தாகம்
சொல்பெரிய உடல்நோவு வருத்த மாகில்
வீணப்பா யென்றுவிட்டோர் கோடா கோடி
விதியளவோ மதியளவோ வினையளவோ காணேன்
ஊணப்பா விண்டுசொல்லார் நூலின் தோஷம்
ஒருமொழியாய் உனக்குசொல்லாத் கோஷந் தானே. (11)

-(ச.க.நூ)

386. நிசமான கற்பங்கள் கொள்ளும் போது
நீக்கான சடத்திற்கு வருத்த மேது
கசமான கற்பத்தைத் தின்று கொண்டு
காயத்தில் நோவெல்லாம் தீர்ந்த பின்பு
புசமான பெண்ணோடே புணர்ச்சி செய்தால்
பேரான சயரோகம் சண்ணும் பாரு
பசமான கற்ப முண்டோன் பத்தியத்தை விட்டு
பயறோடு பழவகைகள் தின்றார் கேளே. (47)

-(போ.க.வி)

387. முறிந்துபோம் மூத்திரத்தின் தோஷம் போகும்
முயற்சியாய்க் கற்பமெல்லா மிப்படியே கொள்ளு
தெரிந்துகொள்ளு நூறாண்டின் வேப்பம் வேரில்
நுணுக்கமாய்ப் பாத்திரந்தான் பண்ணிக் கொள்ளு
கரிந்துபோங் காந்தமென்ற பாத்திரமு மாகுங்
காணிந்த பாத்திரம் பால் நெய்தே னுக்காம்
வெரித்து போம் கற்பங்கள் தின்னும் போது
வெட்டையே மேற்கொண்டால் விபரங் கேளே. (109)

388. கேளுநீ தேத்தாம்வேர் பாத்தி ரந்தான்
கிளர்ந்தெழுந்து அமுரிக்குள் வைத்துக் கொண்டு
மாளுநீ வேம்பினது பாத்தி ரந்தான்
மருந்தென்ற நெய்தேனுக் காகு மாகுங்
காளுநீ யிந்தமுறை தப்பாமல் நின்று
சத்தியமாய்க் கற்பமதைத் தாக்கி உண்ணே. (110)

389. உண்ணவே கற்பத்தில் காந்தி கொண்டால்
உயர்கின்ற மயக்கமொடு கோப தாபம்
உண்ணவே மூர்ச்சையொடு சுரங்கள் கண்டால்
மூர்க்கமாங் கஷாயமென்று சொல்லக் கேளு
தண்ணவே தாளிசபத் திரியுஞ் சுக்கு
தனிப்பான துரமோடு சீர கந்தான்
துண்ணவே சிறுதேக்கு கற்கண் டோடே
சிறப்பாக வகைக்குகால் பலமே கூட்டே. (111)

390. கூட்டியே நீர்விட்டு யெட்டி லொன்றாய்க்
குருகவே காய்ச்சியே பாத்திரத்தி லுண்ணு
மாட்டியே மயக்கமொடு தாப சோபம்
வருத்தமாஞ் சேற்றுமமுஞ் சுரங்கள் மூர்ச்சை
ஏட்டியே காய்ச்சலொடு எரிஅ ழுத்தி
இனிமையாம் வயிற்றுவலிப்பு எல்லாம் தீரும்
மாட்டியே பஞ்சகற்பம் தேய்த்து வைத்து
மருந்தென்ற நீர்தன்னில் முழுகிப் போடே. (112)

391. முழுகவே பற்படாகம் .... கந்தான்
முதிராத மருந்திலையும் பழம்பாசி கூட்டு
கழகவே செம்பருத்தி யிலைதன் னோடு
நற்குளத்தில் எரியென்ற யிலையு மாகும்
உழகவே ஓரிலைத்தா மரையின் வேரும்
முத்துசெம் பாகந்தண் ணீரில் போட்டு
கழுகவே வென்னீரில் முழுகிப் போடே
காந்தியெல்லாந் தணிந்துவிடுங் கற்ப முண்ணே. (113)

-(போ.க.வி)

பத்தியம்

392. நிலைக்கவே காயசித்தி பண்ணும் போது
நேராக வொருபொழுது போச னந்தான்
மலைக்காமல் பச்சையரிசி பயறுங் கூட்டி
வாகாக அமுதுசெய்து சர்க்கரைதே னுடனே
குலைக்காமல் வொருபொழுது அமுதம் கொண்டு
குணமாக முப்பழமும் பாலுங் கொண்டு
கலைக்காமல் கற்பமதைக் கொண்டால மைந்தா
காயசித்தி உறுதியடா கருதிப் பாரே.

393. பாரப்பா யின்னமொரு முறையுங் கேளு
பால்தனிலே பச்சரிசி பாகம் பண்ணி
நேரப்பா சர்க்கரையுந் தேங்காய்ப் பூவும்
நேராகப் போட்டுநன்றாய்ப் பதமாய்க் கிண்டி
தேறப்பா கனிவகையும் கூடச் சேர்த்து
திறமாக வொருபொழுது அமுது கொண்டு
காறப்பா கற்பமது கொண்டா யானால்
காயமதில் அஷ்டமா சித்து மாமே.

394. சித்தென்ன தேகமது யிறுகி னல்ல
சிவசிவா தேகமது பரமா னந்தம்
பத்தென்ன மனதுரிமை யாக வேண்டும்
பலருசி தேடினதால் பலனே துண்டு
கத்தென்ன கருமானங் குருவால் பற்று
கருத்தோடே அனுபவத்தால் காணுஞ் சித்து
செத்தென்னே அதன்பிறகு யென்ன காணுஞ்
சிவசிவா தேகமெல் லா சிவன்கூறோமே.

395. கூறான யின்னமொரு பாகங் கேளு
குணமாக அமுதுபடி வாங்கி மைந்தா
நேராக துவரையுட பருப்புங் கூட்டி
நீர்தனிலே அமுதுசெய்து நினைவாய்க் கேளு
சோறாகும் பருவமதில் தேங்காய்ப் பூவும்
சுகமாகச் சர்க்கரையும் நெய்யுங் கூட்டி
சேராகக் கிண்டிநன்றாய் ஆற வைத்தால்
சிக்கெனவே யிறுகிநல்ல பதமாம் பாரே.

396. பதமான அமுதையெடுத்து வொருபோ துண்ணு
பக்குவமாய் யதன்பிறகு கற்பம் கொள்ளு
மதமான மதங்களெல்லா மடங்கி நல்ல
மகத்தான தேகவச்சிர காய மாகும்
விதமான அஷ்டசித்தும் யெட்டு மாடும்
விவேகமது தான்வளரும் விசித மாகும்
அதமான மனவுறுதி யகன்று போகும்
அரகரா அம்பரத்தின் அருள்காண பாயே.

397. காணப்பா அமுதுபடி சமைத்துக் கொண்டு
கருத்துறவே கட்டுமுப்பூ தொட்டுக் கொண்டு
பேணப்பா வொருபொழுது அமுதம் கொண்டு
பிலமான கற்பமது கொண்டால் மைந்தா

தேணப்பா அமிர்தமது கசிந்து காணும்
    தெவிட்டாத அமிர்தத்தைப் பானம் பண்ணு
பூணப்பா குருபதத்தைத் தொழுது கொண்டு
    பொல்லாத மாய்கையெல்லாம் போக்கு போக்கே.

398. போக்காதே அமுதுபடி அதனோ டொக்க
    புதிதான யேலரிசி பொடித்துப் போட்டு
வாக்காக அமுதுசெய்து வெல்லத் தோடு
    வலமாக வொருபொழுது கொண்டா லப்பா
தாக்கான சடலமது வலுத்துப் போகும்
    தன்மையுடன் கற்பமது சார்ந்து கொண்டால்
நாக்கான அமிர்தமது சொலிக்கும் பாரு
    நரைதிரைகள் தானொழிந்து நலமாம் பாரே.

399. நலமாக யின்னமொரு பாகங் கேளு
    நல்லதொரு அமுதுபடி வாங்கி மைந்தா
பிலமாக சீரகமும் சுத்தி பண்ணி
    பொறுமையுட னிரண்டுவொன்றா யமுது செய்து
குலமான வெல்லமதைத் தொட்டுக் கொண்டு
    கூர்மையுடன் வொருபொழுது அமுதம் கொண்டால்
தலமாத பித்தமெல்லாம் பிரண்டு போகும்
    தரணிதனில் மன்மதன்போ லாவாய் பாரே.

400. பாரப்பா அமுதுபடி கொழிய லாகப்
    பக்குவமாய் தானெடுத்து வைத்துக் கொண்டு
வாரப்பா கிராம்புதனைக் கிஷாயம் பண்ணி
    வகையாக கிஷாயமதில் அமுது செய்து
சேரப்பா சர்க்கரையைத் தொட்டுக் கொண்டு
    திறமாக அமுதுகொண்டால் தேக வச்சிரங்
காரப்பா மூலமென்ற தெல்லாம் போகுங்
    கட்டாக கற்பமுறை ஒன்றைத் தேரே.

401. தேர்ந்தபின்பு யின்னமொரு பாகங் கேளு
திரமாக பருத்திவிதைப் பாலும் வாங்கி
சார்ந்துசம்பா அமுதுபடி சமைக்கும் பொழுது
சர்க்கரைதே னூட்டிநன்றாய்ப் பாகம் செய்து
கூர்ந்துமிக உதயத்தில் கொண்டால் மைந்தா
கொண்டதொரு மேகமெல்லா மற்று நல்ல
ஓர்ந்துமிக வீரியந்தா னதிக மாகும்
உண்மையான தாதுவெல்லாம் பிலக்கும் பாரே.

402. பாரப்பா கம்பினோடு தினையும் கூட்டி
பக்குவமாய்ப் பால்தனிலே பாகம் செய்து
காரப்பா யின்புடனே அமுது கொள்ளு
கலங்காமல் வொருபொழுது கொண்டால் மைந்தா
நேரப்பா சதையிலுள்ள பித்த நீர்கள்
நீங்கிவிடும் தேகமது குளிர்ச்சி யாகும்
வீரப்பா செய்யாமல கற்பம் கொள்ளு
வீறடங்கி தேகவச்சிர காய மாகும்.

403. காயமென்ற காயமொன்று சொல்லக் கேளு
கனமான திரிகடுகு வோமம் கூட்டி
நேயமுடன் வறுத்திடித்து பொடியே செய்து
நினைவாகச் சட்டியொன்று காய வைத்து
தாயகமாய் கருப்பட்டி யதனில் போட
தப்பாமல் உருகியது குழம்பாய் நிற்கும்
ஞாயமுடன் பொடித்தூவிக் கிண்டும் போது
நலமாக மெழுகுபதம் நன்றாய்ப் பாரே.

404. ஆமப்பா மெழுகெடுத்து உதயந் தன்னில்
அன்பாகக் கொண்டவுட னையா கேளு
நாமப்பா சொல்லுகிறோம் உதரந் தன்னில்
நளிருடனே மேகவெட்டை யற்றுப் போகுந்
தாமப்பா கற்பமதுக் குறுதி யாகும்

தனமான பித்தநீர் தானே போகும்
காமப்பால் கொண்டவுட னுறுதி யாகும்
கற்பூர வாசமதாய்க் காந்தி யாமே.

-(அ.வை.கா)

405. பாருமே கற்பம் பலபலவே தென்னில்
ஆருமே கொல்ல வசையாது கற்றேகம்
வாருமே யென்பார் மகத்தான சித்தர்கள்
காருமே பத்தியங் காட்டினார் பாலனே. (33)

406. பாலுடன் வெல்லம் பயறோ டரிசிநெய்
போலுகைத் தின்பன பொற்கனி தேனுடன்
மேல்பணி யார மிளகுபொன் னாங்காணி
சீல்பெரும் யோகிகள் சித்தர்கள் பூசையே. (34)

407. புளிங்கறி கைப்புப் புலாலாட் டிறைச்சியும்
களிம்பு சுண்ணாம்பு கடுகுள்ளி காரெண்ணெய்
யளிம்பு லவண மாகா திவையொன்றும
முளம்பெறு சித்திக்கும் யோகிக்கு மொவ்வாதே. (35)

408. யோகி முழுக வுறவாக நீராடல்
பாகிய நெய்யாம் பலபல சித்தர்க்குத்
தாகித்த தாகம் தனிப்பாலும் வெந்நீரு
மாகி முழுக வகுத்த வழகென்னே. (36)

-(தி.மூ.க)

பத்தியம்

409. யோகமாம் புளியுப்பு எண்ணை சுண்ண
முரிசெயா மாங்கிஷங்கள் மச்ச மாகா
மோகமாம் மோரோடு கடுகு உள்ள
முதிரான காரமொடு பெருங்கா யந்தான்
போகமாம் பெண்தன்னிற் புணர்ச்சி யோடு

பேரான நித்திரையும் சோம்பல் தள்ளி
வாரமாம் வாசிதனை மரித்துக் கொண்டு
மறவாமல் இரவுபகல் மனது உன்னே. (2)

410. உன்னியே பாலோடு நெய்யைக் கூட்டு
ஒருசேரை சமைத்துண்டு ஒருபோ துண்டு
பன்னியோ ராமாறு பாலைக் கொள்ளு
பணியாரம் சிறுபயறு பழமுந் தேனாம்
குன்னியே கோரக்கர் கற்ப மாகும்
கொடிதான வஷ்துவொடு குக்கு டந்தான்
வென்னியே வெள்ளாடு மரைமா னாகும்
மிக்கதோர் காடைகவு தாரி யாமே. (3)

411. ஆமென்ற வாசினையா லுப்புத் தேடி
அமுதமாய் கட்டியதோ குப்பைக் கூட்டு
போமென்ற புளிமேலே ஆசை யானால்
புளியாரை புளிநருணை சீயக்காய் கொழுந்து
தேமென்ற நெல்லிக்காய் பசலிக் கீரை
நித்தியமாய்க் கூட்டியே கற்ப முண்ணு
ஆமென்ற பயறோடு யிளநீரும் கம்பும்
ஆகாது குளிர்ந்ததண்ணீர் தானும் காணே. (4)

412. காணவே தாம்பூலம் தின்ப தற்கு
கற்பூரச் சிலைச்சுன்னம் முத்துச் சுன்னம்
பானவே பவழதரிச் சுன்னம் பண்ணு
பரிச்சுன்னம் அண்டத்தின் சுன்ன மாகும்
தானவே தலைமுழுக்குப் பசுவின் நெய்தான்
தடவியே பசும்பயறு அரப்பாய் பண்ணு
உண்ணவே பக்ஷசத்துக் கொருகால் தானும்
உத்தமனே முழுாக உண்மை காணே. (5)

413. உண்மையாம் மிளகோடு மஞ்சள் நெல்லி
உத்தனே கடுக்காயும் வேப்பம் வித்தும்
தண்மையாம் சமமாக நிறுத்துக் கொண்டு
தனித்துநின்ற ஆவின்பால் விட்டு ஆட்டி
திண்மையாய் வெந்நீரில் முழுகிப் போடு
....
....
விரைந்ததோர் பட்சத்தி லொருகால் தானே. (6)
-(போ. .வி)

414. கேளப்பா சிறுகீரை பொன்னாங் காணி
கெடியான புளியாரை மிளகு சீனி
வாளப்பா பாசிப்பயறு கட்டியதோ ருப்பு
வால்குறுவை சாதமடா பாலு மாகும்
கேளப்பா மற்றொன்றும் கொள்ள வேண்டாம்
குடிலமாய் தேகத்தைக் கெடுத்துப் போகும்
வேளப்பா யிதுவரைக்கும் கைமுறைதா னாறும்
விளம்பார்கள் சட்டைமுனி விளம்பி னாரே. (50)
-(கொ.க.மு)

415. போகாம விருப்பதற்குக் கற்பஞ் சொல்வேன்
போக்கோடேஉண்கையிலே நேர்மை கேளு
வாகான புளியுப்பு எண்ணெய் சுண்ணம்
மருவியதோர் மாங்கிஷங்கள் மோரு மாகா
தாகாத கடுகுள்ளி காய மாகா
சஞ்சாரஞ் செய்கின்ற பெண்ணு மாகா
பாகான நித்திரையும் சோம்ப லாகா
பலசிந்தை விட்டுவிட்டு மூலம் பாரே. (1)

416. பார்க்கையிலே உண்ணுகிறதோர் பத்தியத்தைக் கேளு
பாலாகும் நெய்யாகும் பழமு மாகும்
கார்க்கையிலே மிளகாகும் தேனு மாகும்
கைமுறையால் வெல்லமுமாங் கஞ்சா வாகும்

சேர்க்கையிலே பயிறாகும் பொன்னாங் காணி
செப்பினேன் சிறுகீரை தின்ன லாகும்
தோர்க்கையிலே தூதுவளை யிலைகா யாகும்
சுகமாக உண்டுகற்பஞ் சோரப் பண்ணே. (2)
-(கொ.க.நூ)

417. உண்ணவே கற்பத்துக்கு உறுதி கேளு
உப்பாகாப் புளியாகாப் பெண்ணு மாகா
கன்னவே துவற்பாகா மோரு மாகா
காய்சிந்த நல்லெண்ணெய் சுண்ணாம் பாகா
விண்ணவே நித்திரையுஞ் சோம்ப லாகா
வேறான மாங்கிஷங்கள் மச்ச மாகாப்
பண்ணவே கடுகுள்ளி காய மாகாப்
பலபலவாஞ் சிந்தையெல்லா மறுத்துத் தள்ளே. (257)

418. தள்ளியே உண்கிறப்பத் தியத்தைக் கேளு
சார்வான நெய்யாகும் பாலு மாகும்
மள்ளியே சிறுபயறு முருங்கை யாகும்
அப்பனே வெள்ளாடு ஞானி யாகும்
துள்ளியே தூதுவளை யிலைக்கா யாகுஞ்
சுண்டெலியாங் கவுதாரி காடை யாகும்
பள்ளியே பழமாகுங் கஞ்சா வாகும்
பழவெல்லந் தேனாகும் பான மாமே. (258)

419. ஆமப்பா சிறுக்கீரை யரைக்கீரை யாகும்
அதிதமாம் புளியாரை நல்லாரை யாகும்
போமப்பா பொன்னிநல்லாங் காணி யாகும்
புளிப்பான நெல்லிக்கா யவரைக்கா யாகும்
தேமப்பா வழுதலங்காய்ப் பீர்க்கங்கா யாகுஞ்
சிறப்பான முயலாகு மூர்க்குருவி யாகும்
வாமப்பா மரையாகும் மானு மாகும்
வகையாக இப்படித்தான் பத்தியமா யுண்ணே. (259)

420. உண்ணுறது ஒருசேரே அரிசி யப்பா
உத்தமனே யொருபொழுது வெந்நீர் கொள்ளு
பண்ணுறதோர் மருந்துகளிற் காந்தி கொண்டால்
பசுவின்பால் இராப்பொழுது ஒருசேர் கொள்ளு
விண்ணுறது உள்மூல வெளிமூலம் பாரு
வேதாந்தப் பாலையைத்தா னித்தம் பூசி
அண்ணுறது குருபதத்தை யடுத்து நித்தம்
அடுக்கடுக்கா யுண்ணுகிற கற்பங் கேளே. (260)
-(போ.சூ.மெ)

அபத்தியம் - சிந்து

வயித்தியம் பாடுகிறே - னாண்டே கேளிர்
வயித்தியம பாடுகிறேன்.

421. வயித்தியம் பாடுகிறே னுயித்திய மாகவுஞ்
சயித்திய மாம்பித்த சாபசோ பந்தீர
பயித்திய காசமும் பாண்டு சோகையுஞ்சொறி
பச்சை கிரந்திமாலை பறந்துவிட் டோடவும். (வயித்) (1)

422. மூலப்புளி தனையும் முறைவாய்மை போலரைத்து
முருட்டி யெடுத்துருட்டித் திரட்டிக்காலை மாலையுஞ்
சாலவும் பித்தமுஞ் சோகைசயமு மதிதகாசந்
தானெனும் பறந்தோடவு நானெனு முரைத்தேனாண்டே (வயித்) (2)

423. சுக்குடன் வாதமடக்கி திப்பிலி ஓமத்துடனும்
உக்கிரமதா முருக்கன் பூவதுஞ் சேர்த்தரைத்திவை
பக்குவமாகிய காலை மாலையும் விடாமலுண்ண
உக்கிரமதா கிநோய்க ளோடியும் பறக்குமாண்டே. (வயித்) (3)

424. அண்டவாதங்கள் வாய்வு அசீரணத்தால் பேதியு
மையிருவாய் யரோசிகம திதமாய் கடுக்கு
மண்டையிடியுஞ் சூலை கிரந்தி யரையாப்புடன்
வாதமும் பித்தசேத்ம மாறிடுநோய்க ளாண்டையே. (வயித்) (4)

425. பூரணமாமது வைந்து புனிலாவது வைந்து
பொறியாவது மைந்து புளியைந்துகா யைந்து
ஆரணமாக வரைந்து அமுரிவிட் டரைத்துண்ண
அலறியோடி வாளிக்கு மதிதநோய்க ளாண்டையே. (வயித்) (5)

426. காரீயசெந் தூரந்தனில் கரியுப்பு தனைக்கூட்டு
கருவா லரைத்துருட்டி காலையு மாலையுமுண்ண
நாரியர் கர்ப்பத்தின்வாய்வு நடக்கும் பிரளயமோடி
நமனென்ற திதநோய்கள் நாடியே பறக்குமாண்டே. (வயித்) (6)

427. காலையி லிந்துப்புடனே கறியுப்பிட் டுப்பதுவுங்
கடுக்கா யுடனரைத்து கலக்கி யமுரிதனில்
ஞானமே கொள்ளவுங்குன்ம நாடியே க்ஷயங்களோடி
தேடியே பறக்குநோய்கள் சேதியைக்கேளு மாண்டையே (வயித) (7)

428. கருவிழுதியின் வேரிலோடியே வடவேர்ப் பட்டை
கானகந் தனிலுமிச்சங் காணுவோர் மதில்கொள்வோர்
ஆலகால விஷத்தி னமுரியதன் மேற்கொள்ள
வாலவய துண்டாகுங் காலனில்லையே யாண்டே (வயித்) (8)

429 கருவசளை கைப்பு காணுவோர் மேருகள்தோறும்
காடுகள் தோறுந்திரிந்தால் காணுமோ கருவசளை
திரிபுவனந் திரிந்துங் காடலைவோர் தமக்கு
செழுந்தேன் பொழியுமோ சொல்வீ ரிம்மூலிபார். (வயித்) (9)

430. வசளை வால்மிளகுட னரத்தை வாதமடக்கி
வரிசைய தாய்க்கழஞ்சு வாங்கிடு மணல்வெதுப்பி
வசளை யதுசரக்கும் வாங்கித் தூளதாய்ச் செய்து
வாரியெனு மமுரிவார்த்து விட்டாட்டி மை போல். (வயித்) (10)

431. கதிர்மதி யும்வருத லுவகையாக் காலைமாலையும்
கருதிசுண்டைக் காய்பாகங் கண்டுகளி கூறவும்
உதய மண்டலமுண்ண பற்பத மதனிலூட்டி
ஒருபண வெடைகொண்டு உணர்ந்துயோகஞ் சாதித்தால் (வயித்) (11)

432. நீலக்கொடியின் வேருஞ் சாதிப்பத்திரி யேலம்
நேர்சம னதுவகை யதுவுஞ் சேர்ந்தெடுத்து
ஞாலமதி நீர்விட்டு அதனை கவசமாட்டி
நாற்பதுநா ளிருவேளை நாளேயுண்டு விட்டோங்காண் (வயித்) (12)

433. கருப்புக்கை யாந்தகரை கருஞ்சீ ரகமுஞ்சுக்கும்
கடுக்காய் தோடுங் கழஞ்சு வகைக்கிவ் விதமாகும்
நுறுக்கிய முரியதனிலுட லுண்டிரு வேளையும்
உபமாய் மண்டலங்கொண்டு உணர்வீரென் னாண்டையே (வயித்) (13)

434. கனகாம் பரமெனவுங் காசெடைகாண் வேரின்தோடுங்
கடுக்காய் கற்கடசிங்கி காசெடை கணக்கதாகும்
செனகா திதமேவிய அமுரியத னாலாட்டி
தினமுமிரு தன்வேளை யொருமண் டலமுமுண்ண. (வயித்) (14)

435. காட்டு மிளகரணை கருத்தி லகப்பட்டாக்கால்
கறுப்பா யிருந்துகண்டால் பொறுப்பாய் சமூலம்வாங்கி
கூட்டு மிளகுசுக்குங் கோரோசனையுங் கஸ்தூரி
கொடுத்துப் பணமரைதா னெடுத்துமதி நீர்விட்டே. (வயித்) (15)

436. மதிநீர் விட்டுமயன மதுபோல் மெழுகுபதம்
வருத விரண்டுவேளை மகிழ மண்டலங்காணும்
விதியிருந்தோர் தமக்கு விட்டகுறை வந்தெய்தும்
வேதசாஸ் திரத்திலுள்ள விசிதமிது வறியும். (வயித்) (16)

437. காஞ்சபுளி தனையெடுத்துத் தூளாய்ச் செய்து
கம்பியுப்புக் கெடைக்கெடைதான் கலந்து வுண்ண
துஞ்சலென்ற குன்மமெல்லாம் பறந்து ஓடுஞ்
சுணங்கனுக்கு ஈயாதே தோஷ மெய்தும்
ஓஞ்சலென்ற புளியமுரி சாரணையுங் கூட்டி
உண்டிடவு நோய்பறக்கு முடனே தானும்
அஞ்சாத நோய்களெல்லா மமுரி தன்னால்
அலறியது முடலைவிட் டகலு மாண்டே. (17)

438. அகலவும்பத் தியங்காணு மருளக் கேளு
அவிழ்தமதில் கோளாறு அநேக மார்க்கம்
பகலவுநா தாக்களுரைத் தமிர்த வாக்கியம்
பூட்டினார் வெகுநூல்கள் புனித மாக
விகற்பமில் லாமலுரை மீறப்பாய்ப் போச்சு
வெளியாகப் பாடியுமே விகற்ப மாச்சு
உறையதுவா யுரைத்திடுநூல் செய்தி யெல்லாம்
உரைதவறா துரைத்துவிட்டா ரொளியாய்த் தானே. (18)

439. காலசருங் கையெரியுங் கண்வாய் கூசும்
கண்டமது பச்சைப்புண் ணதிகங் காணும்
ஆலவிடந் தீண்டினது போலாந் தேகம்
அசதிமெத்த தீபனமு மதிகங் காணும்
வாலையொரு திங்களுமுன் றாச்சு தானால்
மயக்கமெனும் பேதியதா மனந்தா ளாது
கோலமெனு மனதுமே தேற வேணுங்
கொடிதாகக் கொண்டறிந்து கொள்ள லாமே. (19)

440. உள்ளிருந்த நோய்களெல்லாம் வெளியே காணும்
உடம்பெல்லாம் புண்ணாகி வெந்து நீறும்
மெள்ளிலை போல் மேனியெல்லாந் தடித்துக் காணும்
இந்திரியமு டைந்தல்லோ தண்ணீ ராகும்
கொள்ளியால் சுட்டபுண்போல் நாபி வேகும்
குமட்டுவதா லவிழ்தத்தை கொள்ளொட் டாது
துள்ளிவிழுந் தாலறுமதா மெரியுந் தேகம்
சுருக்கெனவும் நீர்க்கடுப்புந் தோன்றுந் தானே. (20)

441. ஒட்டொட்டாய் மேனியெல்லாங் கடுப்புத் தோன்றும்
ஊதுமது நீர்த்தரை யுடனே புண்ணாங்
கட்டிவைத்த பழங்கனிபோல் தேகங் காந்தும்
கலகலென்று நரம்பெல்லாந் தளர்ந்து காணும்

முட்டியல்லோ வாய்வு அங்கே யேறி மீளும்
    முறைமையைந்து திங்களுக்கு ளொருமை யாகும்
ஒட்டியம் போல் வடமயிலாள் தன்னை நம்பி
    ஓங்கார பீடமதி லூறி டாயே. (21)

-(ஞா.வெ)

அபத்தியத்தினால் ஏற்படும் விளைவுகள்

442. பாரப்பா கற்பமுண்டோன் பத்தியத்தை விட்டு
    பயரோடு பழவகைகள் தின்றா யானால்
நேரப்பா நீர்கட்டும் மலமுங் கட்டும்
    நிலையாத தோளோடு கைகால் சோரும்
தூரப்பா தும்பையுஞ சாறே கொள்ளு
    துளித்துளியா யிறங்கிறது துறந்து வீழும்
ஊணப்பா கற்பமுண்டோன் புளிதின் றாக்கால்
    உதிரத்தில் பெருவயிறு ஆகுந் தானே. (4)

443. ஆகுமே கற்பமுண்டோன் கிழங்குவகை தின்றால்
    அவனுடம்பில் சோகைமுற்றி பாண்டு வாகும்
வாகுமே மாங்கிஷத்தில் மீன்தின் றாக்கால்
    மயக்கமொடு கெடுதிசுர நோயு மாகும்
தாகுமே தாகத்தில் மோரே கொண்டால்
    சண்ணுமடா குன்மவலி தப்பா தப்பா
போகுமே பச்சையுப்பைத் தின்றா னானால்
    போச்சுதடா கண்கள்ரெண்டும் பாழாம் காணே. (5)

444. காணப்பா யிப்படித்தான் கற்ப முண்டு
    கைதப்பி யிறந்தவர்கள் கோடா கோடி
பூணப்பா யிதையாய்ந்து தெளிந்து கொண்டு
    புகழாக அரித்தெடுத்து கற்ப முண்டு
தோணப்பா பிழைத்தவர்கள் கோடா கோடி
    சுகமாகப் பிழைத்தபின்பு குளிகை கட்டி
ஊணப்பா சாரணையை யிட்டுத் தீர்ந்து
    உலகத்தி லோடினவர் கோடி யாமே. (6)

-(ச.க)

அன்னத்தின் பொடி

445. கேளுமே மிளகோடு திப்பிலியுஞ் சுக்கு
கெடியான சீரகமும் மதியினுப்புங்
காளுமே கரு வேம்பி னிலையி னோடு
கலர் சமனாய் வகைக்கொன்று பலந்தா னொன்று
தாளுமே பெருங்காயம் பலமுங் கால்தான்
தனித்துமே சூரணித்து வைத்துக் கொண்டு
ஆளுமே அன்னத்தில் நடுவே வைத்து
ஆவின்நெய் விட்டுமே பிடித்து உண்ணே. (40)

446. உண்ணவே அபானமது கீழே நோக்கும்
உற்றுப்பார் லட்சியங்க ளுருவித் தோற்றும்
கண்ணவே கடுக்காயும் மிளகு தொட்டு
கைமுறையாய் உண்ணையிலே முறிஞ்சு தானால்
தண்ணவே சயமெடுத்தால் தங்க கற்பம்
தாக்காக உண்டுடனே தீருந் தீரும்
துன்னவே உதரத்தில் நோய்கள் வந்தால்
சுகமாக அப்பிரகக் கற்பங் கொள்ளே. (41)

-(ச.க.நூ)

அன்னத்தின் உப்பு

447. ஆட்டான அன்னத்தில் உப்புக் கட்ட
அடவெல்லாஞ் சொல்லுகிறேன் அரித்துக் கொள்ளு
பூட்டான கல்லுப்பைப் பாக்குப்போல் பொருக்கி
பெருங்குப்பை மேனியொடு கல்லுருவி தானும்
நீட்டான சாறெடுத்துப் பிழிந்து கொண்டு
நீக்காக யெட்டிலொன்று பழச்சார் கூட்டி
காட்டான கல்லுப்பில் பிசரித் தானும்
காயவே போட்டிடுவாய் ரவியில் தானே. (201)

448. ரவியிலே யடிக்கடிக்குப் பிசரிப் போட
நலமாக ஏழுநாள் கழிந்த பின்பு
புவியிலே வெங்காரம் மனோசிலையும் லிங்கம்
பொருந்தியே உப்புயெட்டி லொன்று கூட்டி
தவியிலே சாற்றையரைத் தேநான்கு சாமந்
தண்ணீர்போல் குழப்பியே வைத்துக் கொண்டு
செவியிலே பாயும்போ லுள்ளே செல்ல
கெடியான கல்லுப்பில் பிசரிப் போடே. (202)

449. போட்டுமே காய்ந்தபின்பு யிரண்டிலையு மரைத்து
பெருகவே கவசமாய்க் கட்டித் தானும்
நீட்டுமே னூரெருவில் புடத்தைப் போடு
நுணுக்கமாய் ஆறவிட்டு யெடுத்துக் கொண்டு
மூட்டுமே சாறுவிட்டு முன்பு போல
மூன்றுநாள் பிசரியே ரவியில் போடு
நாட்டுமே வெண்கார மனோசிலையும் லிங்கம்
நன்கரைத்து முன்னிலையில் கவசங் கட்டே. (203)

450. கட்டியே கனபுடமாய்ப் போட்டெ டுத்துக்
கரியில் வைத்து உருக்கிப்பார் கண்விட் டாடும்
தட்டியே யிந்தஉப்பைப் பொடியாய்ப் பண்ணி
நலமாகக் கறிச் சோற்றில் உண்டு வாநீ
கெட்டியே உன்னுடம்போ யிரும்புத் தூணாங்
கிளர்ந்தெழுந்து அமுரியிலே யிறங்கா துப்பு
மட்டியே பச்சையுப்பு தின்றா யானால்
வாய்ந்திருந்த சித்தியெல்லாம் மண்ணாய்ப் போமே. (204)
(போ.க.வி)

451. சித்தியா யன்னத்தி லுப்புக் கூட்டச்
சொல்லுகிற னாதாக்கள் சொல்லா தெல்லாம்
பத்தியாற் புங்கம் வேர்ப் பாலை வாங்கி
பாறையுப்பைத் தேய்த்தெடுத்து ரவியிற் போடு

முத்தியா யேழுநாள் ரவியிற் போடு
முனையான வெடியுப்பு பலந்தா னைந்து
ற்றியாய் சீமைது பலந்தா னைந்து
வெண்காரம் பலமைந்து கல்லுப் பைந்தே. (314)

452. ஐந்தோடு சாரமைந்து பூநீ ரைந்து
ஆதியாங் கல்நுரையுஞ் சூட னைந்து
பிஞ்சோடு சரம் பலந்தான் ரெண்டு
பேரான புங்கம் வேர்ப் பாலா லாட்டி
நஞ்சோடு ஏழுநா ளரைத்த ரைத்து
நலமான ரவிதனிலே யுலரப் போடு
குஞ்சோடு அண்டநீர்ப் பலந்தா னைந்து
குழப்பியே பாலாலே வைத்துக் கொள்ளே. (315)

453. கொள்ளவே பாறையுப்பிற் றேய்த்துத் தேய்த்துக்
குறிப்பாகக் கரியோட்டில் வாட்டு வாட்டு
மெள்ளவே தணலுக்கு ளடர்ந்து வாட்டு
வெடிப்படங்கி யுப்பதுவுஞ் செம்மை யாகுந்
தள்ளவே சுண்ணாம்பும் உப்பும் நேரே
சமனாகப் பொடித்துமைபோ லமுரி யாலே
துள்ளவே யிரண்டடையாய்த் தட்டி வைத்துத்
துடியாகக் கவசித்து வுப்பை வையே. (316)

454. வைத்துமே லடைமூடி சட்டியிலே வைத்து
வாகாக நால்சாமம் தீயை மூட்டி
மொய்த்துமேல் மூடியொரு சீலை செய்து
முசியாதே நூற்றெருவிற் புடத்தைப் போடு
தைத்துமே யாறவிட் டெடுத்துப் பாரு
தவளம் போல் பளிங்குநிற மாயிருக்கும்
நைத்துமே கறிசோத்தில் வுப்பை யிட்டு
நலமாக நாள்தோறுங் கொண்டி டாயே. (317)

455. கொண்டிட்டா லிந்தவுப்புச் சத்தெல்லாந் தள்ளுங்
கூசாதே வாசியெல்லம் நெற்றிக் கேறும்
விண்டிட்ட புருவமையந் தமர்ந்து நிற்கும்
வெளியோடே மனக்கலக்கம் பண்ணி விக்குந்
தண்டிட்ட அமுரியிலே யிறங்கா துப்பு
சாதகமாய்ப் பச்சையுப்பு தின்றா னாகில்
மன்றிட்ட சித்தியெல்லாம் பாழாய்ப் போகும்
வாய்ந்திருந்த கற்பமெல்லாம் மண்ணாய்ப் போமே. (318)
-(போ. சூ.மெ.)

456. பண்ணப்பா அன்னத்தில் உப்போ டுண்ண
பாடுகிறேன் நாதாக்கள் பாட்ட தெல்லாம்
தண்ணப்பா அண்டமைந்து கல்வத் திட்டு
கல்லுப்பு பலம்பத்து அதிலே போட்டு
வெண்ணப்பா வெடியுப்பு பலந்தா னைந்து
மேவியதோர் நவச்சாரம் பலந்தான் யிரண்டு
ஒண்ணப்பா சீனமது பலந்தாள் மூன்று
ஒக்கநன்றா யரைத்துலர்த்த மெழுகு மாமே. (37)

457. மெழுகெடுத்துப் பாறையுப்பை யுடைத்துப் பூசி
வெயிலிலே காயவைத்து உலர்ந்த பின்பு
ஒழுகெடுத்து உபரசத்தை கீழ்மேல் வைத்து
ஓட்டிலே மூடிநன்றாய் புடத்தைப் போட
நழுகெடுத்துப் போகாது உப்புக் கட்டும்
நலமாக உடைத்துசெய வைர மின்னும்
தழுகெடுத்து உப்பையல்லோ கறிசோற்றி லிட்டு
சாப்பிடவே மிகநன்று சாப்பி டாயே. (38)

458. சாப்பிடவே யிந்தவுப்பு சட்டையெல்லாந் தள்ளும்
சமாதிக்கும் புருவமைய திறந்து நிற்கும்
கூப்பிட்டா லுன்மனைத்தாய் வாவா வென்பாள்
கூசாதே யெட்டெட்டின் மேலே யேறு

யேப்பிட்ட அமுரியிலே யிறங்கா துப்பு
இதுவுமொரு கற்பமா யிருக்குந் தேகம்
வாப்பிட்ட கொழுப்பாலே பச்சையுப்பைத் தின்றால்
வாய்த்திருந்த சித்தியெல்லாம் மண்ணாய்ப் போமே. (39)

-(ச.க.நூ)

தாம்பூல விபரம்

459. சாதிக்க யவ்வளவும் பத்தியத்தைக் கேளு
தாம்பூலந் தின்பவர்க்கு சுண்ணஞ் சொல்வேன்
யோதிக்கக் கற்பூரச் சீலையை வாங்கி
உத்தமனே வெண்கருவால் அரைத்துக் கட்டி
பேதிக்கக் கரியோட்டி லூது ஊது
பேரான சுண்ணாம்பாம் பின்னுங் கேளு
வாதிக்கக் கல்நாரிப் படியே யூது
மகத்தான அண்டத்தே லூதி டாயே. (34)

460 ஊதிடவே சுண்ணமா மொவ்வொன் றப்பா
உத்தமனே பழுத்திருந்த வெற்றிலையில் பூசி
கோதிடவே கொட்டைபாக் கதனை சீவி
குமுறவே தாம்பூலந் தின்ன நன்று
ஓதிடவே முன்சாற்றை உமிழ்ந்து போட்டு
உண்டபின்பு தாம்பூலந் தின்று துப்பு
வாதிடவே சிலேற்றுமத்தை யறுத்துப் போடும்
மகத்தான உபரசத்தின் சுண்ணந் தானே. (35)

-(ச.க.நூ)

461. ...ஓங்கியே அண்டத்தின் கடுஞ்சுண்ணங் கேளு
ஓடெடுத்து சுண்ணாம்புத் தண்ணீரிலே போடே. (212)

462. போட்டுமே பெரியிட்டுக் கழுவிப் போட்டுப்
புகழ்ந்தபின்பு பழச்சாற்றா லரைத்து மைபோல்
மூட்டியே கெசபுடமாய் போட்டெ டுத்து
முயன்றுமே அகலோடே மூன்றுபுடம் போடு

மாட்டுமே மறுபடியும் மறைக்க வேண்டாம்
மாசற்ற சுண்ணாம்பு உபசரத்தின் சுண்ணம்
தாட்டியே தாம்பூலந் தின்ன லாகும்
சமரசமாய்க் கலப்பற்று குருதி தானே. (213)

-(போ.க.)

463. நீக்கவே தாம்பூலந் தின்ப தற்கு
நினைவாகச் சுண்ணாம்பு செய்யக் கேளு
காற்கவே கற்பூரச் சீலையின் மேலே
கல்லுக்குள் சுண்ணத்தைக் கவசம் போட்டு
பாற்கவே கரியோட்டி லூது ஊது
பஞ்சுபோல் பொருமியங்கே சுண்ண மாகுந்
தோற்கவே கல்நாரிப் படியே யூது
துடியான யண்டத்தோ லூதி டாயே. (301)

464. ஊதுவது கருடபட்சி பவழ முத்து
உத்தமனிவ் வகையானாற் சுண்ண மாகுங்
கோதுவது கொட்டைபாக் கதனைச் சீவிக்
குறிப்பாகப் பழுத்திருந்த வெற்றிலையிற் பூசி
ஓதுவது முன்சாற்றை யுமிழ்ந்துப் போடு
உத்தமனே தாம்பூலந் தின்று துப்பு
வாதுவது வாதபித்தஞ் சிலேற்றுமத்தைப் போக்கு
மகத்தான உபரசத்தின் சுண்ணந் தானே. (302)

- (போ.சூ.மெ.)

தலை முழுக கற்பம்

465. பாரப்பா கடுக்காயும் நெல்லிக் காயும்
பாங்கான வேம்பரிசி மிளகு மஞ்சள்
நேரப்பா சீரகமு மதுரங் கோஷ்டம்
நெறியான வேர்க்கொடியும் மருந்தோ டெல்லாஞ்

சேரப்பா சமனாக வமுரி விட்டு
சேர்த்தரைப்பாய் தேனதிலே முறித்துக் கொண்டு
வாரப்பா குழம்பாக கலக்கி வைத்து
மைந்தனே கொதிக்கவைத்து முழகு வாயே. (44)

466. முழுகுவாய் மாதமொன்று முழுகத் தொன்று
வேறுமொரு சேதிசொல்வேன் கேளு கேளு
நளுகாதே நறுநெய்படி யிரண்டுக் குள்ளே
நாட்டடா தேறுவிதை கழஞ்சு யிரண்டு
வெளுக்காதே செம்முலைப்பால் கால்படிதான் விட்டு
மாட்டியரைத் தேபோடு குழம்புப் போலே
அழுகாதே ரோமமெல்லா நரைக்கு தென்று
அப்பனே கையான்சார் படிதான் ரெண்டே. (45)

467. ரெண்டுபடி நெய்யாக வற்றக் காய்ந்தால்
நேராக வடிகலசந் தன்னில் கேளு
உண்டுகொள்ளும் குங்குமப்பூ கழஞ்சு வொன்று
ஓகோகோ கோரோசனை கழஞ்சு வொன்று
மண்டுகின்ற கற்பூரம் கழஞ்ச தொன்று
வாகான பூநீறு கால்கழஞ்சு கொண்டு
கொண்டுநீ பொடித்ததூளாய் வடிக்கும் போதில்
குருவுக்கு பூசைசெய்து வடித்தி டாயே. (46)

468. வடித்திட்ட நெய்தானே வாரந் தோறும்
வளமாக முழகுவாய் வாலை பெண்தாய்
படித்திட்ட சரஸ்வதி நிர்த்தஞ் செய்வாள்
பண்பான முகவசிய மென்ன சொல்வேன்
பிடித்திட்ட பிடியென்றா லொருபிடியாய் நில்லு
பிதற்றாதே மனந்தன்னைப் பேணிப் பாரு
கெடித்திட்ட குணமொன்றுதான் சொல்லக் கேளு
கேசாதி ரோமமெல்லா மிறக்கிப் போடே. (47)

469. போட்டதாய் காயசித்தி செய்வோர்க் கப்பா
புலனேறும் அஸ்தமுதல் ரோம மாக
வீட்டாட பலத்தபின்பு முழுக்க மாற்றால்
வேண்டியதோர் கற்பமெல்லாம் கொண்ட பின்பு
நட்டாட ரோமமரு நிலக்கிடையாய் நிற்கும்
நரைபோகும் திரைபோகுந் நறுநெய் வாடை
சூட்டாட கபாலத்தி லொளிந்து போகும்
தோலிலுற்ற சுரதோசம் துயரம் போமே. (48)

-(கொ.க.மு)

470. தானென்ற தலைமுழுக வரிசை கேளு
சாதகமாய் மிளகோடு கடுக்காய் மஞ்சள்
வேனென்ற வேம்பரிசி நெல்லிக் காயும்
மீறாமல் சமபாகம் நிறுத்துக் கொண்டு
கோனென்ற யாவின்பால் விட்டு ஆட்டி
குமுறவே முழுகிவரப் பட்சந் தோறும்
மூனென்ற நெய்வார்த்து வாரந் தோறும்
உத்தமனே பசும்பயறு அரைப்பாய் பண்ணே. (36)

-(ச.கு.நூ)

471. சாதித்து தலைமுழுக வரிசை கேளு
சாதகமாய் பட்சத்துக் கொருகா லப்பா
போதித்து மிளகோடு மஞ்சள் நெல்லிப்
பேரான வேம்பரிசி கடுக்கா யோடே
வாதித்து சமபாகம் நிறுத்துக் கொண்டு
வளமான ஆவின்பால் விட்டே யாட்டி
காதித்துத் தலைதனிலே தேய்த்துக் கொண்டு
கனமான வெந்நீரில் மூழ்கி டாயே. (297)

472. முழுகிடவே கபாலமது கெட்டி யாகும்
மூச்சான வாசியது மேற்கொள் ளாது
நழுகிடவே மோகமது தும்பி போலாம்
நனைந்தாலும் குளிராது வன்னி மீறும்

அழுகிடவே கண்ணீரில் தண்ணீர் வீழா
அந்தரத்தின் மீனெல்லாம் பகலிற் றோணும்
விழுகிடவே வுடலிலுள்ள விஷநீர் வற்றி
மேனியுமோ பொன்னிறம்போ லாகும் பாரே. (298)

473. பார்க்கவே வாரத்திற் கிருகா லப்பா
பரிவான யாவின்னெய் தேய்த்துக் கொண்டு
ஏற்கவே பசும்பயறு அரப்பாய்ச் செய்து
எளிதாக வெந்நீரில் முழுகி வாநீ
கார்க்கவே ரோமமது கருவண்டு போலாங்
கண்ணுக்குள் ஒளிமீறுந் தாக மில்லை
தோற்கவே சுழிமுனையும் நெற்றிக் கேறுஞ்
சுழலாமல் பிரபஞ்சத்தின் மாய்கை நீக்கே. (299)
-(போ. சூ.மெ)

474. மிருகமதம் பித்தமணி வேம்புகடு நெல்லி
கருகுறுதும் பாலரைத்துக் காய்ச்சி - யொருமிட
விங்கற்ப நோய்க்கு மிடமின்றா மெய்ஞான
மைங்கற்ப மீதே யறி.
-(ப.கு.சி)

475. அழகு நுதலி யதிசயமே கேளாய்
களவு காயங் கலந்தவெந் நீரிலே
மிளகு மஞ்சள் கடுநெல்லி வேம்பிடில்
இளகுங் காய மிறுகுங் கபாலமே. (37)

476. கபால மிறுகுங் கண்ணுந் துலக்கமாம்
அபால மிந்தனி அதுவண்டு போலாகும்
விபாலத் திசைவாய்வு வேதனை செய்யாது
இபாலத்தி னுள்ளே யெளிதாக மத்தியே. (38)

477. மத்தித்த சித்தர்கள் மாள்வரோ மாளாரோ
உத்த கருவை யுரைத்திட்டா ரெனனந்தி
பத்தித்த பூரணம் பார்த்தவர் மாளார்காண்
முத்தித்த கற்ப முன்னுண்டார் கேட்டிடே. (39)
-(தி.க.மு)

478. ஆச்சப்பா முழுக்குக்கு மருந்து கேளு
அப்பனே நெய்வார்த்து தேய்த்துக் கொண்டு
ஓச்சப்பா சிறுபயறு அரப்பாய்ப் பண்ணு
அப்பனே முழுகிவர உடம்பு கோக்கும்
வாச்சப்பா கடுக்காயும் நெல்லிக் காயும்
வாகான மிளகோடு மஞ்சள் வேம்பு
தேச்சப்பா அமுரியொடு முழுகு நீதான்
சிறக்கவொரு திங்களுக்கு வொருகால் காணே. (21)

479. காணப்பா மூழ்கிவந்தால் கபால வாய்வு
கைகடந்து போய்விடுங்காண் கபாலங் கெட்டி
பூணப்பா கண்ணுக்குள் புகைச்சல் போகும்
போக்கான சடம்நன்றாய் யிறுகிப் போகும்
வீணப்பா நல்லெண்ணெய் தொட்டால் மோசம்
வேதித்து சடமெல்லாம் விரிந்து போகும்
ஊணப்பா உள்ளபடி சொன்னேன் சொன்னேன்
உத்தமனே உரைத்தாக்கால் முக்தி யாமே. (22)

-(கொ.க.பூ)

கற்ப முறிவுக்கு

480. காணப்பா கடுக்காயும் மிளகு தொட்டுக்
கைமுறையாய் உண்ணையிலே முறிந்த தானால்
பூணப்பா சயமெடுத்தால் தங்கபற்பங் கொள்ளு
புகழாக உண்டபின்பு தீரும் தீரும்
தோணப்பா உதிரத்தில நோய்வந் தாக்கால்
சுகமாக அப்பிரகக் கற்பங் கொள்ளு
ஆணப்பா மலசலங்கள் கட்டிச் சானால்
அறுந்துவிடுங் காந்தமென்ற கற்பங் கொள்ளே. (1)

481. கொள்ளடா வுடம்பசந்து வீங்கிற் றானால்
கொடிதான வேம்பினுட கற்பங் கொள்ளு
தள்ளடா கண்மயங்கி மறைந்த தானால்
தயங்காதே கற்பூரஞ் செய்தே கொள்ளு

உள்ளடா கடிவிஷம்போல் உடம்பு வீழ்ந்தால்
உத்தமனே வீழியுடைய வேரி னோடு
அள்ளடா சூதபற்பம் வைத்துக் கொண்டால்
அணுகியதோர் பதினெட்டுக் குட்டம் போமே. (2)

482. போமடா கற்பத்தில வநத தோசம்
போக்கெல்லாம் போகவொரு கற்பஞ் சொல்வேன்
ஓமடா அப்பிரகச் சத்துத் தானும்
பலத்துக்கு அரைபலந்தான் தங்கங் கூட்டி
ஆமடா செயசூதம் தங்கயெடை போட்டு
அடவாக உருக்கியதை யெடுத்துக் கொண்டு
தாமடா கந்தகந்தான் ரெட்டிப் பிட்டு
சாதகமாய் குப்பியிலே சமைத்தி டாயே. (3)

483 சமைத்ததொரு செந்தூரம் நூற்றுக் கொன்று
தாக்கினா லொன்பதிலும் பத்து மாற்றாம்
அமைத்ததொரு செந்தூரம் குன்றி யுண்ண
அழிந்தொரு கற்ப மெல்லாம் வாய்ந்தே யேழும்
குமைந்ததொரு கற்பத்தால் முறிந்த தோசம்
கோடிவித மானாலுங் குலாவித் தீரும்
அமைந்ததொரு உலகத்தோர் காக(ச்) சொன்னேன்
நம்முடைய நூல்பார்த்தோர் நல்லோ ராமே (4)

-(ச.க)

அழுகணி சித்தர் கற்பம் கண்ணிகள் 21

484. மதியமிர்தங் கொண்டாலே வாதங்கள் பொய்யாது
அதிசயங்க ளுண்டாகும் அமுதமுது சொன்னேன் (1)
கரியான் சாறேபிழிந்து கற்றாவின் நெய்யாலே
தேறியே செல்லுமிலை திடன்சம் பழமளவு (2)
அரைத்து கலக்கியது சிவந்து காய்ந்தபின்பு
சிரத்தான பீங்கானில் செப்பமுடன் வைத்தேதான் (3)

பதனமாய் வடிகட்டிப் பாமென்ற வளைநம்பி
திதிபுரு வந்தனிலே செயம்பொருந்தும் நாள்பாரித்து (4)
அமிர்தயோகம் பார்த்து ஆனதோர் கற்பமதைக்
குமுதவொலி யண்ணாக்கில் குலாவுகின்ற வாசலிலே (5)
ஒருவிரலாற் றேற்றுமடி பேதைமன மெண்ணாமல்
ஒரு நெறியாய் நாலுதர முசாவலஞ் சூட்டிடவே (6)
நாலுதரஞ் சுத்திசெய்தால் நன்றாய்க் கதவுவிடும்
ஆலமுண்டோன் றன்னாணை ஐந்துகத வுந்திறக்கும் (7)
நாற்பதுநாள் கொள்வாயானால் கருத்தவைந் துந்திறக்கும்
தீர்க்கசுத்தி யுண்டாகும் தேகவச்சிர காயமதாகும் (8)
மற்றதொரு கற்பவகை மனங்கூடிச் சொல்லுகிறேன்
உற்றதொரு கற்பத்தை உணர்வாக தின்றுவர (9)
சேர்சிறந்து போகும் திடமா யிருக்கும்படி
வார்மதியங் கொண்டபின்பு மறுகற்பங் கொண்டிடுவாய் (10)
வேதாளை கற்பமடி மீறுசுக்கில அஷ்டமினாள்
மாதாவே யிம்மூலி மயமாய்நெய் வேத்தியமிட்டு (11)
நமஸ்கரித்து நோக்கி நயமாக வாங்கிவந்து
நமஸ்கார சித்தியினால் நன்றாக நிழலுலர்த்தி (12)
சூரணஞ் செய்து சுகமாக நாள்பார்த்து
மீறும் வெருக்கடியால் வேண்டுந்தே னேயெடுத்து (13)
கொள்ளவே மண்டலந்தான் கூறுமட்ட சித்தியுண்டாம்
தெள்ளுதமிழ் பக்தருக்கு தேவ விருக்ஷமதில் (14)
பதினாயி ரம்வருஷம் பண்பா யிருப்பனடி
ரதியுமிந்தி ராணியுடன் நன்மைபெற மேவுவார் பார் (15)
பூலோக மாதர்தமை புகலவே யாகாது
மேலோகப் பெண்கள்சித்தி மேவுதற்குத் தானாகும். (16)
கையான்சா றேயளவு கனமிளகு பாதியடி
செய்தியாய் மண்டலந்தான் தின்றாக்கால் நரைகளில்லை (17)
திரையுமில்லை அஷ்டசித்தி தேகமது யவ்வனமாம்
வரைவுவச்சிர காயமடி வயதுமுன் னூறு இருப்பன் (18)

கொடுப்பையுப்பி லாச்சாதம் கொள்வர் யொரு மண்டலம்
கடுக்கமில்லை தான்பகலில் நட்சத்தி ரந்தோன்றும் (19)
பத்தியம் பச்சரிசி பால்சோறு தானாகும்
மற்றொன்று மாகாது வண்மையுடன் கொடுப்பை (20)
சமூலம்பிடுங் கிக்கழுவித் தானிடித்துத் தூள்பாலில்
வெருக்கடிமண் டலங்கொள்ள காயமது வச்சிரமாம். (21)

ஏலேலஞ் செட்டியார் வாதகற்பம்

485. ஆடியதோர் நடனதிரு மூலத் தோலே
ஆட்டான சிதம்பர தட்சணா மூர்த்தி
கூடியதோர் பெரியோர்கள் பதினெண் பேரை
குலாவியே தெண் .... பாதம் போற்றி
நீடியதோர் திருவள்ளுவர் பாதங் காத்து
நினைத்தபடி பாடுகிறேன் கற்பந் தானும்
தேடியதோர் தேட்டையெல்லா மிதனுக் குள்ளே
திரமான ஐம்பத்தோ ரட்சரமுங் காப்பே. (1)

486. காப்பான ஐம்பத்தோ ரட்சரமே கேளீர்
கருவான சுக்கிலத்தி னமைந்த வாறு
சேப்பான ஆயிரத்தெட்(டு) மலருக் குள்ளே
திரட்டினேன் திவட்டினேன் கண்ட பேர்க்கு
தாப்பான ....
....
மாப்பான மறைப்பெல்லா மிதிலே விள்ளும்
மார்க்கமடா நாடகத்தில் மாட்டி னேனே. (2)

487. மாட்டினேன் கண்டதொரு கற்பம் நூறு
மகத்தான வெண்பாவும் விளங்கத் தானும்
ஊட்டினேன் நூல்கள்பா லுரைக்கக் கேளு
உள்ளபடி இதிலுரைத்தேன் மறைப்போ யில்லை
நீட்டினேன் அறிவோர்க்கு நிலைமை காணும்
நீணிலத்தோர் காணார்க ளறிந்து பாரு
பூட்டினேன் கற்பவிதி வசியம் வாதம்
போக்கான போக்கெல்லாம் சுருக்கி னேனே. (3)

488. சுருக்கான முதல்சாதி கிடையா தப்பா
　　சுரூபமுள்ள ரெண்டாவ தில்லை யில்லை
குருக்கான மூன்றான சாதி யுண்டு
　　குணமாக அவள் மனத்தை அறிந்து பார்த்து
....
　　..
திருக்கெடுத்து வாழ்வதற்கு அவளைச் சேர்த்து
　　தீர்க்கமுடன் பூசைசெய்ய முறையைக் கேளே. (4)

489. கேளப்பா முந்திமுந்தி வாலை பூசை
　　கெடியான பதினாறு வயதுப் பெண்ணை
ஆளப்பா நாற்பதுக்குள் தீட்சை மார்க்கம்
　　அரிந்தெடுத்து பெண்ணோடே கூடிப் பாரு
ஆளப்பா புருடனுக்கு அறுப தாகும்
　　அதின்மேலே வாயாது பலனோ யில்லை
கேளப்பா யிருபேருங் கூடி நித்தம்
　　கெடியாக வாழ்ந்துண்டு முறையைப் பாரே. (5)

490. முறையான பெண்ணவளைச் சேர்ந்து கொண்டு
　　மூர்க்கமுள்ள புளியமுரி தினமு மாட்டு
முறையான முப்பதுநாள் உடன்கார சாரம்
　　மூள்வதுமே யெடுத்தெடுத்துக் கூட்டி வைத்து
துரையான விலங்குநாள் தூர வைத்து
　　சுகமான பீங்கானில் தெளிவை வாங்கு
புரையான மூன்றாநாள் லறுகுந் தேனே
　　புரிசையுடன் பிசகாமல் வாங்கு வாங்கே. (6)

491. வாங்குவதும் இப்படியே மாதந் தோறும்
　　வரிசையாய்ச் சுக்கிலமு மதிலே விட்டு
தாங்குவது ஓட்டிலிட்டுக் காய வைத்துத்
　　தவறாமல் பார்க்கையிலே கஸ்தூரி வீசும்

ஓங்குவது மணிமணியா யிறங்கும் நீரில்
ஓகோகோ தாரையாய் மணிபோல் காணும்
நீங்குவது பிணிகளெல்லாம் ஓடிப் போகும்
நிமிடத்தில் நமனோடும் நிசந்தான் காணே (7)

492. காணுவது செந்தூரம் மிளகு வீதம்
கசகாது அந்திசந்தி இருபோ துண்ணு
பூணுவது புளியுண்ணு அமுரி யுண்ணு
போக்கோடே அந்தியில் அமுரி கொண்டு
ஊணுவது சந்தியிலே அமுரி போதம்
உற்பனமாம் பாகமதை அறிந்து காணு
தோணுவது யிதுநாலும் போதம் போதம்
தோற்கரிய விந்திட்டு வேறே தேடே. (8)

493. வேறேநீ தேடாயா லிறந்து போவாய்
வெகுசுருக்கு வெகுசுருக்கு காப்பாய் நாலு
ஊறேநீ யிறுத்துக்கொண்டு உறங்கும் போது
உடலிலுள்ள ரோகமெல்லாம் மேலே காணும்
தேறவே திங்களொன்று கால மேதான்
திரமாக பேதிக்குங் கண்டு பாரு
கூறயிலே மேலெல்லாந் தடிப்புக் காணும்
கூர்மையுள்ள உளைச்சலது தோணும் பாரே (9)

494. பாரப்பா திங்களது ரெண்டே யானால்
பாரிப்பாய் பேதிக்குங் கால மேதான்
சீரப்பா அந்தியிலே யிறுகி வீழம்
சிறப்பாக மண்டையிடி கால்கை குத்தும்
கூரப்பா யிப்படியே மூன்று திங்கள்
கொடுமையடா பேதியது மனந்தா ளாது
தேறப்பா வாந்தியுமோ மெத்தக் காணும்
...... இடிமேலே இடியு மாமே (10)

495. இடியோடே போசனமும் மெத்தக் கொள்ளும்
இடுப்புவலி மண்டையிடி கால்கை குத்தும்
வெடியோடே வயிறுதும் .... காணும்
வெடித்துவிடும் நாக்குதடும் விரிந்து போகும்
படியோடே நாவெரியும் கண் வாய் வேகும்
புதுமையுள்ள கண்டமது பச்சைப் புண்ணாம்
தடியோடே திசைந்தங்கே கேட்கும் பாரு
தானுண்ட மருந்தாலே சுனையு மாச்சே (11)

496. ஆச்சப்பா தீட்சையது நான்கே யானால்
அண்டபகிரண்ட மெல்லாம் பற்றி வேகும்
பேச்சப்பா உடலிலுள்ள கார மெல்லாம்
பொன்போலே தேகமுமே கெட்டி யாச்சு
வீச்சப்பா யெலும்பிலுள்ள சத்துப் போகும்
வீரியமாய் திரிவதும்போம் விபரங் காணும்
மூச்சப்பா திங்களது ஐந்தே யானால்
முழக்கமடா பேதியுடன் வாந்தி காணும் (12)

497. காணுமே ஐந்துதனை செய்தா யானால்
கனகமடா உன்தேகம் கல்லு கல்லு
பூணுமே ஐந்துமட்டும் தீனி யப்பா
போட்டாலும் ஆறாது பூசை கொள்ளும்
தோணுமே ஆறான திங்க ளப்பா
தொடுகுறிபோல் க ....ணு தீனி தள்ளும்
ஊணுமே பேதியது முரமுரத்துத் தள்ளி
உள்ளித்து யடிவயிறு நோவ தாமே (13)

498. நோவாகும் யேழுதிங்கள் பேதி மெத்த
நேரத்திற் கொருமுறை போகும் பாரு
தாவாமல் தாவுமடா இளைப்போ ரொம்ப
தண்ணீர்பட சோர்வுண்டாம் வெள்ளீ ராகும்

ஆகாமல் போறதில்லை ஒருநா ளுந்தான்
அப்பளே கற்ப முண்ணு காணும் பாரு
போகாமல் எட்டான தீட்சை யப்பா
போனசீவன் வந்தாப்போ லசதி யாமே. (14)

499. அசதியுடன் உறக்கமதி பேதி மெத்த
ஆச்சரியம் இடுப்புவலி சந்து நோகும்
அசதியுடன் மேல்மூச்சு கபங்கள் விள்ளும்
அனுதினமு நொந்துவிடும் பச்சைப் புண்ணாம
அசதியுடன் வொன்பதாந் திங்கள் தன்னில்
அநேகவித பேதியுடன் வாய்வு சூலை
அசதியுடன் குய்யமுதல் கபால மட்டும்
ஆச்சரியம் வெந்துநொந்து புண்ண தாமே. (15)

500. புண்ணான சுக்கிலமோ யிளந்தேங் காய்போல்
புதுமையுள்ள ரசனையது .... டியே யாகும்
கண்ணான அமுரிபுளி வேக மெத்த
கண்டிடுமே அந்நேரம் வாதப் போக்கு
ஒன்றான பொருளப்பா மூன்றொன் றாச்சு
உத்தமனே கிரகமது கொஞ்சங் காணும்
வீணான உலகத்தில் விசார மெல்லாம்
விரண்டோடும் காரமென்ற சுன்னத்தாலே (16)

501. சுன்னமுடன் பத்தான திங்கள் தன்னில்
சுருக்கெனவே கழிச்சலது தோணும் பாரு
அன்னமுடன் சாரத்தால் கார மாகி
அடியற்று போச்சுதப்பா வேகத் தாலே
தன்னையுண்ட திராவகத்தால் கழிந்த தப்பா
தனதான்ற மேனியெல்லா மிறுகிப் போச்சே
கன்னமிட்ட சந்தல்லால் கீழே நோக்கி
கழன்றபடி பத்தாந்திங்கள் கண்டு பாரே. (17)

502. கண்டுண்ட படியதனா லபியைத் தட்டி
காரணமாம் தேகமது சூட்ச மாகி
உண்டுண்ட படியாலே மறுபிறவி யாகி
ஊரூடே நான்பிறந்து ஒளிவு பாரேன்
விண்டுண்ட படியெனக்கு யீசன் சொன்னார்
வேணபடி விபரமெல்லாங் கண்டு கொண்டேன்
திண்டுண்ட படியதனால் சாகாக் கல்வி
திரட்டினேன் உருட்டினேன் தினமுண் டேனே. (18)

503. உண்டபடி யேதாலே யாச்சு தென்றால்
உற்பனமாம் நாதவிந்து வுண்ட சத்து
கண்டபடி புளியமுரி யதிலே சேர்க்க
கனகசபை திருநடன மூலத் துள்ளே
விண்டபடி யாச்சுதப்பா விந்து கட்டி
விபரமுடன் மேலான முத்தி முத்தி
நின்றபடி கருவூரில் வாழ்ந்த வாழ்க்கை
நிகழ்த்தினேன் திருநீற்றின் மகிமை தானே (19)

504. மகிமையென்ற திருநீறு பூனீ ரப்பா
மகத்தான பூரணமே காண மாட்டார்
தகமையென்ற ஆனீறு உள்ளே கொண்டு
தவறாம லனுதினமும் தினந்தா னப்பா
மகிமையென்ற ததினுடைய கார மப்பா
பராபரமாய் போற்றுகின்ற மகிமை தானே
தகமையென்ற அன்னீறு மேலே பூச
நாடாது யேவலொடு நோவுங் காணே (20)

505. நோவோடு பில்லியொடு சூனி யந்தான்
நேரான முறைப்பாடு தீட்டிச் சூலை
பாவோடு கிரந்திவெட்டை மேக மெல்லாம்
பறக்குமடா இன்னும்வெகு ரோகந் தானும்

தாவோடு பதினொன்றா(ன) தீட்சை மேலே
தான்வாங்கி காரத்தை யெடுத்து லர்த்தி
சாவோடு கூறுகிறேன் கேளு மக்காள்
சந்தரன் சூரணத்தை மாட்டு வாயே (21)

506. மாட்டுவது காலமே விராகன் ரெண்டு
மாட்டிடவே தன்னமுரி யுடனே கொள்ளு
பூட்டுவது அந்தியிலே கடுக்காய் வீதம்
பிரட்டியந்த புளியோடே அமுரி கொள்ளு
நாட்டுவது யிப்படியே ஆண்டு யெட்டு
நாட்டிடவே நமனோட நோவுந் தீரும்
ஆட்டுவது வயதுபதி னாறு மாகி
அளவற்ற வித்தையெல்லா மாடும் பாரே (22)

507. ஆட்டுவது யிப்படியே ஆண்பெண் ரெண்டும்
அிந்துவந்து தெண்டனிட்டால் மனத்தைப் பார்த்து
கூடுவது யிருவரையும் சேர்த்து வைத்து
கொடுத்திடுநீ சித்தருட சூர ணத்தை
நாடுவது மாட்டயினி விபரஞ் சொல்லி
நலமாகப் பூசைசெய்ய முறையை யூட்டு
தேடுவது புவிதனிலே யிருந்து கொண்டு
தேகத்தை சித்தித்து மேலே யேறே. (23)

508. ஏறயிலே யின்னூலைப் பார்த்து ஏறு
யெளிதல்ல இந்தநூல் தெளிவு மெத்த
ஆரயிலே கட்டியே பார்த்துப் பேசு
அரைசணத்தில் சித்தியடா அறிந்து பாரு
கூறயிலே குருவினுட நிறத்தைக் கண்டு
கொண்டிடுவாய் தினந்தோறும் ஆதி விந்து
தேறயிலே அனுபோகம் கண்டு பாரு
திறப்படுமே சிவத்தியானந் திறமை தானே (24)

509. திறமான ஐந்தெழுத்தால் வாத மாச்சு
திரும்பியந்த சிகாரத்தால் வசிய மாச்சு
உரமையுள்ள வகாரத்தால் வாசி யோகம்
....
பரமான நகாரத்தால் குளிகை கட்டி
பார்க்குமந்த கேசர்க்குள் தம்பனமே செய்து
வரமான வகாரத்தால் மோகனமு மாகி
வளைந்தரிய சித்தரெல்லாம் மார்க்கங் காணே. (25)

510. காணாமல் மாண்டார்கள் உலகத் தோர்கள்
கைபாகந் தெரியாமல் கெட்டார் கோடி
ஊணாமல் போனாலும் உலகத் துள்ளே
உண்மை சொல்லி கெடுத்திட்டா னையோ பாவி
தோணாமல் உபதேசங் கேட்ட சீடன்
தொல்லுலகி லிறந்தவர்க ளனேகங் கோடி
பூணாமல் பூணுகின்ற பஞ்ச தீட்சை
பூட்டினால் சாவேது யிவ்வி மாத்தே. (26)

511. மாத்துவது பிறக்கின்ற ரெண்டெ ழுத்தால்
மகத்தான சித்தரெல்லா மான வாறு
ஆத்துவது மூன்றோடே ரெண்டு சேர்த்து
அப்பனே அர்ச்சிக்க வாத சித்தி
தோத்துவது பிராணா யாமம் பண்ணித்
தோசமெல்லாம் கீழ்நோக்கி உருவே யேறு
போத்துவது ஐங்கரயக் கருவைப் போலே
புனிதமாங் கிடையாது போகுந் தானே (27)

512. தானென்ற ஆங்கார ஆண வத்தைத்
தள்ளியே பின்புபாரு ஞான மார்க்கம்
கோனென்ற லேக்கமுடன் சினத்தைத் தள்ளி
கொண்டுநீ கற்பமுறை அறிந்து கொண்டு

பானென்ற வாசமுடன் நாதம் ரெண்டும்
பக்குவத்தை அறிந்தல்லோ பார்க்க வேணும்
வானென்ற வாழ்க்கையிலே உறைத்துக் கொண்டு
மறுவிப்பார் வித்தையெல்லா மறிவிப் பாரே (28)

513. கண்டுகண்டு மனந்தேறி யுண்ண வேணும்
கரியமுத லாறுவிதங் காண வேணும்
முண்டிமுண்டி கருவிகளே அறுக்க வேணும்
மூதண்ட லேகியத்தைத் தின்ன வேணும்
அண்டிஅண்டி சேர்ந்ததோர் மருந்து வேணும்
அளைந்தல்லோ விருபேரும் பெறவே வேணும்
விண்டுவிண்டு எடுத்தல்லோ மாட்டல் வேணும்
விவரிதமாய்த் திருநீற்றைப் பூசு வாயே. (29)

514. பூசுவது பூரணமே யண்ட சாரம்
பூமிதனில் யிருகமட்டும் துவாலை போடு
வீசுவது புளியோடே நீரும் சேர்த்து
விரவியொன்றாய்த் துவாலையிட்டு உருட்டிப் போடு
பூசுவது வாசமென்று யெண்ணி னாக்கால்
முழமோச மாகிவிடும் நாற்ற மேது
யேசுவது புவியுள்ளே மெத்த வுண்டு
இறங்கிவிடு தனிவீட்டி விருந்து செய்யே (30)

515. செய்யயிலே பலகூட்ட மனுக்க லாகா
சிவபூசைக் கிசைந்தவற்றைச் சேர்க்க லாங்கேள்
பொய்கையிலே மூழ்கினால் அழிந்து போகும்
போகம்விட்ட விதமப்பா முழுக வென்றால்
கொய்யப்பா ருலகறிவோ டெடுத்து மாட்டு
கோமணத்தை யிறுக்கிவிடும் மறுகா லப்பா
நைய்யயிலே பூரணத்தை வாங்கிக் கொள்ளு
நாகாக்கள் செய்தபடி செய்தி டாயே. (31)

516. செய்திட்ட மந்திரமோ கோடா கோடி
செழிப்பான மூலிகையோ கோடா கோடி
கொய்திட்ட கருவிகளோ கோடா கோடி
குருவாகி நின்றமுறை கோடா கோடி
நெய்திட்ட சிவதீட்சை சக்தி தீட்சை
நீயான மவுனமென்ற தீட்சை யுண்டு
யெய்திட்ட ....
.... முப்பத்து யிரண்டு பாட்டே. (32)

517. பாட்டான முப்பத்தி யிரண்டு பாட்டு
பார்ப்போர்க்கு ஆதிமுதல் அந்த மட்டும்
தேட்டான தேட்டெல்லா மிதற்குள் ளாச்சு
தேசத்து நடத்தையெல்லா மிதற்குள் ளாகும்
கூட்டான கூட்டமெல்லா மிதனுக் குள்ளே
குலாவுகின்ற ஊனுறக்க மிதனுக் குள்ளே
சூட்டான சூட்டமப்பா தீட்சை மார்க்கம்
அதைவிட்டா லொன்றுமில்லை தீர்க்கம் போமே. (33)

518. போமதுதா னேதாலே சுழித்துத் தென்றால்
போகமதை யெடுக்காமல் விட்ட தாலே
ஆமதுதா னளியாது போக முங்க
அப்பனே கற்பங்கள் கோடி யாகும்
நாமதுதான் பிறவியுள்ளே பிறவி யானோம்
நாதாக்க ளறிந்தல்லோ யெடுத்துண்டார்கள்
தாமதுமதான் பூரணத்தை நோக்க நோக்க
தனிப்பிறவி யில்லாமல் தானா வாயே. (34)

519. தானான கற்பத்தை உண்ணா மல்தான்
தாரணியோ ரறியாமல் கெட்டார் தானும்
ஊனான உடலுயிரு மறிய மாட்டார்
உற்பன கற்பனையென் றறிய மாட்டார்

மூனான பேரருளை மூப்பா மென்று
மூட்டிவிட அறியாமற் மோகிப் பார்கள்
வீணான பயல்களுக்கு ஞான மேது
விரண்டிடுவான் யிந்தமுறை அறியார் காணே. (35)

520. அறியாமல் வாதத்தைச் சுடுவான் பாரு
அறிவுகெட்ட மூடருக்கு வாத மேது
விரியாமல் குவிந்தகற்ப தீட்சை யாலே
விளைந்ததப்பா வாதமுதல் பத்து மேலே
புரியாமல் சடத்தினால் வருவ தேது
பூரணத்தி னுப்பாலே மீள வேணும்
சிரியாக லுலகத்தில் யிருக்க வென்றால்
சிவசிவா தீட்சை வைத்து முப்பூ காணே. (36)

521. மூப்பூவும் மும்மலமும் யிரண்டும் ஒன்று
மூர்க்கமுள்ள வழலையது நாதம் நாதம்
அப்பூவில் விளைந்ததந்த சவுக்கா ரந்தான்
அறிவார்கள் சுக்கிலமாம் கல்லு கல்லு
தப்பில்லை யிதுகொண்டால் சடல மாச்சு
தயவான ஆண்பெண்ணும் யிரண்டு மாச்சு
இப்புவியில் பிறவியறி யார்கள் மாண்பர்
இனியேதும் காண்பதில்லை அறிந்து பாரே (37)

522. பாரடா வழலையென்ற பிறவி தானும்
பார்தனிலே பதினாறு முழத்தின் கீழே
சீரடா யிளரத்தம் மேலே புக்கி
சிவந்திட்ட நவநீத புசிப்பி னாலே
கூறடா நவக்கிரகம் ஒன்ப துக்குள்
குலாவிய துளசியணி யிரண்டு மாகி
ஆரடா நட்சத்திரம் யிருபத் தேழு
அடவான கருவியது தொண்ணுத் தாறே. (38)

523. தொண்ணூத்தா(று) விதமான வழலை யப்பா
தொடுகுறியோ லறுபத்து நாலு மாச்சு
உண்ணுத்த பொருளாலே ஆயிரத் தெட்டு
ஒருங்கும்பனி யிரண்டாலே யிடமே தங்கி
அன்னத்தின் மலசலமு மலர்ந்து வாய்நிற்
றள்ளத்துப் போட்டதனா லழிந்து போச்சு
விண்ணுத்த புருஷனுக்கு நாலு போகம்
விதமான பட்சியிட மார்க்கங் கேளே. (39)

524. மார்க்கமுடன் மலசலமாம் வாய்நிற நாதம்
மகத்தான பொருள் நாலும் வெளியே போக
பார்க்கமுடன் பலன்கெட வயது போச்சு
தாரணியில் இதைத்தள்ளி தியங்கி னார்கள்
கார்க்கமுடன் கருவான பூரணமே வழலை
கருதிப்பார் அதில்விளைந்த (சவுக்காரம்) கார மாகும்
ஆர்க்கமுடன் அதில்யிரண்டும் நன்றாய் சேர்த்தால்
அறைவீட்டில் மேல்கார மேறக் கேளே. (40)

525. கேளப்பா அமுரிபுளி அதன்மேல் போட
கேடியா யீரெட்டு பதினா றாச்சு
ஆளப்பா அதுயிரண்டு இதுயிரண்டுஞ் சேர்த்தால்
அப்பனே முப்பூவு முடித்த வாறு
தேளப்பா கொட்டுதல் போல் சுன்ன மாக
தினந்தோறும் ஆட்டிப்பார் ஆண்டு பத்து
நாளப்பா வாய்கூட வெந்து போகும்
நாவுவெந்து வாய்வெந்து நாச மாச்சே. (41)

526. நாசமடா கருவிகளோ தொண்ணூத் தாறும்
நலமாக வெந்துவெந்து போச்சு தப்பா
பாசமடா ஆசையென்ற விருப்பம் போச்சு
பாழான கொடூரமென்(ற) கோபம் போச்சு

காசமென்ற கபங்களது மேலே போச்சு
கண்டிப்பாய் பதிமூன்றி லுள்ள மட்டும்
வாசமென்ற துற்குணங்க ளுறுதி பாரு
வளமான பதிமூன்று தீட்சைக் குள்ளே (42)

527. உள்ளான உள்ளமெல்லாம் ஒடுங்கி வந்தால்
உறவாச்சு அன்பனுக்கு தீட்சை மார்க்கம்
கல்லான கல்லெல்லாங் கரைந்து போகும்
கடுமையுள்ள சுன்னத்தா லித்தனையு மாச்சு
புல்லான புதுப்பாண்டம் போலே யாக்கும்
புதுமையுள்ள சுன்னத்தா லான வாரு
சொல்லான சொல்லெல்லாஞ் சொன்ன தாலே
சுகமான காமப்பா லான வாறே. (43)

528. வாறான உலகத்து வாதி மார்கள்
வகையான நால்சரக்கைத் தள்ளிப் போட்டு
பேரான வெளிச்சரக்கை வாங்கி வந்து
பேருலகில் சுடுவார்கள் கந்தை போலே
சீரான மூலிகையில் வாத முண்டோ
சிறந்திட்ட காயசித்தி யாகு மோசொல்
தீரான சிறுநீரா லாகு மாகும்
நினைவு கெட்டுப் போகாதே உண்டு பாரே. (44)

529. பாரடா சிவமூலி .... பா ழாகும்
(பண்பான) நால்சரக்கை காண மாட்டார்
உள்ளடா யிருக்குகின்ற வீண ரப்பா
உணர்ச்சிகெட்டுப் போனாரே கருக்கா ணாமல்
சீரடா கருவென்ன உருவென்ன வென்று
சீமையிலே அலைகின்ற ஞாய மாரே
கூறடா அளிச்சின்ன முள்ள மட்டும்
கூடமிட்டுப் பார்த்தல்லோ சாவான் வீணே (45)

530. வீணான பயல்களோட மார்க்கங் கேளு
வெளியிலுள்ள கோவிலுக்குள் புகுந்து
கோணாமல் கும்பிடுவார் வொன்றுங் காணார்
குரும்பள வாலைகின்ற மார்க்க மேதோ
தோணாமல் தோணுகின்ற மடைய ரப்பா
நாய்போல திரிவார்கள் தலங்கள் தோறும்
தோணாமல் மூளுகின்ற தீர்த்த மென்று
துறையேதுங் காணாத மடையர் தானே. (46)

531. மடையரென்றால் கோவிலான மாடு மாடு
மகாமோசங் கண்டாப்போல் பூசை செய்வான்
குடையான குடையதுதான் வந்தாப் போலே
கூறுகெட்ட கழுதைப்பயல் பூப்ப றிப்பான்
விடையாதே அவர் குணத்தைப் பார்க்கும் போது
விதிப்படியே அவனன்பு கண்டுப் பாரு
படையான கருவில்லை வெல்ல மாட்டார்
பரபிரமம் போலிருப்பான் மூடன் தானே. (47)

532. மூடனுக்கு மூடனாக யிருந்து கொண்டு
மும்மூல சுக்கிலத்தை அறிந்து உண்டு
மூடனுக்கு மூடனாக யிருந்து கொண்டு
மூர்க்கமுள்ள சமாதியிலே பணிந்து மீண்டு
மூடனுக்கு மூடனாக யிருந்து கொண்டு
....
மூடனுக்கு மூடனாக யிருந்து கொண்டு
முப்பத்தி யிரண்டினுட தீட்சை பெற்றே. (48)

533. பெத்தனடா தீட்சையிலே யிருக்கும் போது
பேருலகில் மனுக்களுடன் கூட்டி வளைத்து
ஒத்தனடா வறுமையிலே வறுமை யாகி
ஒருவருடன் வீண்பேச்சு பேசா மல்தான்

கத்தனடா செகத்திலுள்ள கல்வி யெல்லாம்
கசகாம லதுமேலே முப்பா லுண்டு
சித்தனடா மெய்யனுக்கு மெய்ய னானேன்
செகத்திலுள்ள பொய்யனுக்குப் பொய்ய னானேன். (49)

534. பொய்யான காயத்தை மெய்யென் றெண்ணி
போக்கொன்றுங் காணாம லிறந்தார் கோடி
சய்யான சயயோக வாழ்க்கை காணுந்
சருவாங்க மளித்தாரே சண்டா ளர்கள்
மெய்யான பொருளப்பா சாகாக் காலும்
மெச்சினவ ருண்டறிந்தாற் வேகாச் சுன்ன
தைய்யான தைலமப்பா யிரண்டி னாலே
தாய்ப்பதத்தை பூசித்துத் தானா னாரே. (50)

535. தானான மந்திரமோ ஐம்பத் தொன்னுந்
தாக்கதன் கல்வியெல்லா மேலே விள்ளும்
ஊனான உடல்பிறப்பி னாலே யாச்சு
ஒருமனதாய்க் கண்டோர்க்கு விதியே மாற்றி
பானான அமிர்தமுடன் கற்பத் தாலே
பரமசிவன் றானானர் பாருலகில் பாரு
ஊனான முப்பொருளை கண்ட வாதி
முழக்கமடா ஐம்பத்து ஒன்று முற்றே. (51)

நந்தீஸ்வர காடிக்கார கற்பம்

536. ஆதியந்த மேயறிய சோதி பாதம்
ரூபமன்றி சொரூபமணி குடுவின் பாதம்
நீதியென்ற மணிவிளக்காய் நிறைந்த பாதம்
நிச்சயத்தை தரசெருப மறிந்த பாதம்
சாதியென்ற பலவடிவின் கொண்ட பாதம்
சாக்கீர தின்கரமாய் தரித்த பாதம்
போதியென்ற போதிக்க அரிய பாதம்
புகழ்படைத்த பொற்பாதங் காப்ப தாமே. (1)

537. ஆமிந்த குருதேவி பாதம் போற்றி
அறிவான சிவயோகி சித்தர்க் ளெல்லாம்
நாமிந்த கற்பமொடு காடிக் காரம்
நாதவிந்து சொருபவெளி சஞ்சீவி மார்க்கம்
வேமிந்த கெவுனமணி ஞான மூர்த்தம்
வேதாந்தந் தனில் துலங்கா விபர மெல்லாம்
தாமிந்த படிகொண்டு அளந்து கட்டி
தவமான தனுநிலையை வெளிசொல் வேனே. (2)

538. சொல்லுவேன் சிவயோகி ஞானி யானால்
சுத்தபரி சுத்தமடா மனமே கற்பம்
வெல்லுவேன் பிரமகற்ப மாதி யாகும்
வேதாந்தி சித்தாந்தி காண மாட்டான்
அல்லுவேன் பகலுதய மான கல்பன்
அல்பவய துடையபேர் காண மாட்டார்
சொல்லுவேன் கற்பம் நானே கொண்டு
சடஞ்செயமாய் வைத்திருந்த வகையைக் கேளே. (3)

539. கேளடா ஆதிசதா சிவத்தின் பக்கம்
கிள்ளைசிறு வயதான வாலை சுத்தி
ஆளடா அவளைத்தான் பெண்ணெனன் பார்கள்
அவள்நிலையை யறிந்தவர்க ளாரு மில்லை
தேனடா அவள்தானுங் கொடிய தேவி
தேகத்தின் ஆசையதால் திகழ்வாள் பூமியில்
நாளடா திங்கள்புதன் தனித்த நாதன்
நவிலுகின்ற சாத்திரத்தின் பொருள்காண் பானே. (4)

540. காணுவா னறிவுள்ளோ னெளிதில் காண்பான்
கருத்தறியா மூடனென்றா லொன்றுங் காணான்
தோணுவான் காயசித்தி கற்ப மூலி
துணையான ஞானக்கண் ஆத்தும சுத்தி

பூணுவான் பதினாறில் சித்தி யொன்று
புகழான .... சித்தி யொன்று
கோணுவான் மனங்கோணி யோகி யாவான்
கோலட்டிபல விதஞ்செய்வான் பதினெட் டுக்கும் (5)

541. பதினெட்டும் சென்றபிள்ளை குருவைக் காண்பான்
பக்திகொண்டு சித்திசெய்வான் நாற்ப தாகில்
இதினெட்டு அரைபொருக் காச்சல மாவான்
ஈசுரனாற் பதங்காண்பான் நாற்பத் தைந்து
விதினெட்டு இப்படியே ....ந்திய கண்டால்
வீதியிலே நின்றுவிளை யாடும் பாரு
கதினெட்டு கதிகொடுக்கும் காடி கண்டால்
கஶ்திறக்குஞ் சருவகாடி அதிகந்தானே. (6)

542. அதிக மென்ற காடியார் ஆழியிற் சொன்னார்
அகத்தியரும் சூதமுனி ஆன தாலே
கெதிகமென்ற காடியைத்தான் மறைத்தே போட்டார்
கிள்ளைகள் போல் பதினெண்போர் சொல்லு வாரோ
சதிகமென்ற சாஸ்திரத்தில் மறைப்பே மெத்த
சமுசயங்கள் தெளிந்துகரை யேறுவா ரில்லை
கதிகமென்ற காடியதை புகழுக் காக
காட்டுகிறேன் சித்தருக்குந் திறக்கந் தானே (7)

543. திறக்கவடா சுகதேவ முனியே கேளு
தெளிந்தகரை காணுமுன் காடி கொள்ள
நிறுக்கவடா வல்லாரை குறுவை நெல்லு
நீடுலகில் மனுவோர்கள் காண மாட்டார்
பிறக்கவடா குறுவைநெல் லரிசி கண்டால்
பிறப்புயிறப் புமற்றுசில யோகி யாகி
அரக்கமடா வல்லாரை மூலி யாவாய்
அரறிவார் இரகசியத்தை சொல்லப் போமோ (8)

544. சொல்லுவதுஞ் சுகதேவ முனிக்கே சொன்னோம்
சுருக்கமொரு பதினாறும் உபதே சந்தான்
வெல்லுவதும் அதிகார நந்தி யென்றே
விரும்புதலால் எனைநினைத்தால் சகல சித்தி
நல்லுவதும் கதிசேர கிருபை யுண்டாம்
நமதருளைப் பெற்றவர்க்கும் நமன்வா ரான்காண்
அல்லுபகல் யெனைத்தறிவாய் தூங்கி னோர்க்கு
அருள்செய்வோம் பொருள் செய்வோம் கற்பந் தானே (9)

545. தானான காடியொன்று விபரங் கேளு
தப்பாமல் காயசித்தி யாகு மார்க்கம்
மானான பெண்களிலே பலதில் கேளு
மான்சாதி குறுஞ்சாதி யென்றுஞ் சொல்வார்
வேணான குறுஞ்சாதி பெண்ண தானால்
வெற்றிபெற்ற கருங்குறுவை நெல்ல தாச்சு
ஊணான கருங்குறுவை கருத்த பெண்பேர்
உத்ததொரு செங்குருவை சிவத்த பெண்ணே (10)

546. பெண்ணளக்கு கருங்குறுவை யேதா லாச்சு
போகத்தில் கருத்தறித்து இருக்கும் நாளில்
அண்ணளக்கு கருங்குறுவை யென்ற நாமம்
ஆச்சுதடா முன்னூறு நாளு மட்டும்
வண்ணளக்கு புதலதுவே பிறந்த நானால்
வல்லாரை மூலியது வெளியி லாச்சு
இண்ணளக்கு கருத்தரிக்கும் கருவே காடி
வாரிவர இதன்பெருமை காடி யெண்ணே (11)

547. என்னடா கருவான சுக்கிலமே சென்று
இழுக்குமடா சுரோணிதத்தை உறையச் செய்யும்
நன்னடா நாற்பதுநாள் சென்ற தானால்
நாதமென்ற சுக்கிலமே திரட்டும் பாரு

வின்னடா ரசமென்றால் கடைந்தேருஞ் சுத்தி
வேகவைத்து புதைந்துபோய் முழிப்பான் மட்டை
கன்னடா ரசமறியாக் கழுதை மாடு
கட்டிரச மணிசெய்வ தெவ்வார் கேளே (12)

548. கேளடா ரசமென்றால் சுக்கிலமே யாகும்
கெடியான ரசங்கட்டுஞ் சுரோணிதமே மூலி
வாளடா இதுயிரண்டும் அறிந்து சேர்க்க
வையகத்தில் கெவுனரச மணியு மாச்சு
தேளடா கருத்தரித்து மாதம் நாலு
திரட்டுமடா ரசந்தன்னில் உதிரை முங்கும்
ஆளடா நால்மாதம் பின்புமதி ரசமு
.... சுரோணிதத்தை ஊங்கா தாமே (13)

549. ஊங்காது சுரோணிதமே குளமாய் நின்று
உள்வளரும் உலாவிவரும் பிண்டந் தானும்
மாங்காறு மாதம்வரை சுரோணிதமே யறுந்தி
மதிலிருக்கும் பெருநாள் வெளியில் மீளும்
தாங்காறு மாதமடா நின்ற தாலே
தக்கினாற் ஆறுமாற்றைக் காட்டி யென்றும்
பாங்காறு மாதமிரு காடி காணாற்
பயனறிவார் அரிசிபொங்கி காடியென்பார் பாரே (14)

55(என்பார்கள் காடிகண்டு காடி யுண்டால்
யேய்பான தேகமது சித்தி யாமே
வன்பாக அரிசிப்பொங்கி காடித் தண்ணீர்
வருஷம் பனி ரெண்டுவரை சேர்த்திட் டாலும்
தென்பாமோ காயசித்தி திடமுன் டாமோ
தேறாது தேறாது அறியார் களெல்லா
முன்பாக செய்ததொரு தவத்தி னாலே
மூலியென்ற வல்லாரைக் காண்ப தானே (15)

551. வல்லாரை என்றாக்கால் புருடர்க் காச்சு
வல்லாரை ஒழியென்ற சொல்தோ ணாதோ
கல்லாரை காடியென்றால் பெண்களுக் காச்சு
காடிப்பேரன் பிள்ளைதயிர் கொண்டுவா வென்றே
சொல்லாகச் சொல்லுவதை அறியா யோநீ
சுதன் சமத்தன் ஆனாக்கால் சொல்லு வார்கள்
அல்லான கர்ப்பவிந்து காடி யாச்சு
அல்முளைத்த பிண்டம்வல் லாரை யாச்சே (16)

552. ஆச்சுதடா அனந்தவர்கள் நூலைப் பாரு
ஆர்தானும் என்னைப்போல் சொல்வா ருண்டோ
பேச்சுதடா யேச்சேச்சு மறைத்துச் சொல்வார்
பிசகென்றும் நிசமென்றும் அறியா மாண்பர்
காச்சுதடா வேரோடே வந்தாற் போலே
காயசித்தி செய்வமென்று கருக்கா ணாமல்
வாச்சுதென்று பலபலவி தத்தைத் தின்று
வானாலும் வழிந்துகெட்டார் கோடா கோடி (17)

553. கோடிபல நூலறிவைத் தெரிந்திட்டாலும்
குருவருளைப் போற்றிட்டார்க் கேது வாகும்
நீடியிடு யுகமாக மகிழ்ச்சி பார்த்து
நிலைத்துசடம் வைத்திருக்கும் பேர்க ளுக்கு
நாடியிரு சற்குருவின் கடாட்சம் பெற்று
நல்மனதாய் தர்மவானாய் இருப்போ னுக்கு
காடியிரு வல்லாரை அறிவுண் டாகும்
கற்பசித்தி காயசித்தி கைக்குள் ளாமே (18)

554. ஆமடா கற்பமதை உண்ணாமல் ....
மறைப்பாக கற்பமுண்ணு வென்றே சொன்னார்
நாமடா அவர் மறைத்த சூட்சம் சொன்னேன்
நல்மனது இல்லார்க்குச் சொல்ல வேண்டாம்

ஓமடா வல்லாரை பிடிங்கி வந்து
உறவான காடியைத்தான் எடுத்துக் கொண்டு
போமடா சீசாவில் பதனம் பண்ணி
புகழான செயநீரும் பதனஞ் செய்யே (19)

555. செய்யடா செயநீரை அறியா மூடர்
செய்வார்கள் பலவிதமாய் சாஸ்திரம் பார்த்து
மெய்யடா அதிலாமோ செயநீ ராமோ
முன்னேவரும் வல்லாரை முன்ன தாக
உய்யவரும் பன்னீர்க்கு டமென்று சொல்வார்
உற்றசெய நீரென்று மெவருங் காணார்
உற்றசெய நீரென்று மெவருங் காணார்
கைய்யான செயநீரே வெளியாய்ச் சொன்னோம்
கண்டறியார்க் கொன்றுமில்லை காய சித்தி (20)

556. காயமெனறால் ஐங்காய மிதுவே யாச்சு
காடிசெய நீரடா யிதுவே யாச்சு
ஆயமென்ற செந்தூர மிதுவே யாச்சு
அழகான பூரணாதி லேகிய மு மாச்சு
வாயமென்றால் வஸ்துவது இதுவே யாச்சு
வண்டருக்கும் பசுக்களுக்கும் சொன்னா யானால்
மாயமென்ற சடத்துக்கு கழிவுண்டாகும்
மகத்தான குருமறந்தால் சாபந் தானே (21)

557. சாபமது மீள்வதற்குக் குருவைக் காரு
சடலமது அழியாமல் கற்பங் கேளு
பாவமது மீளாமல் பயந்து போற்று
பரமகுரு பதத்தில்நீ தொண்டு பண்ணு
லாபமது உனக்குண்டாம் ஆத்ம லாபம்
லட்சியத்தை மறவாமல் நிலைத்து நில்லு
ஆப்மென்ற ஆபத்து வரமாட் டாது
அனுபவிக்குங் கர்மவினை அருளால் போமே (22)

558. போமடா வல்லாரை பிடிங்கி வந்து
பொடியிடிக்க வேண்டுமென்றே நறுக்கிக் கொண்டு
ஆமடா ஆகாச கம்பி உப்பு
அதனிடைக்கு மூணத்தோ னிறுத்துக் கொண்டு
வேமடா கந்தகத்தின் சாறு வார்த்து
வெயிலிலே வைத்துவிடு வண்டு சுத்தி
தாமடா பத்திரியும் சாதிக் காயும்
தாணிக்காய் திப்பிலியும் கிராம்பு மூலம்
ஓமடா சடாகோ .... அபினும் பூரம்
உத்தமனே வீரமொடு கெந்தி சேரே (23)

559. சேரடா வால்மிளகு கருஞ்சீரகம் சுக்கு
சித்தரத்தை வசம்போடு கருவேலம் பாலும்
பூரடா முருங்கைப்பா விதுக ளெல்லாம்
குறையாமல் ஒரெடையாய் தூக்கிக் கொண்டு
தாரடா பொடியாக்கி தெளித்து வாரி
தாட்டிவெல்ல பாகாக்கி போட்டுக் கிண்டி
ஆரடா முறுகாமல் எடுத்துக் கொண்டு
ஆயிபதம் தனைநினைத்துக் கழஞ்சு போலே (24)

560. கழஞ்சியொடு வல்லாரை லேகியமே கொண்டால்
கடுப்பான சகலபிணி கருவி யெல்லாம்
கழஞ்சோடு அந்திசந்தி பகலி லுண்ணு
சேகராஞ் செயநீரின் காடி தன்னில்
வளைந்துண்ணு மத்தித்துக் கொண்டா யானால்
வருஷத்தில் நரைதிரையு மாறிப் போகும்
மளந்துண்ணு வல்லாரை தனியே கொண்டு
அதில்நறுக்கி வெயிலுர்த்தி பொடிசெய் வாயே (25)

561. செய்துநீ தெளிந்தெடுத்து சிமி[illegible]ல் வைத்து
சிறப்பான பனையுடைய [illegible]ள்ளு சேர்த்து
மெய்துநீ காடியிலே கழஞ்சு தூவி
மேன்மைபெற வேண்டுமென்றே கொண்டா யானால்

உய்துநீ உடலிலுள்ள பிணிக ளெல்லாம்
உடன்தீரு மண்டலத்தில் சிவந்து காணும்
அய்துநீ சூரணமே வஸ்தில் கொள்ள
ஆக்கையது இறுகுமடா வஸ்து வாலே (26)

562. வஸ்துவென்றால் மதுவல்ல தேனுமல்ல
வாமென்ற சாராயம் பதனி யல்ல
வஸ்துவென்றால் சரக்கல்ல கஞ்சா வல்ல
வாணியென்ற சரமல்ல மந்திர மல்ல
வஸ்துவென்றால் புகையல்ல சோதி யல்ல
வாயுவல்ல தேய்யுமல்ல அப்பு வல்ல
வஸ்து வென்றால் ஆதியல்ல அந்த மல்ல
வாமல்ல இருளல்ல கதிர்மதியு மல்ல (27)

563. அல்லலடா மேகவிடி விந்து வல்ல
ஆச்சர்யம் நட்சத்திர மொழியு மல்ல
அல்லவடா பால்களல்ல தயிர்மோ ரல்ல
அன்னமல்ல ரசமல்ல அறுசுவையு மல்ல
அல்லவடா புல்பூடு மரங்க ளல்ல
ஆகாச வெளியல்ல பூமி யல்ல
அல்லவடா உருவல்ல சிலைக ளல்ல
ஆத்மங்கள் கோடியெல்லாம் வஸ்து வல்ல (28)

564. வஸ்துவென்றால் முனிவரல்ல ரிஷிக ளல்ல
வரம்பெற்ற தேவரல்ல சித்த ரல்ல
வஸ்துவென்றால் வாலையல்ல புவனை யல்ல
வைகுண்ட லட்சுமியுந் துர்க்கை யல்ல
வஸ்துவென்றால் ஈஸ்பரியுங் காளி யல்ல
வலுவான குருவினுட கடாட்சத் தாலே
வஸ்துவென்ற வஸ்துவதைக் காண வேணும்
வாமிசிவ காமிநிலை கேட்க வேண்டும் (29)

565. கேழ்க்கவாட கண்ணுக்கு இனிய பெண்ணைக்
கிள்ளைசிறு வயதுடைய விந்து நாதம்
மூழ்கவடா ஓமப்பால் யோனிப் பாலை
மோகமுடன் தாகமதாய்க் கொண்டா யானால்
ஆழ்க்கமடா அல்குல்மலர் அரளிப் பூவை
அஞ்சாமல் துஞ்சாமல் அடக்க மாக
வாழ்க்கமடா முலைப்பாலுந் தலைப்பாலுஞ் சேர்த்து
வாய்மலரால் கொண்டவர்க்கு வஸ்து வாமே (30)

566. ஆமடா தலைப்பாலை முலைப்பா லூட்டி
அசியாமல் மத்தித்து யிருபோ துண்ண
வாமடா தேகமதில் பிணிசா ராது
வாணாலுந் தளராத பலமுண் டாகும்
நாமடா கொண்டவழி யெவருங் காணார்
நற்புத்திரன் சற்புத்திரன் ஆனால் தோன்றும்
போமடா சத்தியமாய் நிலைப்பா னாகில்
பூட்டியதோர் கற்பமெல்லாம் சித்தி தானே (31)

567. சித்திக்கும் ஐங்கோலத் தைல மெல்லாம்
சேர்ப்பார்கள் சித்தோர்க ளறிய மாட்டார்
புத்திக்கும் சலனத்தால் மறைத்துப் போட்டார்
பூமியிலே கலியிருக்கு ஆகா தென்று
சத்திக்கும் விந்துமலம் மகார நீரும்
சரண்டான தூரமுதல் ஐங்கோல மாச்சு
வெத்திக்கும் வகைக்குவொரு சேர்தான் சேர்த்து
வெயில்புடமாய் கலக்கியதை வற்ற வாங்கே (32)

568. வத்தவத்த கிண்டியதை பொடிய தாக்கி
அடித்தெளிவாய் யெடுத்து அதை (ப்)பரணி சேர்த்து
நித்தம்நித்தம் யிந்துவிலே குழப்பி யுண்ண
நிர்மூடந் தீருமடா காபஞ் சித்தி

மத்தமத்த நால்சரக்கு பரப்ப நீரு
மருகியுண்டால் தேகத்துக் கேற்கா தய்யா
சுத்திசுத்தி பிறந்தவழி கற்பத் தாலே
சுகிருதியாய் கரையேறி மோட்சம் பெற்றார் (33)

569. மோட்சமது பெற்றவழி முடிவைச் சொன்னேன்
முக்கியமாய் வல்லாரைக் காடி சொன்னேன்
அச்சமில்லா லேகியமும் கற்பஞ் சொன்னேன்
அம்மம்மா யிதைமறந்தால் வகையே யேது
வீட்சமென்ற வீட்சமதே தெரியா றாகில்
வெகுகற்பம் உண்டாலும் விழலாய்ப் போகும்
மாட்சமென்ற கும்பமுனி நந்தி பாதம்
மறவாமல் தினந்தொழுது கற்பங் கொள்ளே (34)

570. கொள்ளுவாய் முப்பத்து யிரண்டும் பார்த்து
குருவான குரு வறிந்து அருளைக் கேட்டு
தெள்ளுவாய் கற்பங்கள் காடி சூரணந்
தின்றாக்கால் காயமது திரம துண்டாம்
விள்ளுவாய் மற்றவர்க்கு மனதைப் பார்த்து
விரும்பியே பனிரெண்டாண்டு காத்தா யானால்
அள்ளுவாய் யென்சுருக்கம் பொருளைச் சொல்லு
அதிகார நந்திபதங் காண்பார் முற்றே (35)

நந்தி சுவாமிகளது துணை
நந்தீஸ்வர காடிக்கார கற்பம் முற்றும்

வியாக்ரபாதர் அதித கற்பம்

571. தாரணியில் வியாக்கிரமர் நூலுக் குள்ளே
தயவு செய்து சீடருக்கு அறிக்கை செய்வார்
வாரணியாஞ் சோதிமிகத் துலக்க மாக
வாசியெனும் முப்பொருளு முருவ தாக

சீரணியுங் காயத்தில் நோய்கள் தீரத்
தெளிவாக நரைதிரைக ளற்றுப் போக
காரணமாய் மைந்தர்களே சொல்லக் கேளு
கற்பத்தின் வகையதனை உரைக்கி றேனே. (1)

572. உரைக்கிறேன் தண்ணீர்விட்டான் கிழங்குபலம் நான்கு
உற்றதொரு நெருஞ்சிவித்து பலமோ மூன்று
நிறைக்கிறேன் சீந்திவித்து பலமோ நான்கு
நிலப்பனையின் கிழங்கதுதான் பலமோ மூன்று
விறைக்கிறேன் சித்திரத்தின் மூலம் மூன்று
வகையாகக் கார்போக வரிசி மூன்று
மறைக்கிறேன் கந்தகத்தின் சுத்தி மூன்று
பருவமா யாறுவகைக் கூட்டிக் கொள்ளே. (2)

573. கொள்ளேதான் நிழல்படவே உலர்த்தல் செய்து
கொண்டிடித்து சூரணத்தை வடியே செய்து
அள்ளேதான் சூரணத்திற் பாதி தேனும்
அதிற்பாதி தேனில்நறு நெய்யுங் கூட்டி
விள்ளேதான் புதுப்பாண்டத் தடைத்துக் கொண்டு
வெருக்கடியா யொருபொழுது உண்டு பாரு
உள்ளேதா னின்றதொரு பத்தைச் சாடி
உளமலந்து போகும்பாரு ரோக மெல்லாம் (3)

574. ரோகமென்றால் மண்டலத்தில் நோயைத் தீர்க்கும்
....
ரோகமென்றா லெத்தனையோ சொல்லப் போகும்
காந்தமதி பிள்ளையப்பா சொல்லக் கேளு
ரோகமென்றா லெத்தனையோ ஆனந்தங் கோடி
நொடிக்குகுமுன்னே ரோகமெல்லாம் பறந்து போகும்
ரோகமென்றா லெத்தனையோ வினைகள் போக்கும்
காந்திமதி போலிருந்து வாழ்வார் தானே (4)

575. தானென்ற வுடலுக்குள் வினைக ளற்றால்
சாதகத்திற் காயமது சித்தி யாகும்
வானென்ற ஆக்கினையால் கபங்கள் போகும்
வாருதியா முப்பொருளுந் துலக்க மாகும்
யேனென்ற வாசியது உரைக்குங் கல்போல்
யேழைமதி போகாதே சொன்னே னப்பா
கோனென்றயீசனங்கே வீரத்தைச் சொல்வார்
கூடியங்கே அவரரோடே ாசி யேற்றே (5)

576. ஏத்தப்பா அப்பவல்லோ வாசி யேறும்
யேற்றிவிட்ட விடமெல்லாஞ் சித்தி யாகுங்
கூத்தனபபா மறைந்தோடி ஐவர் தானும்
குடிபோக்கி வென்றாக வாழ்வார் பாரு
நீத்தனப்பா யீசனங்கே வார்த்தைப் பேசி
நிலைத்ததுவே தேகமப்பா அநேகங் கோடி
மூத்தனப்பா தேவருக்குத் தேவ னாவான்
மூதூழி காலமெல்லாம் இருப்பார் காணே (6)

571. காணந்த வுலகுதனிற் சிவயோகஞ் செய்வார்
காணார்க் ளிக்கருவைச் சொல்ல வேண்டாம்
பூணிந்த யெந்தனுட கற்ப மப்பா
புகலாதே யாவருக்கு முரைக்க வேண்டாந்
தோணிந்த கற்பத்தில் அநேகஞ் சித்தி
தொகுத்தவர்தார் பதஞ்சலியார் யானுட் கொண்டேன்
வீணிந்த கற்பமென்று தள்ளி னாக்கால்
வேறுபடா ரோகமது மாறு தென்றே (7)

578. என்றேதான் மைந்தர்களே உண்டு பாரும்
யியங்கும்பார் நூறாண்டில் பொன்போல் தேகம்
சென்றேதான் வாசியது கட்டிக் கொள்ளும்
சிறந்ததொரு .... சத்தைக் கட்டும்
உண்டேதான் காயமது அருண னாகும்
ஊழியதோ காலமது இருக்குந் தேகம்
நன்றேதான் யெந்தனுட சூத்தி ரத்தில்
நானுரைத்த கற்பமது கொண்டு தேறே (8)

முற்றும்

திருச்சிற்றம்பலம்

துணைநூற் பட்டியல்

1 அகத்தியர் கலைஞானம் 1200. மு.கிருஷ்ணப்பிள்ளை. பதிப். வித்யாரத்நாகர அச்சுக் கூடம், சென்னை, 1917.

2. அபிதான சிந்தாமணி 1981.

3. சித்த மருத்துவாங்க சுருக்கம். டாக்டர் க.அ. உத்தமராயன், தமிழ்நாடு அரசு சித்த அறிவியல் மேம்பாட்டுக் குழு, தமிழ்நாடு அரசு, சென்னை, 1983.

4. சித்தர் வெண்பா (சுவடியியல் ஆய்வேடு) சென்னை. துரேந்திரநாதன் (பதிப்.) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை- 113.

5. ஞாய அஷ்டாங்க தீபம். பா. முஹம்மது அப்துல்லா சாஹிபு (பதிப்.) முஸ்லீம் அபிமானி அச்சியந்திரசாலை. சென்னை, 1916.

6. ஞான வெட்டியான். ஸ்ரீமத் ஷண்முகானந்த சுவாமி (பதிப்).

7. தன்வந்திரி சூக்ஷம் வைத்தியம் 200.பா. முஹம்மது அப்துல்லா சாஹிபு முஸ்லீம் அபிமானி அச்சியந்திர சாலை. சென்னை, 1907.

8. திருமூலர் வைத்தியம் (கருக்கிடை 600) B.R. தேவராஜ நாயகர் (பதிப்) சென்னை.

    சிவசிவா அண்டமெல்லாங் கட்டிப் போச்சே (31)

கட்டியதோர் அண்டமெல்லா மெடுத்துக் கொண்டு
    கைமுறையாய்க் கருடனுட [கிழக்கு] சாற்றில் விட்டு
மட்டிய தோர் அண்டமிட்டு ரெண்டு சாமம்
    வாகாக யெரித்தபின்பு எடுத்துவைத்துக் கொண்டு
தட்டியல்லோ மேலோடு தள்ளிப் போட்டு
    சாதகமாய்த் தினமொன்று அண்ட மொன்று
துட்டியல்லே யிரண்டாக்கிப் பாதி கொள்ளு
    துயர்தீருஞ் சுகமாக கொள்ளு கொள்ளே. (32)

கொள்ளப்பா யிருபதுநாள் காயந் தானும்
    குறுகாது நெடுகாது கல்தூ ணாகும்
விள்ளப்பா சுக்கிலத்தை கட்டி நிற்கும்
    மேலேற்று மல்லாமல் கீழோ டாது

துள்ளப்பா அடங்கிற்று காம வித்தை
சுகபோகஞ் செய்தாலும் விந்து வீழா
தள்ளப்பா யிவ்வளவில் சொன்ன மார்க்கம்
சட்டைபோம் சாதித் தோர்க்கே. (33)

சாதிக்க யிவ்வளவும் பத்தியத்தைக் கேளு
தாம்பூலந் தின்பதற்குச் சுண்ணஞ் சொல்வேன்
ஓதிக்கக் கற்பூரச் சிலையை வாங்கி
உத்தமனே வெண்கருவா லரைத்துக் கட்டி
பேதிக்க கரியோட்டில் ஊது ஊது
பேரான சுண்ணாம்பாம் பின்னுங் கேளு
வாதிக்கக் கல்நாரை யிப்படியே ஊது
மகத்தான அண்டத்தில் ஊதி டாயே. (34)

ஊதிடவே சுண்ணாம்பாம் ஒவ்வொன் றப்பா
உத்தமனே பழுத்திருந்த வெற்றிலையில் பூசி
கோதிடவே கொட்டைபாக் கதனை சீவி
தமுறவே தாம்பூலந் தின்ன நன்றாய்
ஓதிடவே முன்சாற்றை உமிழ்ந்துப் போடு
உண்டபின்பு தாம்பூலந் தின்று துப்பு
வாதிடவே சிலேட்டுமத்தை யறுத்துப் போடும்
மகத்தான உபரசத்தின் கற்பந் தானே (35)

தானென்ற தலைமுழுக வரிசை கேளு
சாதகமாய் மிளகோடு கடுக்காய் மஞ்சள்
வேனென்ற வெப்பரிசி நெல்லிக் காயும்
மீறாமல் சமபாகம் நிறுத்துக் கொண்டு
கோனென்ற ஆவின்பால் விட்டு ஆட்டி
குமுறவே முழுகிவா பட்சந் தோறும்
ஊனென்ற நெய்முழுக வாரந் தோறும்
உத்தமனே பசும்பயறு அரப்பாய் பண்ணே (36)

அன்னத்தின் உப்பு

பண்ணப்பா அன்னத்தில் உப்போ டுண்ண
பாடுகிறேன் நாதாக்கள் பாட்ட தெல்லாம்
தண்ணப்பா அண்டமைந்து கல்வத் திட்டு
கல்லுப்பு பலமரைத்து[1] அதிலே போட்டு
வெண்ணப்பா வெடியுப்பு பலந்தா னைந்து
மேவியதோர் நவச்சாரம் பலந்தான் ரெண்டு
ஒண்ணப்பா சீனமது பலந்தான் மூன்று
ஒக்கநன்றா யரைத்துலர்த்த மெழுகு மாமே (37)

மெழுகெடுத்து பாறையுப்பை யுடைத்துப் பூசி
வெய்யிலிலே உலரவைத்து காய்ந்த பின்பு
ஒழுகெடுத்து உபரசத்தை மேல்கீழ் வைத்து
ஒட்டிலே மூடிநன்றாய் புடத்தைப் போட
நழுகெடுத்து போகாது உப்புக் கட்டும்
நலமாக உடைத்துசெய வைர மின்னும்
தழுகெடுத்து உப்பையல்லோ கறிசோற்றி லிட்டு
சாப்பிடவே மிகநன்று சாப்பி டாயே (38)

சாப்பிடவே யிந்தவுப்பு சட்டையெல்லாந் தள்ளும்
சாமாதிக்கும் புருவமையந் தள்ளி நிற்கும்
கூப்பிட்டால் உன்மனைத்தாய் வாவா வென்பாள்
கூசாமல் யெட்டோடே யேறு யேறு
யேப்பிட்ட அமுரியிலே யிறங்கா துப்பு
இதுவுமொரு கற்பமா யிறுகுந் தேகம்
வாப்பிட்ட கொழுப்பாலே பச்சையுப்பைத் தின்றால்
வைத்திருந்த சித்தியெல்லாம் மண்ணாய்ப் போமே (39)

போமென்ற உப்புக்கு கார மேற்றி
புகழாக ஊதிடவே சுண்ண மாகுந்
தாமென்ற சுண்ணத்தில் சாரஞ் (சரியிடை) சேர்க்க
சலமாகும் யிதுக்குள்ளே வீரம் போடு

---

1. பலம்பத்து

ஆமென்ற சரக்கெல்லாம் போட்டு வாட்ட
அசையாது அசையாது மணிபோ லாகும்
நாமென்ற நவலோகத் துள்ளே யீய்ந்தால்
நாலாறு மாற்றாகும் நயந்து காணே (40)

காணப்பா யிதையெடுத்துச் செலவு செய்து
கனமான கற்பத்தை தின்று யேறு
வீணப்பா கெடுக்காதே கதியில்லை யென்று
வேதாந்த வாலையைத்தான் நித்தம் பூசி
தோணப்பா யென்னைப் போல் சொன்னா ரில்லை
சொன்னதினால் சித்தரென் மேல் பகையு மாச்சு
ஊணப்பா யிதைவிட்டு கற்பஞ் சொன்னேன்
உத்தமனே வெகுசுருக்கு உரைத்துப் பாரே (41)

- (ச.க.நூ)

அறியவே அண்டத்தின் கற்பங் கேளு
அரக்கமாங் கருங்கோழி சேவலுடன் பேடு
வரியவே வளர்ந்தந்த முட்டை வாங்கி
மாசற்ற கல்லுப்பைப் பொடியாய்ப் பண்ணி
பரியவே பாண்டத்தில் பாதி போட்டு
பதித்துமே முட்டையைத்தான் மேலும் போட்டு
செரியவே ஆகாச கெருடனாங் கிழங்கு
சாறுபடி விட்டுபின்பு முடிப் போடே (192)

மூடியே யிருபதுநாள் கழிந்த பின்பு
முரியாம லெடுத்துப்பார் கட்டிப் போகும்
ஓடியே வெருவொன்று கிழங்கு சாற்றில்
ஊறப்போட்டு நீர்வற்றக் காய்ச்சிக் கொண்டு
தேடியே மேலோடு தள்ளிப் போட்டு
சிறப்பாக ரெண்டாக்கிப் பாதி கொள்ளு
ஆடியே அந்திசந்தி மண்ட லந்தான்
அன்றாட மன்றாட வித்துக் கொள்ளே (193)

கொள்ளவே மண்டலந்தா னந்தி சந்தி
குத்தினால் காயசித்தி லத்தி டாது
கள்ளவே கருங்கல்லாய் சடலந் தானுங்
கற்பாந்த காலந்தான் மசக மாச்சு
துள்ளவே நித்திரைதான் கொள்ளொட் டாது
சோபமில்லை துற்பசியும் போச்சு போச்சு
விள்ளவே சுக்கிலந்தான் கீழோ டாது
வேண்டியதோர் பெண்ணோடே மருவ லாமே (194)

-(போ.க.வி)

மயிலுடைய அண்டம்

பேணவே மயிலுடைய அண்டம் வாங்கி
பிலமாக கட்டுதற்கு வகையைக் கேளு
காணவே வெடியுப்பு யிந்துப்பு சாரம்
கடிதான சூடனுட சரக்கு கூட்டி
தோணவே அமுரியினி லரைத்து மைந்தா
சுகமாக சந்தனம்போ லரைத்துக் கொண்டு
பூணவே மயிலுடைய அண்டம் வைத்து
புத்தியுடன் நீர்வார்த்து அவித்துப் பாரே ()

பாரப்பா அவித்தகரு யிரண்டு மொன்றாய்
பக்குவமாய்த் தானுருக்கி கட்டிப் போகும்
சாரப்பா கட்டினதை யெடுத்துக் கொண்டு
கருணைவளர் அமிர்தரசம் பானம் சேர்த்து
நேரப்பா தேனதுவும் கூடச் சேர்த்து
நேர்மையுடன் ரவியினிலே நவநாள் போடு
சாரப்பா அந்திசந்தி கொண்டா யானால்
சதைநரம்பு வலுவாகக் கதியுண் டாகம் ()

- (அ.வை.கா)

அண்ட மெழுகு

வாங்கப்பா அண்டமது வாங்கு தற்கு
வளமையென்று சொல்லுகிறேன் மைந்தா கேளு
பாங்குபெற ஜெனித்ததொரு பதினாறாநாள்
பசுமையுடன் கொண்டுவந்து பதன மாற்றி
தீங்கான தீங்கெல்லாஞ் சுத்தி பண்ணி
திருவான முப்பூவும் வீரம் பூரம்
சாங்கமாய் வகைக்குஒரு பலமாய் வாங்கி
சமரசமாய் கல்வமதில் சாத்தி டாதே (1072)

சாத்தியே குருபரனைத் தியானம் பண்ணி
தருவான செயநீரை விட்டு மைந்தா
போற்றியே மெழுகுபோ லரைத்துக் கொண்டு
புதுமையுள்ள அண்டமதிற் கவசம் பண்ணி
தேற்றியே பானையரை யுப்பைக் கொட்டி
திருவான அண்டமதை யதின்மேல் வைத்து
வாழ்த்தியே யுப்பைமிக நிரம்பக் கொட்டி
வரிசையுடன் மேல்மூடிச் சீலை செய்யே (1073)

செய்யப்பா சற்குருவைப் பணிந்து போற்றி
திடமாகக் குழிவெட்டி சமாதி வைத்து
பையப்பா கேசரியி னெருவைக் கொட்டி
பாங்காக மேல்மூடி மண்ணுஞ் செய்து
மெய்யப்பா அதின்மேலே யிருந்து நீயும்
மேன்மையாய் சபதங்கள் செய்து மைந்தா
கையப்பா தவறாமல் மண்டலமே சென்று
கருத்துறவே ஈசானம் பூசை பண்ணே (1974)

பண்ணப்பா சிவபூசை குருவின் பூசை
பண்பாகச் செய்தபின்பு பதன மாக
விண்ணப்பா நிறைந்ததோ ரண்டந் தன்னை
விரும்பியே யெடுத்துப்பா ரென்ன சொல்வேன்

பொன்னப்பா மென்மெழுகு போல மைந்தா
புதுமையுள்ள அண்டமது மெழுகாய் நிற்கும்
நண்ணப்பா மெழுகெடுத்து பதன மாக
நாடியே பரணிதனில் வைத்துக் கேளே (1075)

கேளப்பா தேகமது சுத்தி பண்ணி
கிருபையுட னாத்மாவைப் பூசை பண்ணி
மேலப்பா மவுனமதை மனதுட் கொண்டு
மேன்மையுள்ள அண்டமது மெழுகாய் நிற்கும்
ஆளப்பா மூலவன்னி கனலைத் தூண்ட
அரகரா ரேசகபூ ரகமும் கொண்டு
தாளப்பா கும்பழத்தில் தாழ்ந்து(க்) கொண்டு
தன்மையுடன் மேருசக் கரத்தை செய்யே (1076)

செய்ததொரு சக்கரத்தை நன்றாய்க் கீறி
திரமாகப் பரணிதனை யதன்மேல் வைத்து
மெய்யான சடத்தினுட வலுகைக் கண்டு
மேலான அண்டமதின் மெழுகி லப்பா
கையாரப் பணவெடைதா னெடுத்து நல்ல
கண்ணொளியை விண்ணொளிக்குள் கருதிப்பார்த்து
ஐயா கொள் மெழுகுதனைப் பூசை பண்ணி
அப்பனே தேகமது கட்டிப் போச்சு (1977)

போச்சென்று விடுகாதே வின்னங் கொள்ளு
பூரணத்தைப் பற்றிமன தறிவில் நில்லு
ஏச்சென்று நரைதிரைக ளென்ன சொல்வேன்
இயல்பாக நரைகளெல்லா முதிர்ந்து(ப்) போச்சு
போச்சென்ற திரைகளது சட்டை போலே
பேணியே திரைகளெல்லாங் கழன்று போச்சு
ஆச்சென்ற தேகமது வாலை யாச்சு
அரசுரா கைலாசத் தேக மாச்சே (1087)

தேகமென்ற ஆதிதனைப் பூசை பண்ண
சிவசிவா ஆண்டொன்றில் கெவுன மாகும்
பாகமுடன் ரெண்டாண்டி லஷ்ட சித்தும்
பலிக்குமடா மூன்றாண்டில் பான்மை கேளு
ஆகமுடன் அண்டவரை ஒளிதான் தோற்றும்
அப்பனே நாலாண்டில் அதிசயங்கள் காணும்
தாகமுடன் தூரதூலை செய்தி சொல்ல
தரனிதனில் சற்குருவாய்த் தானா வாயே (1079)

தானவனாய் நின்றநிலை தானே தோற்றும்
தன்மையுள்ள பூரணமே சித்தியாகும்
காணலா மூலமுத லாறா தாரங்
கைலாசத் திருநடனங் கண்ணிற் காட்டும்
பேணவே வாசியது பிசகா தையா
பிசகாத வாசியது வுறுதி யாகும்
கோணவே ஐந்துமுத லதிக மானால்
சொல்லுகிறேன் யுத்தமரேநல் தேக மாச்சே (1080)

தேகமென்ற சடமறியா மாந்தர் மெத்த
செய்வினைகள் தீராத திருடர் மெத்த
யோகமென்ற யோகநிலை யறியார் மெத்த
ஒண்டவிடந் தனையறிந்து வொண்டார் மெத்த
பாகமென்ற சுவையறியாப் பழுதர் மெத்த
பரமறியார் குருவறியார் பாரில் மெத்த
ஆகமென்ற பொருளறியா ருலகத் துள்ளே
அம்பரத்தை யறியாம லலறி னாரே (1082)

அலறினார் வேதமதைக் காணாமல்தான்
அப்பனே கவியாளர் மொழியைப் பார்த்து
குளறினார் குரலறிந்து கூறாமல் தான்
குறும்பர் வெகு வேடமதைக் குணமாய்ப் போட்டு

தளருவார் தயங்கி மிகத் தன்னைக் காணார்
சக்திசிவ குருபதத்தின் தன்மை காணார்
மலரறிந்து மலரினுட வாசங்கண்டு
மதியமிர்தங் கொள்ளாதா ருடன்சேராதே

சேராதே துஷ்டருடன் வாதா டாதே
தெவிட்டாத மதியமிர்தம் பொருள்சொல் லாதே
கூராத மந்திரத்தின் குறிசொல் லாதே
குறித்தவிடங் காட்டாதே குணஞ்சொல் லாதே
நேரான மனதுறுதி நீசொல் லாதே
நேர்மையுள்ள யோகநிலைக் கால்சொல் லாதே
மாறாத வாசியுடக் கருசொல் லாதே
மகிமையுள்ள புலத்தியனே யின்னங் கேளே (1083)

கேளப்பா முப்பூவின் கருச்சொல் லாதே
கிருபையுள பூரணத்தின் வழிசொல் லாதே
வாளப்பா வாழ்வதோர் வகைசொல் லாதே
மகத்தான மெய்யுடனே பொய்சொல் லாதே
தாளப்பா அகங்கொண்ட சண்டா ளர்க்குத்
தாழ்ந்ததிக குற்றமில்லை தன்மை யாகும்
காலப்பா காலறிந்து யோகஞ் செய்யும்
கற்பமுள்ள தேகமதைக் காரு காரே (1084)

காரப்பா அவர்கள்மனங் கனிய வேதான்
கனிந்ததனால் சகலசித்துங் கைக்குள் ளாகும்
பாரப்பா பனிரெண்டு நூறை மைந்தா
பக்குவமாய்த் தானெடுத்துப் பதன மாக
சேரப்பா பொருளனைத்து மனதிற் சேரு
சேர்ந்துகொண்டு மனதடங்கி அறிவில் நில்லு
ஆரப்பா உனக்கீடு சொல்லப் போறேன்
அரகரா அடிமுடியி லமர்ந்து நில்லே (1085)

அமர்ந்துமிக நின்றதனா லருள்கை கூடும்
மானந்தல கிரியுடைய அருளே வாய்க்கும்
நமந்துமிகப் போகாமல் நாளைக் காரு
நாலான பூரணமே தெய்வந் தெய்வம்
சிவந்தசடந் தவறாமல் கற்பங் கொள்ளு
சிவசக்தி யிரண்டையுமே தினமும் காரு
சமைந்தகரு கற்பமதைத் தினமுங் கொண்டு
சதாகாலம் பூரணத்திற் சார்ந்து நில்லே (1086)

நில்லென்ற சொல்லறிந்து நின்று கொண்டு
நேரான பூரணத்தில் மனதை வைத்தால்
சொல்லொன்றுந் தப்பாது எல்லாஞ் சித்தி
சொரூபமுள்ள அமிர்தரசஞ் செலிக்கு மப்பா
கல்லென்ற கல்லறிந்து கார மேற்றிக்
கடுங்கார மானதொரு ஆனைக் கல்லாந்
தெல்லென்ற ஆனைக்கல் மடிந்து தானால்
சென்றசரக் கத்தனையுங் கட்டிப் போச்சே (1087)

- (அ.க.ஞா)

ஆதியண்ட கற்பம்

அண்டமென்றா லாரறிவார் முதண்டப் போக்கு
அப்பனே பக்குவமாய் அன்பாய்ப் போற்றி
பிண்டமதின் தோடகற்றிக் கருவை வாங்கி
பிசகாமல் சட்டிக்குள் ளிட்டு மைந்தா
கண்டதொரு அமுரியினால் கரைத்துக் கொள்ளு
கருத்துறவே ரவிமுகத்தில் வைத்துப் பாரு
விண்டிடவே ரவிமுகத்தில் நன்றாய்க் காயந்தால்
விரும்பியே முன்போல கரைத்துக் காச்சே . (1103)

காச்சப்பா தீட்சைமுப் பத்து யிரண்டு
கைமுறையாய் செய்தபின் கழறக் கேளு
ஆச்சப்பா அமுதமென்ற முலைபால் விட்டு
அன்பாகக் கரைத்துரவி முகத்தில் வைப்பாய்
போச்சப்பா முலைப்பாலில் மூன்று தீட்சை
பிலமாகச் செய்தபின்பு திருநீ றாச்சு
பாச்சப்பா திருநீற்றைக் குப்பிக் குள்ளே
பக்குவமாய் தானடைத்துப் பதனம் பண்ணே (1104)

பண்ணப்பா நாற்பத்து மூன்று கோணம்
பக்குவமாய் தானெழுதி நடுகோ ணத்தில்
நண்ணப்பா திருநீற்றின் குப்பி வைத்து
நலமான மலரதனா லர்சனைகள் செய்து
கண்ணப்பா விண்ணோக்கிக் கமல தீபம்
கருத்துறவே கண்தெரி சனத்தைப் போற்றி
உண்ணப்பா திருநீற்றில் பணவெடைதா னப்பா
உண்டபின்பு குழியாத மூணிப் பாரே (1105)

ஊணி மிகப் பார்க்கையில் ரேசகமே பண்ணு
உத்தமனே ரேசகத்தால் கும்பகமே செய்து
பேணியே கும்பகத்தில் மனதுறுதி யானால்
பிறளாது வாசிசுழி முனையில் நிற்கும்
காணியாய் நின்றதலங் கைவசமே யானால்
காயாதி யுறுதியடா நரைதிரைகளில்லை
ஆணியா யெந்நாளுந் தேகஞ் செத்தால்
ஆண்டுவொரு நாழிகையா யமருந் தானே (1106)

தானென்ற திருநீற்றில் தைலஞ் சேர்த்து
தன்மையுடன் பிசைந்துருட்டி பணவெடைதான் கொள்ள
ஊனென்ற தேகமசை யாது கல்லாய்
உத்தமனே யெந்நாளும் பசியும் தோணா

தேனென்ற கற்பங்கா யாதி யாகுஞ்
சிந்தைமன தொன்றாகி தினமுங் கொண்டால்
கோனென்ற தேகமது தங்கநிற மாகுங்
குருவான அமிர்தரசக் கற்பம் பாரே (1107)

- (அ.க.ஞா)

ரசகெந்தி கற்பம்

ஆனபின்பு முன்சொன்ன ரசமுங் கெந்தி
அப்பனே மண்டலந்தான் உண்ணு உண்ணு
ஆனபின்பு தினந்தானும் குன்றி யெடை
அடவான மண்டலந்தான் உண்ணு உண்ணு
ஆனபின்பு கந்தகமும் பச்சைரசம் மக்காள்
அடவாக உண்டுவர யேது செய்யா
ஆனபின்பு சட்டைபோம் நாதவிந்து யிரண்டும்
அடவான இரசத்தாலே தேக மாமே (9)

ஆமப்பா தேகமது அருணனைப் போலாம்
ஆத்தாளும் அப்பனுமாம் இரசமுங் கெந்தி
ஓமப்பா சிவசக்தி யிரண்டால் தேகம்
உத்தமனே சடந்தானும் என்றும் போலாம்
போமப்பா கெவுனமது கோடி காலம்
பேணிடவே தேக்கு விரு ஷம் போலே யுண்ணு
நாமப்பா யிப்படித்தான் உண்டு தீர்ந்தோம்
நம்மைப்போல் உண்டுமக்காள் நலத்தி டீரே (10)

- (கொ.க.நூ)

அப்பிரகச் சத்து

சத்தென்ற அப்பிரகச் சத்தை[க்] கண்டால்
தறுகியதோர் கற்பமெல்லாம் நன்றாய் தேறும்
பத்தென்ற காயசித்தி முத்தி யாகும்
பரமோட்ச கதியுண்டாஞ் சுழினை யுள்ளே

சித்தென்ற சித்தியெல்லாம் சணத்தில் காட்டும்
சேய்ரசமாம் குளிகை செய்யும் வாசி னைக்குள்
கொத்தென்ற சரக்கெல்லாம் மறந்து போகும்
சொல்லாமற் சொல்லுமடா மனத்திற் காணே (68)

யேறவே அப்பிரகச் சத்தை சொல்வேன்
இதமாக தாளகத்தின் சுன்ன மொன்று
கூறவே வீரமொன்று கார மொன்று
குறியான சவ்வாது தேன் முலைப்பால் வெண்ணை
தேறவே சர்க்கரையும் பழமுங் கூட்டி
சேரடா நவமணியை பலமொன் றேதான்
வீறடா வில்லைசெய்து வுலர்ந்த பின்பு
மேலான மூசையிலே பொதிந்து ஊதே (77)

ஊதடா மணிமணியா யிருக்குஞ் சத்து
உத்தமனே சோதித்தால் சரிகைவெள்ளி யொக்கும்
வாதடா வைத்தேதான் சரக்கைக் கொல்லு
மணியென்றால் ரசக்குளிகை கோடி கட்டும்
யேதடா பூமியுட னாத சத்து
யிதைவிட்டால் குளிகைக்கு யிழப்பு மெத்த
சூதடா சத்தங்கே பலந்தா னொன்று
துடியான தங்கமது பலந்தா னொன்றே (78)

ஒன்றாகச் சேர்த்துருக்கி கிண்ணம் வார்த்து
உத்தமனே அடித்ததூரில் சீலை செய்து
நன்றாக வேண்டியதோர் சூதம் விட்டு
நாட்ட்டா வாலுகையி லெரிக்கும் போது
குன்றான யெள்ளெண்ணை சுருக்குப் போட்டு
குலையான கிண்ணியிலே மாண்டு(ப்) போச்சு
வென்றேநா னுங்களுக்குச் சொன்னேன் மக்காள்
வெகு சுருக்காய் குளிகையஷ்ட கர்மத் துக்கே (79)

கற்மமெட்டு மாடுமடா குளிகை வேகங்
    காரீயங் கழஞ்சுரெண்டு மணிதா னொன்று
நிற்மயமாந் தம்பனம துக்கு மாகும்
    நேரான ஆகிருஷ்ண துத்த நாகத்
தற்மமென்று வசியமடா தங்கஞ் சேரில்
    சாற்றுறேன் பேதனத்தில் வெள்ளி யீய்ந்தால்
வர்மமென்ற மாறணமாங் காந்த மீயம்
    வளமான மோகனத்தி விரும்பு தானே (80)

இரும்பீயஞ் சேர்ந்தமணி மகத்தான மோகம்
    யென்னசொல்வேன் தாம்பிரத்தி லுச்சாட னந்தான்
விரும்பாத வித்துவே க்ஷணத்துக் கொன்றால்
    மேலான அப்பிரகச் சத்தே சேரு
பெரும்பாதை மணியிட்டால் கர்ம மெட்டும்
    பேசியதோர் வார்த்தையெல்லா கர்ம சித்தி
தரும்பாரு புரியஷ்ட குளிகை போலே
    தப்பாமல் தோலைநீ யெரித்து வாங்கே (81)

வாங்கியதோர் மணிகளெல்லாம் லகிரி யேற்றி
    வாகாக சோடசத்தின் மணிகள் தோடும்
தாங்கியதோர் முகமணியாய் தியானஞ் செய்யில்
    சக்தியெட்டும் பாலரெட்டு நாக மெட்டு
மோங்கியதோர் கிரியெட்டுங் கிசங்க ளெட்டு
    உத்தமனே யேவல்செய் யுங்குருவை யொண்ணும்
பாங்குதனை யொளிதல்லோ மூலமுத லாகும்
    பாசாங்கா மறைத்தார்கள் வெளியிட் டேனே (82)

வெளியாக அப்பிரக சத்தே சொன்னேன்
    மேலேறிப் பிழைப்பதற்கு வழியுஞ் சொன்னேன்
பளிப்பான லகிரியெல்லாம் தள்ளச் சொன்னேன்
    பாழாகிப் போகாமல் குளிகை சொன்னேன்

களியான சத்தியென்ற வாலை சுவாமி
கண்டத்தி லொளிபெறவே சாஸ்திர ஐநூறில்
தெளிவாக அங்கமெல்லாம் சொன்னேன் சொன்னேன்
தீனிவிட்டுஞ் சாராயம் தேறா தெண்ணே (83)

தேறாது சாராய மயக்க மப்பா
சிறுபெண்கள் மேலாசை யிதுக்கொப் பல்ல
மாறாது சற்குருவு னுபதேச மெல்லாம்
மாயமடா திரோதாயி வலையை நீக்கிப்
பேறான அப்பிரக செந்தூ ரந்தான்
பிலக்கவே அயகாந்த செந்தூரம் போல
கூறான செந்தூர மான பின்பு
கொள்ளப்பா மண்டலந்தான் குன்றி தானே (84)

குன்றியிடை யப்பிரக செந்தூர ரத்தை
கொண்டுவா பசுவின்பால் கால்ப டிக்குள்
நன்றிபெற்ற தேகமெல்லாம் ஒளியாய் வீசும்
நலம்பெறவே பூரணத்தில் மூன்றுள் ளாகும்
மொன்றுமாத் திரஞ்சுழினைத் தன்னி லாடும்
உத்தமனே யதின்பலன்கேள் யுகமூன் றானால்
சென்றிடுங்காண் கடிகையொன்று அய்யா கேளு
சித்தாந்த கிரியைவிட்டு தேறு வாயே (85)

தேறுடைய மரவையொன்று நூறாண்டின் வேம்பில்
செய்திடுவாய் மரவையொன்று கற்ப முண்ண
வீறுடைய காந்தத்தின் கிண்ண மொன்று
விளங்கியதோர் செந்தூர .... ளுண்ணு
கூறுடனே அன்னமுண்ண பீங்கான் நன்று
கொடுஞ்சுருக்காய் காந்தத்தின் கிண்ணந் தன்னில்
பேறுமிக வருஷிக்கும் சித்த ரெல்லாம்
பிள்ளையென்றே வந்துபணி வார்கள் காணே (86)

காணப்பா யிதன்பிறகு சிவன்மூலி கொள்ளு
கைமுறையாய் சக்தியுட மூலி கொள்ளு
பேணப்பா முப்பத்தி யிரண்டு மூலி
பிலமாகக் கொண்டிடவே பலத்த சித்தாம்
ஆணப்பா யிதன்பிறகு மூலி யுண்ணு
அப்பனே உபரசங்கள் செந்தூ ரத்தின்
பூணப்பா ஒளியாகும் பிடித்தவிடம் பொய்யாம்
பொற்சடையோன் கோலமெல்லாம் பூண லாமே (87)

- (கொ.க.மு)

பூநாகச் சத்து கற்பம்

வாறான பூநாகங் குளக்கரைகள் தோறும்
மண்தின்று கக்கியல்லோ புற்றாய் நீற்கும்
தாறான புற்றெடுத்து தண்ணீர் வார்த்து
சமரசமாய் அரித்திறுத்து அடியில் பார்க்க
வீறான பளபளப்பாய் மின்னல் கொண்டு
விளங்கியதோர் சத்தெல்லாம் கீழாய் நிற்கும்
கூறான யிதுவெல்லாம் வழித்துக் கொண்டு
குமுறவே காரமிட்டு உருக்கி டாயே. (60)

உருக்கியது மணிபோலே யெடுத்துக் கொண்டு
உத்தமனே கருவளையில் சவ்வீரம் காரம்
மருகியது நாலுக்கு ஒன்று கூட்டி
மைந்தனே குகையிலிட்டு நன்றாய் ஊது
செரிகியது மணிபோலே சத்தாய்ள் நிற்கும்
சிவசிவா பூநாகச் சத்து மாச்சு
சுருக்கியிதைச் சொல்லாமல் எடுக்கச் சொன்னேன்
சொல்லுக்கோர் சித்தரெல்லாம் மெச்சினாரே. (61)

மெச்சினதோர் சத்துக்கு நான்கு(க்) கொண்டு
மேலான தங்கத்தை யிட்டு ஆட்டு
நச்சினதோர் நற்சூதம் யெடைக்கெடையே கூட்டி
நன்றாக அரைத்திதனை பொடிபோ லாக்கி
கச்சினதோர் கந்தகத்தை யெடைக் கெடையே கூட்டி
கைத்தாளம் [1]பாலாலே அரைத்துக் கூட்டி
ஒச்சினதோர் வில்லையைத்தான் ஓட்டில் வைத்து
உத்தமனே மணல் மறைவில் புடந்தான் பத்தே. (62)

பத்தான புடம்எருவை யேற்றிப் போட்டு
பாங்கான புடம்பத்து தீர்ந்த பின்பு
முத்தான கைத்தாளம் பாலா லாட்டி
முறிராமல் ஒருவில்லை யாகத் தட்டி
அத்தான வெளியிலே புடமேற்றிப் போட்டு
அர,கரா பூநாகம் செந்தூர மாச்சு
சித்தாக வேண்டுமென்றால் தினமும் யிரண்டு (பணவெடைதான்)
தேன்கூட்டி சர்க்கரையில் குழைத்துக் கொள்ளே. (63)

கொள்ளப்பா யிருபதுநாள் சட்டையொன்று போகும்
கூப்பிட்டால் சித்தரெல்லாம் வார்த்தை சொல்வார்
விள்ளப்பா அவரோடே குளிகை மார்க்கம்
வேதாந்த திருமூலர் மார்க்க மென்றால்
உள்ளப்பா நம்முடைய வர்க்க மொன்று
ஓடுகின்ற குளிகையைத்தான் கைக்கு யீய்ந்து
நள்ளப்பா யாருடை வர்க்க மென்றால்
நலம் பெரிய சட்டைமுனி வர்க்க மென்னே. (64)

-(ச.க.நூ)

வீரகற்பம்

பொன்னான தேகமதை வைத்துக் கொண்டு
புகழான கற்பவகை யின்னங் கேளு
அன்னான ஆதியடா அந்தம் அந்தம்
அப்பனே அந்தமடா சோதி சோதி

1. மடலாலே.

விண்ணான சோதியடா வீரம் வீரம்
    விளங்குகின்ற சோதியடா வீர கற்பம்
கண்ணான கோரையடா வீரம் வாங்கி
    கனமான பூனீரில் சுத்தி பண்ணே (214)

பண்ணடா பாண்டத்தின் குழித்தைலம் வாங்கி
    பரிவான தைலத்தில் வழலைச்சுன்னம் போடு
கன்னடா வைரவாக்கு பூசைப் பண்ணி
    கனமான வீரகற்பம் மண்டலமே கொள்ளு
வண்ணடா வாசிக்கு உயிரதாகும்
    வளமான சட்டையது ஏழு தள்ளும்
நண்ணடா எட்டாவது மாதம் வாங்கி
    நலமான மற்றொன்று மாகாது பாரே (215)

(த.நி.மு)

சோதி கற்பம்

பாரடா வென்மகனே சொல்வேன் பாரு
    பகரரிய சோதியடா சோதி கற்பம்
ஆரடா சொல்வார்கள் சோதி கற்பம்
    அப்பனே சொல்லவில்லை சொல்வேன் கேளு
வாரடா வன்னியடா தேய்வு தேய்வு
    வளமான தேயுவடா செம்மை செம்மை
காரடா செம்மையென்ன மூலிப் பூண்டு
    கனமான பூண்டப்பா யார்காண் பாரே (216)

காணடா சொல்லுகிறேன் கேளு கேளு
    கருத்தான நாதமடா கமலத் துண்டு
வாணடா வல்லியென்றும் அவுண கற்பம்
    வளமான கற்பமடா நாத கற்பம்
சோணடா சோதியது சமதே துண்டு
    சொல்பெரிய கற்பமடா வுந்தி கற்பம்
ஆனடா ஆறுந்திங்கள் வகுத்துப் பாரு
    அரனெடுத்துப் புசித்திட்டார் கற்பந் தானே (217)

தானான செம்மையடா செகப்பு மெத்த
தாரணியில் அநேகமுண்டு அறிந்து கொண்டால்
வாணான வாசியடா தேகம் பொன்னாம்
வளமான தேகமதுக் கழிவே யில்லை
தேனான தேகமடா வச்சிர தேகம்
தெவிட்டாத போதமடா சோதி கற்பம்
ஆனான அடிநாவில் அமிர்தம் ஊறும்
அப்பனே மௌனமென்ற அமிர்தங் கொள்ளே (218)

- (த.நி.மு)

மதியமிர்த கற்பம்

விரும்பினோம் மதியமிர்தங் கற்பங் கேளு
வேதாந்த காரமடா சவுக்கா ரந்தான்
அரும்பினோம் காரமுடன் சரக்கு மாகும்
அப்பனே நாதமுடன் விந்துவிட நாத மாகும்
திரும்பினோம் அண்டவிந்து மதியமிர்த மாகும்
நாதாந்த விந்துவடா செயநீ ரப்பா
கரும்பினோம் கரும்புரசம் கொண்டு விட்டால்
கனமான ஆக்கையது வலுத்துப் போமே (221)

போமப்பா யாக்கையதற் கழிவே யில்லை
பொருளான கற்பமடா கொள்ளு கொள்ளு
வாமப்பால் மதியமிர்தங் கொண்டு விட்டால்
வருதியாம் அஞ்சுவாய் தாகும் பாரு
நாமப்பா வயது சொல்ல முடியா தப்பா
நமனேது கோடியண்டம் கட்ட லாம்பார்
காமப்பால் காணிலப்பால் ரெண்டுங் கொள்ள
கருவான சூரியன்போல் தேக மாச்சே (222)

- (த.நி.மு)

கொள்ளென்ற அமிருதமிது மௌனவாழ்வு
குணமான அமிருதமடா போதை போதை
விள்ளென்ற பொருளெல்லாம் விள்ளும் விள்ளும்
வேதாந்த ஞானமெல்லாம் மனதில் காணும்
அள்ளென்ற ஆறுமுகமும் கண்ணில் காணும்
அப்பனே பன்னிரண்டு அஸ்தம் தோன்றும்
கள்ளென்ற கருவிகள்தான் அறுவில் காணும்
கனமான கெவுனசித்து குளிகை சித்தே (219)

சித்தாகப் பிறப்பதற்கு ராசி வேணும்
சிறுபதவி கிடைக்கவே தருமம் வேணும்
வத்தாக செல்வோர்க்கு யோகஞ் சித்தி
வளமான சிவயோகிக்கு ஞான சித்தி
நத்தாத வொருவருட பொருளுக் குத்தான்
நலமான ஸ்தீரிகளைநீ நத்த வேண்டாம்
விஸ்தார மானதொரு விளையாட் டெல்லாம்
வேதாந்திக் காகாது விரும்பி னோமோ (220)

- (த.நி.மு)

அமுரி கற்பம்

ஆச்சப்பா அமுரியுடைக் கற்பங் கொள்ளு
அப்பனே சுத்தசலம் வாங்கிக் கொண்டு
போச்சப்பா பேசாமல் அண்டசுண்ணம் போட்டு
பேரான அமுரியடா மண்டலமே கொள்ளு
வாச்சப்பா அமுரிகற்பம் கொண்டா யானால்
வளமான வாசிக்கு உயிர தாகும்
நேரப்பா வெகுநீச்சு அமுரி நீச்சு
நிசமான அமுரியடா பன்னீ ராமே (223)

- (த.தி.மு)

சூதரிஷி கற்பம்

ஆமப்பா இன்னமொரு விபரஞ் சொல்வேன்
அருள்பெருகும் சூதமுனிக் கருளும் வார்த்தை
நாமென்ற விஞ்சையடா ஆதி யுப்பு
நலமான வுப்புடனே துருசு சேர்த்து
காமப்பால் வெடியுப்பு நேராய் சேர்த்து
கல்வத்தில் மூன்று மொன்றாய் கருவா லாட்டி
வாமப்பால் விட்டாட்டிப் புடத்தைப் போடு
மகத்தான சுன்னமடா நீறிப் போமே (260)

நீறியதோர் சுண்ணாம்பில் வீரம் பூரம்
நேரப்பா நேர்பாதி மசேர்த்துக் கொண்டு
ஊறியதோர் வாய்நீரால் கல்வத் தாட்டி
உத்தமனே நன்றாக அரைத்த பின்பு
காரியமாய் ரவிமுகத்தில் காய வைப்பாய்
கருவாக வுருட்டியதை வட்டி பண்ணி
ஆறியதோர் மண்சீலை யேழுஞ் செய்து
அன்புடனே புடம்போடச் சுன்ன மாமே (261)

ஆச்சப்பா சுன்னமது வாய்நீ ராலே
அப்பனே பூரத்துக் கங்கி பூட்டி
போச்சப்பா லொன்றுமிலை மண்சீலை செய்து
பிசகாமற் புடம்போட நீறிப் போகும்
காச்சப்பா அந்நீரில் வீரம் பூரங்
கருவிட்டு மத்திச்சு துருசுக் கப்பி
பாச்சப்பா மண்சீலை யேழுஞ் செய்து
பக்குவமாய் புடம்போடச் சுன்ன மாச்சே (262)

சுன்னமென்ற துருசினுட சுன்னந் தன்னை
துரிசான் ரசந்தனக்கு பத்துக் கொன்று
புண்ணியனே தான் கொடுத்து வாய்நீர் விட்டு
புதுமையுடன் மத்திக்கத் திரண்டு போகும்

தண்மையுட னுருட்டியதை சுன்னத் துள்ளே
 தான் முடித்திற் புடம்போட வுருகி நிற்கும்
உண்மையுடன் பரியதனை யுருக்கிக் கொண்டு
 வுருண்டுநின்ற ரசங்கொடுக்கக் களங்க மாச்சே (263)

களங்கமில்லா களங்கதனை யெடுத்துக் கொண்டு
 கருணைபெற செம்புகனி நூற்றுக் கொன்று
மலங்காமல் கொடுத்துடனே மாற்றுப் பத்தாய்
 வரிசைபெறக் காணுமடா வெள்ளிக் கீய்ந்தால்
உளங்கனிந்த பதினாறு மாற்று காணும்
 உத்தமனே குடவனிலே யீய்ந்தா யானால்
ஜெலங்கனிந்த ஊறலெல்லா மற்று நல்ல
 தீர்க்கமுட னெட்டுவய தாகும் பாரு (264)

பாரப்பா வக்களங்கை நொறுக்கிக் கொண்டு
 பழுதில்லா கெந்திதனை யெடையே சேர்த்து
சாரப்பா வீரமுடன் பூரம் லிங்கந்
 தயவான மனோசிலையுங் கூடச் சேர்த்து
நேரப்பா மகல்வத்தில் பொடிய தாக்கி
 நேர்மையுள்ள குப்பிதனி லரைமா டிட்டு
சீர்ப்பா மண்சீலை யேழுஞ் செய்து
 சிவசிவா வாலுகையில் வைத்துப் போற்றே (265)

போற்றியே குருபரனைத் தொழுது கொண்டு
 புதுமையுள்ள சருகுருகம்பூ விற்கால் மைந்தா
தேற்றியே தீயெரிப்பா யாறு சாமம்
 சிவசிவா செந்தூர மென்ன சொல்வேன்
நாற்றிசையும் போற்றுமிந்த செந்தூ ரந்தான்
 நலமாகப் பணவெடைதான் கொண்டா யானால்
பார்த்திபனே யாக்கைதனக் கழிவே யில்லை
 பணிந்திடுவாய் குருபரனைப் பணிந்து போற்றே (266)

- (அ க ஞா)

பிரமரிஷி கற்பம்

பணிந்துமிக இன்னமொரு கருவைக் கேளு
    பார்தனிலே பிரமரிஷிக் கருளும் வார்த்தை
கணிந்துமிக பூரணத்தைக் கனிந்து(க்) கொண்டு
    கமலமதி லேயிருந்த மதுவை வாங்கி
அணிந்ததொரு கமலமதில் விட்டு மைந்தா
    அருள்பெருகுங் கங்கைதனை யதனில் விட்டு
துணிந்துமிக ரெண்டுமொன்றாய் ரேசித் தேதான்
    துலங்குரவி முகந்தனிலே காய வையே. (267)

வையப்பா இந்தவிதம் பத்துமுறை யப்பா
    வைத்ததினால் காரமுடன் சாரம் யிரண்டும்
மெய்யப்பா சொல்லுகிறேன் யிரண்டு மொன்றாய்
    விரவியே திருநீறாய்ப் போகும் பாரு
செய்யப்பா அந்நீற்றில் முன்போல் பத்து
    தசதீட்சை பண்ணிடை சேதி கேளு
அய்யனே அமிர்தரச மான கற்பம்
    ஆருக்கும் விள்ளாதே யருமை தானே. (268)

தானென்ற அமிர்தரசம் கற்பங் கொண்டு
    தரணிதனில் பிரமரிஷி நானே யென்று
ஊனென்ற வுயிர்தனை தான் திருஷ்டிப் பாலே
    யுண்டாக்கி யண்டமெல்லாம் மயனாய் நின்று
கோனென்ற குருவாகி குருவு மானான்
    குருவான பிரம குரு யார்தான் காண்பார்
நானென்ற ஆவணத்தை யொடுக்கி மைந்தா
    நன்மையுடன் இந்நூலைப் பதனம் பண்ணே. (269)

ஒன்றான கற்பமடா பிரம கற்பம்
    உண்மையுடன்செய்தவனே சித்தர் சித்தன்
பண்டான சோதியடா பரப்பிரம மாச்சு
    பாருலகில் பூரணத்தைப் பணிய மாட்டார்

நன்றான பிரமகுரு யார்தான் காண்பார்
நன்மையுடன் கண்டவனே சீவன் முத்தன்
உண்டான சேதியொன்று முரைக்க மாட்டார்
உரைத்தாக்கா லருநரக முண்டாம் பாரே. (270)

பாரப்பா நரகமதில் சேர நன்றோ
பராபத்தி னருள்பெருகி யிருக்க நன்றோ
நேரப்பா நின்றபொருள் காண வேண்டும்
நிர்மலமாம் பிரமகற்பங் கொள்ள வேண்டும்
காரப்பா அடிமூலங் காக்க வேணுங்
காராட்டால் சகலசித்துங் காணா தோடும்
ஆரப்பா அறிவார்கள் கார சாரம்
அடங்கிநின்ற பொருளறிந்து அருளைப் போற்றே. (271)

மற்றொரு முறை

கற்பமென்று சொல்வதெல்லாங் காயாதி கற்பங்
கருவறிந்து உருவறிந்து கருவைப் பார்த்து
அற்பமென்று நினையாமலாதி யுப்பை
அறுசுவையோ டெடுத்துவந்து அறுநீர் விட்டு
மெய்ப்பாக அப்புமுப்பு மொன்றாய்ச் சேர்த்து
விசையான ரவிமுகத்தில் வைத்துப் பாரு
உற்பனமாய்க் கைப்பேறி கற்ப மாகும்
உடலினுட வலுவறிந்து ஊட்டு வாயே. (294)

ஊட்டுவது தினமிளகு அளவு கொண்டு
உறுதிபெறக் கொண்டதின்மேல் கழஞ்சு கொள்ளு
நாட்டுவது பூரணத்தில் மனதை நாட்டு
நன்றான பேரொளியில் நின்றால் மைந்தா
வாட்டரவு மொன்றுமில்லை நரைதிரையு மாறும்
மகத்தான காயமது வலுத்துப் போகும்
தாட்டிகமாய் நின்றதொரு காயாதி கற்பந்
தனையறிந்து கொண்டவனே சித்த னாமே (295)

சித்தான காயாதி கற்பந் தன்னைச்
செகத்திலுள்ள மானிடரோ காணப் போறார்
முத்தான மகிமைதனை யார்தான் - காண்பார்
மூர்க்கமுள்ள சப்தரிஷி முனிவர் காண்பார்
வற்றாத பூரணத்தைக் கண்டால் மைந்தா
வலுவாகக் காயசித்தி யோகங் காணும்
பத்தான தசதீட்சை பருவங் கண்டால்
பலிக்குமமடா சகலசித்தும் பலிக்குந்தானே. (296)

தானென்ற தத்துவத்தையறிந்து கொண்டு
தன்மையென்ற பூரணத்தைப் பணிந்து கொண்டு
கோனென்ற குருவருளைப்போற்றிக் கொண்டு
கும்பமுனி தஞ்சமென்று நின்றால் மைந்தா
மானென்ற மதியமிர்தங் கசிந்து காணும்
மார்க்கமுள குண்டலியின் மகிமை தோற்றும்
ஊனென்ற ஊனறிந்தா லெல்லாஞ் சித்தி
ஊடாடும் வாசிதனை யுற்றுப் பாரே. (297)

பாரென்று சொன்னீரே கும்பமுனி யய்யா
பராபரத்தின் வகையதனை யார்தான் காண்பார்
நேர்நின்ற வாசிதனை யறிவார் பற்றி
நிலையான குருபதத்தில் நேர்த்துக் கொண்டால்
தூரமென்ற அடிமூலங் கணேசன் கோவில்
துலங்குமடா கற்பத்தல் சூட்ச மெல்லாம்
வேறென்று மயங்காதே ஐயா ஐயா
விஞ்சையென்ற மூலமந்திர மிதுதான் பாரே. (298)
-(அ.க.ஞா)

வன்னி கற்பம்

பாரடா வன்னியுட கற்பந் தன்னை
பாச்சுதடா வெள்ளி செம்பில் நூற்றுக் கொன்று
சேரடா கற்பமது தங்கிற் றானால்
சிவசிவா சோதியுட திரமோ மெத்த

ஆரடா அறிவார்கள் வன்னி கற்பம்
அறிந்தவனே சிவயோகி அதுதான் மைந்தா
கூரடா குருபதத்தைத் தொண்டு பண்ணி
குருவிருக்குந் சந்நிதியைக்குறித்துப் போற்றே. (315)

போற்றுவது பூரணத்தைப் போற்ற வேண்டும்
புதுமையுள்ள குருபதத்தைப் பணிய வேண்டும்
நாட்டுவது சுழிமுனையில் மனத்தை நாட்டி
நாலான பூரணத்தை நாட்டிப் பாரு
தாட்டிகமாய் மனதுறுதி யாக நின்றால்
சடாதரக் கோவைமிக தானே தோற்றும்
ஆட்டுவிக்கும் வாசியுட கருவைக் கண்டால்
ஆதியந்தப் பதிதோற்று மாதி தானே. (316)

ஆதியென்ற சோதிதனைக் கண்டால் மைந்தா
அரகரா மனோன்மணியை யற்புதமே செய்து
நீதியென்ற ரவிதனிலே சேர்த்தால் மைந்தா
நிச்சயமாய் சித்தியதாம் நீதான் பாரு
சோதியென்ற தொடுகுறியை யென்ன சொல்வேன்
துருவமுள்ள மேருவதில் ரவிமதிதான் சேரு
வாதியென்ற மனமொத்து நிலையில் வைத்தால்
மகத்தான குருவருளால் மைந்தா பாரே. (317)

-(அ.க.ஞா)

சவுக்காரக் கற்பம்

பூரணமா யின்னமொரு காரஞ் சொல்வேன்
புத்தியுள்ள புலத்தியனே புகழ்ந்து கேளு
காரணமாய் நீகேளு எட்டாந் திரங்கள்
கன்னியடி மூலமடா கருவை வாங்க
மாரணமாய் வாங்குவதற்கு வகையைக் கேளு
மருவியே வெல்லமதில் ரவிபீசங் கூட்டி
வாரணமா முக்கண்ணை வேண்டிக் கொண்டு
மடக்கொடிக் கீந்திடுவாய் வரிசை பாரே. (183)

வரிசையுடன் மூன்றுநா ளுப்பை வாங்கி
　　மகத்தான வெந்நீரில் போட்டு மைந்தா
புரிசமுடன் மறுநாள்தா னுப்பை வாங்கி
　　புண்ணியனே தண்ணீரில் கரைத்துக் கொண்டு
பரிசான பாண்டமதி லிட்டு மைந்தா
　　பக்குவமாய் ரவிபீசங் கார சாரம்
உரிமையுடன் பாண்டமதில் கரைத்து மைந்தா
　　உண்மையுட னடுப்போற்றி யெரித்தி டாயே. (184)

எரித்துமெள்ள பதம்பார்த்துக் கிண்டு மைந்தா
　　இன்பமுடன் திரண்டுவரும் பருவந் தன்னில்
குறித்ததொரு தைலமதை விடடு மைந்தா
　　குருகவே கிண்டியதை யெடுத்துக் கொண்டு
பருத்துமிகப் போகாமல் உருண்டை செய்வாய்
　　பக்குவங்கள் தப்பிவிட்டா லுதிர்ந்து போகும்
வருந்திமிக எரிப்பதுவுங் குறைந்து தானால்
　　மைந்தனே யிளகுமதுவகையாய்ப் பாரே. (185)

பாரப்பா வெரிப்பதுவு மிஞ்சிற் றானால்
　　பாகதுவு முறுகியதுவுதிர்ந்து போகுஞ்
சீரப்பா வெரிப்பதுவுங் குறைந்து தானால்
　　சிவசிவா இளகியது போகும் போகுங்
கூரப்பா தானெரித்து பதத்தோ டப்பா
　　குணமாக வுருட்டிவைக்க இறுகிப் போகும்
ஆரப்பா அறிவார்க ளிந்த காரம்
　　அதீதமுள்ள காரமடா அருளைப் போற்றே. (186)

அருளான போதமல்ல மடங்கும் வீடு
　　ஆயிதிரோ தாயிஇருந் தடங்கும் வீடு
இருளான காமியந்தா னிருக்கும் வீடு
　　இச்சையுள்ள மாயமது இருந்த வீடு

மருளான பேய்க்கூத்து ஆடி நின்று
மாயமெல்லாங் குடியிருக்கு மகத்தாம் வீடு
கருவான கருவிகளும் நிறைந்த வீடு
கருவழிந்து திகைத்துநின்ற காலன் வீடே. (187)

வீடறிந்து பதிவியுட னிருக்க மாண்பர்
வீட்டிலுள்ள பேர்களைத்தான்விரும்பா மாண்பர்
காடறிந்து நாடறிந்து கருதா மாண்பர்
கருவான பூரணத்தைக் காணா மாண்பர்
கூடறிந்து குடியிருக்க மாட்டா மாண்பர்
குருவருளை[ப்] போற்றாத குருட்டு மாண்பர்
காடறிந்து பயனறிந்து கொள்ளா மாண்பர்
பாவிகள்தான் மெத்தவுண்டு பார்த்தி டாயே. (188)

-(அ.க.ஞா)

பராசரிஷி கற்பம்

பாரப்பா இன்னமொரு புதுமை கேளு
பராசமுனி தான்செய்து பகர்ந்த வித்தை
ஆரப்பா அறிவார்க ளதீத வித்தை
அன்பான புலத்தியனே யுனக்குச் சொல்வேன்
நேரப்பா பிரமகுலத் துதித்த தொன்று
நிச்சயமாய் மூலமதை சமூலங் கொண்டு
வீரப்பா செய்யாமல் ரவியிற் றாக்கி
வீறடங்கிக் காய்ந்தபின்பு வித்தை கேளே (275)

கேளப்பா கல்லுரலி லிட்டு மைந்தா
கிருபையுள்ள இரும்புலக்கை தன்னாற் குத்தி
கேளப்பா வாராமல் கொழித்துக் கொண்டு
கூர்மையுட னிடித்திடுவாய் தவிட தாக்கி
வாளப்பா இடித்ததைடு சமூலங் கொண்டு
மைந்தனே தண்ணீரில் பிசைந்து வைத்து
நீளப்பா மிஞ்சாமல் பிசரிக் கொண்டு
நேரான ரவிமுகத்தில் வைத்துப் போற்றே. (276)

போற்றுவது தசதீட்சை முகிந்துதானால்
    புதுமையுள்ள வுப்பதுதா னென்ன சொல்வேன்
தாட்டிகமாய் யமிர்தரச வுப்பை மைந்தா
    தாளியென்ற பீங்கானி லிடடுக் கொண்டு
பூட்டுவாய் சூடனொன்று இணங்க னொன்று
    பொல்லாத வீரமொன்று கருவுப் பொன்று
நாட்டியே ஒன்றாகச் சேர்ததுக் கொண்டு
    நலமாக பானைவாய் சில்லுப் போடே. (277)

போட்டபின்பு மண்சீலை யேழுஞ் செய்து
    புதுமையுட னிடுப்பளவில் குழியில் வைத்து
மாட்டுவா யானையுட கட்டம் போட்டு
    மைந்தனே மணல்கொட்டி வைத்துக் கேளு
தாட்டிகமா யதின்மேலே திரணை போட்டு
    தன்மையுடன் தானிருந்து தன்னைப் போற்றி
நாட்டுவாய் லட்சமுரு நீல கண்டம
    நன்மையுடன் தினந்தொழுக நன்மை யாமே. (278)

நன்மையது என்னவென்றால் மைந்தா கேளு
    நலமான மெழுகாகு யெடுத்துக் கொண்டு
உண்மையுட னம்மெழுகை யெடுத்துக் கொண்டு
    ஊட்டுவாய் தினந்தோறும் மெழுகு போல
திண்மை யென்ற சடலமது நன்மை யாகுஞ்
    சிவசிவா ஆக்கையது பிலத்துப் போகும்
தண்மையென்ற மெழுகினுட பெருமை தன்னைச்
    சதாகாலம் போற்றிப்பூ ரணத்தை நோக்கே. (279)

பூரணமாய் நின்றதொரு மெழுகு தன்னில்
    புதுமையொன்று சொல்லுகிறோம் புகலக் கேளு
காரணமாய் நின்றகளிம் பான செம்பில்
    கருத்துடனே நூற்றுக்கு ஒன்று போடு

மாரணமாய் போகுமடா செம்பு தானும்
மாற்றேது என்னவென்றால் மைந்தாகேளு
நாரணத்தின் பொருளதினால் நூறும் மாற்று
நன்மையுடன் காணுமடா நாம்சொன் னோமே. (280)

-(அ.க.ஞா)

அமிர்தரச கற்பம்

ஆமப்பா அமிர்தரச கற்ப மொன்று
அன்பான புலத்தியனே சொல்லக் கேளு
தாமப்பா வடிமுடியு மொன்றாய்ச் சேர்த்து
சமத்தாக பாண்டத்தி லிட்டுக் கொண்டு
நாமப்பா குழித்தைலம் நன்றாய் வாங்கி
நன்றாகக் குப்பிதனில் பதனம் பண்ணி
காமப்பா ரவிபீசம் பொடித்துள் ளிட்டு
கமலமென்ற பீங்கானில் பதனம் பண்ணே. (1042)

பண்ணியதோர் தைலமதைப் பணவெடைதா னெடுத்து
பத்தியுட னிருபொழுது மண்டலந்தான் கொள்ள
உண்ணிய தோர் வியாதியெல்லா மொழிந்து போகும்
உத்தமனே யாக்கைதனில் சட்டை தள்ளும்
நன்னயமாய் தேகமதிற் காந்தி மீறி
ரவிபோல வொளிவீசும் நாட்டங் காணும்
புண்ணியனே அமிர்தரச தேக மாகும்
புத்திமிக வுண்டாகும் புனித மாமே. (1043)

-(அ.க.ஞா)

புசுண்டரிஷி கற்பம்

பூரணமென் றானுமக்குத் தெரியு மோதான்
புத்தியுள்ள புலத்தியனே சொல்லக் கேளு
காரணத்தின் குருவருளால் காண வேண்டும்
கருவான காரணத்தைக் கேளு மைந்தா

சீரணித்த தேகமென்றா லறிவா னோசொல்
சிவசிவா ஜந்துருவு மாதி யாதி
மாரணித்துக் கொண்டுவந்து ஐயா கேளு
மவுனமதில் கறியுப்பை வகையாய்ச் சேரே. (258)

சேர்த்தபின்பு ரவிமுகத்தில் வைத்துப் பாரு
சிவசிவா மெழுகதுபோல் இருக்கு மப்பா
பார்த்தபின்பு ரவிமுகத்தில் நவநாள் காய்ந்தால்
பாலகனே யுப்பாகும் பசுமை யாக
கார்த்ததொரு காரசா ரத்த னுப்பை
கருணையுடன் தினந்தோறும் கொண்டால் மைந்தா
மூர்த்திகர முண்டாகி தேக சித்தா
மூதண்ட ராஜரிஷி முறைதா னப்பா. (259)

-(அ.க.ஞா)

பூரண கற்பம்

கேளப்பா ஆதியென்ற பூரணத்தைப் பற்றி
கிருபையுட னாதவிந்து வொன்றாய் வாங்கி
வாளப்பா பீங்கானில் பதனம் பண்ணி
மகத்தான செயநீரால் கரைத்துக் கொண்டு
கேளப்பா வாராமல் ரவியில் வைக்க
குறுகிநின்றாய் வற்றியபின் மைந்தா மைந்தா
ஆளப்பா யிப்படியே பத்துமுறை காய்ச்சு
அப்பனே கசடற்று நீறிப் போமே. (1039)

நீறிப்போ மறுபடியும் பத்துமுறை காய்ச்சு
நிச்சயமாய் நீறியது பற்ப மாகும்
கூறியே நீறினதோர் பற்பந் தன்னை
குணமாகக் குண்டலியை[க்] கண்டு போற்றி
வாரியே பீங்கான்தன் பரணி தன்னில்
மார்க்கமுடன் பதனமாய் வைத்துப் போற்றி
தேறியே மனதறிவால் பூரணத்தைப் பற்றி
சிவசிவா ரேசகபூ ரகமுஞ் செய்யே. (1040)

செய்யப்பா கும்பத்தில் மனதை வைத்து
செயமான பற்பமதில் பணவெடைதா னெடுத்து
மெய்யப்பா சொல்லுகிறேன் சற்குருவைப் பற்றி
மேலான பற்பமது கொண்டால் மைந்தா
பைய்யப்பா தேகமது வலுத்துப் போகும்
பாரதனில் வெகுகோடி காலம் வாழும்
ஐயப்பா வென்றசொல் லகன்று போகும்
அரகரா மவுனமென்ற வமுத மாமே. (1041)
-(அ.க.ஞா)

மேரு கற்பம்

ஆமப்பா யின்னமொரு கற்பங் கேளு
ஆண்டுமொரு பூவாத காயை வாங்கி
போமப்பா கல்லுரலி லிருப்புக் கோலால்
புத்தியுடன் மைபோலே யிடித்துக் கொண்டு
தாமப்பா சிறுநீரிற் கரைத்துக் கொண்டு
தப்பாமல் மறுதினத்திலிறுத்துப் போடு
நாமப்பா பத்துமுறை யிப்படியே பண்ண
நன்றாக ரவிமுகத்தி லுலர்த்தி டாயே. (1044)

உலர்த்திநன்றாய் முன்போல இடித்துத் தோண்டி
உத்தமனே ரவிமுகத்தில் காயப் போடு
சுழித்திமிக நன்றாகக் காய்ந்த பின்பு
சுருக்காக வுரலிலிட்டு மைபோ லாக்கி
ஜலத்திலிட்டு நன்றாகக் கரைத்து நீயுந்
தெளியவைத்து தெளிவிருத்தி ஜலத்தை வாரு
பிலத்துட னிப்படிபத்து முறைநீ பண்ண
பேணியே ரவிமுகத்தில் காயப் போடே. (1045)

போட்டுநன்றா யுலர்த்தி மிகக் காய்ந்து தானால்
புனிதமுடன் மாப்போல யிடித்துக் கொண்டு
நாட்டமுடன் வடிகட்டி மேருக் கேற்றி
நடராசர் சக்கரத்தை நன்றாய்க் கீறி

தாட்டிகமா யதின்மேலே மேரு வைத்து
சமர்த்தாக ஈசானம் பூசை பண்ண
வாட்டமில்லா மலரொளியில்மனதை வைத்து
மகத்தான மேருவைநீ பதனம் பண்ணே. (1046)

பதனமதாய் மேருவைநீவைத்துப்போற்றி
பராபரமாங் கேசரத்தில் மனதை வைத்து
சதமாக ரேசப்பூ ரகமும் பண்ணி
தன்மையுடன் கும்பகத்தில் சார்ந்து நின்று
மிதமாக பணவெடைதா னெடுத்து மைந்தா.
மிஞ்சாமல் தண்ணீரிற் கொண்டா யானால்
அதமான தேகமது வச்சிரம் போலாம்
அப்பனே மண்டலத்தில் சட்டை போமே. (1047)

போமப்பா நரைதிரையு மொழிந்து போகும்
பொன்போல தேகமுமாய்ப் புத்தி யுண்டாந்
தாமப்பா போதையென்ன சொல்லிப் போறேன்
தயவாக போதைவெகு தன்மை யாகும்
தாமப்பா வாசியது அடங்கும் வீட்டில்
தானென்ற பேர்போச்சு அறந்தா னாச்சு
ஆமப்பா ஆறுவரை யேறு தற்கு
அரகரா வாசியது அடங்கும் பாரே.

பாரப்பா வாசிபனி யிரண்டுந் தானும்
பக்குவமா யுள்ளடங்கிப் பணியு மப்பா
நேரப்பா சுழிமுனையுந் துலக்க மாகும்
நெறியுடனே கற்பூர தீபம் வீசுந்
தேரப்பா தீபமதில் நின்று தேறி
சிவசிவா பூரணத்தைத் தினமும் நோக்கி
காரப்பா ஆயிரத்தி னிதழைப் பற்றி
கசிந்துவரு மமிர்தமது கசிந்து கொள்ளே. (1049)

கொள்ளப்பா சூரணத்தைத் தினமுங் கொண்டால்
    கொடிதான வவமிருத்தின் குடிலம் போகும்
அல்லப்பா சொல்வேன்மண் டலமு மூன்றால்
    அப்பனே வயதுமா யிரமு மாகும்
நல்லப்பா வருஷமது கொண்டால் மைந்தா
    நலமான வயதுபதி னாயி ரந்தான்
சொல்லப்பா மனந்தேறி சதாகாலங் கொள்ள
    சிவசிவா யதுசொல்ல முடியா தென்னே. (1050)

என்னவே சூரணத்தைத் தயிலத தோடே
    யேகமா யொன்றாக்கி பதனம் பண்ணி
முன்னவனைத் தான்பணிந்து பணவெடைதான் கொள்ள
    முதுமையுள்ள தேகமது வாலைவய தாகும்
உண்ணயிலே சுழிமுனையில் மனத்தை வைத்து
    உம்மெனவே கும்பித்து ரேசகமே பண்ணி
நன்னயமாய்ப் பூரணத்தைப் பூரகமே செய்ய
    நளினமதாய்த் தேகவச்சிர காய மாமே. (1051)

ஆமப்பா தேகவச்சிர காய மாகும்
    அப்பனே ஆதியந்த மறைவிற் காட்டுந்
தாமப்பா கெவுனரச தேக மாகுஞ்
    சதாசிவமாய் பூரணத்தைச் சார்ந்து நிற்கும்
போமப்பா அண்டவரை உயரத் தூக்கும்
    போக்காக அஷ்டமா சித்து மாடும்
நாமப்பா சொல்லுகிறோ மின்ன மொன்று
    நலமான வல்லாரைச் சூரணத்தைக் கேளே. (1052)

-(அ.க.ஞா)

பொரிகார கற்பம்

சித்திபெற இன்னுமொரு விபரங் கேளு
    சிவசிவா பொரிகாரங் கொண்டு வந்து
முத்திபெற ஆவினுட நெய்யில் மைந்தா
    மூர்க்கமுடன் தான்பொரித்து கொண்டால் மைந்தா

அத்திதனி லுள்ளவிஷ பித்த மெல்லாம்
அகன்றுவிடுந் தேகமதி லழகுண் டாகும்
வெற்றிபெறக் காயசித்துக் கிதுதான் மூலம்
விள்ளவே யின்னமொரு சித்து கேளே. (326)

-(அ.க.ஞா)

வெண்சாரைக் கற்பம்

பாரப்பா யேந்திரகிரி தன்னில் சென்று
பக்குவமாய் நீயிருக்கும் போது மைந்தா
நேரப்பா வெண்சாரை அதிலே வாழும்
நிச்சயமாய்ச் சாரையைநீ கண்டா யானால்
கூறப்பா உம்மென்று குப்பித் தேதான்
கூர்மையுடன் பதினாறு வுருவே செய்து
காரப்பா அச்சாரை வருகும் பாரு
கண்டவுட னடுமையம் பிடித்தி டாயே. (179)

பிடித்தவுடன் புசிக்கையிலே பொருந்தி ஓடும்
பின்பொருக் காலத்தை[ப்] பிடித்துக் கொள்ளு
படித்துமிக ஐந்துகரம் பிடித்துக் கொள்ளு
பக்குவமாய் தினந்தோறு மிப்படியே கொள்ள
அடுத்துமிக தினந்தோறும் கொண்டால் மைந்தா
அசையாது யாக்கை தனக் கழிவே யில்லை
நடுத்தினமாய் தினந்தோறும் கொண்டால் மைந்தா
நலமாக அதற்கடியில் கனியொன் றாமே. (180)

-(அ.க.ஞா)

தங்கச் செம்பு

கேளப்பா தங்கமது குகையி லிட்டுக்
கெடியாக செம்பதிலே நாலிலொன்று போட்டு
நீளப்பா உருகையிலே மெழுகு தோன்றும்
நேரப்பா பணம்போலே அதிலே போட்டு

தாளப்பா தங்கமெடை சேர்த்த பின்பு
சாதகமாய் சோதித்து யெடுத்து நன்றாய்
நாளப்பா குகையிலிடடு உருக்கிக் கொண்டு
நலமாக முன்போலே செம்பு கூட்டே. (86)

கூட்டியல்லோ முன்போலே உருக்கிக் கொண்டு
குறையாமல் முன்போலே மெழுகு போடு
நீட்டியல்லோ யிதையெடுத்துச் சோதித்து வாங்கி
நேராக முன்போலே செம்பு கூட்டி
ஆட்டியல்லோ உருக்கையிலே மெழுகுப் போட்டு
அப்படியே யிப்படியே முறைகள்தோறும்
பூட்டியல்லோ பத்துவிசை தீர்ந்தா யானால்
பொன்னிறக்குஞ் செம்பெல்லாம் போகும் பாரே. (87)

பாரப்பா குகைதோறும் சோதித்து வாங்கி
பதறாமல் எடுத்தல்லோ உருக்கிக் கொண்டு
நேரப்பா ஒட்டிலிட்டு ஊதிப் போடு
நிலைத்தது விராகனெடைக்கு(ப்) பணமதிகம் நிற்கும்
தாரப்பா தங்கமது செம்பே யாச்சு
சாதகமாய் கந்தகத்தின் செம்பி னாலே
ஓரப்பா கொள்ளாது செம்பின் வேதை
ஒட்டுவிக்கும் ஆண்பிள்ளை உண்டோ சொல்லே (88)

ஆமப்பா முன்னெடுத்த தங்கச் செம்பை
அடித்துநன்றாய்த் தகடாக அதிலே கேளு
ஓமப்பா வாலைரசம் கந்தகமும் கூட்டி
உறவாக தகட்டுக்கு பாதி பூசி
சேமப்பா அப்பிரக தகட்டில் வைத்து
திறமாகத் தகடுகொண்டு மூடி கட்டி
தேமப்பா ஒட்டிலிட்டு ஒடு மூடித்
தீக்கொளுத்திக் கனபுடமாய் சிறக்கச் செய்யே. (92)

செய்யயிலே தேவியைநீ பூசை பண்ணி
திறமாகச் சமாதியிலே யிருந்து பாரு
மையயிலே தராகத்தில் தேவி நின்று
வாச்சுதடா காயசித்தி மகனே யென்பாள்
கையயிலே காயசித்தி கெவுன சித்தி
கைமுறையாய்ப் பலித்து... ..க்கே யென்பாள்
கெய்யயிலே ஆறுதலம் வெளியாய் காட்டி
கூப்பிட்டு சக்கரத்தின் குறிசொல் வாளே. (93)

சொல்லியதோர் புடம்மாறி குளிர்ந்த பின்பு
சுகமாக பூசித்து எடுத்துப் பாரு
மெல்லியதோர் பொடியாக நொறுங்கி நிற்கும்
மைந்தனே யிதையெடுத்து வைத்துக் கொண்டு
ஒல்லியதோர் பொழுதுக்கு குன்றி யுண்ணு
ஓங்கியதோர் மண்டலத்தில் ஒளியோ மீறும்
கல்லியதோர் யிருட்டறையில் நிற்கும் போது
சந்திரனோ சூரியனோ என்பார் கானே. (94)

-(ச.க.நூ)

பின்னிணைப்பு - 2

உபரசங்களின் பெயர்கள்

1. அப்பிரகம்
2. அயச்சிலைக்கல்
3. அன்னபேதி
4. அஸ்திபேதி
5. ஆட்டுக் கொம்பு
6. ஆமை
7. ஆனைக் கொம்பு
8. இந்திர கோபம்
9. இரசிதசிலை
10. இராசவர்த்தக்கல்
11. ஈயசிலை
12. ஈயமணல்
13. ஈரக்கல்
14. உரம்
15. உலோக மணல்
16. உவர் மண்
17. எலிமுள்
18. எலும்பு
19. எறும்பு
20. ஏமசிலை
21. ஏமமண்
22. ஓட்டின் தூள்
23. கடல் நுரை
24. கடற்பாசி
25. கத்தூரி
26. கருங்கல்
27. கருடக்கல்
28. கரடி
29. கருமணல்
30. கருவண்டு
31. கல்நார்
32. கல்மதம்
33. கலைக்கொம்பு
34. கழுதை வண்டு
35. கற்சுவடு
36. கற்பூரச் சிலை
37. காக சிலை
38. காண்டா மிருகக் கொம்பு
39. காந்தக்கல்
40. காந்தம்
41. காவிக்கல்
42. கிளிஞ்சல்
43. குருந்தக்கல்
44. குருவண்டு
45. குளவிக் கூட்டு மண்
46. கெண்ட சிலை
47. கோமேதகம்
48. கோழிக்கால்
49. சாத்திரபேதி
50. சாலிக்கிராமம்
51. சிட்டக்கல்
52. சிலாவங்கம்
53. சுக்காங்கல்
54. சுக்கான்கல்
55. சுத்தமணல்
56. சூடாலைக்கல்
57. செங்கல்

58.செம்புமண்
59.செம்புமலை
60.செம்மண்
61 செவ்வட்டை
62.சொன்னபேதி
63.தராமலை
64.தவளக்கல்
65.தவளை
66.திமிங்கலம்
67.துருசு
68.தேக்கல்
69.தேன்
70.நண்டு
71.நத்தை
72.நாகச்சட்டை
73.நாகசிலை
74.நாகப்பச்சை
75.நாகமணல்
76.நாகரவண்டு
77.நாய்க் கட்டம்
78.நீலம்
79.நீலாஞ்சனக்கல்
80.படிகக்கல்
81.பச்சை
82.பல்
83.பவழம்
84.பன்றிக் கொம்பு
85.பன்றி முள்
86.பித்தளை மலை
87.புட்பராகம்
88.புற்றாம்பழம்
89.புறாவெச்சம்
90.பூநாகம்
91.பேரோசனை
92.போன்றிமிளை
93.மந்தார சிலை
94.மஞ்சள் கல்
95.மயிர்
96.மயில்
97.மரகதம்
98.மாக்கல்
99.மாங்கிஷ சிலை
100. மாங்கிச பேதி
101. மாட்டுக்கால்
102. மாட்டுக் கொம்பு
103. மாணிக்கம்
104. மாந்தளிர்க்கல்
105. மான்கொம்பு
106. மின்மினிப் பூச்சி
107. மீனெலும்பு
108. முட்சங்கு
109. முட்டை
110. முத்து
111. முத்துச்சிப்பி
112. வங்க சிலை
113. வங்க மணல்
114. வளப்பக்கல்
115. வெண்கல மலை
116. வெள்ளி மணல்
117. வெள்ளைக் கல்
118. வைக்கிராந்தம்
119. வைடூரியம்
120. வைரம்.

பின்னிணைப்பு-3

கற்பம் பற்றிய சுவடிகள் உள்ள இடங்கள்

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை

1. அழுகணி சித்தர் கற்பம். கண்ணிகள் - 21	R.No.7078
2. ஏலேலஞ் செட்டியார் வாத கல்பம்	R.No.6229
3. கற்பவிதி	D.No.2638
4. கற்பவிதி	R.No.8
5. காயகற்பம்	R.No.7983
6. கொங்கணவர் கடைக்காண்டம் 500-ல் கற்ப விபரம்	R.No.6903
7. கொங்கணவர் கற்பம் 100-ல்	R.No.6906
8. கொங்கணர் கற்பம்	R.No.2289
9. கொங்கணர் கற்பம்	R.No.2306
10. கொங்கணர் கற்பம்	R.No. 6310
11. கொங்கணர் கற்ப சூத்திரம்	R.No.3657
12. கொங்கணர் கற்ப சூத்திரம்	R.No. 7064
13. கொங்கணர் கற்பம் 110	R.No.2401
14. கொங்கணர் கற்பம் நூறு	D.No.1922
15. கொங்கணர் கறபம்	D.No.1955
16. கொங்கணர் கறபம்	D.No.2414
17. கொங்கணர் கற்பமுறை நூறு	R.No.2273
18. கொங்கணர் கற்பவிதி	R.No.6926
19. சட்டைமுனி கற்பம்	R.No.2464
20. சட்டைமுனி கற்பம்	R.No.3716
21. சட்டைமுனி கற்பம்	R.No.3718
22. சட்டைமுனி கற்பம்	R.No.6932

23. சட்டைமுனி கற்பங்கள்	R.No. 145(e)
24. சட்டைமுனி கற்பங்கள்	R.N. 1031
25. சட்டைமுனி கற்பம் 200-ல் காயசித்தி	R.No.6902
26. சட்டைமுனி காயகற்பம்	R.No. 1079(f)
27. சட்டைமுனி காயசித்தி	R.No.3906
28 சட்டைமுனி காயசித்தி	R.No.3909
29. சட்டைமுனி கற்பம் 100-ல்	R.No.6904
30. சட்டைமுனி கற்பமுறை	R.No.6990
31. சட்டை முனி கற்ப வகை	R.No. 6931
32. சட்டைமுனி கற்பவிதி	R.No.7099
33. சட்டைமுனியார் கற்பமுறை நூறு	R.No.4899
34. சுந்தரானந்தர் கற்பம் - 51	R.No.7892
35. திருமூலர் கற்பமுறை	R.No.7939
36. நந்தீஸ்வர காடிக்கார கற்பம்	R.No.7260
37. போகர் கற்பவிதி	R.No. 8(a)
38. போகர் கற்பவிதி 200	R.No. 1036(a)
39. போகர் காயகற்பம் 8	R.No. 944 (b)
40. வியாக்ரபாதர் அதீத கற்பம்	R.No. 4234

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

1.	அகத்தியர் வைத்திய காவியம் 1500	சு.எண். 301
2.	சட்டைமுனி கற்பம் நூறு	சு.எண். 235
3.	சட்டைமுனி கற்பம் நூறு	சு.எண். 337
4.	மச்சமுனி திருமந்திரம் 800	சு.எண்.85

சித்த மருத்துவ மேம்பாட்டுக் குழு, சென்னை

1. புலத்தியர் ஞானகற்பம்
2. போகர் கற்பம் 300

தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையம்

1.	காய கற்பம்	சு.எண். 276 (c)
2.	காய கற்பம் மூதண்டலேகியம் முதலியன	சு.எண். 276 (B)
3.	கொங்கணர் கற்பவிதி 100	சு.எண் 58 (a)
4.	சட்டைமுனி கற்பவிதி 100	சு.எண் 26 (a)
5.	போகர் கற்பவிதி 300	சு.எண் 42

பாண்டிச்சேரி

1.	ஆடாகளைக் கற்பம்	சு.எண் 31080
2.	மூலிகைகற்பம்	சு.எண். 31097

திருவனந்தபுரம்

1.	கற்ப சூத்திரம்	சு.எண் 8858 (c)
2.	கற்ப சூத்திரம்	சு. எண் 6215 (b)
3.	கற்ப சூத்திரம்	சு. எண் 6211 (b)
4.	கோரக்கர் கற்பமுறை	சு.எண் 8088 (j)
5.	சட்டைமுனி கற்பமாதி பல திரட்டு	சு.எண் 8483 (a)
6.	சிதம்பர கல்பம்	

மதுரை

1.	சாந்தி கற்பம்	சு. எண் 90
2.	அஷ்டாக்ஷர மகா மந்திர கல்பம்	சு.எண் 150

* * *

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, அஞ்சல், சென்னை - 600 113.

புதிய வெளியீடுகள்

Silver Jubilee Special Lectures	60.00
Collected Papers of Thaninayagam Adigal	100.00
திருமுறை இலக்கியம்	50.00
அழகியல் சிந்தனைகள்	30.00
இலக்கியத்தின் நோக்கமும் பயனும் தொகுதி-1	65.00
இலக்கியத்தின் நோக்கமும் பயனும் தொகுதி-2	60.00
பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள்	75.00
முத்தாரம்மன் கதை	85.00
சந்திரபதன் கதை	40.00
கன்னிவாடி நரசிங்க நாயக்கர் வளமடல்	20.00
கருணை அம்மன் அந்நாதி	22.00
ஒப்பிலக்கியம்: கொள்கைகளும் செயல்முறைகளும்	15.00
விடுதலைக்கு முன் தமிழ் நாவல்களில் பெண்கள்	30.00
தமிழர் காசு இயல்	45.00
தமிழ் நாடக மலர்	60.00
ஆய்வுச் சிக்கல்களும் தீர்வுகளும்	85.00
Mysticism of Love in Saiva Tirumurais	50.00
எண்பத்து மூன்றில் தமிழ்-பகுதி-2	30.00
தொல்காப்பியம்-பொருளதிகாரம்-களவியல்	85.00
The Contributions of the Tamils to Indian Culture Vol-IV-Religion & Philosophy	80.00
Vol.III-Socio-Cultural Aspects	90.00
Vol.II - Art & Architecture	30.00
Vol-I - Language & Literature	18.00
எண்பத்து மூன்றில் தமிழ்-பகுதி 1	47.00
சிவகிரி குமர சதகம்	39.00
புதுவூர்ச் சக்கரவர்த்தி அம்மானை	27.00
தேரையர் அந்தாதி	33.00
குசலவர் சுவாமி கதை	36.00
குணவாகடம்	40.00
தோட்டுக்காரி கதை	28.00
சங்கத் தமிழரின் மனிதநேயமணிநெறிகள்	24.00